# மனதுக்குத்தான் கற்பு

இந்திரா சௌந்தர்ராஜன்

திருமகள் நிலையம்
55, வெங்கட் நாராயணா சாலை,
தி.நகர், சென்னை-600 017.

முதற்பதிப்பு : ஜூன் 1998
இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 1999
உரிமை : ஆசிரியருக்கு
27851
4346666

MANATHUKKUTHAAN KARPPU

By : Indira Soundarrajan

Second Edition Oct. 1999

Pages : 223 + 4

Paper Used : 10.5 Cream wove

THIRUMAGAL NILAYAM
55, Venkatanarayana Road,
T. Nagar, Madras-600 017
Phone : 4342899, 4327696
Fax : 91 - 44 - 4341559

**விலை: ரூ. 50-00**

**திருமகள் நிலையம்**
55, வெங்கட் நாராயணா சாலை
தி. நகர், சென்னை-600 017
போன் : 434 28 99, 4327696
Fax : 91 - 44 - 4341 559

அச்சிட்டோர் :
ஸ்ரீ ராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ்
12, கஜபதி தெரு, சென்னை-5

# என்னுரை!

வித்யாசமான சில சமூக சிந்தனைகளின் தொகுப்புதான் இந்த புத்தகம். ஒரு எழுத்தாளன் குறிப்பிட்ட சில விஷயங்களில் மட்டுமே கவனம் செலுத்துபவனாக இருந்துவிடக்கூடாது. அவனுக்கு பல்நோக்கு வேண்டும். சரித்திரம் சமூகம், நகைச்சுவை, விஞ்ஞானம் என்று எல்லாம் அவன் கைவரப் பெற்றிருக்க வேண்டும்.

என்வரையில் இதன் காரணமாகவே தொடர்களையும், நாவல்களையும் உருவாக்கும்போது ஒன்றுக்கு அடுத்தது மிக மாறுபாட்டுடன் களம் முதல் சர்வமும் வித்யாசமாக இருக்கும்படி பார்த்துக் கொள்வேன். அந்த வகையில் இந்த மாதிரி செயல்பட்ட பலரை நான் நன்கறிவேன். திரு ரா. கி. ரங்கராஜன், சுஜாதா இவர்களில் மிக முக்கியமானவர்கள். அழுத்தமாகவும் ஆழமாகவும் வெரைட்டி தந்தவர்கள்.

பொதுவில் ஒவ்வொரு எழுத்தாளரிடமும் ஒரு சூட்சுமம் அற்புதமாய் பிடிபட்டிருக்கும். குமுதம் உதவி ஆசிரியர் ப்ரியா கல்யாணராமன் குடும்பச் சிக்கலுடன் கூடிய மன உணர்வுகளை அற்புதமாக பதியமிடுவார். அவரது ஒரு சிறு

கதைத் தொகுப்பு என் மனதில் கல்வெட்டாகவே படிந்து விட்டது.

இப்படி முன்னோடிகளை பார்ப்பதால் நானும் வித்யாசமாக எதையாவது சாதிக்க முனைவது உண்டு. அப்படி ஒரு முயற்சிதான் இந்ததொகுப்பு. உளவியல் ரீதியாக இதில் செயல்பட்டிருக்கிறேன். பெண்களின் சிக்கல்களை பொறுப்புணர்ச்சியோடு அணுகிப் பார்த்திருக்கிறேன்.

*21-4-98* பணிவன்புடன்
*மதுரை-3* **இந்திரா சௌந்தர்ராஜன்**

27851
434666

# மனதுக்குத்தான் கற்பு

## 1

**கா**லை ஏழு மணி! ராம் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருந்தான். அதிகம் தூங்கி விட்டதாக எண்ணி வருத்தம் வேறு பட்டுக் கொண்டான். மனைவி காஞ்சனா சமையல் கட்டில் இருந்தாள். காப்பி கலக்கிக் கொண்டிருப்பது வாசனையில் தெரிந்து போயிற்று.

''காஞ்சனா...காஞ்சனா...''

''எழுந்தாச்சா? தோ வந்துட்டேன்''

''வர்றது இருக்கட்டும். ஆறுமணிக்கு எழுப்பச் சொன்னேன்ல?''

''சொன்னீங்க...களைச்சு தூங்கற உங்களை எழுப்ப மனசு வரல்லீங்க.''

''உனக்கெல்லாம் எதுக்குளக்ஸிகியூடில் உத்யோகம்னு ஆபீஸ்ல மேனேஜர் கடிச்சு துப்பப் போறாரு...''

...பேச்சு பதறலாகிப்போனது. தலையணை துப்பட்டியெல்லாம் அப்படியப்படியே கிடக்க டூத்பேஸ்டை வாயில் அடைத்துக் கொண்டு பாத்ரூமுக்குள் புகுந்து கொண்டான்.

வெளியேற எப்படியும் இருபது நிமிஷம் ஆகும்.

அப்புறமாய் ஒரு வாய் காப்பி.

பிறகு யூனிபார்மை எடுத்து மாட்டிக் கொண்டு ஸ்கூட்டரை உதைத்துக் கிளம்பினால், சரியாக அது ஏழரைக்கெல்லாம் பஸ் ஸ்டாண்டுக்கு போய்ச் சேர்ந்து விடும்.

நடுவில் நாய் பன்றி ரயில்வே கேட் குறுக்கீடுகளை எல்லாம் வேகமாய் கடந்து, அந்த 7.35 வண்டியை பிடித்தால்தான் எட்டுக்கெல்லாம் ஐந்து கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள தொழிற்சாலைக்குப் போக முடியும்.

போனதும் ஒரு பதினைந்து நிமிஷ செலவில் கேன்டீனில் பொங்கல் வடை எனும் மாறாத மெனுவை அடக்கிய டிபன்!

இரைப்பை என்று ஒன்று இருப்பதால் அதை அள்ளி போட்டுக் கொண்டாக வேண்டியிருக்கிறது.

இல்லாவிட்டால் வேலை... வேலை... வேலை என்று அந்த நிமிடங்களிலும் கரையலாம்தான்!

பெருமூச்செறிகிறாள் காஞ்சனா.

பாத்ரூமுக்குள் இருந்து பறக்கப் பறக்க வருபவனைப் பார்க்கிறாள்.

முகத்தில் கிட்டத்தட்ட நாற்பது நாள் தாடி.

ராமுக்கு சற்று சப்பை மூக்கு, இந்த தாடி அந்த மூக்கோடு சேர்ந்து முக அழகையே கெடுக்கிறது.

''ஏங்க ஷேவ் பண்ணலையா?''

''எங்க இருக்கு நேரம்? அதுக்குதான் ஆறு மணிக்கு எழுப்பிவிடச் சொன்னேன்.''

''வந்து படுத்ததே ராத்திரி ரெண்டு மணிக்குங்க!''



''இது எனக்கே இல்லாத கவலை காஞ்சனா. சொன்னதை செய்யத்தான் நீ. இல்லாட்டி இப்படித்தான். பூதம் மாதிரி நான் இருப்பேன்''—என்றபடி அவள் வசம் உள்ள காப்பியை வாங்கி கவிழ்த்துக் கொள்கிறான்.

'அதைக் கொஞ்சம் ருசித்துக் குடிக்கக் கூடாதா?' என்று கேட்க நினைத்த கேள்வி மனதுக்குள்ளேயே சுருண்டு விடுகிறது. அவன் அதற்கும் ஏதாவது குயுக்தியாக பதில் சொல்வான்.

சொல்ல வேண்டும் என்று சொல்லாவிட்டாலும் சந்தர்ப்ப சூழ்நிலையும் அதன் அழுத்தமும் அவனை அப்படிப் பேசச் செய்து விடுகிறது.

'என்ன பிழைப்போ? என்ன கடமையோ...?' அவள் அலுத்துக் கொள்ளும்போதே, வாசல்பக்கம் ஸ்கூட்டர் சப்தம் கேட்கிறது.

கிளம்பி விட்டான்!

டாட்டா, காட்டுவதைக்கூட உணராமல் கியர் மாற்றியபடி பறக்கிறான்.

'கடவுளே 7.35 பஸ் போயிருக்கக் கூடாது...'

சரியாக இன் பண்ணக்கூட நேரமில்லாத ஓட்டம்.

வாசல் நிலைப்படிமேல் நின்று அவன் புழுதி பறக்க விரைவதைப் பார்த்துவிட்டு கதவைத் தாழிடப் போகிறாள் காஞ்சனா.

இனி கேபிள் டி.வி.தான் அவள் உலகம்.

அவளுக்காக அவளே சமைத்துச் சாப்பிடுவதில் பெரும்பாலும் உடன்பாடில்லாததால் அநேக நேரம் பட்டினி கிடக்கிறாள்.

கணவனுக்கு கம்பெனி கேன்டீன் இருக்கிறது.

தனக்கு?

ஒட்டு மொத்தமாக விரக்தி வந்து வாசல்படியில் நின்று கொண்டு நானிருக்கிறேன் என்று சொல்வதாக ஒரு பிரமை அவளுக்கு.

தன் கல்யாண வாழ்வைப் பற்றி அவளுக்கிருந்த வண்ணக் கனவெங்கே? இப்பொழுது வாழும் உப்புச் சப்பற்ற நிலை எங்கே?—நினைக்கவே பிடிக்காது போகிறது. டி.வி.யை தட்டிவிடும் சமயம் காலிங்பெல் சப்தம்.

யார் என்று எட்டிப் பார்த்தால் இளங்கோவன். ராமின் நண்பன்!

''அவர் இல்லீங்களே...''

''தெரியும். தெரிஞ்சுதான் வந்தேன்.''

—அவன் பேச்சில் ஒருவகை கவர்ச்சி. பார்க்கவும் ஆள் டக்கராக இருக்கிறான். ராம் மாதிரி சப்பை மூக்கு, தாடி மீசை என்கிற இர்ரெகுலர் பர்சனாலிடியாக இல்லாமல் மகா பளிச் பேர்வழியாகத் தெரிகிறான்.

அரை மனதாய் உள்ளே அழைக்கிறாள்.

நுழைகின்றவன் காஞ்சனாவின் இன்டீரியர் டெகரேஷனில் கரைகிறான்.

''வாவ்...எக்ஸலென்ட்!'' என்கிறான். அவனிடம் லேசான பெருமிதம்.

''ராம் பிரமோஷனுக்காக சாகறான். எல்லா வேலையையும் இழுத்து தலைல போட்டுக்கறான். என்னோட பாஸ் ஒரு ஒர்க் அஹாலிக்! அவருக்கு வேலை செஞ்சுகிட்டே இருக்கணும். செக்குமாடு மாதிரி...''

''செக்கு மாடுகூட கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்குமே?''



—காஞ்சனாவின் பதிலில் அவனிடம் சிரிப்பு.

''யு ஆர் ரைட். மாடுகூட கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கும். இவன் அதுகூட கிடையாது. ஆமா நீங்க ஒண்ணும் கண்டுக்கறது கிடையாதா?''

''எதை?''—காஞ்சனா விரக்தியாய் கேட்கிறாள்.

''வாழ்க்கைல வேலை ஒரு பகுதிதாங்க. அதுவே வாழ்க்கை கிடையாது. சினிமா, டிராமா, கோவில், சொந்தபந்தங்க எக்ஸெட்ட்ராவெல்லாம் லைஃப்ல இருக்குன்னு நீங்கதான் எடுத்துச் சொல்லணும்.''

''இதைச் சொல்லத்தான் வந்தீங்களா?''

—அவன் அந்த கேள்வி முன் தடுமாறினான்.

''இல்லீங்க...சும்மா...சும்மா...'' என்று நோக்கமற்ற தன் வருகையை அர்த்தமின்றி வெளிக்காட்டினான்.

என்ன நினைத்தானோ...சட்டென்று நிமிர்ந்து,

''அப்படிதான் வெச்சுக்குங்களேன்...'' என்று சற்று உணர்ச்சி வசப்பட்டான்.

''நீங்க உங்க மனைவியை வெளியல்லாம் கூட்டிக்கிட்டுப் போவீங்களா?''

''நானா? என் மனைவியையா? கல்யாணம் ஆகட்டும் எப்படி சுத்தறோம்னு பாருங்க.''

''ஓ...உங்களுக்கு இன்னும் கல்யாணம் ஆகலையா?''

''ஆமாங்க. உங்களாட்டம் ஒரு நல்ல பொண்ணுக்காக வெயிட்டிங்.''

''நா நல்ல பொண்ணா? யார் சொன்னது?''

''இல்லியா பின்னே — உங்களுக்கு எவ்வளவு பொறுமை!''

—நிஜமாலுமே அவன் பதிலில் அவளுக்கு பனிப் பள்ளத்தாக்கில் சறுக்கின மாதிரி ஒரு ஜில்லிப்பு ஏற்படாமல் இல்லை.

''பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு'' — என்றாள் அந்த ஜில்லிப்புடன்.

''ஆமாங்க எல்லாத்துக்கும் நிச்சயமா ஒரு எல்லை இருக்கு. அப்ப நான் வரேங்க...''கிளம்ப ஆயத்தமானான்.

''இருங்க. காப்பி சாப்டுட்டு போலாம்...'' சொன்ன கையோடு காபி போட்டு எடுத்து வந்து தந்தாள்.

வாங்கி உறிஞ்சினான். முகத்தில் அமிர்தம் குடித்த மாதிரி ஒரு பாவனை.

''எப்படி இருக்கு''

''சூப்பர். தேவர்கள் கடைஞ்ச அமுதம் இது...சாரி, ஒரு தேவதை கடைஞ்ச அமுதம் இது.''

''நிஜமாகத்தான் சொல்றீங்களா?''

''எதுக்கு பொய் சொல்லணும். குறை சொல்லித்தான் தீரணும்னா ஒண்ணு சொல்லலாம்.''

''என்ன?''

''இன்னும் கொஞ்சம் சிக்கரியை குறைச்சிருந்தா, இந்த அமிர்த்தம் படு சூப்பரா இருந்திருக்கும்.''

—அட...! இது அவள் கருத்தும் கூட

''ஆமாங்க! நானும் அப்படித்தான் நினைத்தேன்.'' என்றாள் தனுக்காக. குடித்த காபி தம்ளரை எடுத்துக் கொண்டு எங்கே வாஷ்பேசின் என்று கேட்டான்.

''நான் கழுவிக்கறேன்.''-அவள் சிணுங்கினாள்.



''நோ நோ...எனக்கு எப்பவும் என் எச்சிலே நான் தான் கழுவணும்.''

''உங்க பொண்டாட்டிக்குக்கூட பங்கு கிடையாதா அதுல.''

''அவ தொடும்போது மட்டும் அது எச்சில் இல்லாம போயிடுமா?''

''இல்ல... இன்னிக்கு பல குடும்பங்கள்ள பல கணவர்கள் தங்களோட மிச்சம் மீதியை மனைவிக்குன்னு...''

''புரியுதுங்க... ஆனா இது மேல்சாவனிஷத்தோட கொடுமையான ஒரு செயல். மனைவிங்கறவளும் ஒரு மனுஷி. அவளோட சுயகௌரவத்தை நம் செயல்களால கேவலப்படுத்தக்கூடாது. நாமளே கேவலப்படுத்தினா மற்றவங்களுக்கு கேக்கவா வேணும்.''

காஞ்சனாவிற்குள் ராம் ஞாபகம் உடனேயே ஓடத் தொடங்கியது. காப்பி சாப்பிட்டாலும் சாதம் டிபன் என்று எதைச் சாப்பிட்டாலும் அந்த தட்டில் கைகழுவிக் கொண்ட ஜோரில், அதை எடுத்து கழுவத்தான் சனியனே உன்னை மனைவியாக்கி அழைத்து வந்திருக்கிறேன் என்பதுபோல் நடந்து கொள்வானே...ஒரு நாள் ஒரு வேளை சாதம் வைத்துக் கொடுத்திருப்பானா? ச்சே!

அவள் சலிப்பில் சமுத்திரமானாள்.

''அப்ப நான் வரேங்க?''

''போய்ட்டு வாங்க!''

''ஒண்ணே ஒண்ணு சொல்லலாங்களா?''

''என்ன?''

''இந்த பிரவுன் கலர் புடவை உங்களுக்கு மகா எடுப்பா இருக்கு. இந்த கலர்ல ஷிபான் கிடைக்குமான்னு பாருங்க. உங்க கலருக்கு படு சூப்பரா இருக்கும் - நான் வரேன்.''

—போகிற போக்கில் அவளுக்குள் ரசனையை ஒரு கலக்கு கலக்கிவிட்டு போய்விட்டான்.

ஹூம்... பெருமூச்செறிகிறாள் காஞ்சனா.

ஏனோ ராம் உருவம் பல்லிடுக்கு தேங்காய்த்துண்டாக நெருடுகிறது. இந்த இளங்கோவன் உருவம் பசை போட்டு ஒட்டிக் கொள்ளும்போல தெரிகிறது.

'இப்படி ரசனையுள்ள மதிக்கத் தெரிந்த கணவன் வாய்க்காமல் போய்விட்டானே!'— ஏங்கிச் சலித்த சமயத்தில் வாசல் பக்கமாய் வேன் ஒன்று வந்து நிற்கும் அரவம்.

எட்டிப் பார்த்தபோது, கம்பெனி மெடிக்கல் வேன் தெரிந்தது.

உள்ளிருந்து ராம் இறங்கிக் கொண்டிருந்தான். கைத்தாங்கலாய் சிலர் அவனை அழைத்து வந்தனர்.

''என்னாச்சு?''

''சாருக்கு காய்ச்சல் ஜாஸ்தியாயிடிச்சு. அதான் வேலை பார்க்க வேண்டாம்னு மேனேஜர் அனுப்பி வெச்சிருக்காரு...''

''நல்ல வேளை... உங்க மேனேஜருக்கு இப்பவாவது இவருக்கு ஓய்வு தரணும்னு தோணிச்சே.''

காஞ்சனாவின் கருத்து ராமை உறுத்தியது.

''அப்படிச் சொல்லாதே காஞ்சனா. மேனேஜர் பேர்ல தப்பில்ல...'' இருமலுடன் அவனிடம் பதில்.



''நான் உங்ககிட்ட கேக்கலை. உங்க தப்பே உங்களுக்குத் தெரியலை. இதுல அவர் தப்பை பத்தி உங்களுக்கென்ன தெரியப்போவுது.''

—கடுகடுப்பாய் பேசியபடி அவனுக்கு பணிவிடை செய்ய ஆரம்பித்தாள்.

அவனது மருந்து நெடிக்கு நடுவே குணமாகத் தொடங்கினான்.

மறுநாள்...

மயக்கும் உருவத்தோடு, உடை வண்ணத்தோடு உள்ளே வந்தான் இளங்கோவன். ராமை நெருங்கி,

''எப்படி இருக்கு காய்ச்சல்?'' —என்று கரிசனமாக விசாரித்தான்.

''இப்ப பரவால்ல...''

''பேசாம ஒரு வாரம் லீவப்போடு...''

''நோ...நோ...நாளைக்குப் போய்டுவேன்.''

''போ...போய் திரும்ப உடம்புக்கு வரவழைச்சுக்கோ.''

''அப்படி இல்ல இளங்கோ...இது உழைக்கிற பருவம். இப்ப உழைக்காம எப்ப உழைக்க?''

''வாஸ்தவம்தான். இப்ப உழைக்காம எப்ப உழைக்க?''—இளங்கோவின் பதிலில் இரட்டை பொருள். அந்தப் பொருள்பொதிந்த பார்வையுடன் காஞ்சனாவை பார்க்கிறான்.

அவளை மெல்ல நெருங்கி அவள் காதோரமாய்,

''இவன் உருப்படவே மாட்டான். நீங்கதான் இனி உங்களைப் பார்த்துக்கணும்.''—என்று பேசிவிட்டு கிளம்பிப் போனான்.

காஞ்சனா கனல்விழிகளுடன் அவனைவெறிக்கிறாள்.

ராம் வழக்கம்போல் எப்பொழுது விடியும் என்று காத்திருந்த மாதிரி விடிந்த நிமிஷத்தில் வேலைக்கு கிளம்பிப் போய்விட்டான்.

திரும்பவும் காஞ்சனா மனதில் வெறுமையின் ஆட்சி.

இந்த இளங்கோவன் வந்து போனால் நன்றாய் இருக்கும் போல் தோன்றியது. ஏனோ அந்த வீட்டிலேயே இருக்கப் பிடிக்காமல் போனது. அவனைத் தேடி கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்பி விட்டாள்.

எப்படியோ அவன் அறையைக் கண்டுபிடித்து அவன் எதிரே போய் நின்றபோது, அவன் துள்ளிக் குதிக்காத குறை.

''வாங்க...வாங்க...''-என்று வாய்நிறைய வரவேற்று உட்கார வைத்தான். மளமளவென்று காபி போட்டு எடுத்து வந்து தந்தான்.

''ராமுக்கு எப்படி இருக்கு? வேலைக்குப் போயிருப் பானே...''

''ஆமாம்...பொண்டாட்டி, குடும்பம் எல்லாத்தையும் விட எப்பவும் அவருக்கு வேலைதானே...பெரிசா இருந்துருக்கு.''

''சரியான ஸ்டுப்பிட்டுங்க அவன். நான் நாலுநாள் ஆச்சு வேலைக்குப் போய்.''

''ஹும் உங்களுக்கு வாழ்க்கைய அனுபவிக்கத் தெரிஞ்சிருக்கு.''

''உங்களுக்கும் அனுபவிக்கணும்னு ஆசை இருந்தா என்கூட சேர்ந்துக்குங்க. இப்பவே மார்னிங் ஷோ கிளம்பு வோமா?''



—அவள் தயங்கினாள்.

''தெரியும். மனசுக்குள்ள ஆசைப்பட்டுடுவீங்க. ஆனா செயல்னு வரும்போது தடுமாறும் மனசு அதனால தான் இந்தப் பெண் வர்க்கம் நம் நாட்டுல மோசமாவே இருக்கு.''

''நான் அப்படி இல்ல...''-என்று உடனேயே அவ னுடன் கிளம்பி விட்டாள்.

தியேட்டரில் அவன் தோளோடு தோள் உரசும்போது நெருப்பு பறந்தது அவளுக்குள். தடுக்கத் தோன்றி, முடி யாமல் போனது. அன்றைய பொழுதில் அந்த அளவு அவனோடு இழைந்ததே மகா பெரிய விஷயமாக அவனுக் கும் தோன்றியது.

''உங்களுக்காக நான் எப்ப வேணா லீவு போட லாம்னு இருக்கேன். ஒரு நாள் கொடைக்கானல் போய் வரலாம்.''

''உம்...''

''அங்க என் இஷ்டப்படியெல்லாம் நடந்துக்கணும் சம்மதமா?''

''சம்மதம்.''

—அவன் கொளுத்திப் போட்ட மத்தாப்பு போல ஆனான்!

## 2

ராம் வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான். கிளம்பும்முன் ஒரு தாளில் கையெழுத்து கேட்டான்.

''எதுக்குங்க?''

''போடு சொல்றேன்.''

''எதுக்குன்னு சொன்னாதான் போடுவேன்''

''என்னோட பி.எஃப், கிராஜிவிடி, மத்த சேமிப்பெல்லாம் எனக்குபிறகு யாருக்குன்னு கம்பெனில கேட்டாங்க. நீதானே அதுக்கு சொந்தக்காரி.''

''இப்ப எதுக்கு திடீர்னு...?''

''திடீர்னு இல்ல. எல்லாரும் இப்படி அவங்க நாமினி யார்னு எழுதிக் கொடுக்கணும்.வாழ்க்கைதான் நிலையில்லாததாச்சே. எப்ப வேணா எதுவேணா நடக்கலாமில்லியா? இந்த மாதிரி கையெழுத்து வாங்கித் தர்றது எல்லா கம்பெனியிலேயும் உண்டு.''

''ஏன் உங்க அம்மா பேரைப் போட வேண்டியது தானே?

''அவங்களுக்கு எங்க அப்பா இருக்காங்க.''

''பரவால்ல...இப்பவாவது பெண்டாட்டி ஞாபகம்-வந்துச்சே.''

''இப்ப உனக்கு என்ன குறை...ஏன் இப்படி அலுத்துக்கறே?''

''என்ன குறையா? என்ன குறைன்னு கூட தெரியாத அளவுக்கு உங்க வேலை உங்களை அமுக்கிக்கிட்டு இருக்கே...''

''தோ பாரு காஞ்சனா...எனக்குப் பொடி வெச்சுப் பேசி பழக்கமில்லை. நான் வேலைப் பைத்தியம்னு நினைச்சா நினைச்சுக்கோ.பணம் இல்லைன்னா நம்மளை ஒரு நாய்கூட மதிக்காது. நல்ல வருமானம் வேணும்னா கடமைல கண்ணும் கருத்துமா இருக்கணும்.என் லட்சியம் ஒரு பெரிய அதிகாரியாவது...''

''அப்ப இப்ப அதிகாரியா இருக்கற அவ்வளவு பேரும் அவங்க பெண்டாட்டிகளைத் தவிக்க வெச்சவங்களா?''



''நான் எங்க உன்னை தவிக்க வெச்சேன். உனக்கு என்ன குறை? பெரிய வீடு, -கலர் டி.வி, ஃபிரிஜ், ஏர்கூலர் என்ன வசதியில்லை இங்கே?''

''இதெல்லாம்தான் ஒரு பெண் விரும்பறான்னு உங்களுக்கு யார் சொன்னது?''

''நீ என்ன சொல்றே? இதுக்கு மேல வேற என்ன வேணும் உனக்கு?''

''நீங்க என்கூட இருக்கணும்''

''இப்ப என்ன நான் தனியாவா இருக்கேன்?''

''ஐயோ... நான் சொல்றதே உங்களுக்குப் புரியலை. வீட்டுக்குள்ளேயும் வேலை வேலைன்னு ஆபீஸ்நினைப்பா இல்லாம என்னை என் சமையலை ரசிக்கணும். நாம கோவில் குளம்னு...,'

''நோ...வெரி சாரி! அதெல்லாம் எனக்கு இப்போ ரொம்ப சின்ன விஷயம். அதுக்கு நீ இம்பார்டன்ஸ் கொடுக்காதே. உடம்புல தெம்பு இருக்கும்போதே உழைச்சு பெரிய பொசிஷனுக்குப் போயிடணும், நேரம் காலத்தை எப்படிக் கழிக்சறதுன்னு தெரியாம இருக்கறவங்களுக்குத்தான் நீ சொல்றது பொருந்தும்.''

பேசின கையோடு அவள் கையெழுத்து போட்டுத் தந்த பேப்பர்களை வாங்கிக் கொண்டு சிட்டாய் பறக்க ஆரம்பித்தான்.

ஸ்கூட்டரை போய் உதைத்த போது அது கழுத்தறுத்தது.

''நோ...'' -என்று அலறியபடி அதன் சாவியை வெளியே இருந்து வீட்டின் உள்ளே எறிந்துவிட்டு ''ஆட்டோ'' என்று தாவி ஏறிப் பறக்கிறான்.

காஞ்சனாவால் அவ்வளவையும் வெறிக்கத்தான் முடிந்தது.

பிரக்கை மீண்டு தரையில்கிடந்த சாவிக்காக குனிந்த போது, மேலாக்கு நழுவியது. பால்கனி இரண்டு ரவிக்கைத் தடையை மீறிப் பார்த்தன.

கறுப்பாய் நிழல் வந்து அதன் மேல்பட்டு அதன்பளபளப்பை தணிக்கவும் செய்தன.

நிமிர்ந்தால் இளங்கோவன்!

உதட்டில் அந்த வசீகரப் புன்னகை

கிட்டத்தட்ட பத்தடி தூரம் பாய்ந்து வசியப்படுத்தும் பெர்ஃப்யூம் வாசம் வேறு.

காஞ்சனாவின் அந்தக் கோலம் பார்த்து உடம்பு நரம்பில் மின் உற்பத்தி செய்து கொண்டான். அதன் நிமிர்த்தம் கண்ணிரண்டும் மட்டுமே கூட பல்பாகி பளீரிட்டன.

''வாங்க''- நிமிர்ந்தாள் காஞ்சனா.

''ஐயோ கேமரா இல்லையே...'' -இளங்கோவிடம் பொய்ச் சலனம்.

''எதுக்கு?''

''எதுக்கா? நான் பார்த்த உன்னத அழகைப் படம் பிடிக்க...''

காஞ்சனா வெட்கத்தால் சிவக்க ஆரம்பித்தாள்.

கோபத்தைக் காட்ட வேண்டிய இடத்தில் குதூகலத்தைக் காட்டினாள்.

அவனுக்கு அதுவே தெம்பாகிப் போனது.

''என்ன பய ஆட்டோல போறான். ஸ்கூட்டர் என்ன ஆச்சு ரிப்பேரா?''

''யாருக்குத் தெரியும். உதைச்சு உதைச்சுப் பார்த்தாரு.''



''அதுவும் ஸ்டார்ட் ஆகலையாக்கும்?''

''அதுவும்னா?''

''இல்லை... நீங்க எவ்வளவு உதைச்சாலும் அவன் நல்லவிதமா ஸ்டார்ட் ஆகாத மாதிரி அவன் ஸ்கூட்டரும் ஆயிடுச்சாக்கும்னு நினைச்சேன்.''

—அவள் அதை ரசித்தாள்.

''நல்லா பொடி வெக்கறீங்க பேச்சுல...'' -என்றாள்.

''அழகான பெண்கள் கிட்ட இருந்தா, நல்ல ஆண்கள் பொடி வெச்சுப் பேச மட்டுமா செய்வாங்க? கவிதையே எழுதுவாங்க.''— என்றான் அவன்.

''அப்ப என்னை வெச்சு ஒரு கவிதை ப்ளீஸ்...''

''போச்சுடா ஒரு வார்த்தைக்குச் சொன்னா உடனே பிடிச்சுக்கறதா?''

—அவன் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

''உம் கவிதை சொல்லுங்க...''

''ப்ளீஸ் விட்றுங்க. நான் கவிதையை ரசிப்பேன்' எழுதவெல்லாம் வராது...''

''சரி, ரசிச்ச கவிதை ஒண்ணு சொல்லுங்களேன்.''

''விடமாட்டீங்களா?''

''ஊஹூம் உங்களை நான் விடவே மாட்டேன்.'

''கவிதைக்கு மட்டுமா?''

''எதுக்கும் இனி விடப்போறதில்லை.''

''சரி, கவிதை சொன்னா என்ன தருவீங்க.''

''என்ன வேணும்?''

"எதைக்கேட்டாலும் தருவேன்."

"வேண்டாம். அப்புறமா வசமா மாட்டிக்குவீங்க."

"நீங்க எதைக் கேப்பீங்கன்னு தெரியும்."

—அவள் ஊடலோடு பேசுவதை அவன்மிகரசித்தான்.

விடக்கூடாது... இந்த வாய்ப்பை விடவே கூடாது என்று முடிவுக்கு வந்தவனாக, மனதுக்குள் அவளுக்குப் பொருத்தமான கவிதை வரிகளைத் தேடத் தொடங்கினான்.

பழைய கண்ணதாசன் இதழ் ஒன்றில் ஒரு பெயர் மறந்துபோன கவிஞர் ஒருவரின் பாடல் அவனுக்குள் முண்டியது. அது அவனுக்கு ஆழமாய் பதிந்தும் இருந்தது.

"மஞ்சளோடு மஞ்சளாக மங்கை மேனி-பொன்னிறம்
அதை மஞ்சம் மீது கொஞ்சு என்று மனது சொல்லும்
மந்திரம்!
வண்ண வண்ண அங்கம் பற்றிய சங்க மாலை
பாவையோ?
எழில் அங்கம் என்று எண்ணும்போதும் என்னை
அளவில் வாட்டும் நிலையோ...
காமதேவன் விட்ட தூது கன்னிமேனி ஆனது
நடுசாம நேரம் வந்தபோது சக்தி ஊட்டும் தேனது
இடைவிடாது பாட எண்ணும் எனது கவிதை
நெஞ்சமே
இடைவிடாது பாடுபாடு இளமை இன்னும்
கொஞ்சமே!"

—உரக்க நல்ல ஏற்ற இறக்கங்களோடு இளங்கோவன் பாடியதைக் கேட்டு காஞ்சனாவால் திறந்த வாயை மூட முடியவில்லை.



"வாவ்! எக்சலென்ட்."- என்றாள்.

"எங்க இன்னொரு தடவை பாடுங்க..." என்றும் அரித்தாள். அவனும் பாடினான்.

"ரொம்ப வாய் வலிக்குது. காபி கிடையாதா?"- என்றான்.

அவள் உள் ஓடினாள். சூடுபறக்க காபியுடன் வந்தாள். முகத்தில் ஏகமாய் சந்தோஷ ரேகை தெரிந்தது. கூண்டுப் பறவை சுதந்திர வானுக்கு வந்தால் எப்படி உணரும்? அப்படி ஒரு உணர்ச்சி அவள் முகத்தில்.

அவன் அவளை ரசித்தபடியே சூப்பினான்.

"கவிதைன்னா இவ்வளவு இஷ்டமா?" -கேட்டான்.

"ஆமாம். எனக்கு கவிதைன்னா உயிர்..."

"ராமுக்கு..."

"அவர் வரையில கவிதை ஒரு கழுதை."

அவன் அதைக் கேட்டு காப்பியை புர்ர்...! என்று உமிழ்ந்தவாறு சிரித்தான்.

"சூப்பர் கருத்து..." -என்றும் கூறினான். அவளும் சிரித்தாள்.

"சரி வெளிய போகலாமா? -அவளிடம் மெலிவான ஒரு தயக்கம்.

"வெளிய போகலாமான்னு கேட்டேன்."

"எங்க?"

"எங்கேயோ? நீங்க சொல்ற இடத்துக்கு..."

"அங்க எதுக்கு?"

''கவிதை பாடிட்டேன்-என்ன கேட்டாலும் தரேன்னு சொல்லிட்டீங்கல்ல. அதான் உங்களையே கேக்கலாம்னு''

—அவள் விருட்டென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''இப்படி பார்த்தால்லாம் விடமாட்டேன். வாக்கு மாறாம உங்களை நீங்க தந்தே தீரணும்.''

''முடியாதுன்னு சொன்னா...''

''நிச்சயம் கட்டாயப் படுத்தமாட்டேன். எனக்குக் கிடைக்கற ஒண்ணு நான் விரும்பினதா இருந்தா மட்டும் போதாது. அதுவும் என்னை விரும்பினதா இருக்கணும்.''

—அந்த பதிலில் அவள் திக்குமுக்காடிப் போனாள். துளியும் தாமதிக்காமல் அவனை நெருங்கி கட்டிக் கொண்டாள்!

அந்த அணைப்பில் ராம்கட்டிய தாலிகூட திணறிப் போனது. இளங்கோ முகத்தில்மட்டும் விஷமப்புன்னகை!

## 3

ஆபீசில் ராம் ஏக சஞ்சலத்தில் இருந்தான். அவனது பிரமோஷன் ஆர்டர் தள்ளிப் போய்விட்டது. காரணமெல்லாம் கேட்க முடியாது.

அதற்கு பெயர்தான் பிரைவேட் மேனேஜ்மென்ட்.



''என்ன ராம்... இந்த தடவையும் பிரமோஷன் கட்டா?''-கேலியாக கேட்கிறான் அவன்.

அமிர்தன். அவனுக்கு இரட்டை பிரமோஷன்! இத்தனைக்கும் வேலையில் அதீத ஈடுபாடு, அறிவாற்றல் என்றும் எதுவும் கிடையாது.

பின் எப்படி சாத்யமாயிற்று?

எங்கேயும் வேலையைவிட பெரிய விஷயம் தனக்கு மேல் இருப்பவர்களின் மனதில் தென்றல் காற்றாய் திரிய முடிவதுதான். அதில் அமிர்தன் கில்லாடி

ஈகோ என்கிற ஒன்றை ஜாடியில்போட்டு மூடிவைத்து விட்டுதான் வேலைக்கே கிளம்புவான்.

மேலதிகாரி கழுதையை குதிரை என்று சொன்னால் ஆமோதிப்பதோடு அப்படி சொன்னதற்காக அந்த அதிகாரியை ஆகாயத்துக்கும் தூக்கி வைப்பான்.

''நாம வேலை பார்க்கறது நிறுவனத்துக்காக. மேல் அதிகாரிகளுக்காக கிடையாது'' என்பான் ராம்.

''பாலிசியை மாத்திக்கோ. நிறுவனத்துக்காக வேலை பாக்கறதை விடு. சொல்ற பேச்சை மட்டும் கேளு'' என்பான் அமிர்தன்.

''நிறுவனம் எப்படி உருப்படும்?''

''அதைப் பத்தி நீ எதுக்கு கவலைப்படறே...?''

''ஒவ்வொருவரும் கவலைப்படணும்.''

''முதலாளி நம்மை பற்றிக் கவலைப்படறச்சே நாமளும் படலாம்.''

''அவர் படலையா?''

''எங்க படறாரு வந்தா உன்கிட்ட பேசறாரா, என் கிட்ட பேசறாரா? நம்ம மேனேஜர்கிட்ட மட்டும்தானே பேசறாரு.''

''அவர்கிட்ட பேசினா போதாதா...?''

''நாமளும் அவர் விரும்பற மாதிரி மட்டுமே நடந்து கிட்டா போதாதா...?''

''நிச்சயம் போதாது. இவர் ஜால்ரா பிரியர். வேலை எவ்வளவு முடிஞ்சிருக்குன்னு பாக்கறதுல்ல. யார் எவ்வளவு மதிக்கறாங்க. குட்மார்னிங் எத்தனை பேர் சொன்னான்-எவ்வளவு பேர் சொல்லலைன்னு பாக்கற சிப் டைப்...''

''இந்த சிப் டைப்பை தானே முதலாளி விரும்பறார். ஆகையால் அவருக்கு அதுக்கு தகுந்த வேலை ஆனா போதும்.''

''இது தப்பு அமிர்தன். நம்மை விட நம்ம நிறுவனம் பெரிசு. இது நல்லா இருந்தாதான் நாம நல்லா இருப் போம்.''

''நீ சொல்றது தப்பு ராம். ஒர்க்கர்ஸ் நல்லா இருந்தா தான், அவங்க வேலை செய்யற நிறுவனமும் நல்லா இருக்க முடியும். அவங்க கவலை குழப்பத்தோட வேலைக்கு வந்தாலோ அல்லது வந்த இடத்துல அவங்க கவலைப்படும்படி ஏதும் நடந்தாலோ அந்த நிறுவனம் நல்லா வளராது.''

—ராம் உடனேயே யோசிக்கத் தொடங்குகிறான். இவன் சொல்வதும் சரிதான் என்கிற நினைப்பு உள் ஓடுகிறது. மௌனம் வந்து கட்டிக் கொள்கிறது.

''சரி என்ன பண்ணச் சொல்றே?''- மௌனம் உடைந்து கேள்வி பிறந்தபோது, அமிர்தன் முகத்தில் வெற்றிப் புன்னகை.



''வேலை பார்க்கற இடத்துல லாஜிக் பேசாதே. பெருசுகள் என்ன சொன்னாலும் ஓ.கே. சொல். கம்பெனி கம்பெனின்னு சாகாதே.எட்டு அவர் முடிஞ்சா கிளம்பிடு. படம் காட்டாதே.''

''டேய் நான் படம் காட்டலை. எனக்கு அதெல்லாம் தெரியாது.''

''அது எனக்கு தெரியும். ஆனா பாக்கறவங்களுக்குத் தெரியாது.''

''சாரி அமிர்தன். ஐ கான்ட். நீ சொல்றதை என்னால செய்ய முடியாது. என் டூட்டியை பர்ஃபெக்ட் இல்லாம என்னால பண்ணவே முடியாது.''

''அப்ப உனக்கு பிரமோஷனும் இந்த ஜென்மத்துல கிடையாது.''

''பரவால்ல. பிரமோஷன் வேண்டாம். பர்ஃபெக்டா இருக்கறதுங்கறது பிரமோஷனுக்காக இல்லை அமிர்தன், அது ஒரு கேரக்டர்.''

அமிர்தன் ராமின் பதிலைக் கேட்டு சிரிக்கிறான்.

''ராம், நீ இப்படி இருந்தே உன் பெண்டாட்டிகூட உன்னை மதிக்க மாட்டா. பிழைக்கற வழியப் பாரு.'' என்கிறான்.

ராம் முகத்தில் கவலைப் புயல்.

# 4

கடல் அலை பாய்ந்து கொண்டிருந்தது.

கரை முழுக்க நுரைப் பூக்கள்.

ஆங்காங்கே காதல் ஜோடிகள்-கால்நனைய கரையில் அதிலும் நடுப்பாகத்தில் மணல் அரிபடும்போது ஏற்படும் குறுகுறுப்பு தரும் பரவசமே பரவசம்தான்.

ஆனாலும் இந்தச் சுகங்களில் மனது லயிக்காதபடி எதிரே தெரியும் விவேகானந்தர் பாறையைப் பார்த்தபடி நிற்கிறாள் காஞ்சனா.

கடலுக்குள் பார்படாஸ் ட்ரவுசர் சகிதம் நீந்திக் கொண்டிருக்கிறான் இளங்கோ.

''என்ன காஞ்... வந்த இடத்துல ஏதோ ஞாபகமா?''

—வாயிலிருந்து உப்பு நீரை உமிழ்ந்தபடி கேட்கிறான்.

''ஒண்ணுமில்லை...'' அவளிடம் பதில்.

''நான் சொல்லட்டுமா?''

அவள் அவனை உற்றுப் பார்க்கிறாள்.

''உனக்கு ராம் ஞாபகம் வந்திடிச்சுன்னு நினைக்கிறேன்.''-அவன் பதிலில் அவளுக்கு வியர்த்தது. அலையும் சீறிப் பாய்ந்து இடுப்புவரை நனைத்து ஆமோதித்தது.

''அவன் ஒரு உருப்படாத ஆள்.''-இளங்கோவிடம் தொடர்ந்து கமெண்ட்.

வெறிக்கிறாள் காஞ்சனா.



''ஆமாம். பின்ன என்ன, ஆபீஸ்ல பிரமோஷன் இல்லைன்னுட்டாங்க. போய் என்ன ஏதுன்னு கட்டி ஏற வேண்டாம். விட்டுட்டு பழையபடியே மாஞ்சு மாஞ்சு வேலை பார்த்தா என்ன அர்த்தம்?''

காஞ்சனாவின் முகத்தில் விவரிக்க முடியாத உணர்ச்சிகள்.

அவன் ஈரம் சொட்டச் சொட்ட கரைக்கு எழுந்து வந்தான்.

அவளும் நீர்ப்பரப்பை விட்டு நீங்கி மணலைத் தொட்டாள்.

அவன் அவளை பக்கவாட்டில் இறுக்கிப் பிடித்தான், அவள் உடல் அனலாய் இருந்தது.

''என்ன காஞ்...மூட் அவுட் பண்ணிட்டேனா?''-அவளிடம் ஆமோதிப்பு.

''விடு...ராம் பற்றி நினைச்சாலே உனக்கு மட்டுமல்ல எங்களுக்கும் மூட் அவுட் ஆயிடும். வா ரூமுக்குப் போவோம். நாம இங்க வந்திருக்கிறது சந்தோஷமா இருக்கறதுக்கு.''

—அவளை அணைத்த நிலையிலேயே நடக்கிறான், அவளும் தொடருகிறாள்.

''ராம்கிட்ட என்ன சொல்லிட்டு வந்துருக்கே?''

''தோழி கல்யாணத்துக்குப் போறதா...''

''ஒண்ணும் சொல்லலையா?''

''சொல்ல என்ன இருக்கு? அவரைப் பொறுத்து நான் வீட்ல இருக்கறதும் ஒண்ணும், இல்லாததும் ஒண்ணு தான்.''

''சோ...நோ பிராப்ளம்?''

''ஆல்வேஸ் நோ பிராப்ளம்.''

''குட்...''-என்றபடி அறைக்கதவைத் திறந்தவன் உடனேயே கதவை மூடியபடி அவளை இறுக்கி அணைத்துக் கொண்டு படுக்கையில் விழுந்தான்.

''காலைல இருந்து மூணு தடவை ஆயிடிச்சு.'' என்று அவள் நெளிந்தாள்.

''முப்பது தடவைக்கு என்கிட்ட சக்தி இருக்கு காஞ்ச்...நான் என்ன மலட்டு ராமா?''

-திரும்பவும் அவன் பேச்சில் தெரிந்த அந்த ராம் என்கிற சொல், அவளை ஏனோ ஊசியாய் குத்தியது.

''ஐ ஆம் சாரி...யாரை நினைக்கக்கூடாதோ...யாரை மறக்கணும்னு இவ்வளவு தூரம் வந்திருக்கோமோ,அவன் பேரே அடிக்கடி வாயில் வருது.''-என்றவன், படுத்த நிலையிலேயே கட்டிலுக்கு அடியில் இருந்து ஒரு பிராந்தி பாட்டிலை வெளியே எடுத்தான்.

காஞ்சனாவிடம் அதிர்ச்சி.

''என்னது இது?''

''பிராந்தி காஞ்ச்...''

''இது எப்படி வந்தது இங்க?''

''உம்...கடைல இருந்து கால் முளைச்சு...ஸ்டுப்பிட். நாம சந்தோஷமா இருக்க நான்தான் வாங்கிவந்தேன்...'

''உங்களுக்கு குடிப்பழக்கம் உண்டா...?''

''எப்பவாவது குடிக்கறது தப்பில்ல காஞ்சனா. குடிச்சுப் பார் தெரியும்.''

''இளங்கோ என்ன இது புதுசு புதுசா...ஒரு பெண் மது குடிக்கறதா?''



''மதுவுக்கு ஆண் பெண் கிடையாது காஞ்சனா. என்ன இது, கிராமத்து பெண் மாதிரி பேசிகிட்டு காமன் ஹேவ் இட்...''

''நோ...என்னால முடியாது.எனக்கு இந்தவாடையே பிடிக்காது.''

''ப்ளீஸ் காஞ்சனா. ஆரம்பம் அப்படித்தான் இருக்கும். போகப் போக சொர்க்கம் கண்ணுல தெரிய ஆரம்பிச்சுடும்.''

''வேண்டாம் இளங்கோ...விட்டுடுங்க. இதை தூரத் தூக்கிப் போடுங்க.''

—மாறாக அந்த மதுக்குப்பியை அப்படியே வாயில் கொட்டிக் கொள்ள ஆரம்பித்தான் இளங்கோ.

காஞ்சனா பதைக்கத் தொடங்கினாள்.

ஒரே மூச்சு...

அவ்வளவு மதுவும் இளங்கோ வயிற்றுக்குள் சென்று விட்டது. அவன் உதட்டில் அட்டகாசச் சிரிப்பு.

அவள் கண்களிலோ கோப நெருப்பு. ''கோவிச்சுக் காதே காஞ்சனா. காசு கொடுத்து வாங்கினதை தூக்கி எறிய மனசு வரலை.''

-என்றபடி திரும்பவும் அவள் மேல் விழ ஆரம்பித் தான். அவனை தட்டி விட்டவள், விருட்டென்று எழுந்து கதவைத் திறந்து கொண்டு வெளியே நடக்க ஆரம்பித் தாள்.

கால்கள் கடல் அலை வருடும் கரைப் பரப்பை எட்டி நிற்கின்றன.

எதிரே விவேகானந்தர் பாறை.

முகத்தில் அறைகிறது காற்று.

செய்யக் கூடாத தப்பை செய்து விட்ட உள்ளுணர்வு. முதல் முறையாக உள்ளுக்குள் ஒரு கரப்பான் பூச்சியாய் ஊர்ந்து நடக்க ஆரம்பிக்கிறது.

அவள் கடலோரமாகத்தான் போய் நிற்பாள் என்பது தெரிந்தவனாய், இளங்கோவும் பின்னாலேயே வந்தான்.

போதை ஓரளவு ஏறியிருந்தது.

புத்தி பிசகிப் போயிருந்தது.

சுய உருவம் நடிப்பின்றி வெளிப்படத் தொடங்கியது.

''ஏய் காஞ்ச்...என்ன இது கொஞ்சம்கூட மேனர்ஸ் இல்லாம...''

—கரை ஓரமாய் வந்து நின்று கத்த ஆரம்பித்தான்.

அவள் அவனை முறைத்தாள்.

''வாடி ரூமுக்கு...''-அவன் குரலில் வக்ரமான அழைப்பு.

''முடியாது.'' அவளிடமும் கடூரமான பதில்.

''இப்ப வரப்போறியா இல்லியா?''

''முடியாதுன்னா முடியாது. எனக்கு உன்னை மாதிரி குடிகாரனைப் பிடிக்காது.''

''நான் குடிகாரன் கிடையாது. அப்பப்ப குடிக்கிறதுல தப்பும் கிடையாது.''

''இந்த விளக்கத்தையெல்லாம் வேற யார்கிட்டே யாவது போய்ச் சொல்லுங்க.''

''உன் புருஷனை விடவா நான் மோசம்?''

—இளங்கோவின் கேள்வி அவள் முதுகெலும்பில் ஊசி ஏற்றியது. பாறை போல் இறுகி மௌனமாய் நின்றாள்.

அலைபாட்டுக்கு அடித்துக் கொண்டிருக்கிறது அவள் மனதைப் போல.



முதல்முறையாக செய்யக்கூடாத தப்பைச் செய்து விட்ட வேதனை மெல்ல நெஞ்சைக் கவ்வத் தொடங்குகிறது.

இளங்கோவும் பெரிதாய் திரும்பி வந்த ஒரு அலையாய் முற்றும் நனைந்து சற்று மூச்சுத் திணறிப் போனான்.

சிலீர் என்று நனைந்ததில் போதை சற்று குறையவும் தொடங்கியது. காஞ்சனாவும் அங்கிருந்து அவனை விட்டு நடக்க ஆரம்பித்தாள்.

''காஞ்ச்...காஞ்ச்...ஏய் காஞ்ச்...'' அவன் அவளை அழைத்தபடி பின்னாலேயே ஓடினான்.

அவள் கால்போன போக்கில் போகத் தொடங்கினாள். கடற்கரை வேடிக்கைப் பார்த்தது.

'யார் இவர்கள்? தம்பதிகள்தானா? இல்லை ஏதாவது தள்ளல் கேஸா?' பார்க்கும் பார்வைகளில் நினைப்புக்குத் தகுந்த மாதிரி கேள்விகள்.

''ஏய் காஞ்சனா, நில்லு. ஏன் இப்படி படுத்தறே?'' எரிச்சலுடன் ஓரளவு உச்சத்துக்குப் போய் வெடிக்கிறான் இளங்கோ.

அவள் நின்று திரும்பிப் பார்க்கிறாள்.

அந்தப் பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள்.

''அப்படிப் பார்க்காதே பெரிய பத்தினியாட்டம் நினைச்சிட்டு அப்படிப் பார்க்காதே.''

அவன் பயன்படுத்திய அந்த பத்தினியாட்டம் பதம் அவளை குத்துகிறது. கிழிக்கிறது. குற்றுயிராக்குகிறது.

உயிர் இருந்தும் இறந்த விட்ட மாதிரி ஒரு உணர்ச்சி பரவுகிறது.

ஏனோ அதற்குமேல் ஒரு அடியைக்கூட அவளால் எடுத்து வைக்க முடியவில்லை.

அவன் அவளை நெருங்கி வெறிக்கிறான்.

மிகக் கொடூரமாக.

''என்னை ரொம்ப படுத்திட்டே. எனக்காக ஏங்கற எவ்வளவோ பெண்கள் உண்டு. அவங்களுக்கெல்லாம் கொடுக்காத ஒரு இடத்தை நான் உனக்குத் கொடுத்திருந்தேன். காரணம் உன்மேலுள்ள ஒரு இனம்புரியாத அனுதாபம். அதை இப்ப நீ கெடுத்துக்கிட்டே. சந்தோஷமா இருக்க வேண்டிய நேரத்துல இப்படி சங்கடப் புயலை உருவாக்கிக்கிட்டே...நாம ஜாலியா இருக்க கன்னியாகுமரி வந்தோமா, இல்லை இப்படி ஒருத்தர ஒருத்தர் தாக்கிக்க வந்தோமா?''-அந்த நிலையிலும் அத்தனைக் கடற்காற்றை மீறி இளங்கோ உடம்பில் வியர்வை. மார்பில் இளைப்பு.

அவளிடமோ ஒரு சடலம் எழுந்து நிற்பதுபோன்ற ஒரு பிரமை உணர்ச்சி மட்டுமே.

# 5

ஆபீஸ் முழுக்க ஒரே டென்ஷன். மேஜை சேரெல்லாம் ஒழுங்காக இருந்தது. எங்கும் துளி குப்பை இல்லை. கூளம் இல்லை. எதுவாக இருந்தாலும் அது அதற்குரிய இடத்தில் இருந்தது. கண்ணாடி ஜன்னல்களில் தூசி இல்லை. சுவற்று மூலைகளில் நூலாம்படை இல்லை. குறிப்பாக வேலை பார்க்கும்போது எவரும் எவரிடமும் ஒரு வார்த்தை கூட பேசிக் கொள்ளவில்லை.



மந்திரம் போட்ட மாதிரி ஒரு மாற்றம். இது நமது ஆபீஸ்தானா, இல்லை ராணுவத்தின் ஒரு பிரிவு அறையா என்கிற ஒரு பலத்த சந்தேகம் ராமுக்கு.

வழக்கமாக அவன்தான் வேலைக்கு தாமதமின்றி வருபவன். இன்று அறையே நிரம்பி வழிகிறது. யாரும் லேட் இல்லை.

இந்த அதிரடி மாற்றத்துக்குக் காரணம், வெரிசிம்பிள். மிஸ்டர் சந்திரஜித் பானர்ஜிதான். புதிய ஜெனரல் மேனேஜர். கட்டுப்பாடுகளின் சிகரம். கடமை உணர்ச்சியின் ஊற்று. விஸ்வாமித்திரர் மாதிரி கோபக்காரர் என்கிறார்கள் என்றால், ராமனைப்போல் தங்கமான குணமும் இருந்தாக வேண்டும். சுத்தமாக பேச்சு பிடிக்காது. எதிலும் பானர்ஜிக்கு செயல் வேண்டும்.

செயல்...செயல்...செயல்தான்.

''மிஸ்டர் இளங்கோ, உங்களை பானர்ஜி சார் கூப்பிடறார்.'' அக்கௌண்டன்ட் இளங்கோவை உசுப்பி விட்டு செல்கிறார். சிறகே இல்லாமல் பறந்துபோய் பானர்ஜி எதிரே நிற்கிறான் இளங்கோ.

பானர்ஜி பார்வை இளங்கோவை துளையிடுகிறது டேபிள் மேல் இளங்கோவின் பர்சனல் ஃபைல். இளங்கோவுக்கு புரிந்து விட்டது. தனது ஃபைலைப் பார்த்துவிட்டு இந்த மனிதர் ஏதோ கதையளக்கப் போகிறார் என்பது...

''வாட் யு திங்க் எபவுட் திஸ் ஆர்கனைசேஷன்?''—பானர்ஜியிடம் ஆங்கிலத்திலேயே கேள்வி. இளங்கோ தடுமாற ஆரம்பிக்கிறான்.

''இந்த நிறுவனத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என்கிற அந்தக் கேள்விக்கு எந்த பதிலை சொல்ல. உண்மையை சொல்லிவிடலாமா? இது சோம

பேறிகளின் மடம். கமிஷன் ஏஜெண்டுகளின் சொர்க்க பூமி. உழைப்பவன் இங்கே இளிச்சவாயனாகத்தான் இருக்க வேண்டும் என்று...

''என்ன இளங்கோ. கேக்கறேன் பதிலே இல்லையே?''

—பானர்ஜி விடவில்லை.

''நான் நினைக்க என்ன சார் இருக்கு?''

—இளங்கோ வாயைத் திறந்து விட்டான்.

''நீ நினைக்க என்ன இருக்காவா? அப்போ இந்த கம்பெனி பத்தி உனக்கு நினைப்பே இல்லியா?''

''நோ...நோ...நான் அப்படிச் சொல்லலை. கம்பெனி பத்தி அபிப்ராயம் சொல்ற அளவுக்கு எனக்குத் தகுதி யில்லைன்னு சொல்ல வந்தேன்.''

''அதுமட்டுமல்ல மிஸ்டர் இளங்கோ. இங்க வேலை பார்க்கற தகுதியும் உங்களுக்கு இல்லைன்னு நான் நினைக் கறேன்.''

—பானர்ஜி போட்ட போடில் இளங்கோ கத்திக் குத்துப்பட்ட மாதிரி ஆகிறான். நெற்றி சுருங்க அவரைப் பார்க்கிறான்.

''இஷ்டத்துக்கும் லீவு...ஏகப்பட்டஃபைல் பெண்டிங். சப்காண்ட்ராக்ட் பார்ட்டிகள்கிட்ட கமிஷன். எல்லாத் துக்கும் மேலா சூது, தண்ணின்னு கெட்ட பழக்கங்கள். ஆவரேஜா ஒரு நாளைக்கு அஞ்சுபாக்கெட் சிகரெட் பிடிக் கிறீங்க. அதுல மூணு பாக்கட் நம்ப ஃபேக்டரிக்குள்ள. அதுவும் டாய்லட்ல. ஆவரேஜா ஒரு சிகரெட் பிடிக்க பத்து நிமிஷம்—முப்பது சிகரெட் பிடிக்க முன்னூறு நிமிஷம்...

வேலைக்கு வர்றீங்களா...இல்லை ஏதாவது பார்க் குக்கு வர்றதா நினைப்பா? எப்படி உங்களை இவ்வளவு



நாள் விட்டு வெச்சாங்க. ஹவ் டேர் திஸ் திங்கஸ் ஃபார் ஆல்? என்னால ஜீரணிக்க முடியலை. ஒர்க் ஸ்பாட்ல டிசிப்ளின் ரொம்ப முக்கியம்.

ஓ.கே. நீங்கபோகலாம். ஐ ஹால் டு சஸ்பெண்ட் யூ.''

''சார்... சார்...'' பதறத் தொடங்கினான் இளங்கோ.

''நோமோர் எக்ஸ்பிளனேஷன்ஸ். ப்ளீஸ் கெட் அவுட்.''

தலையைத் தொங்கபோட்டுக் கொண்டு வெளியே வந்தான். டேபிளின்மேல் காத்திருந்தது! சஸ்பெண்ட் ஆர்டர். பதினைந்து நாள் சஸ்பென்ஷன்.

மனது குதிரைபோல் கனைத்தது.!சற்று பிராந்தி அருந் தினால் இதமாய் இருக்கும் போல் தோன்றியது. கூடவே காஞ்சனா முகம் ஒரு நிலவாய் எழும்பியது.

காஞ்ச்...எனக்கு இப்ப நீதான் மருந்து.

அவன் அவள் நினைப்பில் விழுந்தபோது எதிரே ராம்.

ஜெனரல் மானேஜரின் அடுத்த அழைப்பு அவனுக்குத் தான்.

''போடா மாப்ளே... போ! மாடா உழைக்கிறேல்ல உன்னை பாடாபடுத்தப் போறான் பாரு...''

மனதுக்குள் இளங்கோவிடம் கறுவல்.

ஆனால் அறைக்குள் நேர் எதிரான சூழ்நிலை. ''வெல்கம் மிஸ்டர்ராம். ப்ளீஸ் டேக் யுவர் சீட்.''ராமுக்கு அவர் எதிரே அமரத் தயக்கமாக இருந்தது.

''டோன்ட் பீ ஏ ஃபார்மாலிடிஸ் மேன். யூ ஆர் மை சப் ஆர்டினேட். இன் ஃப்யூச்சர் டெஃபனட்லி யூ ரீச் மை ஜெனரல் மானேஜர் சீட். ஐ ஹால் நோ டவுட் எபௌட் இட்.''

—பானர்ஜியின் பேச்சு ராமைத் தூக்கி தேன் ஜாடிக்குள் போட்டு விட்டது.

நடப்பது கனவா இல்லை நனவா என்கிற சந்தேகம். தயங்கித் தயங்கி அமர்ந்தான்.

''நீங்க ஒரு டெடிகேடிவ் ஒர்க்கர். ஐநோ. உங்களுக்கு பிரமோஷன் தரலை, ஏன் தெரியுமா?''- சஸ்பென்ஸ் வைத்து கேள்வி கேட்டும் பானர்ஜியை ஆவலுடன் பார்க்கிறான் ராம்.

''பிரமோஷனுக்குமேல உங்களுக்கு ஏதாவதுதரணும் கிறது எம். டி. யோட விருப்பம். அதோட நீங்க வேலை பார்க்கறது பிரமோஷனுக்காகவா இல்லை, அதுவே உங்க சுபாவமாங்கறது எங்களோட டெஸ்ட்.''

ராம் ஆச்சரியம் வழிய அவரை கவனிக்கிறான்.

''சுபாவம்தாங்கிறதை தெரிஞ்சுகிட்டோம். நீங்க பரீட்சையில பாஸ் பண்ணிட்டீங்க. ஸோ... உங்களை நம்ம ஃபேக்டரியோட புது பிராஞ்சுக்கு மேனேஜர் ஆக்கலாம்னு எம் டி. டிசைட் பண்ணியிருக்கார். வாட் ஈஸ் யுவர் ஒபீனியன்.''

—ராமுக்கு அதைக் கேட்க புல்லரித்தது.

''சார்...நிஜமாவா சொல்றீங்க...'' நாக்கு குழறியது.

''ஒரு ஜெனரல் மேனேஜர் பொய் சொன்னா நல்லா இருக்காது மிஸ்டர் ராம்.''

''சாரி சார் நான் அந்த மீனிங்ல சொல்லலை. ஐ காண்ட் பிலீவ்... என் உழைப்புக்கு இப்படி ஒரு மதிப்பு கிடைக்கும்னு நான் நினைக்கலை.''

''ஏன்?''

''பொய் சொல்லணும், ஜால்ரா போடணும். அப்பதான் காலம்னு எல்லோரும் சொன்னாங்க.''



''ஆவரேஜ் திங்கிங் அதெல்லாம். எங்கேயும் எப்பவும் டெடிகேடிவ் ஒர்க் நிச்சயமா ஜெயிக்கும் மிஸ்டர் ராம்.''

''கேட்க ரொம்ப சந்தோஷமா இருக்கு சார். எனக்கு பிரமோஷன்கறதை நினைச்சு இல்லை. டெடிகேடிவ் ஒர்க் ஜெயிக்கும்னு சொன்னீங்களே அதுக்காக...''

''ஓ. கே... கோ எஹெட். சார்ஜ் எடுத்துக்க தயாராகுங்க. உங்களுக்கு செபரேட் வீடு, கார், வாட்ச்மேன் எக்ஸெட்ராஸ் எல்லாம் ஆஸ் பெர் கம்பெனி ரூல்ஸ்படி இன்னும் ஒரு வாரத்துல உங்களுக்குக் கிடைச்சுடும்.''

பேசியபடி கைகுலுக்க, பானர்ஜியின் கரம் நீளுகிறது. பதிலுக்கு கரத்தை நீட்டுகிறான் ராம்.

முகத்தில் சந்தோஷ மின்னல். ஆபீஸ் முழுக்க அதன் ஒளி வண்ணம். எல்லோரும் கைகுலுக்கினார்கள். இளங்கோ மட்டும் எரிமலையாகக் குமுறுகிறான். ஜீரணிக்க முடியவில்லை. நல்லதற்குக் காலமில்லை என் றல்லாவா நம்பியிருந்தேன். நல்லதற்கும் காலமுண்டா என்ன?

'இதன் காரணமாக காஞ்சனா கை நழுவி விடுவாளோ?' பயத்தில் அவன் நடுமார்பில் ஒரு பள்ளம் விழுந்தது. முகத்தில் கொடூரக் களை ஓடிப் பரவியது. ஆற்றில் அடித்துச் செல்லப்படுவது போல் ஒரு பிரமை வந்து முகாமிட்டது.

மனதிலும் புதிது புதிதாக முடிவுகள்.

# 6

ஜன்னல் ஓரமாக ஒரு சோகப் பதுமையாகத் தெரிகிறாள் காஞ்சனா.

வீட்டில் போட்டது போட்டபடி கிடக்கிறது. கீ கொடுக்க மறந்து கடிகாரம். மூடப்படாத புத்தகம். தூசி படிந்த டைனிங் டேபிள். தவறி தரையில் விழுந்த நிலையில் கிடக்கும் பால் பாத்திரம்.

பார்த்துப் பார்த்து துடைத்து வைத்துக்கொள்பவள், தன்னை இழந்து விட்டதால் மற்ற எதுவும் பெரிதில்லை என்று மனோரீதியாகச் சோர்ந்துவிட்டது நன்றாகத் தெரிகிறது.

மனதில் ஆசைநாயகனாக உதயமான இளங்கோ இப்பொழுது நெருஞ்சி முள்ளாய்த் தெரிகிறான்.

இவன் முன்னால் ராம் நினைவு மகோன்னதமாக அவளுக்குள் ஊற்றெடுக்கிறது.

ராம் அவள் உணர்ச்சிகளை புரிந்து கொள்ளவில்லை என்பதைத் தவிர, எந்தக் குற்றமும் இல்லாதவன்.

இந்த இளங்கோ...

இந்த இளங்கோ...

நினைக்கும்போதே, அவன் வந்து விட்டதை ஸ்கூட்டர் சப்தம் நிரூபிக்கிறது.

சவடாலான நடை நடந்து படியேறி உள் நுழைகிறான்.



காஞ்சனா அவனைப் பார்த்தும் பார்க்காத மாதிரி அதே சமயம் பதட்ட நினைப்போடு தடுமாறத் தொடங்கினாள்.

அவள் எதிரே சோபாவில் அமர்ந்தவன், எதிரில் கிடந்த ஹிந்துவை விரிக்கிறான்.

அதை வாசிப்பதுபோல் பாவனை.

ஓரக்கண் என்னவோ காஞ்சனாவையே துளைக்கிறது. ''எங்க வந்திங்க?'' கேட்கிறாள் அவள்.

''இது என்ன கேள்வி காஞ்சனா.'' இளங்கோவிடம் கூட இதமான ஆரம்பம்.

''இனிமே இங்கே வராதீங்க...''

''ஏன்?''

''எனக்குப் பிடிக்கலை.''

''எனக்கு அப்படியில்லை.''

''நரிக்கு தேன் கசக்காதுங்கறது தெரிஞ்ச விஷயம் தானே.''

''நீ எப்ப இருந்து இப்படிப் பேச ஆரம்பிச்சே...''

''கேள்வி எதுக்கு? கிளம்புங்க...''

''நீ சொல்றபடி கேட்க நான் என்ன உன் வேலைக்காரனா?''

''வேலைக்காரன் உங்களுக்கு ஆயிரம் மடங்கு மேலானவன்.''

''அதை நீ சொல்லக்கூடாது.''

''வேற யார் சொல்லணும்?''

''அத ஒரு நல்ல குடும்பம் பொண்ணு சொல்லட்டும்.''

—அவளுக்கு முதுகில் திராவகம் பரவிய மாதிரி ஆனது. கண்ணீர் குபீர் என தீத்தாக்கம் நெஞ்சும் சேர்ந்து வேகத் துடிப்பெடுத்தது.

'ஐயோ கொஞ்சம் மயங்கியதில் எத்தனை இழிவான பெயர் வந்து விட்டது.'

முகம் முழுக்க வியர்வை முத்துக்களின் ஆதிக்கம்.

''சரி சரி... எனக்கு இப்ப நீ வேணும்.''

அவள் அவனை கூர்மையாக உடனேயே பார்த்தாள்.

''இப்படிப் பார்த்தா பயப்படுவேனா என்ன? என் பேச்சைக் கேட்டா நீ என் ஆசை நாயகியா, அதே சமயம் உன் புருஷனுக்கும் பொண்டாட்டியா இருக்கலாம். இல்லேன்னா நீ, உன் புருஷன் இரண்டு பேரும் மானம் போய் தூக்குல தொடங்கிடணும். அப்படிப் பண்ணிடு வேன்.''

அவள் உடனேயே கண் கலங்கினாள்.

''திடீர்னு ஏண்டி என்னை வெறுக்கறே. உடம்புக் காகத்தானே என்கிட்ட வந்தே நீ?''

''இல்லை... இல்லை...'' அவள் அலறினாள்.

''வேற எதுக்கு?''

''நீ ஒரு நல்ல மனுஷனா, என்னைப் புரிஞ்சவனா இருப்பேன்னு நம்பி மோசம் போயிட்டேன். நீ ஒரு குடிகாரன்.''

''நாட்டுல நூத்துக்குத் தொண்ணூறு பேர் குடி காரங்கதான். குடி ஒண்ணும் பாவமில்ல.''

''போதும் உபதேசம்... வெளிய போ.''



''முடியாது. வந்த நோக்கம் ஈடேறாம போகமாட் டேன்.''

''ப்ளீஸ்...என்னை விட்டுடு.''

''நூறா இருநூறா போகட்டும்னு விட? நீ என் சந்தோஷம். எப்படி விடுவேன்.''

''பெரிய மனசு பண்ணு. என்னை விட்டுடு.''

''விட்டுடறேன். நான் சொல்றமாதிரி கேட்டா...''

''என்ன...என்ன?''

''இப்ப உன் புருஷன் புதுபிராஞ்ச் மேனேஜர் ஆகப் போறான்'' அவன் சொன்னதைக் கேட்ட அவள் முகத்தில் ஆச்சரிய மின்னல்.

''நிஜமாவா?''

''ஆமாம். ஏதோ ஒரு குருட்டு அதிர்ஷ்டம் மேனேஜர் ஆகிவிட்டான். கார் பங்களா வாட்ச்மேன்னு இனி உன் காட்டுல மழைதான்.''

அவள் அதைக்கேட்டு அந்த நிலையிலும் பரவசத்தின் உச்சிக்குப் போனாள்.

''ரொம்ப சந்தோஷப்படாதே. எனக்கு சஸ்பெண்ட், அவனுக்கு பிரமோஷன்.''

அவள் அவனை விருட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். ''சஸ்பெண்ட் ஆன நிலையில நான் வேலையில நீடிக்க விரும்பலை. ஐ வாண்ட் ரிசைன்.''

பேச்சில் இடைவெளிவிட்டு இளங்கோ காஞ்சனாவின் முகத்தை வெறிக்கிறான். அவளிடம் கலக்கம்.

''லைஃப்ல நான் வேற விதமா செட்டில் ஆக ஆசைப் படறேன். ஆகையால...''

—திரும்பவும் பேச்சில் இடைவெளி விடுகிறான். ''ஒரு ஐந்து லட்சத்துக்கு ஏற்பாடு பண்ணு. உன்னையும் உன் குடும்ப மானத்தையும் விட்டுறேன்.''

அவளுக்கு பகீரென்று ஆனது.

''அஞ்சு லட்சம் ஒண்ணும் பெரிய தொகை இல்லை. நீ மனசு வெச்சா ஒரு மாசத்துல எனக்கு சம்பாதிச்சுத் தர முடியும்.'' அவளுக்கு அடிவயிற்றில் கத்தி ஏறியது. இவன் எங்கு சுற்றி வருவான் என்பது தெரிந்து போனது. கண்கள் அகண்டு மருண்டது.

''என்ன மிரள்றே...முழுக்க நனைஞ்சப்புறம் முக்காடு எதுக்கு. நல்ல வாழ்க்கை வேணும்னா நான் சொல்றதைக் கேள். இல்லே...''

அவன் மிரட்டும்போதே வாசல்புறம் ஒரு கார் வந்து தேங்கும் சப்தம்.

எட்டிப் பார்த்தால் ராம்.

உற்சாக வெள்ளத்தில் நீந்தியவனாய் வாய் நிறைய 'காஞ்சனா' என்று கூவியபடி உள் நுழைகிறான்.

''உன் புருஷன் வந்துட்டான். சுதாரிச்சு நடந்துக்கோ'' -இளங்கோவிடம் அந்த வினாடிக்குள் எச்சரிக்கை. உள்ளே நுழைந்த ராமின் முகம் இளங்கோ அங்கு இருப்பதைப் பார்த்து சற்று மாறுகிறது.

இளங்கோ சமாளிக்கிறான்.

''வாங்க மேனேஜர் சார். வாழ்த்துக்கள்.''

''வாழ்த்து இருக்கட்டும். நீ ரிசைன் பண்ணப் போறதா கேள்விப்பட்டேன் நிஜமா?'' டையைக் கழற்றியபடி ராம் கேட்கிறான்.

''ஆமா... சஸ்பெண்ட் ஆகி, சர்வீசை கன்டினியூ பண்ண எனக்கு இஷ்டமில்லை.''



''ஏன் சஸ்பெண்ட் ஆனே...யோசிச்சியா?''

''அதை விடு. உன் பிரமோஷனுக்கு ஐயாவுக்கு என்ன பண்ணப் போறே?''

''என்ன பண்ணனும்?''

''பார்ட்டி.''

''ஷ்யூர்.''

''அப்ப, இப்ப உன் மனைவியோட அந்த சந்தோஷத்தை ஷேர் செய்துக்கோ. நாளைக்கு பார்ட்டியிலே மத்ததைப் பார்த்துப்போம்.''

''டேய்...வேலையை ரிசைன் பண்ணாதே...''

''சாரிப்பா. நான் வேற முடிவு எடுத்தாச்சு. அஞ்சு லட்ச ரூபாய் முதல் போட்டு ஒரு பிசினஸ் ஆரம்பிக்கப் போறேன். அப்புறம் பார் ஐயாவை.''

அவன் பேசுவது ராமுக்குப் புரியவில்லை. ஆனால் காஞ்சனாவோ கதி கலங்கி விட்டிருந்தாள்.

அவன் தான் ஒரு இங்கிதக்காரன் என்பது போல் வெளிக்கிளம்பினான்.

''ஆமா இப்ப இவன் எதுக்கு இங்க வந்தான்?''

ராமின் கேள்விமுன் திணறுகிறாள் காஞ்சனா.

''யாருக்குத் தெரியும். வந்தாரு, போறாரு.''

நாக்கு குழறுகிறது காஞ்சனாவிடம்.

''போகட்டும். என் லட்சியத்தை நான் அடைஞ்சுட்டேன் காஞ்சனா, நான் இப்ப மேனேஜர். இளங்கோ முந்திகிட்டு சொல்லிட்டதால உனக்கு த்ரில் இல்லாம போயிடுச்சோ.''

''இப்பதான் ரொம்ப த்ரில்லே ஆரம்பிச்சிருக்கு.''

அவள் வறண்ட நாவுடன் தடுமாற ஆரம்பித்தாள். அவனோ அவளை ஆசையாக இழுத்து அணைத்தான்.

''காஞ்சனா, நான் இன்னிக்கு ரொம்ப மகிழ்ச்சியா இருக்கேன். இனிமே நமக்கு ஒரு குறையும் இல்லை.'' அவளுக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. அந்த அணைப்பை ரசிக்க அவளால் முடியவில்லை.

''ஏன் ஒரு மாதிரி இருக்கே? இனி அந்த ஸ்கூட்டர், வீட்ல ஃபைல் பார்க்கறது, அரக்க பரக்க ஓட்றது எதுவும் கிடையாது. என் சப்ஆர்டினேட்லை வேலை வாங்கி ஜமாய்க்கப் போறேன்.

எண்ணி எண்ணி செலவு செய்யற நிலை இனி இல்லை எல்லாம் கம்பெனி செலவு.''

அவன் மகிழ்ச்சி மத்தாப்பாக ஒளிருவதை ரசிக்க முடியாமல், அவளுக்குள் இளங்கோ முள்ளாய் குத்திக் கொண்டிருந்தான்.

அவன் எதிரில் அவன் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ள முடியாத குற்ற உணர்ச்சி ஆயிரம் புழுவாய் அவளுக்குள் நெளிசலெடுக்க, ராம் காஞ்சனாவின் உதட்டில் தன் உதட்டைப் பதித்தான். அவள் தள்ளி விட்டாள்.

''ஏன் காஞ்சனா தள்ளி விடறே? வேலைல நான் மறந்துட்ட விஷயங்கள் இவை. இப்பதான் ஞாபகம் வந்ததான்னு கேக்காதே. சாரி!''

'அவனா சாரி கேட்பது? நானல்லவா உன்னிடம் சாரி கேட்க வேண்டும். பெரிய வாழ்வு வந்து விட்டதாக கருதிக் கொண்டிருப்பவனே...வந்திருப்பது வாழ்வல்ல. தாழ்வு அதுவும் என்னால்.''

நினைப்பை கண்ணில் சுமந்தபடி அவனைப் பார்க்கிறாள்.



''ஏன் காஞ்சனா, பேயடிச்ச மாதிரி இருக்கே? என்னாச்சு உனக்கு. இன்னிக்கு நமக்கு ஒரு பொன்னாள்.''

அவள் உடனே அதைக்கேட்டு அழத்தொடங்கினாள். சற்று ஏங்கலாகவே அழுதாள். 'பொன்னாளா இது? ஐயோ...இது எத்தனை மோசமான நாள்.' நினைக்க முடியாமல் நினைத்தாள்.

''காஞ்சனா, என்னாச்சு உனக்கு. எதுக்கு அழறே?''

அவள் அவன் உலுக்கிய வேகம் கண்டு பதறி சமாளிக்கத் தொடங்கினாள்.

''இது ஆனந்தக் கண்ணீருங்க'' என்றாள்.

''அதானே பார்த்தேன். ஒரு வினாடி என்னை உலுக்கிட்டே. சரி சரி, கிளம்பு.''

''எங்கே?''

''எங்கேயா? உனக்கு இன்னிக்கு ஏதாவது வாங்கி பிரசன்ட் பண்ணினாதான் எனக்கு நிம்மதி.''

''அதெல்லாம் எதுக்கு?''

''அதெல்லாம் எதுக்கா? பொண்டாட்டிக்கு புருஷன் பிரசன்ட் பண்ணாம தெருவுல போறவனா பண்ணுவான் கிளம்புன்னா...''

அவளால் மறுபேச்சுப் பேச முடியவில்லை. முகம் கழுவி தலை திருத்திக்கொண்டு கிளம்ப எத்தனிக்கும் வரை இளங்கோ முகம் பிராண்டிக் கொண்டேயிருந்தது.

உள் மனதில் வேறு பெரிய கூச்சல்.

உனக்கு இவனோடு வெளியே போய்வரத் தகுதி உள்ளதா?'—பிரம்மாண்ட கேள்வி. இல்லை என்ற பதிலோடு அவளைக் குலைத்தது. சிலை போல் நின்று விட்டாள்.

"என்ன காஞ்சனா கிளம்பாம நின்னுட்டே. வாட் ஹேப்பண்ட் உடம்புக்கு ஏதாவது...?"

"ஆமா உடம்புக்குத்தான். உடம்புக்குதான்" சமாளிப்பாகப் பேசினாள்.

"என்ன உடம்புக்கு?"

"இப்ப சரியாயிடிச்சு."

"சரியாயிடிச்சா? என்ன சொல்றே, எப்ப உடம்புக்கு வந்துச்சு?"

"சரி சரி, கிளம்புங்க—" அவள் அவனை தள்ளிக் கொண்டு வாசல் பக்கம் விரைந்தாள். அவன் சுத்தமாய் ஷேவ் செய்து, ட்ரிம்மாய் இன்செய்து கொண்டு பார்க்க படு ஸ்மார்ட்டாய் தெரிந்தான்.

பொசிஷன் சிலபேர் பொலிவையே மாற்றிவிடுகிறது'

ஓடிப்போய் காரில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

அவனும் ஏறி அமர, டிரைவர் காரைக் கிளப்பினான்.

"ஆபீஸ் கார், ஆபீஸ் டிரைவர், இனி எப்பவும் நமக்குத்தான். டிரைவர் ரொம்ப தங்கமான மனுஷன். நீ எங்க வேணும்னாலும் நம்பி போகலாம். என்ன ராமசாமி நான் சொல்றது சரியா?"

டிரைவர் ராமசாமியின் தலை உற்சாகமாய் ஆடுகிறது.

காருக்குள் அவளை நெருக்கிக்கொண்டு அமர்ந்தவனை அதிசயமாகப் பார்க்கிறாள்.

'இத்தனை ஆசையை, இத்தனை ரசனையை இவ்வளவு நாளாக எந்த மூட்டையில் கட்டி வைத்திருந்தீர்கள்?' என்பதுபோல் அவனை பார்க்கிறாள்.



"காஞ்சனா, நீ இனிமே எதுக்கும் கவலைப்படக் கூடாது. என் லைஃப் ஆம்பிஷன் பூர்த்தியாயிடிச்சு. இனி நம்ப பர்சனல் லைஃபை கொஞ்சம் கவனிக்கலாம்னு இருக்கேன். சீக்கிரமா அப்பா ஆக ஆசையா இருக்கு..."

அவன் உற்சாகமாகப் பேசுவதை அவள் வேகமாகத் தடுத்து டிரைவரைக் காட்டுகிறாள்.

"ராமசாமியும் நம்ப வயசை தாண்டின மனுஷன் தானே? ஒண்ணும் கண்டுக்க மாட்டார்" என்கிறான் ராம்.

அவளுக்கு எல்லாமே ஆச்சரியம் தருகிறது.

வாழ்க்கை இப்படிக்கூட நிறம் மாறுமா என்ன?

மனிதர்கள் இத்தனை புரியாதவர்களா?

ஒரு பெண் பொறுமை இழந்துவிட்டால் எத்தனை விபரீதங்கள்...

இளங்கோ அவளை இடறி விட்டுக்கொண்டே வருகிறான.

முகத்தில் பிசாசின் கரம் பட்டமாதிரி ஒரு உறைந்த நிலை.

ராம் அதை ஏதோ உடல் நலக்குறைவு என்று நினைத்துக் கொண்டான்.

நல்லி சில்க்ஸ்க்கு காரை விட்டு ஒரு நல்ல பட்டுப் புடவை வாங்கித் தந்தான்.

அம்பிகா ஜுவல்லரியில் ஒரு கல் தோடுக்கு ஆர்டர் செய்தான். பின்னர் சரவணபவனில் மூக்குமுட்ட டிபன்.

அவளால் விழுங்க முடியவில்லை

யாரைப் பார்த்தாலும் இளங்கோவாகவே தெரிந்து, அவளை மிரட்டிக் கொண்டிருந்தனர்.

அதே சமயம் ராமின் அந்த புதிய உற்சாகம், துள்ளல் அன்பு. ஆசை அனைத்தும் அவளுக்குள் ஒரு புதிய எண்ணத்தை உருவாக்கியது.

'ராம், இந்த சந்தோஷம் என்றும் உங்களுடன் நீடிக்க வேண்டும் என்றால், முதலில் நான் ஒழியவேண்டும். நான் உங்கள் மனைவி எனும் தகுதியை இழந்து வெகு நாளாகி விட்டது.

இப்பொழுது கொடுமையான ஒரு சூழ்நிலைக் கைதி அதிலும் புலி வாயில் சிக்கியிருக்கும் புள்ளிமானை விட மோசம் நான். இந்தப் புள்ளிமான் உங்கள் சந்தோஷத்துக்கு குந்தகம் விளைவித்து விடக்கூடாது.'

மனப்புயலில் கண்களில் ஈரம் சேர்ந்து விட்டது.

ராம் இந்த முறை தப்புக் கணக்கு போடாமல் கேட்டான்.

''காஞ்சனா சம்திங் ராங். என்னவோ நடந்திருக்கு. நீ ரொம்ப குழம்பியிருக்கே. என்ன நடந்தது? ஏன்ரொம்ப நெர்வஸா இருக்கே...?''

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள் கண்ணீர் நிரம்பிய விழிகள் அவனை பார்க்கவிடாமல் மறித்தன. ஆனால் மனதில் ஒரு முடிவுககு வந்துவிட்ட நிலை.

''வீட்டுக்கு வாங்க சொல்றேன்'' என்றாள்.

''இங்கேயே இப்பவே சொல்லு'' அவனிடம் பதறல்.

''ப்ளீஸ் வீட்டுக்கு வாங்க.''

அவனால் அதற்குமேல் காத்திருக்க முடியவில்லை காரை வேகமாக வீட்டுக்கு விடச்சொன்னான். அவளிடம் இப்பொழுது முன்போல அந்த அளவு பதட்டம், அழுகை எதுவுமில்லை.



அவனுக்கு எல்லாமே ஆச்சரியமாக இருந்தது. காரும் வீட்டுக்குள் நுழைந்தது. இருவரும் இறங்கி உள்ளே நுழைந்தனர்.

''நீங்க பெட்ரூமுக்குப் போங்க வந்துடறேன்'' என்றபடி, சமையல்கட்டுப் பக்கம் போனாள்.

''முதல்ல விஷயத்தைச் சொல்லு'' அவன் நடு ஹாலில் நின்றபடி கத்தினான்.

''ப்ளீஸ். சொன்னா கேளுங்க. பெட்ரூமுக்குப் போங்க'' அவளின் கண்டிப்பான குரலைத் தொடர்ந்து பெட்ரூமுக்குப் போனான்.

அவள் சமையல் கட்டில் விழிகளால் துழாவினாள். அகப்பட்டது அந்த பாட்டில்.

விஷம்!

சற்றும் யோசிக்காமல் மடமடவென்று வாயில் கொட்டிக் கொண்டாள். புடவைத் தலைப்பால் வாயைத் துடைத்தபடி வேகமாகப் படுக்கை அறைக்கு வந்தாள்.

அவன் கட்டிலில் அமர்ந்திருந்தான்.

அவனருகே போய் தரையில் அமர்ந்து கொண்டாள்,

அவன் அவளையே வெறித்தான்.

''நான் கெட்டுப் போயிட்டேங்க'' என்றாள், சற்றே நடுங்கும் குரலில்.

''அந்த இளங்கோகிட்ட மயங்கி உங்களை நான் இழந்துட்டேன். நான் உங்களுக்கு இனி துளிகூட லாயக்கு இல்லை'' சொல்லும்போதே விஷவாடை காற்றில் கரைந்து ராமுவின் மூக்கை நிரடியது.

''காஞ்ச்...'' அவன் அவள் தோளைப் பற்றினான் இறுக்கமாக.

''ஆமாங்க. நான் ரொம்ப மோசமான பொண்ணு. பொறுமை இல்லை எனக்கு. உடம்பு என்னை ஜெயிக்க இடம் கொடுத்துட்டு மனதுகிட்ட தோத்துப் போய் புழுவா துடிச்சுகிட்டு இருக்கேன். அவன் என்னை வெச்சு பிளாக்மெயில் பண்ண நினைச்சிருக்கான்.

நான் உயிர் வாழற ஒவ்வொரு வினாடியும் உங்க கௌரவத்துக்குத்தான் ஆபத்து. அதான் விஷத்தை குடிச்சுட்டேன்.

வயித்துவலி தாங்காம விஷம் குடிச்சுட்டதா எழுதி வெச்சிருக்கேன். கவலைப்படாதீங்க.

என்னை மன்னிச்சுட்டதா கூட நீங்க சொல்லக் கூடாது. எனக்கு இந்த மரணம் ஒரு அல்ப தண்டனை. பெரிய தண்டனை நான் பிறக்கறப்ப வெல்லாம் இருக்குங்க...''

காஞ்சனா பேசப்பேச ராம் நொறுங்குகிறான். இதென்ன கோலம்?

இன்பமான நாளில் இப்படியெல்லாம் கூடவா திருப்பங்கள் வரும். தெய்வமே...! அவன் ஈரக்குரலை நடுங்குகிறது.

அவளது மயங்கிய நிலை அவனைப் பிராண்டி எடுக்கிறது. அவள் சொன்னதைவிட செய்ததில் மனது மூழ்கிக் கரைகிறது.

''நோ...''

அலறலுடன் அவளை அள்ளி எடுத்தான்.

# 7

கட்டாக ஐந்து லட்சம்.

வீட்டை விற்ற பணம்.

சூட்கேசில் வந்து அடங்கி விட்டது.

அத்துடன் கிளம்புகிறான் ராம்.

இளங்கோ எதிரில் போய் நிற்கிறான்.

இளங்கோவால் ராமை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

பெட்டியும் கையுமாக வந்திருப்பவனைப் பார்த்துக் கண்களில் வெறிப்பு.

பெட்டி அவன் எதிரே விரிகிறது. ஐந்து லட்சம் டாலடிக்கிறது.

''எடுத்துக்கோ இளங்கோ. என் வீடு விற்ற பணம். காஞ்சனாவை வெச்சு நீ சம்பாதிக்க நினைச்ச பணம் எடுத்துக்கோ...''

இளங்கோ அந்தப் பணத்தை அந்தப் பதிலை முற்றிலும் எதிர்பார்க்கவில்லை.

''என்ன பாக்கறே... பணத்தை எடுத்துக்கோடா— இதை ஏன் கொண்டு வந்தேன் தெரியுமா?''

ராமின் கேள்வி முன் வெறிக்கிறான் இளங்கோ.

''இன்னொரு பெண்ணை வசப்படுத்தி அவளையும் காஞ்சனா மாதிரி ஆக்கிடக்கூடாதுன்னுதான்.''

அந்த பதில் அவன் பொட்டில் அடிக்கிறது.

''காஞ்சனா உடம்புல கெட்டிருந்தாலும் உள்ளத்துல கெடலை. அதான் உண்மையைக் கொட்டிட்டா. என் வரையில கற்பைவிட உண்மை பெரிசு. உண்மை பேசினா உருப்பட முடியாது இந்த நாட்டுலங்கற ஈன நிலையை மாத்தி, உண்மைக்கு எப்பவும் மரியாதை செய்யணும்கறதுதான் என் நோக்கம்.

அதனாலேயே உண்மையை ஒத்துக்கிட்டு தனக்குத் தானே தண்டனையும் கொடுத்துக்கிட்ட காஞ்சனா, என் வரையில கெடாதவ. ரொம்ப உயர்ந்தவ. ஆயிரம் காய்ச்சல்குளிரால இந்த உடம்புக்கு எவ்வளவோ இடைஞ்சல். அதுமாதிரிதான் நீயும். அவ வரையில நீ ஒரு வியாதி. வியாதிக்கு மருந்தா விஷம் அமைஞ்சது காஞ்சனாவுக்குத் தான் இருக்கும். ஆண்டவன் அருளாலே அவனைக் காப்பாத்திட்டேன்.

உயிரைக் காப்பாத்தினா போதாது. உள்ளத்தையும் காப்பாத்தணும், என் தவறுகளையும் நான் இப்ப உணர ஆரம்பிச்சுட்டேன்.

இந்தத் தெளிவுக்கெல்லாம் காரணமான உனக்கு நான் கொடுக்கற விலைதான் அஞ்சு லட்சம். இனிமேலாவது ஒழுங்கா இரு. நான் வரேன்.''

பேசிவிட்டு ராம் திருப்பிப் பார்க்காமல் நடக்கிறான்.

இளங்கோவிடம் ஸ்தம்பிப்பு.

மனதுக்குதான் கற்பு என்று கூறாமல் கூறிவிட்ட அவனையே வெறிக்கிறது இளங்கோவின் பார்வை.

'இவன்தான் என்ன ஒரு உன்னதமான மனிதன்' மனதில் மின்வெட்டாய் தீர்மானம். ராமின் கால்கள் ஒரு முழம் பூவோடு ஆஸ்பத்திரியில் புனர்ஜென்மம் எடுத்துவிட்ட காஞ்சனாவை நோக்கி நடப்பதை அவனால் உணர முடிகிறது.



தலை தாழ்ந்து போகிறது. ஒருத்திக்கு உண்மை தந்த வாழ்வை எண்ணி, உள்ளத்தில் இனம் புரியாத பெருமிதம் உண்டாவதை அவனால்கூட தடுக்க முடியவில்லை.

ஐந்து லட்சத்தை நெருங்கி கைகளில் எடுக்கிறான்.

''ராம்...'' அலறுகிறான்.

திரும்பிப் பார்க்கும் ராம் முன் பெட்டியுடன் ஓடி வரும் இளங்கோ ''என்னையும் மன்னிச்சுடுடா'' என்றபடி, புழுதி பறக்க தரையில் விழுகிறான்.

ராமின் கரங்கள் அவனையும் ஏமாற்றவில்லை.

ஃ ஃ ஃ

69

# இன்னும் சில தாஜ்மகால்கள்!

1

அந்த இயந்திரம் இயங்கிக் கொண்டிருந்தது. ஐந்து மில்லி மீட்டர் பருமனில் வட்டமான, வெளுப்பான கிரைண்டிங் சக்கரம் அசுர வேகத்தில் சுழன்று கொண் டிருந்தது.

அதனால் ஏற்படும் 'விர்ர்ரி ஃபிங்' எனும் சப்தத் திற்கு காதைக் கொடுத்துவிட்டு அந்த இயந்திரத்தை இயக்கிக் கொண்டிருக்கும் சீனியர் மாணவன் ஜோசப்பின் பெரிய கிருதாவின் மேல் பார்வையை வைத்துக்கொண்டு காற்று வீசினாலும் அலுக்காத கருவேல மரத்தைப்போல நின்று கொண்டிருந்தார் அவர்.

ஆஸ்திரேலியாவின் ஆர்ட்டீஷியன் வென்னீர் ஊற்றுக் கணக்காய் மனதுக்குள் உஷ்ணத் தனமான எண்ணங்கள்.

அந்த எண்ணத்துக்குள்ளாய் அவன் மனது அமுங்கி நசுங்கி அழுவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தது.

'விர்ர்ரி... ஃபிங்' என்று ஓடும் அந்த இயந்திரத் துக்கு பக்கத்தில் லேத் ஒன்று.

இரண்டுக்கும் பத்தடி அப்பால் சில கிரைண்டிங் மெஷின்கள். அவைகளை சுருக்கமாக எஸ்.ஜி.1, எஸ்.ஜி.2



என்று பெயரிட்டு அழைத்துக் கொண்டிருந்தார்கள். அவைகளுக்கு பத்தடி அப்பால் ஒரு என்ஜின் லேத். அதற் கும் அப்பால், அந்த அப்பாலுக்கும் அப்பால் விர்ரிஃஃபிங்' ஐப் போல் 'கிர்ர்ர்... ட்ரொய்ங்...' என்று பலதரத்தில் மின்சாரசக்தியோடு சப்தம் போட்டு பலதரப்பட்ட பொருட்களை உருவாக்கும் எந்திரங்கள்! எந்திரங்கள்.

'சி.ஜி-3, சி ஜி-2 எஸ். ஜி-1, எஸ் ஜி-2, என்ஜின் லேத், மில்லிங் மெஷின், டிரில் கிரைண்டிங்... இதெல்லாம் என்ன?'

அநியாயத்திற்கு மனசைக் குழப்பும் ஆங்கில எழுத்துக் களையும், அந்த வெள்ளை எழுத்து பதிந்த எந்திரங்களை யும், அவன் முதன் முதலாய் நோக்கி மருண்டு சிலிர்த்து நின்றபோது, அந்த பெரிய தொழிற் பயிற்சிக் கூடத்தின் வாட்டசாட்டமான 'ஜோஸ்' மாஸ்டர்தான் அவனை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தவர்.

அவரது தமிழ் கொஞ்சம் மனோகரமானது.

நமது சுத்த தமிழ் கலந்த அந்த மலையாளத்துக் காரரின் தமிழின் உச்சரிப்புக்குள் அவன் தனது [illegible] வலிந்து பதித்துக் கொண்டதுண்டு.

''உன் பேரு என்னான்னு ப[illegible]சே?''

''கமலாதரன்.''

''ஆங் கமலாதரன்!-கமலோதரன் இ[illegible]ன்ஸ்ட்டியூட்டின் ஸ்பெஷல் டிரெய்னி நீ. உனக்கு கிரைண்டிங்ல டிரெயினிங் கொடுக்கச் சொல்லி நின்னோட கம்பெனியில பறைஞ் சிருக்கி ............இது சி ஜி -3. சி ஜி.-3 மீன்ஸ் சிலிண்டரி கல் கிரைண்டிங் மெஷின்னு அர்த்து. மனசிலாயா? த்ரிங்கறது அதோட நம்பராணு! இ மெஷினில் இது

27857
4346666

கிரைண்டிங் வீலாணு. இது ஹெட் ஸ்டாக். இது டெய்ல் ஸ்டாக். இது பெட்...''-என்று மேற்படிக்கும்மேற்படியாய் விளக்கிவிட்டு ''கிரைண்டிங் டிரேட்ல ஓர்க் செய்ய கான்சன்ட்ரேஷன் ரொம்பவேணு... இ மெஷினில் சீனியர் ட்ரெய்னீஸ் ஓர்க் செய்யச்சே க்ளீனாய் ஆப்சர்வ் செய்யணு... அப்பத்தான் நின்னோட ஓர்க் உஸ்தியாய் (செம்மையாய்) இருக்கும். -என்றெல்லாம் அவனது பயிற்சி துவக்க நாளின் பத்துமணி அளவில் தொடங்கி, பதினொன்றரை வரை பேசிய ஜோஸ் அந்த தொழிற் பயிற்சிக் கூடத்தின் குறிப்பிட்ட ஒரு இடத்தில் பெரிய தேக்கு மேஜை முன்னால் தேக்கு நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து கொண்டு ஜாப் ஆர்டர்களை மேற்பார்வை யிட்டுக் கொண்டிருந்தார்.

இயல்பான தொழிற்சாலை சப்தம் அவரளவில் மெல்லிசையாகி விட்டிருந்தது. ஒவ்வொரு எந்திரத்தின் ஒவ்வொரு மாதிரி முனகலுக்கும் அர்த்தம் அவருக்குத் தெரியும்.

உட்கார்ந்த இடத்திலேயே எஸ். ஜி.1-ல் பெல்ட் லூஸ் சி.ஜி-2 ல் ஆயில் ஒழுகுது என்று கூறத்தக்க அளவிற்கு அந்த எந்திரங்களுடன் பழகி இயைந்து விட்ட அவரின் காதுக்குள் அந்த மாதிரியான இயந்திர ஓசைகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு படுவேகமாய் உக்ரமாய் சில சொற்கள் சரேலென்று நுழைந்தது.

''திவாகர். பிளடி ராஸ்கல்... மொல்லமாரி... என்னையா செருப்பால அடிக்க நெனைச்சே? உன் தலையை இந்த சி ஜி -3 கிரைண்டிங் வீலுக்குள்ள செருகலே...''

ஜோஸ் படபடக்க எழுந்தார்.



என்ஜின் லேத்தையும், எஸ்.ஜி.-1, எஸ்.ஜி.-2க்களையும் துரித கதியில் கடந்து வெறிபிடித்தாற்போல் கத்தும் கமலாதரனை நெருங்கினார்.

அவனுக்கு பக்கமாய் நிற்கும் சி.ஜி. ஆப்பரேட்டரான சீனியர் ஸ்தம்பித்திருந்தான். ஜோஸ் கமலாதரனை எக்கச்சக்கமான வினாக்களுடன் பார்த்தார்.

''ஏன் கத்தினே? என்னாச்சு உனக்கு? இது இன்ஸ்டியூட். மறந்து போச்சா?''

அவன் அவரது விழியை, அதனுள் படர்ந்து கிடக்கும் கேள்விகளை, ஊஹூம் எதையுமே பார்க்க வில்லை. பதிலாக தனக்குத்தானே மெலியப் பேசிக்கொண்டிருந்தான்.

''சூரி என்னை இப்படி தவிக்க விட்டுட்டு போயிட்டியே...எவ்வளவு தைரியசாலி நீ. நீயே தற்கொலைக்கு துணிஞ்சு இன்னிக்கு காலத்தோட கரைஞ்சு நிக்கறதை என்னால ஜீரணிக்கவே முடியலையே...சூரி...சூரி...''

ஜோசப் அவனது தோளைப் பிடித்தார். வலிந்து உலுக்கினார். ''கமலோதர், கமலோதர்...என்ன இது? என்ன மேன் ஆச்சு உனக்கு?'' கொஞ்சம் கத்தினார்.

அவன் சுயநிலைக்குத் திரும்பினான்.

சுற்றிலும் இன்ஸ்ட்யூட்டின் சக பயிற்சியாளர்கள். அடங்கிப் போன, சப்தம் போடாத எந்திரங்கள். இன்ஸ்ட்யூட்டே ஸ்தம்பித்தாற்போன்ற நிலை. அவனுக்குள் நிஜம் பரிமாணமடைந்தது.

''சாரி சார்...கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டுட்டேன். பிகாஸ் மை ஃபீலிங்ஸ் நாட் வெல்.'' அவன் பேசி முடிக்கவும் பிரின்ஸ்பால் அங்கேவரவும் சரியாக இருந்தது.

பின்னர் அவர் தனது ஏ.சி. ரூமை நோக்கி நடக்க இவன் அவரைத் தொடர, எந்திரங்கள் பழையபடி இரைச்சலிட்டு இயங்கத் தொடங்கின.:

ஜோஸ் புரியாத மனோ நெரிச்சலுடன் பயிற்சியாளர்களை பயிற்சிக்குள் அமுக்கிவிட்டு பிரின்ஸ்பாலின் அறையை நோக்கி நடந்தார்.

# 2

**பொன்**னால் ஆன வட்டத்தட்டைப் போல் எதிரே சூரியன்! அவனை அரபி விழுங்கிக் கொண்டிருந்தது. கசந்து மசந்து கிடக்கும் முகநிலைக்குள் கலங்கிக்கிடக்கும் விழிமணிகள் அந்த சிவந்தவனை பார்த்தபடி இருக்க அவன் அனைவரும் கடலோர விளிம்புமேல் நின்று கொண்டிருந்தான்.

''நீ ஒரு சைகாட்ரிஸ்ட்ஸை பார்க்கறது நல்லது...''

''நீ ஒரு சைகாட்ரிஸட்ஸை பார்க்கறது நல்லது...''

''நீ ஒரு சைகாட்ரிஸ்ட்ஸை பார்க்கறது நல்லது...''

—பிரின்ஸ்பாலின் முக்கிய கருத்து காதோரமாய் உருண்டு கொண்டேயிருப்பதாய் அவனுக்குள் ஒருபிரமை. ''இன்ஸ்ட்யூட்டுக்குள்ள வேலையை பத்தித்தான் சிந்திக்கணும். உன் வாழ்க்கையில நடந்து முடிந்ததைப் பத்தியெல்லாம் இல்ல! தெரிஞ்சுதா?''

—ரொம்பவும் அழகிய ஆங்கிலத்தில், நனி சிறந்த உச்சரிப்பில் பிரின்ஸ் பேசிய பேச்சுகளின் சின்னச்சின்ன துண்டுகள் எதிரே வந்து திரும்பும் அலைகளைப் போல் வந்து வந்து போனது.





சக்கையாய் ஒரு பாட்டம் ஏறிவிட்டார் பிரின்ஸ்பால்.

''நீ தொடர்ந்து கான்சன்ட்ரேசனோட உருப்படியா வேலை செய்வியான்னு எனக்கு சந்தேகமாயிருக்கு. இது உன் ஃபியூச்சர் பிராப்ளம் பாரு. அதனால நான் அவசரப் படாம இருக்கேன். இல்லேன்னா டெர்மினேஷன்தான்.''

''ஐயோ சார். அந்த வார்த்தையையே சொல்லாதீங்க. என்னோட புது வாழ்க்கை இந்த தொழிலை நம்பித்தான் இருக்கு.''இனிமேல் நான் நீங்க மெச்சும்படி...

''எதுக்கும் நீ இன்னிக்கு நல்லா ரெஸ்ட் எடுத்துக்கோ...பக்கமா அரபிக்கடல் இருக்கு. அதுல கலக்கற குடவல்லி ஆறு இருக்கு. இங்கெல்லாம் போய்வா மேன். மனச்சூடு ஆறும்! எண்ணம் கொப்பளிச்சா இயற்கைதான் அதை உடனே ஆத்தும்...''

-கொஞ்சம் மனிதாபிமானமோடு, ரசனையோடு, தானும் ஒரு தமிழன் என்கிற உணர்வோடு பிரின்ஸ்பால் பேசிய பேச்சுக்காகவும், உள்ளபடியே எங்காவது காலார போய் வந்தால் நன்றாக இருக்கும் என்பதாலும் அரபிக் கடலோரமாய் உடம்பை தள்ளிக் கொண்டு வந்திருந்தான் அவன்.

வந்த இடத்திலும் எண்ண ஊர்வலம்.

உஷ்ண நமைச்சல்!

—ரொம்ப, ரொம்ப சின்ன வயதில் ரொம்பப் பெரிய தண்டனைகளை மயிலிறகின் மேல் வைத்த இரும்புத் துண்டு மாதிரி அவன் மேல் காலம் ஏற்றிவிட்டு நிற்கிறது. அந்த சுமை தாளாமல் அவன் தடுமாறி கேவுவதைக்காண அந்த காலத்திற்குத்தான் என்ன இன்பமோ?

சூரியனை அரபி விழுங்கி விட்டிருந்தது.

விழுங்கிய இடத்தில் சிவப்பு நிறத்தில் மெல்லியதொரு அழகிய படர்ச்சி. இந்த மாதிரியான அழகையெல்லாம் ரசிப்பதில் அவனுக்கு நிகர் ஒருவர் இருக்க முடியுமா?

நாக்கைக் கடித்து, கையைச் சொடுக்கி 'ஐயோ நினைக்கவே கூடாது என்று பார்த்தால் அவள் நினைவு எதை எதையெல்லாமோ தொட்டுப் பிடித்து மலர்கிறதே' என்ற கேள்விப் பிரசவத்துடன் மெலியச்சலிக்கிறான் அவன்.

அந்த சலிப்பின் முடிவில் அவனுக்குள் அவள் ஆரம்பமானாள்!

## 3

கல்லூரி முடிந்து காலார நடந்து வீடு திரும்பும் சில 16 to 20-களுக்குள் அவளும் ஒருத்தி!

அநியாயத்திற்கு ஒரு அழகு அவள் வசம், பிராசோவால் தங்கமாய் துவங்கும் வெண்கலம் போல் பருவத்தால் கொழித்திருந்தது.

அந்தக் கொழிப்பின் காரணமாய் பல பேரின் கற்பனைக்குள் ஒரு கணக்குக்கு ஆட்படாமல் கற்பை இழந்து நிற்கும் அவளை அவன் சந்தித்ததே ஒருவகை விசித்திரம்! விசித்திரம் மட்டுமா?

அது ஒரு 'A'த்தனமான விஷயம்!

தனக்கு தேவையில்லை என்று கருதி ஒரு வாதநாராயண மரம் உதிர்ந்த இலைகளை மிதித்துக் கொண்டு மேண்ட்ரக்ஸ்மாத்திரையால் உண்டான ஜிவுஜிவுப்போடு



சந்திர மண்டலத்தில் மட்டுமே லேசாகிப் போகும் உடம்பை பூ மண்டலத்தில், அதிலும் ஒரு கலா சாலையில் லேசாக்கிச் சாத்தியப் படுத்தி, அந்த சாத்தியத்தால் உண்டான அரை மயக்கத்துக்கு நடுவில் நின்றபடி—

''என்னடி மீனாட்சி?''

உன் கருப்பு பிளவுஸ் என்னாச்சு?

அடங்காமல் வளர்ந்த...யால்

தையல் பிரிஞ்சு கிழிஞ்சு போச்சு...'' என்று உரக்கவே பாடும் பலருக்கு நடுவே அன்று அவனும் ஒருவன்!

அட்டகாசத்தில் அவர்களுக்கு துளியும் சளைக்காத அவளைப் பார்க்க மட்டும் ஏனோ அவனுக்குப் பரிதாபமாய் இருக்கும்.

'அதற்குக் காரணம் அவனது சின்னக் கண்களா?

அடிக்கடி நெற்றிக்கு சரிந்து பின் பார்வையை மறைக்கும் சுருட்சி இல்லாத ஈரம் நிரம்பிய முடியா?

எப்பொழுதும் டக் செய்து விட்டுக் கொண்டிருக்கும் அவனது பொலிந்த தோற்றமா?

சிவந்த நிறமா?

அவன் நடக்கும் போது அவனது ஸ்லிப்பர் கொடுக்கும் 'லப், கிளப்' சப்தமா?

எது? எது?''

—அவள் தனக்குள் பலமாதிரி சிந்தித்து அசட்டுத்தனமாய் கேள்வி கேட்டுக் கொண்டு பதிலைப் பெற முடியாமல் 'வாவரைக் காய்ச்சி' மருந்து கருவான்க் காயினுள் அலம்பிக் குலுங்கும் காய்களைப் போல் சிரிக்க மட்டுமே செய்வாள்.

அப்பா பெரிய போலீஸ் இன்ஸ்பெக்டர்.

அவருக்கு இவள் ஒரே மகள்.

''டாடி காலேஜ்ல ஸ்டுடன்ஸ் டிஸ்டர்ப் பண்றாங்க.'' என்று ஒரு வரியில் சொன்னாலே பல பேருக்கு இவரால் கட்டம் போட்ட சட்டையை மாட்டி விட முடியும்.

ஆனால் ஏனோ இவளுக்கு அவர்களின் இளமைத் துடிப்பு ரொம்ப பிடித்திருக்கிறது. செக்ஸாய் கிண்டலித்து தங்களுக்காய் தவமிருந்து அசடு வழிய அவர்கள் நிற்பதை ரசிக்க முடிகிறது!

கோபமே வரமாட்டேனென்கிறது! அடிமனசு அவளை மீறி கோபப்பட்டாலும், மேல் மனசில் ஒரு வகை ரசனை அந்த கோபத்தை ஆவியாக்கி விடுகிறது. அதிலும் அவனை,

கமலாதரனை நினைத்துப் பார்த்தாலே தலைமேல் பனி கரைகின்ற மாதிரியும், மனசுக்குள் மகிழமரக்காற்று வீசுகின்றாற் போலும், உடம்பு மேகத்துக்கு நடுவே மிதக்கின்ற நிலையிலுமாய் எத்தனை கிளுகிளுப்பு! பரவசம்! சந்தோஷம்! உற்சாகம்!

அர்த்தம் தெரியாத அந்த நிலைக்கு நடுவில் ஒருநாள் வெளுத்த பாவாடையும், நீல தாவணியுமாய் அவள் கல்லூரிக்குள் நுழைகிறாள்.

இரட்டை சடை பின்னி, மைசூர் மல்லிகையை அதில் சுமத்தி அழகொளிர அலங்கரித்துக் கொண்டிருக்கும் அவளது சிரம் ஒண்ணரை டிகிரிக்கு திரும்பி குறிப்பிட்ட வாதநாராயண மரத்தை, மரத்தடி இளசுகளை, அதுகளின் கிண்டல்களை, லூட்டிகளைத் தேடியது.

அவளை ஏமாற்றும் தோரணையில் அந்த மரத்தடி இளமனசுகள் ஒன்றே போல் வாய் மூடி ஸ்தம்பித்து



அவளின் பாவாடை வெளுப்பில், தாவணி நீலத்தில் கரைந்து போயிருந்தார்கள்.

அவள் ஆச்சரியத்துடன் வகுப்பறைக்குள் நுழைந்து விட்டாள்.

''மச்சி, சும்மா சொல்லக்கூடாது, கலக்கல்டா!''

—ஒருவன் மெலிய இதழ் விரித்தான்.

''ஆளை அப்படியே அசக்கறால்லே?''- அவன் கருத்துக்கான பதில் கருத்தை கேள்வியாக்கி அவன் முன்னால் வைத்தான் இன்னொருவன்.

''அப்படியே, போய் வாரி அணைச்சு 'கிஸ்' அடிக்கலாமான்னு இருந்துச்சு எனக்கு...''

''இந்த காலேஜ் கோழிங்கள்லயே இந்த கோழி கொஞ்சம் ஒசந்த கோழிதான். ஒரு நாளாச்சும் ஒரு கிஸ் அடிக்காட்டி என் ஆத்மா சாந்தி அடையவே அடையாது மச்சி...''

''அடேய், அப்பன் போலீஸ்காரண்டா! நிமுத்துனான்னா தெரியும் சங்கதி.''

''போடா, இவளை கிஸ் அடிச்சுட்டு தூக்குல தொங்க கூட ஐயா தயார்.''

''மச்சி, மச்சி... வேண்டாம்டா பேப்பர்லெல்லாம் பேரு வரும்...''

''எவ்வளவு பந்தயம்? பேப்பர்ல பேருவராது! அப்படி வந்தா அதுல என் மானம் மட்டுமல்ல மச்சி அவளோட மானமும் தானே அடங்கியிருக்கு?''

''அடேய் பேச்சு அப்புறம். எவண்டா ஆசைப்பட்டபடி செஞ்சு முடிக்கப் போறவன்?''

சில வினாடி மௌனம். அப்புறம்.

'அடேய் அவளுக்கு கமலாதரன்னா எப்பவுமே ஒரு இதுடா. அவன் ட்ரை பண்ணாகூட முடிச்சுக்கிடலாம்.'

கமலாதரன் கல்லாய், சிலையாய் இவர்களின் பேச்சு எதிலும் கவனமில்லாதவனாய் அவளின் நினைவாய் மட்டுமே இருந்த நிலையில் ஒருவன் பைய உதிர்த்த பேச்சு அவனை ஒரு வினாடி உசுப்பியது.

''டேய் கமலா, என்னடா, கனவுல ஏற்காடு லேக்குல' சூரிகூட போட் ரைடிங்கா? பேசுவது காதுல விழுந்துச் சல்லே...''

''ஆங்...ங்... என்ன சொன்னீங்க?''

''அடேய் நீ இருக்கறது பூலோகம். அதாவது புரியுதா?''

''டேய் ரொம்பத்தான் இடிக்கிறீங்களே...''

''இடிக்கலைடா மச்சி, உன்னோட அவளை ஜாய்ன் பண்ண துடிக்கிறோம்...''

''மச்சி நீ மட்டும் துணிச்சலா, திரில்லா ஒரு காரியம் செஞ்சேன்னா போதுண்டா. அவ நாலு ஜென்மத்துக்கு உன் நெனைப்பாத்தான் கிடப்பா...''

''.................''

''என்னடா முழிக்கிறே? எப்பவுமே கோழிங்களுக்கு துணிச்சலானவங்களைக் கண்டாதான் பிடிக்கும். சொல்றதைக் கேளு................ என்ன?''

—அவன் கொஞ்சம் கலவரப்பட்டான்.

லேசாய் கண்களிரண்டும் மிரண்டன.

''பொட்டையண்டா நீ...''

''உன்னைச் செய்யச் சொன்னதை நானே செய்வேண்டா மச்சி. ஆனா அவளுக்கு என் பேர்ல ஒரு 'இது' இல்ல பாரு. அதுதான் என் துரதிர்ஷ்டமா போச்சு...''



''மச்சி பயந்து சாவாதடா. தைரியம் புருஷ லட்சணம்டா...''

—நாலு பேரின் நானாவித பேச்சுக்களின் விளைவாய் அவன் கொஞ்சம் சுதாரிப்புக்கு வந்தான்.

மாலை மணி ஆறு பத்து!

கல்லூரி நூலகத்தின் தமிழ் பிரிவில் அவள்.

''இது ஒரு பெக்கூலியர் கேரக்டர்டா. அந்தக் காலத்து சேரனைப்பத்தி, சோழனைப்பத்தி, எவன் எவனோ உட்ட ரீலுங்களை புக்கா புடிச்சு அலமாரி அலமாரியா ரொப்பியிருக்கிறாங்க. அந்த உலகமகா போரை எப்படித்தான். இந்தபொண்ணு மணிக்கணக்குல உக்கார்ந்து படிக்குதோ. நம்ப காலேஜ் ஹிஸ்டரி புரொபசர்கூட அந்த புஸ்தகங்களை தொட்டுருக்க மாட்டாரு...''

—என்றைக்கோ, யாரோ உதிர்த்த கருத்துக்கு ஏற்ப அவள்! ரொம்பவும் அமைதியான அந்த சூழலில் தனிமையில்தான் ஒரு பெண்- துணையில்லாமல் இப்படியெல்லாம் மணிக்கணக்கில் அமர்ந்து படிக்கக்கூடாது என்கிற உணர்வில்லாமல் 'இந்தக் காலேஜ் கலாட்டாக்கள் வெறும் குரைக்கிற நாய்கள்' தான் என்கிற நம்பிக்கையில்.........

கமலாதரன் ரொம்பவும் லேசாய் உடம்பு நடுங்க செயற்கை தைரியத்துடன் நூலகத்திற்குள் நுழைந்தான். அவனுக்கு பின்னால் பையப்பைய அவனுக்கு 'கிர்ர்ர்' ஏற்றியவர்கள்.

''ஹலோ!''- அவளுக்கு முன்னால் வந்து குரலெடுத்தான். அவள் நிமிர்ந்தாள். மெலிய வியந்தாள். கொஞ்சமாய் சிரித்தாள். அந்த சிரிப்பு முடியவில்லை. அவன் தனது வலக்கையை வினாடிக்குள் அவள் தோளின் மேல் போட்டு மார்புப் புறம் பிளவுசிற்குள் இறக்கி...........

பின் வியர்த்துக் கொட்ட விதிர்விதிர்த்து ஸ்தம்பித்து விட்டிருந்த அவளைவிட்டு, ஒரு காற்றைப்போல் உடம்பு தரைமேல் கிடக்கும் மேஜை சேர்களின் மேலெல்லாம் தாறுமாறாய் மோதி வலிக்க வலிக்க கடந்து மறைந்து விட்டான்.

அவள் சுத்தவில்லை கலங்கி மட்டுமே இருந்தாள்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. உடம்பு மட்டும் பதறியது.

என்ன செய்வது எதைச்செய்வது? எப்படிச்செய்வது?

ஒன்றும் புரியாத குழப்பத்தினூடே அவளுக்குள் கோபம் பொங்கியது. ஒரு நிலைப்பட்டு நூலகத்தைவிட்டு வெளியே வந்தபோது ஈ காக்கை !இல்லை!

# 4

மணி ஏழரை.

அவன் அவள் நினைப்பை ஒடித்துக்கொண்டு எழுந்திருந்தான். இருப்பிடம் நோக்கி கால்கள் செல்லத் தொடங்கின. மனது மட்டும் தொடர்ந்து சூரியாவை நோக்கி ஓடி அவள் நினைவாகவே தன்னை ஆக்கிக் கொள்ளத் துடித்தது. அந்தத் துடிப்பில் மறுபடியும் அவள் அவனுக்குள் ஆரம்பமானாள்!

சம்பவம் நடந்த மறுநாள்.

வழக்கம் போல் அவள் கல்லூரிக்கு வருகிறாள். விழிகள் தட்டுப்படுகின்ற இடங்களிலெல்லாம் 'சூரியா-கமலாதரன்' என்ற கரி எழுத்துக்கள்!



அவளுக்கு சுரீரென்றது.

வழக்கம் போலவே வாதநாராயண மரங்களைப் பார்த்தாள்.

ஓமே குவியல் குவியலாய் மாணவர்கள்.

அவர்களின் கிசு முசுப்பு.

வகுப்பறையில் லெச்சரர் வேறு பிடித்துக்கொண்டார்.

''ஏம்மா நான் கேள்விப்பட்டதெல்லாம் நெஜமா?'

''என்ன மேடம்?''

''நீயும் கமலாதரும் லைப்ரரியில தப்பா நடந்துகிட்டீங்களாமே?''

''மேடம்.''

''பதட்டப்படாதே. நெருப்பில்லாம புகையாது...''

''நடந்தது என்னன்னு உங்களுக்கு தெரியாது.''

''சூரி, நீ கொஞ்சம் துணிச்சலானவ! ஐ நோ. உன் பிராப்ளத்துக்கு காரணமும் அதுவாதான் இருக்கும்னு நான் கெஸ் பண்றேன்.

கோ எஜிகேஷன் காலேஜ்ல ஒரு டீன் ஏஜ் கேர்ள் ரொம்ப பயந்து எவ்வளவுதான் பவ்யமா நடந்துக்கிட்டாலும் அவளை எதுலையாவது சம்பந்தப்படுத்திடுவாங்க... இந்த உண்மைகளை நான் பல வருஷமா பார்த்து வர்றவ.

உன் அளவில் நான் கேள்விப்பட்டதெல்லாம் பொய்யா, வதந்தியா இருந்தா உனக்குத்தான் நல்லது.''

—நீளப் பேசிய லெக்சரர் கோமதி மிஸ்ஸின் பேச்சை தொடர்ந்து அவள் மனசுக்குள் அழ ஆரம்பித்தாள்.

''எங்கே அந்த கமலாதர்?''—அவனை அவளின் பார்வை தேடியது.

அவன் கல்லூரிக்கே வந்திருக்கவில்லை.

''மிஸ்டர்''-எப்பொழுதும் கமலாதர்கூட வலியவரும் ஒருவனை அவன் சற்றும் எதிர்பார்க்காத விதத்தில் அழைத்தாள் அவள்.

''கமலாதரன் எங்கே?''

''அவன் காலேஜுக்கு வரலீங்க...''—அவன்.

''ஏன் வந்தா நான் ஏதாவது செய்துடுவேன்னு பயமா?''

''எனக்கு என்ன தெரியும்? அவனுக்கு ஹெவி ஃபீவர்னு கேள்விப்பட்டேன்.''

—அவன் பேசிய வேகத்தில் தொடர்ந்து அவளிடம் பேச பயந்து விரைந்து நடந்தான்.

அந்த வேளையிலும் அவளுக்கு அவனது பயத்தை பார்த்து சிரிப்பு உருவானது. வாதநாராயண மரத்தடி களைப் பார்த்தாள். ஆங்காங்கே நின்று கொண்டு அவளின் அசைவுகளை ஊன்றிப் பார்த்தபடி நிற்கும் இன்னும் சிலர்!

ஒரு வெள்ளைத் தாளில் அவர்களுக்கு எதிரேயே ஏதோ எழுதி அதை மடித்து கையில் எடுத்துக் கொண்டு அவர்களை நெருங்கினாள்.

''ஹலோ...இதை கமலாதர்கிட்ட கொடுத்திடுங்க...''

—ஒருவன் எதிரே நீட்டினாள். அவன் பதில் பேசாமல் வாங்கிக் கொண்டான். அப்பால் அகலவும் ஆச்சரியத் துடன் கடிதத்தைப் பிரித்துப் படித்தான்.

'அன்புள்ளவரே!



ரொம்பவும் பயந்து விட்டீர் போலும்.

கவலைப்படாமல் உடல் நலம் பெற்று கல்லூரிக்குத் திரும்புங்கள்.

உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்-உங்கள் அன்பு சூரியா.'

—ஒருவரின் முகத்திலும் ஈயாடவில்லை. கிளப்பி விட்ட வதந்திக்கு உயிர் கொடுக்கும் இவளுடைய துணிச் சலுக்குப் பின்னால் இருப்பது என்ன? ஒருவருக்கும் புரிய வில்லை.

அவன்பால் காதலாயிருக்கும்.

இதுவும் ஒரு ஏமாற்று வேலையாக இருக்கும்.

புத்திசாலித்த[illegible]மாகப் பழிவாங்கும் படலத்தின் முதல் வேலையாக இருக்கும.

பலருக்குள்ளும் பலமாதிரி நினைப்புகள்.

எல்லோர் நினைப்புமே பட்டுப்போனது!

இருவருக்குமிடையே நிஜமாலுமே அன்புறவு தழைத் திருந்தது.

''சாரி சூரி, ரொம்ப அநாகரிகமா நடந்துக்கிட்டேன். என்னை ரொம்பவும் தூண்டிவிட்டு அப்படி நடந்துக்கும் படி செஞ்சுட்டாங்க. உள்ளபடியே எனக்கு உன்பேர்ல ஒரு இது...''

—அவன் முடிக்கவில்லை. —பேச்சை அவள் முடித் தாள்.

''தட்ஸ் ஆல் ரைட் கமல்! இப்பகூட எனக்கு உங்க துணிச்சல் வியப்பைத்தான் தருது. ஏனோ உங்க பேர்ல கோபமே வரமாட்டேங்குது. ஏன்னு தெரியலை. ஐ மீன்

அது ஒருவேளை எனக்கும் உங்க பேர்ல ஒரு 'இது' இருக்கறதனாலே இருக்குமோ?''

—என்று அவனையே பார்த்துக் கேட்ட ஆரம்பத்தின் மூலம் பரிச்சயப்பட்டனர் இருவரும்.

அதை சில பார்க்குகள், பல சினிமா தியேட்டர்கள் இன்னும் சில தனியிடங்கள் வளர்த்தன! மிலிர்த்தன! மலர்த்தின!

ஒருநாள் சிவானந்தம் சூரியாவைப் பார்த்து கொஞ்சம் கடுப்புடன் கேட்டார்.

''சூரி, யாரையாவது நீ லவ் பண்றியா?''

—அப்பாவை வியப்புடன் பார்த்தாள் அவள். அவள் படித்த கதைகளிலும், பார்த்த சினிமாக்களிலும் வருகின்ற அப்பா மாதிரி..

''நீ யார் கூடவோ சுத்தறேன்னு கேள்விப்பட்டேன். குடும்ப மானம், குலகௌரவம் என்ன ஆவது?'' என்று நீட்டி முழக்கி பிரஸ்தாபிக்காத அவரது கேள்வி அவளுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

''நீங்களே ஒருநாள் கேட்பீங்கன்னு நினைச்சேம்பா... கேட்டுட்டீங்க.'' அவள் ரொம்ப சாதாரணமாய் 'சாப்பிட்டீங்களா? நல்லா படுத்து தூங்குங்க' என்கிற ரகத்து பேச்சைப் போல் பேசினாள்.

சிவஞானத்துக்கு உள்ளூர எரிந்தது.

அவளின் அசாத்திய துணிச்சலான பேச்சுக்கு தனது செல்லமான வளர்ப்பு முறையும்கூட காரணம் எனும் நிஜத்தை வினாடிக்குள் நினைவுபடுத்திக் கொண்டு அடுத்த கேள்வியைக் கேட்டார்.

''கல்யாணம் பண்ணிக்கற அளவுக்கான காதலா? இல்லை சதைப் பசிக்கான...'',



—அவர் முடிக்கவில்லை. அவள் கொதித்துப் போய் பக்கமாய் உள்ள மேஜையை ஓங்கிக் குத்தி அவரது குத்தலான கேள்விக்கான மறுப்பை தெரிவித்தாள்.

''ஸோ லைலா-மஜ்னு மாதிரி. அம்பிகாபதி அமராவதி மாதிரி, மரோசரித்ரா படத்து 'பாலு, ஸ்வப்னா' மாதிரி நாங்களும்கிறே?...அவர் விடாமல் குத்தினார்.

''யெஸ்...'' உக்ரமாய் அந்த மூணு எழுத்து வார்த்தையை உதிர்த்து அவள் நிற்பதை பார்த்து அவருக்கே ஒரு வினாடி மனது கொதித்தது. சுதாரித்து தொடர்ந்தார்.

''அவன் என்ன மன்மதன்னு நெனைச்சு இப்படி அவனை நேசிக்கிறே. பெத்து வளர்த்து ஆளாக்கின என்னைவிட, உன்னோட அம்மா வழி, என் வழி, தாத்தா பாட்டி, மாமா, அத்தை etc, etcக்களைவிட, அவங்களுடைய ஜாதிப் பாரம்பரியத்தைவிட, அந்த 20 to 21 வயது சின்னப் பையன் எந்த விதத்துல ஒசத்தி?

நான் கேட்டிருக்கிற கேள்விகளுக்கு தெளிவா சிந்திச்சு நீ பதில் சொல்லணும். அப்படி நீ சொல்ற பதிலால எனக்கு திருப்தி ஏற்பட்டா உங்ககல்யாணம் ஜாம்ஜாம்னு நடக்கும். இல்லேன்னா...'' அவர் போய் விட்டார்.

# 5

சூரி அவரது வினாக்களுக்கு பதிலைத்தேட ஆரம்பித்தாள். நடுவே அவரது வினாக்களே தேவையற்ற குட்டையைக் குழப்பும் வினாக்கள் என்கிற மாதிரி மனசுக்குப் பட்டது.

''இவர் பார்த்துத் தருகிற மாப்பிள்ளையை மட்டும் எந்த விதத்தில் ஒசந்தவராக இருக்க முடியும்? அவருக்கும்

இரண்டு கண், ஒரு மூக்கு, ஒரு வாய், எக்ஸ்ட்ராக்கள் தானே—பணமுள்ள வர்க்கத்து ஆளாய் இருக்கலாம்.

யாராய் இருந்தாலும் மனப்பிடிப்பும், திருப்தியும் தானே ஒரு பெண்ணுக்கு முக்கியம்? எனக்கு அந்த பிடிப்பும் திருப்தியும் கமலாதரனை பார்த்த அளவில் ஏற்பட்டிருக்கிறது. பதினெட்டு வருஷகாலம் வாழ்ந்து சுவாசித்து நடந்து பார்த்த பலரில் அவன் மட்டுமே மனசைத் தொட்டவனாய் இருக்கிறான்.

இவன்தான் வேண்டும்? இவன்தான் எனது ஜீவன்!

இந்த ஜீவனை அடைவது சாதாரணமல்லதான். யுக யுகமாய் ஒவ்வொரு தாய் தகப்பனிடமிருந்தும் வருகின்ற இந்த எதிர்ப்புக் குரல் ஒன்றும் புதியதல்ல.

ரொம்ப நாளாய் படிந்துவிட்ட இந்த பாசியில் வழுக்கி விழுந்துவிடக் கூடாது. பாசியையே வலிந்து அகற்ற வேண்டும்.''

அவளுக்குள் கேள்விகள் பிறந்து, பதில்கள் படர்ந்து அவளை நிமிர்த்தின.

''சூரி எனக்கு ஸ்டேட்டஸ் ரொம்ப முக்கியம். அவனும் அவங்க குடும்பமும் பஞ்சைன்னு கேள்விப் பட்டேன். வீம்பையும் பிடிவாதத்தையும் மறந்து என் பேச்சைக் கேளு. இல்லைன்னா...''

—ஒருநாள் கோபத்தின் உச்சிக்கு சிவானந்தம் போன போதும் அவள் வளையவில்லை. பொல்லாத எதிர் விளைவு ஒன்று உருவாகத் தொடங்கியது.

இராப் போதின் எட்டு மணி வேளையில் சைக்கிளில் ஆள் நடமாட்டமில்லாத தெருவில் விரைந்து கொண்டிருந்த கமலாதரனை நான்கு முரட்டு மனிதர்கள் வளைத்து நிறுத்தினர்.



''மீசைகூட முளைக்கலை. உனக்கெல்லாம் லவ்வு ஒரு கேடா?''

—ஒருவன் பேச்சோடு கூடி இரும்பு சங்கிலியை அவன் முதுகின் மேல் வேகமாய் உராயவிட்டான்.

''அடுத்த வேளை சோத்துக்கு ஆகாசத்தைப் பார்த்தாலும் பையன் படிச்சு முன்னுக்கு வரணும்கிறது அப்பா ஆசை. அங்க சைடு அடிக்கறதும் லவ் பண்றதும் பையன் வேலை. தூள்டா கண்ணு...''

—இன்னொருவன் பேசிவிட்டு மூக்கின் மேல்... அப்படியே பக்கமாய் ஓடும் சாக்கடைக்குள் உருட்டி விட்டுவிட்டு, வந்த சுவடு தெரியாமல் மறைந்து விட்டார்கள் அவர்கள்.

''ஐயோ! என் பிள்ளையை இப்படி நாசப்படுத்தி விட்டாங்களே...ஐய்யோ நான் என்ன செய்வேன்...''

—கதறித் துடித்து அவனது தாய் படுக்கையில் விழுந்தாள். எல்லாச் செய்தியும் சூரியாவை கொஞ்சம் தாமதமாய்ப் போய்ச் சேர்ந்தது. துணிச்சலான அவளது மனம் கூட படபடத்து விதிர்விதிர்த்துக் கதறியது.

எதிர் நடவடிக்கைகளை அவள் புரிந்து கொண்டாள். சற்றே அழுவதை விடுத்து சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தாள். அதன்படி வாசற்புற காவலனை ஏமாற்ற வேண்டி ஒரு ஆண்பிள்ளையைப்போல் வீட்டு பின்புற மதில் சுவர் எட்டிக்குதித்து, குறுக்கு சந்துகளில் நுழைந்து நடந்து அவன் படுக்கையில் கிடக்கும் ஆஸ்பத்திரியை அண்டியபோது அவள் இதய துடிப்பு கூடியது.

அவனது தந்தையாருடன் ஆஸ்பத்திரி வாயிலில் சிவானந்தம் தீவிரமாய் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். கருத்து இளைத்த தேகம் கொண்ட அவரின் பார்வையில் பேச்சில், கெஞ்சல் தொனிப்பதை சூரியாவால் நன்கு உணர முடிந்தது.

அதிகாரத்தின் முன்னால் ஏழ்மை மிகுந்த நியாயம் மண்டியிடுவதை சகிக்க முடியாது, நடந்து முடிந்த சம்பவத்தை ஜீரணிக்க முடியாது புதிதாய் தீட்டியிருக்கும் திட்டத்திற்கு வந்த பெருந்தடையை முறியடிக்கமுடியாது அவள் திணறித் தவித்த வேளையில் அவளை மயக்கம் ஆட்கொண்டது.

அவள் விழுந்த இடத்தில் சில நிமிடங்களில் சலசலப்பு சூழ்ந்தது.

சிவானந்தம் நெருங்கினார். சுரீரென்றது. சலசலப்பைக் கலைத்து சூரியாவிற்கு மயக்கம் தெளிவித்து வீட்டிற்கு அழைத்துப் போனார். அவளுக்கு முன்னால் பொங்கியெழாமல் அடிபட்ட புலியைப் போல் குறுக்கும் நெடுக்கும் கையைப் பிசைந்து கொண்டு நடந்து நடந்து சலித்து சோபாவில் விழுந்த போது இதழ்களைத் திறந்தார்.

'ஆஸ்பத்திரி பக்கம் எதுக்கு வந்தே?''

''........................''

''அப்படியே அவன் கூட ஓடிப்போயிடலாம்னா? நான் ஒரு போலீஸ்காரன். உங்களை கண்டுபிடிக்க எவ்வளவு நேரமாயிடும்...''

''........................''

''கல்யாணம் செய்துகிட்டு வந்து நின்னாலும், எனக்கு பிரியமில்லைன்னா அந்தக் கல்யாணமே நடக்கலைன்னு ஆதாரத்தோட புரூப் பண்ண என்னால முடியும்...''

''........................''

''சூரி மலையோட அசட்டுத்தனமா மோதிப் பாக்காதே. சின்ன வயசுல அற்ப உணர்ச்சிகளுக்கு நீ இப்படி இடம் கொடுத்துவிட்டு அவஸ்தை பட்றதை என்னால



தாங்கிக்க முடியலை. உன் தாய் உயிரோடு இருந்திருந்தா இதப்பாத்து புழுவா துடிச்சிருப்பா. ''இப்ப அவளுக்கும் சேர்த்து நான் துடிக்கிறேன்...''

—கொஞ்சம் கடுப்பாய், கொஞ்சம் பாந்தமாய், கொஞ்சம் பாசமாய் பேசினார் சிவானந்தம்.

அன்று மட்டுமல்ல! ஏழு நாட்களுக்கு அவரது உபதேசங்கள் தொடர்ந்தது. அவள் சலித்துப்போய் சஞ்சலமே தானாய் மாறிவிட்டிருந்தாள்!

எட்டாம் நாள் காலை சிவானந்தம் சூரியாவை நெருங்கி கமலாதரனின் தாய் காலமான விபரத்தை கூறினார்!

அவள் அவரை சிலிர்த்து நோக்கினாள்.

''சாகும்போது உன்னை கட்டாயமா மறக்கச்சொல்லி அவன்கிட்ட சத்தியம் வாங்கிக்கிட்டு இருக்காங்க! இனி நீ காலமெல்லாம் காத்திருந்தாலும் அவன் வரபோறதில்லை.''

''பொய். நீங்க சொல்றதெல்லாம் பொய்.''-அவள் வெடித்தாள்.

''நிஜம்னு நிரூபிக்கிறேன். புறப்படு.''

—அவள் வேகமாய் அவருடன் ஜீப் ஒன்றில் புறப்பட்டாள். ஜீப் அந்த ஊரின் பிரதான மயானத்திற்கு சற்று முன்பாக உள்ள பெரிய பங்களா ஒன்றின் முன் நின்றது.

இருவரும் பங்களாவுனுள் நுழைந்து மாடியிலுள்ள ஒரு அறைக்கு சென்றனர். சிவானந்தத்தின் முன் ஏற்பாட்டின்படி அறை அவர்களுக்காய் தூய்மையாய் காத்திருந்தது. அறையின் ஜன்னலோரமாய் அவளை நிறுத்திட்டு, ''கொஞ்ச நேரத்துல சவ ஊர்வலம் இந்தப் புறமா

போகும். கொள்ளிச் சட்டிபோட அவனும் போவான். பார்த்துட்டு அப்புறம் பேசு.''-என்றார் சிவானந்தம்.

அரை மணிக்கு பிறகு ஜெரகிண்டி மணி ஓசையோடு சவ ஊர்வலம் அந்த பங்களாவைக் கடந்து போனது.

நடக்க இயலாத தளர்ச்சியில் கொள்ளிச்சட்டியுடன் அவன் தடுமாற கைத்தாங்கலாய்ப் பற்றி சிலர் அவனை அழைத்துச் செல்ல சூரியா பெரிதாய் அதைப் பார்த்து கேவினாள்.

''முறைகேடான ஆசைகளோட விளைவுகளைப் பார்த்தியா?''-கொஞ்சம் இதமாககேட்டார் சிவானந்தம்.

''சூரி மை கைண்ட் ரிகொஸ்ட். யெங் ஏஜ்ல லவ்'ங் கறது கானல் நீர் மாதிரி. ப்ளீஸ் அதை மற. கொஞ்சம் உயர்த்திச் சொல்லணும்னா தியாகம் செய். உன்னோட சுயநலத்துக்காக பல உயிர்களை பலி வாங்காதே. உன்னால அவன் கெட்டு, அவன குடும்பம் கெட்டு...ஓ! நல்லாவா இருக்கு.''

—அவளுக்கு எல்லாவற்றுக்கும் நாங்களா காரணம்? உங்களின்வீம்புப்பிடிவாதமும், ஜாதிவெறியும் அந்தஸ்தை தேடும் குணமும்தானே காரணம் என்றுகத்த வேண்டும் போலிருந்தது. அடக்கிக் கொண்டாள். கொஞ்சம் சிந்தனை பண்ணிப் பார்த்து தனது நிலையைப் புரிந்து கொண்டாள். அவளது துணிச்சல் கரைந்து போயிருந்தது.

நான்கு நாட்கள் கழிந்த நிலையில் திவாகர் வந்தான். அவளது அத்தை மகன் சிவானந்தம் விருப்பப்படி அவள் மனசுக்குள் ஒருதென்றல் காற்றாய் புக முயற்சிசெய்தான்

அவளிடம் போலித்தனமாய் சிரித்துப் பேசி அறுவை ஜோக்குகளைஉதிர்த்து அவளைக்கொஞ்சம் கொஞ்சமாய் பழைய சூரியாவாக்கிட முயன்று, அதில் துளி வெற்றியும் பெற்றுவிட்டான்.



''சூரி கொஞ்சம் வெளிய போய்ட்டு வருவோமா?''

''வெளியேன்னா?''

''எக்ஸிபிஷனுக்கு!''

—அவளுக்கு ஒரு மாறுதல் தேவைப்பட்டது. சரி என்றாள். வண்ண விளக்குகளாலும், பரபரப்போடும், சுறுசுறுப்போடும் 'ஜே! ஜே' என்று இருக்கும் எக்ஸ்பிஷனுக்குள் மெல்ல இருவரும் ஊர்ந்து கொண்டிருந்தனர்.

அந்த எக்ஸ்பிஷனுள் இன்னொரு இடத்தில் முப்பது நாள் தாடி முடியோடு கமலாதரன் அசைந்து கொண்டிருந்தான். எங்காவது போய் வந்து, எதையாவது பார்த்து கொண்டு, மனதை அரிக்கும் நினைப்புக்குள் ஒரு விடுதலையை தேடும் வேகம் கலந்த பார்வையோடு, கொஞ்சம் பரிதவிப்போடு திரியும் அவன் ஓரிடத்தில் சற்றும் எதிர்பாராத விதத்தில் அவள் மேல் மோதிய போது...

''எவ கெடைப்பா, எவ மாரைத் தடவலாம்னே அலையறானுங்க'' —திவாகர் கொஞ்சம் உக்ரத்தோடு கடுகடுத்தான். காதிலேயே வாங்கிக் கொள்ளாத ஸ்தம்பிப்பில் கமலாதரனின் விழிகள் சூரியாவின் விழிகளுடன் சங்கமித்திருந்தது. சுற்றிலும் இயல்பான பரபரப்பு.

திவாகர் கொஞ்சம் உக்ரத்தின் நடு மையத்திற்கு போய் ''மிஸ்டர், மிஸ்டர்... இது பப்ளிக் ப்ளேஸ்''-என்றான்.

இருவரிடமும் இமையில் கூட துடிப்பில்லை.

திவாகர் கோபத்தின் உச்சிக்கே போய் கமலாதரை பிடித்து உலுக்கி கொஞ்சமாய் தள்ளிவிட்டான். இருவருக்கும் சுய நினைவு திரும்பிற்று. இனம்தெரியாத பரிதவிப்பு உள்ளுக்குள் பெருகிற்று. என்ன பேசுவது? எதைப் பேசுவது? குழம்பிப் போய் கேள்விக்குள் இருவரும் புரண்டனர்.

''சூரி வா போகலாம்...'' —வேகமாய் அவளை இழுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான் திவாகர். அவளும் பார்த்துக்கொண்டே அவனைத் தொடர்ந்தாள்.

'யார் இவன்? ஏன் சூர்யா எதுவும் பேசாமல் போகிறாள்?

என்னை ஒதுக்க துணிந்தவளா இந்த சூரி?

அவன்தான் வரப்போகும் கணவனா?'

—கமலாதரன் நின்ற இடத்திலேயே புலம்ப ஆரம்பித்தான். ஆறுதலுக்கும், தேறுதலுக்குமாய் வந்த இடத்தில் பூகம்பமானான்.

உடம்பும் மனசும் பதறித் துடிக்க சூரியா போன வழியில் கால்களை வேகமாக்கினான்.

''சூரி யார் அவன்? ஏன் உன்னை அப்படி பார்த்தான்? அவனை உனக்கு தெரியுமா?''

—திவாகரின் கேள்விக்கு அவள் மௌனித்தாள்.

''அவன்தான் உன் லவ்வர்'னு நெனைக்கிறேன். இந்த காதல்ங்குறது கொடுமையான ஒரு நோய் சூரி. புற்று நோய்க்குகூட மருந்து கண்டு பிடிச்சுடலாம். ஆனா இதுக்கு...''

—திவாகர் முடிக்கவில்லை. ''சூரி, சூரி'' என்ற குரலில் அவன் கவனம் திரும்பியது. குரலை கேட்ட உடன் திரும்பினாள் சூரியா.

'உங்க அம்மாகிட்ட என்னை கட்டாயம் மறந்துடறேன்னு சொல்லி சத்தியம் செய்துட்டியாமே! நிஜமா?'-நா நுனியில் வெடிக்கத் துடிக்கும் கேள்வியோடு நின்ற அவனை அவன் நெருங்கியபோது ''மிஸ்டர் மரியாதை கெட்டுப் போயிடும். உன் வேலையை பார்த்துட்டு நகரு...''—என்றான் திவாகர்.



அதை லேசாய் சிரித்து கமலாதர் அலட்சியப்படுத்திய போது திவாகரின் உரமான வலக்கையின் விரல்கள் அவன் கன்னத்தில் பதிந்து மீண்டன.

சிலிர்த்துப்போய் கமலாதரும் கைகளை இயக்க நாலு பேர் வந்து பிரித்துவிடும் அளவிற்குமோதல் பெரிதாகியது

சூரியா மயக்கமானாள்.

# 6

''இடியட். லத்தியாலேயே முட்டிமேல நல்லா நாலு வெச்சேன் கல்லுளி மங்கன் மாதிரி அத்தனையையும் வாங்கிட்டு திருதிருன்னு முழிக்கிறான். கான்ஸ்டபிளை விட்டு நாலு விடச் சொன்னேன். துவண்டு போய் விழுந்திட்டான்''

—சிவானந்தம் யூனிஃபார்மை கழற்றிக் கொண்டே திவாகரைப் பார்த்துப் பேசுவது மௌனமாய் ஒரு சிலை மாதிரி அமர்ந்து கொண்டிருக்கும் சூரியாவின் காதிலும் விழுந்து கொண்டிருந்தது.

''அங்கிள் சூரியா மேல தீவிரமா இருக்கான் அவன். எப்படி அங்கிள் பிராப்ளத்தை ஃபேஸ் பண்ணப் போறீங்க?''

—கிழிந்து போய் மருந்துக்குள் கலந்து கிடக்கும் உதடுகளை மெலிய மெலிய அசைத்து திவாகர் கேட்டான்

''வீடு பூந்து கலாட்டா பண்ணப் பார்த்தான்!

இன்ஸ்பெக்டர் பெண்ணோட கைப்பையை பப்ளிக் பிளேஸ்ல பிடிச்சு இழுத்தான்!

சும்மா இருந்தவன்கிட்ட ரவுடித்தனம் பண்ணினான்!

அவளை கத்தியாலேயே குத்த முயற்சி செய்தான்!

—காரணங்களா இல்லை திவாகர்?''

—கொஞ்சம் இடைவெளி வைத்து

''நீ எங்களுக்கு கொடுத்த பிட்டிஷன் ஒண்ணுபோதும் அவனை ஆறுமாசம் உள்ள வைக்க! உனக்கு டாக்டர் சர்டிபிகேட் ரொம்ப முக்கியம்; அதுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன். எல்லாம் சரி, உனக்கு பெய்ன் எப்படி இருக்கு?''-என்றார் சிவானந்தம்.

''மத்யானம் ரொம்ப வலிச்சுச்சு. இப்ப தேவலாம்...''

''கேர்ஃபுல் பச்சை தண்ணி படாம பாத்துக்கோ. சீழ்பிடிச்சுடும். இந்த சூரியா எங்கே?...''

''இங்கேதான் இருந்தாள்.''

''திவா, அவ இந்த அளவுக்கு எனக்கு சோதனையா மாறுவான்னு நெனைக்கலே. அவ அநியாயமா இறந்து போயிருந்தாகூட எனக்கு இவ்வளவுவருத்தம் ஏற்படாது. ஸ்டேஷன்லையும், தெரிஞ்சவங்க கிட்டையும் இவளால எனக்கு எவ்வளவு பிராப்ளம் தெரியுமா?''

—பக்கமாய் ஒரு அறைக்குள் அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த சூரியா ஒரு புதிய முடிவைநோக்கி நகர்ந்து கொண்டிருந்தாள்.

அப்போது வயதில் கொஞ்சம் முதிர்ந்த ஒருவர் வீட்டினுள் வேகமாய் நுழைந்தார். அவரோடு இன்னும் சிலர்!

சிவானந்தத்தை நோக்கி பரக்கப் பரக்க நெருங்கி ''ஐயா என்புள்ளையை ஜெயில்ல போட்டுட்டீங்களாமே? என்ன தப்புய்யா செஞ்சான் அவன்? அவனை பெரியமனசு பண்ணி வெளிய அனுப்புங்கய்யா...நாங்க இந்த ஊரை



விட்டே வேணுமானாலும் போயிட்றோம்'' என்று குரல் நடுங்க பேசி நின்றவரை நோக்கி பார்வையை அறைக் குள்ளிருந்து திருப்பினாள் சூரியா.

கமலாதரனின் அப்பா!

சிவானந்தம் முக அளவில் ஒரு கடுவன் பூனையாக மாறி அவரை வெறித்து நோக்கினார்.

''நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேன். கேக்காம நடந்தா அதுக்கு நான் என்ன செய்யட்டும். இந்த தடவை எப்படியும் அவனை ஒரு வழிக்கு கொண்டு வந்துடறேன். அப்புறமா அவன் உங்க பக்கம் தலை வைக்கமாட்டான். அவனை தயவு செய்து நீங்க வெளிய விடணும்.''

—எந்திரமாய் பேசினார் அந்த ஏழைப் பெரியவர்.

சிவானந்தம் கொஞ்சம் இளகியபோதிலும் மறுபடியும் இறுகி இதழ்களை திறந்தார்.

''உன் மகன் யார் சொன்னாலும் கேக்க மாட்டான்யா! உப்பு காரமில்லாம நாலு செவுத்துக்குள்ற கிடந்தாத்தான் வழிக்கு வருவான். ஒரு ஆறுமாசம் இருந்துட்டு வரட்டும்.நீ போய் உன் வேலையைப் பாரு.'

''நீங்க பேசறது நல்லா இல்லை, என்னால வெளிய தலை காட்ட முடியலை.''

''நான் மட்டும் என்ன நிமிர்ந்தா நடக்கறேன்? போய்யா வெளியே...''

''ஐயா, பணிஞ்சு போய் பிரச்னையை தீர்க்க நெனச்சேன். அது தப்புங்கற மாதிரி நடந்துக்கிறீங்க...''

''என்னய்யா பேச்சு மாறுது? நிமிர்ந்து போய்த்தான் பாரேன். உன்னால என்ன முடியும்?''

—அறையினுள், சூரியாவினுள், அவளது உறுதியான மன நிலையினுள், அக்கினிக் கங்குகளாய் சிதறிக் கொண்டிருந்தன இருவரது பேச்சுக்களும்...

'எத்தனை போராடினாலும் இனி வெற்றி சாத்யமில்லை. சாத்யப்பட்டாலும் இத்தனைக்கும் பிறகு அது வெற்றியில்லை...''

...அவள் சிந்தித்தாள்,

'தோற்றுப் போய் மூச்சு விடுவதைவிட துவண்டு போய் உயிர் நீப்பது உத்தமம்.'

—மனசுக்குள் முன்பே புரண்டு கொண்டிருந்த முடிவுக்கு உறுதியைக் கொடுத்தாள். அதனை செயல்படுத்திக் கொள்ளும் முன் பேனாவைக் கையில் எடுத்தாள்.

ஒரு தாளில்...

மதிப்பிற்குரிய சூப்ரெண்ட் போலீஸ் அவர்களுக்கு, வணக்கம்.

உங்கள் காவல்துறையில் சப் இன்ஸ்பெக்டராய்... பிரிவில் பணிவாற்றும் திரு. சிவானந்தத்தின் மகள் சூரியா சுய நினைவில் எழுதும் கடிதம் இது. என் உயிரை நீத்துக் கொள்ளும் முன்பாய் இந்த கடிதத்தை எழுதிக் கொண்டிருக்கிறேன்.

கமலாதரன் என்பவரை மனதார காதலித்தேன். மணம் புரிந்து கொள்ளவும் விரும்பினேன். இந்த இருபதாம் நூற்றாண்டில் எனது இணையற்ற தந்தையின் ஜாதிவெறியும், அந்தஸ்தும் தடை செய்தது. எங்கள் விருப்பம் தடைகளை தாண்ட முயற்சித்தது. முயற்சியை எனது தந்தையார் தனக்கிருக்கும் கொஞ்ச புத்திசாலித்தனத்தை வைத்துக் கொண்டும், கொஞ்ச அதிகாரத்தை வைத்துக் கொண்டும் முறியடிக்க முனைந்துள்ளார்.



விளைவாய் ஒரு தவறுமறியாத எனது காதலர் சிறையில் அவரை அருள் கூர்ந்து வெளியேற்ற வேண்டுகிறேன்.

தொடர்ந்து இதுபோன்ற பலர் அவமானப்படும்படியான நிகழ்ச்சிகளுக்கு ஒரு முற்றுப் புள்ளியாகவும், எனது தந்தையாரின் முறையற்ற போக்கிற்கு ஒரு முடிவாகவும், தண்டனையாகவும், என்னை நானே மாய்த்துக் கொள்கிறேன்.

என் வேண்டுகோளை செயல்படுத்திட மறுபடியும் வேண்டி முடித்துக் கொள்கிறேன்.

இவண்
சூரியா

கடிதத்தை ஒரு உறையிலிட்டு அதை ஒட்டி...

# 7

சூப்ரெண்ட் ஆப் போலீஸின் பார்வைக்கு சூரியாவின் கடிதம் போனபோது அவளது சடலம் மணிமுத்தாற்றங்கரை மேல் உடம்பின் முக்கிய அவயவங்களை இழந்து வைக்கோலை தனக்குள் வாங்கிக் கொண்ட நிலையில் அசைந்து கொண்டிருந்தது.

வானமே தரைதட்டி நொறுங்கிப் போன மாதிரி ஸ்தம்பித்திருந்தார் சிவானந்தம். அவரால் அந்த துயரத்திற்கு நடுவில் அசையவாவது முடிந்தது. கமலாதரனால் அது கூட முடியவில்லை.

வாரக்கணக்கில் வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு நல்ல மாறுதல் அவனுக்குத் தேவை என்பது அவனை சுற்றிலுமிருப்பவர்களுக்கு புரிந்தது.ஏற்பாட்டில் இறங்கினார்கள்.

ஒரு புதிய மண்ணின் மேல் ஒரு எந்திர வாழ்க்கைக்குள் விழும் நிலை அவனுக்கு ஏற்பட்டு விட்டது.

மனக் காயங்களின் வலி மட்டும் நீங்கவேயில்லை.

பார்கவி...பார்கவி...பார்கவி...பார்கவி...

# 8

சுற்றும் பலாமரச் செழிப்பு. ஊடே ஊடே செம் பருத்திப் பூச்செடிகளின் செழிப்பு.

நட்ட நடுவில் நாட்டு ஓட்டை கூரைச் சரிவுக்கு வாங்கிக் கொண்டு நிமிண்டிக் கொண்டு தெரியும் கேரளத்து ஏழ்மையான வீடுகள்.

அதில் ஒன்றில் ஜோதியும், பாலுவும் கலவாடிக் கொள்வது கொஞ்சத் தொலைவில் சரளைக்கல் பாதைச் சரிவில் அந்த வீடு நோக்கி நடந்து வந்து கொண்டிருந்த கமலாதரனின் காதுகளிலும் விழுந்து கலைந்தது.

விழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

போய் இவர்களோடு கலந்து கொண்டு மனச் சூன்யத்தை விரட்ட முயற்சிக்க வேண்டும்.

கமலாதரன் தீர்மானத்துடன் நடக்கிறான்.

வானத்து வட்ட நிலா பூமிக்கு அனுப்பும் வெளிச்சத்தால் ரம்யமான சூழல் தெரியத் தெரிய எண்ணக் களைப்



போடு வரும் அவன் அதை ரசிக்க முயன்று தோற்று பின் வீட்டிற்குள் நுழைந்தபோது ஜோதி பீடி நுனியில் நெருப்பை வைத்துக்கொண்டு பார்த்தான். பின்.

''ஹலோ வாங்க...'' —என்றான் கொஞ்சம் கிண்டலாய்.

''விளையாடாத மச்சி, மனசு சரியில்லை.''

—''இங்க வந்ததுல இருந்து நீ பேசற ஒரே வார்த்தை அதுதானே?''

—முறைத்துப் பார்த்தான் கமலாதரன்.

''மொறைக்காதபா மச்சி. சரியான மெண்டல்டா நீ. இந்த உலகத்தைப் பத்தியோ, குறிப்பா பொம்பளைங்களைப்பத்தியோ உனக்கு இத்தனை வயசாகியும் ஒண்ணும் தெரியாததை நெனைச்சா எனக்கு ஆச்சரியமா இருக்குது...''

''நீ என்ன பெரிய அனுபவக்கிழங்கோ? கொஞ்சம் உட்டா உபன்யாசம் பண்றையேடா மச்சி...''

—இடை வெட்டினான் பாலு.

—கமலாதரன் கட்டிலின் மேல் போய் விழுந்தான். எனக்கு இணையாய் இந்த கேரள மண் மேல் தமிழ் பேசும் இரண்டு பேர் கிடைத்தும் அவர்கள் மாதிரி கேலியும், கிண்டலுமாய், ஜாலியும் அரட்டையுமாய், செயல்பட முடியவில்லையே...

மனது கொதித்துப் போய், கொதித்து போய் நடந்து முடிந்ததை நினைத்து வெதும்பி, வெதும்பி சீழ்பிடித்து புரையோடும் புண்ணாய் அல்லவா எரிகிறது?

வினாவோடு பார்வையை உத்தரத்தில் வைத்துக் கொண்டிருந்த போது சூரியாவின் அழகிய முகம் ஆறுத

லாய் நடுவே எழும்பியது. அவளது புகைப்படம் ஞாபகத்திற்கு வந்தது.

விருட்டென்று எழுந்து பெட்டியை திறந்து, டைரியை திறந்து, அந்த போட்டோவை எடுத்து ஆழமாய் நோக்கி அப்படியே சில வினாடி அவன் அந்த புகைப்பட முகத்தோடு ஒன்றிய போது...

''அட நம்ம பார்கவியோட போட்டோ!''—என்றான் அதைப் பார்த்த ஜோதி.

''ஆமா, பார்கவி பைத்தியத்தோட போட்டோ...! அந்த பைத்தியமா இத்தனை அழகா போட்டோவுக்கு போஸ் கொடுத்திருக்கறது?

—டேய் கமலா, எப்படிடா கிடைச்சிச்சு இந்த போட்டோ?''

இரண்டு பேரும் போட்டோவை பார்த்துவிட்டு போட்ட கேள்வியால் வியப்பின் உச்சிக்கு போய் ''இது என் சூரியாவோட போட்டோ''— என்றான் அழுத்தத்தோடு.

''சூரியாவா? இருக்காது ரீல் உட்றே நீ, இது பார்கவி.''

''ஜோதி ரீல் உட்றது, மணி அடிக்கறது, பூவைக்கறதெல்லாம் உன் புத்தி. எனக்கு அது அநாவசியம். இவ தான் என் சூர்யா...''

—ஜோதிக்கு கிறுகிறுத்தது.

''மச்சி கோவிச்சுக்காதடா. என்னால, நம்பவே முடியலை. இங்க பார்கவின்னு ஒரு பைத்தியக்கார பொண்ணு, இருக்காடா. அவ இந்த போட்டோவில் இருக்கிற மாதிரி தாண்டா இருப்பா...''—என்றான்.

''நெஜமாவா?''



''ஏண்டா. நாங்க என்ன உன்னை கலாட்டா பண்றோம்னு நெனச்சிட்டியே. சத்தியம்டா...''

''இப்பவே வா. அவளை பார்த்துவிட்டு வரலாம்...''

''இந்த ராத்திரியில் அவளை எங்கேன்னு தேடறது?''

''அவ வீட்டுக்குத்தான்...''

''வீடு தெரியாது கமலா. நாங்க வழக்கமா 'மம்பரம்' பக்கம் வாக் போய் வர்றது வழக்கம், அடிக்கடி அவளை அந்த 'மம்பரம்' போற ரோட்ல பாத்திருக்கோம். ரொம்ப அழகா இருப்பா? நல்ல சிவப்பி. ஆனா பைத்தியம்! பொடிப் பசங்க அவளை சூழ்ந்துகிட்டு கலாட்டா பண்றச்சே கஷ்டமா இருக்கும்...''

—ஜோதி பேசப்பேச கமலாதரனுக்கு பரபரத்தது. அப்பொழுதே ஓடிப்போய் அவளைப் பார்த்து இவர்கள் சொல்லுவது நிஜம்தானா என்பதை அறிய மனசுக்குள் ஆவல் துடிப்பு மிகுந்தது. கஷ்டப்பட்டு துடிப்பை அடக்கிக்கொண்டு படுக்கையில் விழுந்தான்.

## 9

**வானம் முழுக்க துல்லியமான நீலம்!**

மெல்லிசான வெளிச்சம் படர்ந்த மாலைப் பொழுது

எவருடைய மனதையும் கவரும் பச்சைவெளிக்கு நடுவிலான வளைந்த பாதை.

கால்களை அகல அகல வைத்து அந்தப் பாதை மேல் விரையும் கமலாதரனை பின் தொடர இயலாத நிலையில்-

''அடேய் மச்சி, நிதானமா நடடா... ரக்கை கட்டிக்கிட்டு பறக்கிறியே...'' என்றான் பாலு.

—மாலை 6.45க்கு விழிகளை மலர்த்தியிருந்தான் கமலாதரன். ஐந்து நிமிடத்தில் நீர் கொண்டு மசமசப்பை நீக்கிக்கொண்டு, ''போகலாமா பார்கவியை பார்க்க?''-என்று ஜோதியைப் பார்த்தபோது ''வெத்தலைப் பாக்கு பூவெல்லாம் இல்லாமலா?'' -என்றான் ஜோதி கொஞ்சம் கிண்டலாய்.

''ஜோதி வெளையாடாதே...''

''வெளையாட்ல கமலா... 7.30-க்கு இன்ஸ்ட்யூட்டுக்குள்ள இருக்கணும்கறதை மறந்துட்டு மூணு நாலு மைலுக்கு அப்பால இருக்கறவளை பத்தியே நெனைச்சுகிட்டிருக்கிறே?

நேத்து பிரின்ஸ்பால் தொழில்ல அக்கரை வேணும், கான்சன்ட்ரேஷன் வேணும்னு சொன்னதை அதுக்குள்ள மறந்துட்டியேடா...''

''பெரிய பிரின்ஸ்பால்; தொழில். என் துடிப்பு அவங்களுக்கெங்க தெரியப் போவுது...''

''அதுதானே? வாழ்க்கையில காதலும் பெண்ணும்தான் முக்கியம்கறது அவங்களுக்குத் தெரியலையே...சுத்த மடையங்க, தொழில், கான்சன்ட்ரேஷனுக்கு சும்மா மாரடிச்சுக்கிட்டு... அவங்களுக்கெங்க தெரியப் போவுது உன் துடிப்பு...''

—கொஞ்சம் கிண்டலாய்,

கொஞ்சம் சீரியஸாய் வாழைப்பழத்தில் ஊசி இறங்குகின்ற மாதிரி அவனுக்குள் ஜோதி பேச்சை இறக்கிய போது கமலாதரன் கொதித்துப் போனான். அதே வேளையில் அவன் பேச்சின் நியாயத்தில் அடங்கியும் போனான்.



பின் இன்ஸ்ட்டியூட்டிற்கு போய் நேரத்தைத் தேய்த்துத் தேய்த்துக் கழித்துவிட்டு, 4.30 மணிக்கு வெளியே வந்து பக்கத்து குடவல்லிப் புழாவில் இறங்கி ஒரு முழுக்கு போட்டுவிட்டு பார்கவியை அந்த பைத்தியக்கார பெண்ணை, பல மணி நேரமாய் மனசை நிரண்டும் சூரியாவின் வார்ப்பை பார்க்கும் பரவசத்தோடு பாலுவை ஜோதியை அழைத்துக்கொண்டு...

மம்பரம் வந்து விட்டது!

கேரளத்து இரட்டைக் கூரை வீடுகள் அங்கங்கே தெரிகின்றன.

'வீட்டைச்சுற்றி பலா மரங்கள். அந்த பலா மரங்களில் மிளகு, கொடிகள். நடுநடுவே சில சப்போட்டோக்கள். உயரமான தென்னை மரங்கள்.

—விழி சுற்றிச்சுற்றி வந்தபோது இந்த மரங்கள்தான் தெரிகின்றன. தினேஷ் பீடி பிடிக்கும் சில லுங்கி மனிதர்கள் தெரிகின்றன; பெரிய மார்பு கொண்ட வயதான பெண்கள் தெரிகின்றனர். கருப்பு நிற வாலறுந்த நாய் ஒன்று தெரிகிறது. ஆனால் பார்கவி மட்டும் தெரியவேயில்லை!

கமலாதரனுக்கு முகம் அப்படியே வதங்கிப் போனது. பார்வை சுரத்தை இழந்தது. 'எங்கே பார்கவி?' - கேள்வியோடு ஜோதியையும், பாலுவையும் பார்த்தான்.

அவர்கள் பதிலுக்கு அவனைப் பார்த்து பரிதாபிக்க மட்டுமே செய்தனர்.

# 10

அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது குடவல்லி!

அதன்மேலே அரபிக்குள் நுழைந்து திரும்பியவர்கள் விரைந்து கொண்டிருந்தனர்.

மனசுக்கு சந்தோஷத்தைத் தரும் மெல்லிசான வெளிச்சம் படர்ந்து கிடக்கும் அந்த மாலை வேளையில் கொஞ்சமும் மகிழ்ச்சியில்லாத துடிப்பில் 'உண்ணி' படகை செலுத்திக் கொண்டிருந்தான்.

படகினுள் சாண் நீள 'மக்ரோணிச்சாளை' மீன்கள் நிறைந்து கிடந்தன!

கொஞ்சத் தொலைவில் 'சயனப் பூங்கர' தெரிந்தது. துடிப்பு வலிப்பில் மாறுதல்களைத் தந்து படகை குடவல்லியின் இடபக்க விளிம்புக்கு தள்ளி சயனப் பூங்கர வை மிதித்தான் உண்ணி.

தரையில் முழுநீள உடம்பை காட்டிக் கொண்டு பூமிக் குள் ஆழப்பதிந்து கிடக்கும் தேக்கு உருளைக் கட்டையில் படகை இழுத்துக் கட்டிவிட்டு நிமிர்ந்தபோது தலை மட்டில் தாட்சாயிணி தெரிந்தாள். அவள்முகம் கொஞ்சம் வதங்கியிருந்தது. அவள் கை அக்குளில் பெரிய கூடை ஒன்று இருந்தது.

உண்ணி அவளைக் கடந்து சயனப் பூங்காவின் மேட்டுச் சரிவில் கொஞ்ச வேகமாய் நடந்தான். தாட் சாயிணி படகில் கிடக்கும் மக்ரோணிச்சாளை, மீன்களை சலிப்புடன் வாரிப் போட்டுக் கொள்ள ஆரம்பித்தாள்.



''எடா உண்ணி, எறாலுமீனு கிட்டியா?'' கேள்வி யோடு பதிலுக்காக நிற்காமல் அவனைக் கடந்தான் ஒருவன்.

—சரிந்த கூரையும், இடிந்த சுவருமாய் பங்கரையாய் நிற்கும் பலவீனமான தனது வீட்டுக்குள் நுழைந்து கிட்டித் திண்ணையை நோக்கியபோது அவனுக்கு கொஞ்சம் சுரீரென்றது.

'இன்றைக்கும் அந்த பைத்தியக்காரி எங்காவது திரியப் போய் விட்டாளா?'

—மனச்சந்துஷ்டியோடு திரும்பியபோது எதிரே தாட்சாயிணி கூடையை சுமந்து கொண்டு வந்து கொண் டிருந்தாள்.

''எடி, என்ட மோன் எவ்விட?'' (ஏண்டி, என் மகள் எங்கே?)

''ஏவ்விட கரங்கி நடக்குன்னு, தெண்டித்திரியின்னு எனிக்கு அறிஞ்சு கூடா...''

(அவ, எங்க சுத்திக்கிட்டிருக்காளோ, திரிஞ்சுக் கிட்டிருக்காளோ? எனக்கு தெரியாது)

—உண்ணியின் கேள்விக்கு அலட்சியமாய் பதிலை வைத்தாள் தாட்சாயிணி.

வழக்கம்போல் வரும் கோபம் வந்தது. அந்த கோபத் தோடு ஓடினான் உண்ணி.

குடவல்லி ஆற்றோரமாய்...பகவதி அம்பலம் பக்கமாய்—

ஐயங்காவினுள்...நம்பூதிரித் தோட்டத்தினுள்...

மம்பரம் சாலை ஓரமாய்...

—எங்கும் அவள் இல்லை. உண்ணிக்கு சினத்தோடு கூடி உடம்பும் மனசும் துடித்தது.

—எதிர்படுவோரை தடுத்து நிறுத்தி "எண்ட மோளை நோக்கியா?"

"ஒரு பிராந்தியை நோக்கியோ?" என்று கேட்டுச் சலித்து நின்றபோது எதிரே கமலாதரன், பாலுவோடும் ஜோதியோடும் வந்து கொண்டிருந்தான்.

உண்ணியின் சட்டைபோடாத மார்பை, கலைந்த தலையை, கலங்கிய கண்களை, துடிக்கும் உதடுகளை, பதறும் உடம்பை கொஞ்சம் வித்யாசமாய் பார்த்து நின்ற போது அவர்களிடமும் உண்ணி "ஒரு பிராந்தியை (பைத்தியக்காரியை) வழியில் கண்டோ?" என்றான்.

"நிண்ட மோளோட பேரு எந்தா?" ஜோதி பட்டென்று விசாரிக்க "பார்கவி!" என்றான் உண்ணி.

—மூவரின் புருவமும் கொஞ்சம் உயர்ந்தது. கொஞ்சம் இடுங்கி, கொஞ்சம் சுருங்கியபோது உண்ணி அவர்களுக்கும் தெரிந்திருக்கவில்லை, என தனக்குள் எழும்பிய பதிவோடு அவர்களை கடக்க காலெடுத்தான்.

"ஜோதி நீ சொன்ன பார்கவியாடா? அவளோட தகப்பனா இவன்?" கமலாதரன் கேட்டு நிறுத்தியதைத் தொடர்ந்து உண்ணியின் கால்கள் அப்படியே உயர்ந்து நின்றன. நெடுநாட்களுக்கு பிறகு காதோரமாய் இரண்டு வரி தமிழ் பாய்ந்த அதிசயத்தோடு "நீங்க தமிழ் நாட்டுக்காரர்களா?" எனும் பார்வையோடும், "என் மகளை முன்பே உங்களுக்கு தெரியுமா?" எனும் கேள்வியோடு மூவரையும் நோக்கினான் உண்ணி.

"எந்தா நோக்குன்னு?" பாலு

"நீங்க தமிழ்நாடா?" உண்ணி

"உனக்கு தமிழ் தெரியுமா?" வியப்புடன் ஜோதி.



"ராமேஸ்வரத்து வங்காள விரிகுடாவில் ஆறு வருஷம் கடலாடினவன் இந்த உண்ணி."

"உன் பேரு உண்ணியா?"

"முழுப் பேரு உண்ணி மாது."

"ரியலி இட் ஈஸ் வெரி சர்ப்ரைஸ்..." கமலாதரன்.

"பேச நேரமில்லை தம்பி...இப்ப என் மகளை தேடிப்பிடிச்சு இழுத்து வரணும். எங்க சிப்பட்டுகிட்டு இருக்காளோ...எனக்கு கொஞ்சம் உதவி செய்வீங்களா?"

"தாராளமா!"

—மூணு பேரும் உண்ணியுடன் தொடர்ந்தார்கள். பாக்குத் தோப்புக்குள், பவழ மல்லி தோட்டத்திற்குள், செம்பருத்தி காவினுள், ஜான்சன் எஸ்டேட்டுக்குள் எங்கும் இல்லாத பார்கவியை குடவல்லி அரபியோடு சங்கமிக்கும் இஸ்லாமிய தர்கா ஒன்றின் அருகில் அவர்கள் பார்த்தபோது நாலு பேருக்கும் அதிர்ச்சி ஏற்பட்டது. உண்ணிக்கு இரத்தம் கொதித்தது.

"ஹே, பிராந்தி. பிராந்தி...

எடி பிராந்தி இவ்விட நோக்கடி...

பீடி வலிக்குன்னாடி?"

—இருபது வயது திறந்த மார்பு லுங்கி ஒருவன்தான் வலித்த பீடியை பார்கவி எதிரே நீட்டினான். தரைமேல் அலங்கோலமாய்,நைந்த மல் துணிப்பாவாடை தொடைக்கும் மேல் உள்ளடங்கிச் சுருங்கிக் கிடக்கும் நிலையில், மார்பு ரவிக்கையின் மேலிரண்டும் கொக்கி அறுத்துவிட்டிருக்க பெண்மையின் பெருந்தனமிரண்டும் பெருகி வழிந்து வெளித் தெரிய, அந்த அழகை, அவளின் நிலையை, இரண்டு கண்களால் சூழ நோக்கியபடி பீடித்துண்டோடு நெருங்கும் அவனை பெரிய சிரிப்போடு பார்த்தாள் அவள். பின் பீடியை வாங்கினாள். தலை கீழாக வாயினுள் செருகிக் கொண்டாள்.

''ஆ, அம்மே... அம்மே...''-நெருப்புச் சூட்டின் நிறைந்த தாக்குதலால் நிலை தடுமாறி புலம்பினாள் பார்கவி.

—பலமாய் சிரித்தார்கள் எல்லோரும்.

ஒருவருக்கும் அவள் யார் என்று விசாரிக்கவோ, அவளது அலங்கோலத்தை சரிப்படுத்தவோ, மனது வரவில்லை. எல்லா ஆண்களும் பீடி வலிப்போடு அவளது அலங்கோலத்தோடு புதைந்து போயிருந்தனர்.

சின்னஞ்சிறுகள் ''பைத்தியம், பைத்தியம்...'' என்று கெக்கலித்துக் கொண்டிருந்தனர். அவ்வப்போது அவர்கள் விட்டெறிந்த கற்களால் அவள் உடம்பில் சில இடங்கள் கன்னிப்போயிருந்தது.

அனைத்தையும் பார்த்து வேகத்துடன் இடையே பாய்ந்தான் உண்ணி. பாய்ந்த வேகத்தில் பார்கவியின் கன்னத்தில் இரண்டு அறைவிட்டான். அவள் வாய்ச் சூட்டோடு, கன்னத்தில் உறைந்த வலியோடு குமுறினாள்.

கமலாதரன் சூரியாவின் வார்ப்பை நேரில் பார்த்த ஸ்தம்பிப்பில் இருந்து விடுபடவேயில்லை. பாலு உண்ணியின் பிடியிலிருந்து பார்கவியை விடுவித்து அவளை சரிப்படுத்தி அந்த இடத்தைவிட்டு புறப்பட ஆயத்தம் பட்டான்.

உண்ணி சுற்றிலுமிருப்போரை வெறிப்போடு பார்த்தான். ஒருவரும் அவன் பார்வைக்கு மனிதர்களாகவே தெரியவில்லை. இதேபோல் முன்னொரு முறை பார்கவி தெருவில் திரிந்து அலங்கோலப்பட்டு அவதியில் உழல அதைக் கண்டு பொருமிக் கொதித்து சுற்றிலுமிருப்போரை பார்த்து ''நிங்ஙள் ஒக்கே நல்லா இருக்கியோடா? நிங்ஙள்டே பெண்கள் இங்ஙன அவமானப் பெடுன்னது கண்டு நிங்ஙள் வெறுதே இருக்கோடா?''



-என்று கேட்டதற்கு ''ஒண்ணு வெறுதே இருக்கடா. நிண்ட மோள் திவசம் இங்ஙன கழியுன்னவள் அல்லே. நுங்கள்க்கு வேறு ஜோலி இல்லே?''-எனும் அவர்களின் பதில் நினைவுக்கு வந்தது.

—வீடு திரும்பும் வழியெங்கும் பார்ப்போர் கேலிப் பொருளாய் நோக்க, அந்த பார்வைகளால் ஏற்பட்ட மன வலியோடு குனிந்த தலை நிமிராது வீட்டுக்குள் நுழைந்தான்.

தொடர்ந்து வந்த கமலாதரும், பாலுவும், ஜோதியும் வீட்டின் வெளியிலேயே நின்றனர். உண்ணிக்குஅவர்களை உள்ளே அழைக்கக் கூட மறந்து போயிருந்தது. உள்ளே நுழைந்ததும், நுழையாததுமாய் பெரிய கயிறு ஒன்றை எடுத்து வந்து பார்கவியோடு அதை இணைத்து கட்டித் திண்ணைக்கு பக்கமாய் தரையில் ஆழப்பதிந்து தலையை மாத்திரம் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் கொழுக்குச்சியில் அந்தக் கயிற்றை இறுக்க கட்டிய பிறகே மூவரின் நினைப்பும் வந்தது.

மூவரையும் கொஞ்சம் கனிவாய் 'உங்களுக்கு என் நன்றிகள்' என்கிற மாதிரி பார்த்தான்.

தாட்சாயிணி குறுக்கே வந்து நின்றாள்.

வலக்கையின் உள்ளங்கை மேல் ஐந்து ரூபாய் சில்லரையை வைத்து அவன் எதிரே நீட்டிக் காட்டினாள்.

நீ கொண்டு வந்த மக்ரோணிச்சாளை மீன்களின் மதிப்பு இவ்வளவுதான் என்று சொல்லாமல் சொன்னாள்.

''தாட்சாயிணி மூணு கோப்பி வேணு...'' என்றான் உண்ணி. அவள் முகம் சுளித்தாள். அந்த சுளிப்பில், சலிப்பில் 'இந்த ஐந்தும் சில்லறையில் இன்றைய பொழுதை கடத்துவதே பெரிய பாடு, இதில் மூணு கோப்பி வேறா?'-என்ற பொருள் இருந்தது.

உண்ணிக்கு அது புரிந்தது. மறுபடியும் ''மூணு கோப்பி வேணு...''—என்றான் அழுத்தமாய். தாட்சா யிணி வெறுப்புடன் அகன்றாள்.

''உங்களை உட்காரச் சொல்லக்கூட என் வீட்ல இட மில்லை.'' என்றபடியே பக்கத்து தூங்கு மூஞ்சி மரத்தின் கிழான கட்டிலை நெருங்கினான். அது துவண்டு தொட்டி லாய் மாறி அவளைப்பார்த்து சிரித்தது. சங்கோஜப் படாமல் மூவரும் அதில் உட்கார்ந்தார்கள்

உண்ணி நின்றுகொண்டான்.

''உண்ணி உன் கூட நிறைய பேசணும்...''

''பேசுங்க...எனக்கும் உங்க கூட நிறைய பேசணும் போல இருக்கு...''

''அதுக்கு முந்தி'' உனக்கு ஒரு ஆச்சரியமான சேதி சொல்லப் போறோம். இந்த போட்டோவைப் பாரு.''

—ஜோதி சூர்யாவின் படத்தை உண்ணி எதிரே நீட்டி னான்.

உண்ணியின் கலங்கிய விழிகள் விரிந்தன.

''எம் பொண்ணு போலவே இருக்குதே இந்த பொண்ணு...''

''உம் பொண்ணுதான் உண்ணி.''—ஜோதி.

''எம் பொண்ணா! இருக்காது இது வேற யாரோ...''

''எப்படிச் சொல்றே?''

''எம் பொண்ணு எனக்கு நினைவு தெரிஞ்சு இத்தனை மங்கலமா, அழகா, செழிப்பா, இருந்ததேயில்லையே...''

—உண்ணியின் விழிகளில் மளுக்கென நீர் தேங்கியது. ஜோதி அதனைப் பார்த்து கொஞ்சம் சிலிர்த்தபோதும்,



பாலு உண்ணியின் பேச்சால் வருந்தி நின்ற வேளையிலும் கமலாதரனின் காதில் எதுவுமே விழவில்லை. அவன் பார்கவியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் நாக்கைத் தொட்டுப் பார்த்துத் தொட்டுப் பார்த்து கையை உதறிக் கொண்டிருந்தாள்.

கமலாதரனுக்கு அப்படியே ஓடிப்போய் அவளை அள்ளி மடியில் போட்டு தேறுதல் சொல்ல மனது துடித் தது.

''டேய் கமலா, கமலா இங்க பாருடா...''—ஜோதி அவனை உசுப்பித் திருப்பிவிட்டு உண்ணியை நோக்கி— இவன் கல்யாணம் பண்ணிக்கவிருந்ததுதான் இந்த பொண்ணு'' என்றான். சுருக்கமாய் அவனது கதையை கூறி முடித்தபோது அதுக்கல் பிறுக்கலான அலுமினிய தம்ளரில் கருப்புநிற கட்டாங் காப்பி அலுங்கிக் குலுங்கி ஆவியை உதறிக் கொண்டிருக்க அதை மூவருக்கு நடுவே நீட்டினாள் தாட்சாயிணி.

''எதுக்கு இதெல்லாம்?''—பாலு.

—மூவரும் வாங்கி உறிஞ்சினார்கள்.

''இந்த அம்மா யாரு'' ஜோதி.

''என் ஒண்ணுவிட்ட தங்கை...''

''அப்ப பார்கவிக்கு அம்மா?''

''அவ காலமாயி வருஷம் பத்து ஆவுது...''

''உன் சொந்த ஊரே இதுதானா?''

''ஆமா?''

''ராமேஸ்வரத்துல கடலாடினதா சொன்னியே, எப்படி?''

''இங்கே நான் முழுக்க கடலாடினாலும் பத்து ரூபா கெடைச்சா அதிகம். ராமேஸ்வரத்துல கடலாடினா அந்த கடல்ல எறால் மீனு அதிகம் கிடைக்கும்னும், தெனம் முப்பது நாப்பது சம்பாதிக்கலாம்னும் சொன்னாங்க. சொன்னதோட நாலு பேர் அங்கே கடலாடப் பொறப்பட்டப்போ நானும் கிளம்பினேன்...''

''குடும்பத்தோடயா...?''

''எனக்கு குடும்பம் ஏது? என் பாரு குட்டி மட்டும் தான் என் சொத்து. தாட்சாயிணி கூட சமீபமா வந்தவ தான். பல வருஷங்களுக்கு முன்னால் ஒருத்தனை நம்பி பம்பாய் வரைக்கும் ஓடிப்போய் பின்னே முறையில்லாம வாழ்ந்து முடிச்சுட்டு சலிச்சுப்போய் திரும்பி வந்தா. ஊர் அவளை வெறுத்தாலும் என்னால வெறுக்க முடியலை என் மகளுக்கு ஒரு காவலா இருக்கட்டுமேன்னு அவளையும் வெச்சி இங்க காலம் தள்ளிகிட்டு இருக்கேன்.'

''உன் மகளுக்கு எப்படி இப்படி ஆனது?''

—கேள்விக்கு பதிலாய் உண்ணி கமலாதரனைப் பார்த்தான். மூவருக்கும் ஒன்றும் புரியவில்லை.

''இவருக்கு பைத்தியம் பிடிக்கலை! ஆண் பிள்ளை தன்னோட காதல் தோல்வியை தாங்கிக்கிட்டாரு. அவ பொண்ணு பாருங்க. தாக்கு பிடிக்க முடியாம இப்படி ஆயிட்டா...''

மூவரும் திகைத்துப் போய் உண்ணியைப் பார்த்தனர்.

''ராமேஸ்வரத்துல எனக்கு எதிர்பார்த்த வருமானம் கெடைச்சுது. என் பாருவை அவ இஷ்டப்படி வளர்த்தேன். அங்கே என் கூட கடலாடின ஒருத்தனை மனசார இவ விரும்பியிருக்கா. ஒரு நாள், இரண்டு நாள் இல்லை. இரண்டு வருஷம்!

எனக்கு ஆரம்பத்துல இலைகாய் மறைவாய்தெரிஞ்சு பின் முழுசா தெரிஞ்சுது. கட்டிவைக்க ஆசைப்பட்டேன்.



கல்யாணத்துக்கு முதல் நாள் இரண்டு பேரோட கடலாடப் போனான் அவன்.

திரும்பவேயில்லை!

கடற் சுழல்ல அகப்பட்டானா, இல்லை எப்படிப் போனான்னு எனக்கு இன்னிக்கு வரை தெரியாது. அவனுக்காக கரையோரமாய் என் பாரு பல நாள் காத்து நின்னுகிட்டிருந்தா. ஒரு நாள் இப்படி ஆயிட்டா...''

''அப்புறம்?''

''என் சக்திக்கு ஏற்ப செலவு பண்ணிப் பார்த்து குணப்படுத்த முயற்சித்தேன். என் படகை வித்தேன். குணசீலம் கோயில்ல ஒரு மாசம் தங்கியும் பார்த்தேன். நான் இளைச்சதுதான் மிச்சம். என் பாரு தேறவேயில்லை.''

—அவர்கள் பார்கவியின் சோகக் கதையை நெஞ்சில் நிரப்பிக் கொண்டு திரும்பினார்கள்.

''டேய் கமலா, என்னடா நினைக்கிறே?''—ஜோதி கமலாதரனை பார்த்து கேட்டான்.

மலைக்காற்றால் சடசடத்து பறக்கும் தலைமுடியை கோதிவிட்டுக் கொண்டே கண்ணீர் வழிந்த விழியை துடைத்துவிட்டு பதில் பேசாமல் நடந்தான் கமலாதரன்.

அதன் பின் ஒருவரும் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை.

# 11

மறுநாள் மாலை!

தாட்சாயிணி சிறிய உரலில் அரிசியை இடித்துக் கொண்டிருந்தாள். திண்ணையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள் பார்கவி. வாசற்புறம் சைக்கிள் மணிச் சப்தம் கேட்டது. தலையை உயர்த்திப் பார்த்தாள்.

சாக்கோ!

—சைக்கிளை விட்டு இறங்காமலே அவளை ஒரு மாதிரி பார்த்தான் அவன். தாடசாயிணி உலகையை போட்டுவிட்டு வேகமாய் அவன் முன்போய் நின்றாள்.

''எந்த தீர்மானிச்சுன்னு?'' அவன் கேட்டான்.

''எனிக்கு பேடியாய் இருக்கின்னு சாக்கோ?''—அவள்

''பேடிக்கான்டா தாட்சாயிணி...''—அவன்.

—அவள் பதில் பேசவில்லை.

—அவன் அகன்றான். அவனது சைக்கிள் அதிக அகலமில்லாத தார்ச் சாலையில் எதிரே வந்து கொண்டிருந்த கமலாதரனை கடந்து விரைந்தது.

கமலாதரன் தாட்சாயிணியை பார்த்து மெலியச்சிரித்தான். பின் ''உண்ணி' என்று பேச்சைத் தொட்ட மறு விநாடி, ''ஆயாளு வந்தில்லா'' என்று பேச்சை ஒடித்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். இடிந்த வாசல் நிலை சால்படியை அவன் தாண்டும் முன் குட்டித் திண்ணைக்கு பார்வை போனது. படுத்துறங்கும் பார்கவியின் உடம்பை பார்த்தது. அவன் மனதை எதுவோ ஒன்று என்னவோ செய்தது. பின் உள்ளே நுழைந்தான்.



கமலாதரன் தாட்சாயிணியின் நிர்தாட்சண்ய போக்கால் கொஞ்சம் சஞ்சலித்துப் போயிருந்தான். அந்த சஞ்சலிப்போடு பார்கவியை பார்த்தபோது மனதுக்கு ஆறுதலாக இருந்தது. யாரைப் பார்க்க வேண்டும் என்று நினைத்து வந்தானோ அவள் ஆழ்ந்த உறக்கத்தில்...

சில நிமிடங்கள் வரை அவளது அழகிய முகத்தில் பதித்த பார்வையை அவனால் எடுக்க முடியவில்லை.

ஏழ்மையில் சிக்கியிருந்த போதிலும் சிவந்து நிற்கும் உடம்பு. கொழித்து நிற்கும் பருவம். அலையடிக்கும் கூந்தல். ஒளி வீசும் கண்கள் கவர்ந்திழுக்கும் முகம்!

பிரம்மசிருஷ்டியின் விந்தையை எண்ணி மாய்ந்தவனாய் திரும்பினான்.

இப்பொழுது அவனுக்குள் அவ்வளவாய் 'சூரியாவின் பாதிப்பு' இல்லை.

பார்கவியின் புதிய பதிப்பால் புதிய உற்சாகம் அவனுக்குள் பூவாய் மலர்ந்திருந்தது.

# 12

உதயசூரியனாய் புல்நுனிப் பனிகள் வைரங்களாய் ஜொலித்துக் கொண்டிருக்கும் காலைப் பொழுது!

உண்ணி அரபிக்குள் நுழைவதற்கான ஆயத்தத்தில் இருந்தான். தாட்சாயிணி நெறிக்க மனதைக்கட்டியிருக்கும் பயம் கலந்த மௌனத்தில் உண்ணியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'சிதைந்து போன துடுப்பு. அறுந்து போனாலும் இன்னமும் நைந்து போயிருக்காத வலை! தென்னை ஓலையால் தலைக்கு குடையாய், அதே வேளையில் ஒரு தொப்பியாய் ஆகியிருக்கும் குடைத்தொப்பி, அலுமினிய டிபன் பாக்ஸில் பச்சை நீரில் ஊறி, பருத்து நிற்கும் சோற்றுப் பருக்கைகள், உடன் சில மிளகாய்கள்!

—அத்தனையோடும் 'வரட்டுமா' என்கிற மாதிரி தாட்சாயிணியைப் பார்த்தான் உண்ணி பின் பார்கவியை நோக்கி பார்வையை திருப்பினான். அவளை பார்த்த மறுவிநாடி முகம் வாடிப் போனது. 'மகளே எங்கேயும் கட்டை அவிழ்த்துக் கொண்டு ஓடி அவதிப்படாதே, தாயே...'

—மானசீகமாய் அவளைப் பார்த்து கெஞ்சினான். பின் வலையை, துடுப்பை, இத்யாதிகளை, தரையில் வைத்துவிட்டு அவளை நெருங்கி வாஞ்சையுடன் பக்கத்தில் அமர்ந்து கூந்தலை வருடி, கண்ணீர் துளிர்த்து நிற்கும் விழிகளால் அவளது முகத்தைப் பார்த்து நெற்றியில் முத்தமிட்டு திரும்பியபோது தாட்சாயிணிக்கு என்னவோ போல் இருந்தது.

'இத்தனை பாசம் மிகுந்தவனுக்கு நமது திட்டம் தெரிந்தால்?'-கொஞ்சம் எண்ணிப் பார்த்து மருண்டு போனாள் தாட்சாயிணி. எல்லாம் சில விநாடிகள்தான். பின் தைரியம் வந்தது. அந்த தைரியத்தால் புதிய எண்ணங்கள் துளிர்த்தன.

'தெரிந்தால் தெரிந்துவிட்டுப் போகட்டும். ஒரு பைத்தியம் வீணாகாமல் ஒரு வறுமைக்கு மருந்தாவதைப் புரிந்து கொண்டு உடன்பட்டு விடுவான் உண்ணி. அல்லாத பட்சத்தில் உடன்படச் செய்யவேண்டும்.



எத்தனை நாளைக்குதான் ஏழ்மையில் குச்சிக் கிழங்கையும், உப்புச்சப்பில்லாத அரிசிப் புட்டையுமே சாப்பிடுவது?''

—துணிந்து நிமிர்ந்தாள். பின் பார்கவியை நெருங்கினாள். பார்கவி அவளை கொஞ்சம் பயந்து பார்த்தாள்.

''என்ட மோளே பேடிக்காண்டா...'' (என் அருமை மகளே, பயப்படாதே)-பேசிக் கொண்டு நெருங்கி பக்கமாய் அமர்ந்தாள். முதல் முறையாய் ஆசையாய் அவளை தொட்டு வருடினாள். அரை மணியில் அவளை அப்படியே மாற்றிவிட்டாள்.

பெயரில் மட்டும் அழகிய பார்கவியாய் இருந்தவள் நிஜத்தில் நேரில் இறுகிய கச்சையோடும், புதிய இடுப்புப் பாவாடையோடும், பொலிந்த மஞ்சள் முகத்தில் சிவந்த குங்குமப் பொட்டோடும், தலையில் கதம்பப் பூக்களோடும்.

தாட்சாயிணி அவளை வருடி திருஷ்டி கழித்தபோது வாசற்புறம் சைக்கிள் மணி சப்தம் கேட்டது. சாக்கோ வந்து விட்டது தெரிந்தது. கையில் ஒரு சிறிய அலுமினிய பெட்டியுடன் சைக்கிளைவிட்டு உள்ளே வந்தான் சாக்கோ. தாட்சாயிணி முகம் கொள்ளா சிரிப்புடன் பார்த்து தெம்புடன் அவனை வரவேற்றாள்.

''உண்ணி போயா?''

''போயி, இனி வைகறையில வரு...''

''பாரு. எவ்விட?''

''நோக்கு அவ்விட...''

—தாட்சாயிணி காட்டிய பார்கவியை இடிந்த வீட்டின் உட்புறத்தில் பார்த்து மோவாய்க் கட்டையில் சாக்கோ விரலை வைத்து கொண்டு திரும்பினான்.

"இ சொப்ன சுந்தரியால் நல்ல ஆதாயம் இருக்கின்னு..." என்றான்.

—பின் கொண்டு வந்த அலுமினியப் பெட்டியை, திறந்து இன்ஜெக்ஷன் சிரிஞ்சரை, பிஸ்டனை வெளியே எடுத்து ஒரு பாட்டிலில் அடைபட்டுக் கிடக்கும் பெத்தடினுக்குள், சிரிஞ்சரின் கூரிய முனையை செருகி பிஸ்டனை பின்னுக்கு இழுத்து கண்ணாடி உருளைக்குள் பெத்தடினை வாங்கி அதை பார்கவிக்குள் செலுத்தினான்.

—அவள் சில நிமிடங்களில் தரைமேல் இருந்தபோதிலும் மேக மூட்டத்திற்கு நடுவே மிதந்து கொண்டிருந்தாள்.

அவள் மேல் ஒருவன் விழுந்து அவளது ஆடைகளை களைந்து கசக்கியபோது அவளுக்கு உலகமே மறந்து போனது. மேலே விழுந்தவனை அவனுக்கு மேல் வெறி கொண்டு பற்றினான்!

அவன் அவளுக்கு ஈடு கொடுக்க மாட்டாது திமிறினான். திரும்பும்போது நூற்றி ஐம்பது ரூபாய்க்கு மேல் ஒரு இருபத்தைந்து ரூபாயை சேர்த்து சாக்கோவிடம் தந்து 'பரமதிருப்தி' என்று சொல்லாமல் சொல்லிச் சென்றான் அவன்

தாட்சாயிணி நெடு நாட்களுக்குப் பிறகு நூறு ரூபாய் நோட்டை வாங்கி மார்பின் மேல் வைத்து நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

27851
434666

# 13

சூரியன் கடலில் மூழ்க சரிந்து கொண்டிருந்தான். உண்ணி வழக்கம் போல் மீன்களுடன் திரும்பியிருந்தான். கமலாதரன் கூட அவளை பார்த்துச் செல்ல வந்திருந்தான்.

அவள் ரொம்பவும் சோர்ந்தவளாய், மெல்லிய மயக்கத்தினூடே இருவரையும் பார்த்தாள். தாட்சாயிணி வழக்கம் போல அரிசி இடித்துக் கொண்டிருந்தாள். பக்கமாய் பலதரப்பட்ட காய்கறிகள்!

உண்ணி கமலாதரனை சிரித்து நோக்கி, "எங்கே இவ்வளவு தூரம்?" என்றான். கமலாதரன் பதில் சொல்லவில்லை. உள்ளுக்குள் தன் மனதை அலைக்கழிக்கும் முழு எண்ணங்களை, தனது முடிவை உண்ணியிடம் சொல்லி விடலாமா என்ற கேள்வி முளைவிட்டிருந்தது.

உண்ணி தலைத்துண்டை அவிழ்த்து தோள் மேல் போட்டுக் கொண்டு பக்கத்துக் கட்டிலின் மேல் போய் அமர்ந்து கொண்டு கமலாதரனையும் அமரச் சொல்லி பார்த்தபோது கமலாதரன் பார்வை அன்றும் பார்கவி மேலேயே இருந்தது.

உண்ணிக்கு சிரிப்பு வந்தது. கணத்தில் எல்லாம் புரிந்தது. கமலாதரன் மேல் பரிதாபம் வழிந்தது.

"தம்பி!"

"உம்!"

"வாங்க, உட்காருங்க..."

—உண்ணியை நெருங்கி கட்டிலில் அமர்ந்தான்.

''உங்களைப் பார்த்தா எனக்கு கவலையா இருக்கு...'

''.........''

''என் மகள் ஒரு 'பைத்தியம், அவளால உங்க வாழ்க்கை வளப்படும்னு நான் நம்பலை...''

—திகைத்து நிமிர்ந்தான் கமலாதரன்.

—தான் கேட்க விரும்பிய கேள்விக்கான பதிலல்லவா அது!

''நீங்க இங்க வந்து போறது நல்லா இல்லை. அது உங்களுக்கும் சரி, எங்களுக்கும் சரி! நல்லதில்லை. ஆகையால் இனி இங்கே வராதீங்க! உங்க நன்மைக்காக சொல்றேன். உங்க குடும்பத்துல இருக்கறவங்களுக்கு நீங்க இனியும் சங்கடமா மாறக் கூடாது. நல்ல அழகான பொண்ணா லட்சுமியாட்டம் ஒருத்தி உங்களுக்கு மனைவியா வருவா! பகவதி சத்தியம் 'அதுக்கு வழி பண்ணுவா.''

—கமலாதரன் நெஞ்சு படபடத்து துடித்தது. பார்வை வெறித்துப் போனது.

''இங்க சுத்தி இருக்கறவங்க ஒரு மாதிரி. நீங்க வந்து போறதை தவறா கூட அர்த்தம் பண்ணிக்கலாம். என்னால் எதையும் இழந்து வாழ முடியும். மானத்தை இழந்து மட்டும் வாழ முடியாது. அதனாலையும் இவ்வளவு சொல்கிறேன்.

பைத்தியமா அவ இருக்கறச்சவே அவளை பல இடங்கள்ல பலர் கெடுக்க முயற்சி பண்ணினதா பேசின வதந்திகளாலேயே நான் கொஞ்சம் கொஞ்சமா செத்துகிட்டிருக்கேன். பத்தாததுக்கு இன்னொரு வதந்தி உருவாக நாம் ஏன் காரணமா இருக்கணும்...?''



—கமலாதரன் பதில் பேசாமல் எழுந்தான்.

திரும்பிப் பார்க்காமல் நடந்தான்.

விழியில் நீர் சோர்ந்து போய் வழிய ஆரம்பித்தது.

உண்ணி உணர்ச்சியில்லாமல் நடக்கும் அவனை சில விநாடி பார்த்து விட்டு ஆழ்ந்த பெருமூச்சு விட்டான்.

பார்கவி அனைத்திற்கும் நடுவே சோர்ந்து போய் உறங்கிப் போயிருந்தாள். அன்றைய பகலில் நடந்தவைகளின் நிழலைகூட உண்ணியால் உணர முடியவில்லை.

கடல் காற்றை நிறைய நிறைய சுவாசித்த களைப்பில் அவனையும் உறக்கம் கவ்வ ஆரம்பித்தது.

# 14

ஒரு நாள்...

இரண்டு நாள்...

மூன்று நாள்...

—கமலாதரனுக்கு பார்க்கும் துடிப்பு அவளைப் பார்த்திராத மூன்று நாளின் பெருக்கத்தோடு கூடி பெருகியிருந்தது. வேலையிலேயே மனது படியவில்லை உண்ணி பேசியது ஞாபகத்தில் இருந்தபோதிலும் அதை சட்டை செய்ய முடியாத பலகீனத்தில் மனத்துடிப்பு பெருகிக் கொண்டே போனது.

இன்ஸ்ட்டியூட்டில் உள்ள மைக்ரோ மீட்டர் முதல் ஸ்டீல் ரூல் வரை எல்லாவற்றிலும் பார்கவியை பார்த்தான்.

L.G. 2' வை இயக்கி இரண்டு இரும்பு உருளைகளை கிரைண்ட செய்யும் போது வீல் உடைந்து போனது. 'ஐயய்யோ' என்று மனது பதறவில்லை. அப்பொழுதும் பார்கவி நினைப்புதான்!

ஜோஸ் மாஸ்டர் ஓடி வந்தார்.

''கமலோதர் வீலு எப்படி பொட்டிப் போனது (உடைந்து போனது)'' விசாரித்தார்.

முழித்தான்.

''யூ கிரேஸி!'' பலமாய் சலித்துக் கொண்டார். அது கூட அவனுக்கு உறைக்கவில்லை.

மறுபடியும் பிரின்ஸ்பால் அறைக்கு அவன் போனான்! தம்பி, உனக்கு ஏற்கெனவே உனக்கு கான்சன்ட்ரேஷன் இல்லைன்னு நான் உனக்கு 'வார்ன்' பண்ணியிருக்கேன். இன்னிக்கு வீலை உடைச்சிட்டியாமே...?''

''அது வந்து சார்...''

''எது வந்தாலும் நீ தேறுவியாங்கறது எனக்கு சந்தேகம்...''

''...''

''இந்த தடவை வார்னிங் லெட்டர் மட்டும் தரேன். சுதாரிச்சுக்கோ. அடுத்த தடவை டெஃபனட்லி டெர்மினேஷன் தான்.

—வார்னிங் லெட்டரோடு வெளியே வந்தான் அவன்.

இன்ஸ்ட்யூட்டே தனக்குள் சிரித்தது.

அவனுக்கு அதுபற்றி கவலையே இல்லை.

மறுபடியும் பார்கவி அவனுள் நிமிர்ந்து நின்றாள்.



''இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மென்டல்டா நீ...''-டீ பிரேக்கின் போது ஜோதி கொஞ்சம் அவன் மனதை குத்தினான். லட்சியமே செய்யவில்லை. அவன்.

அன்று இன்ஸ்ட்யூட்டில் பன்னிரெண்டு மணிக்கு ஒலிக்க வேண்டிய காலிங்பெல் பத்து மணிக்கே ஒலித்தது!

''அதற்குள்ளாகவா லஞ்ச் அவர் வந்து விட்டது?''

—எல்லோரும் கெடிகாரத்தைப் பார்த்து குழம்பி நின்றபோது இன்ஸ்ட்யூட்டின் பிரதான இன்ஸ்ட்ரக்டர் ஒருவர் காலமான செய்தி வேகமாய் அவர்களுக்குள் பரவியது.

பிரின்ஸ்பால் சகிதம் எல்லோரும் ஓரிடத்தில் கூடி இரண்டு நிமிடம் அந்த இறந்த ஆத்மாவுக்காய் பிரார்த்தித்துக் கலைந்தனர்.

அன்றைக்கு விடுமுறை!

—ஜோதி மதியம் டவுனில் வந்திருக்கும் தமிழ் படத்தை பார்க்க நினைத்து கொஞ்சம் மகிழ்ந்தபோது கமலாதரன் பரபரப்புடன் எங்கோ புறப்பட ஆயத்தமாவது தெரிந்தது.

''எங்கடா...''

''நீ தெரிஞ்சுக்க வேண்டியது அநாவசியம்.''

''பாருவை பார்க்கவா?''

''ஜோதி நீ அதிகம் பேசறே''

''ஆமா அதிகம்தான் பேசறேன் உண்ணி பேசினது மறந்து போச்சா?''

''அவன் பேசினதை உங்கிட்ட சொன்னேன் பாரு நான் கடைஞ்செடுத்த மடையன்.''

''சொல்லலேன்னா மட்டும்...''

—பக்கத்தில் படுக்கையில் ஒரு தலைகாணி கிடந்தது. கமலாதர் கோபத்துடன் அதை எடுத்து ஜோதியை நோக்கி வீசினான். அடியை வாங்கிக் கொண்டு திரும்பவும் பேசினான் ஜோதி.

''ஒண்ணு செய். ஒரு தாலியை கையில எடுத்துக்கோ! போய் பாக்கறச்சே அதை அவ கழுத்துல கட்டிட்டு அங்கையே அவங்க மாப்பிள்ளையா தங்கிடு. எனக்கு ஒரு சிரமம் ஒழியும்...''

''நீ சொன்னாலும், சொல்லலேன்னாலும் அதுதான் நடக்கப் போவுது.''

''அடேய்...வெளையாட்டுக்கு சொன்னேன். அப்படியெல்லாம் செஞ்சிடாதேடா...''

''அப்ப பேசாம வேலையைக் கவனி.''

''நானும்கூட வருவேன்.''

''வந்து தொலை.''

—இரண்டு பேரும் புறப்பட்டனர். 'உண்ணி கடலாடப் போயிருப்பான். பார்கவியை பார்ப்பதில் பிரச்சனை ஒன்றும் வராது. முடிந்தால் அவளுடன் கொஞ்சம் பேச வேண்டும்.'

—கமலாதரனுன் மனசுக்குள் தீர்மானங்கள் படிந்தன.

'பார்கவி மட்டும் பைத்தியமாய் இல்லாதிருந்தால்?'-நினைக்கவே இனித்தது.

'இப்பொழுது மட்டுமென்ன, உயிரை கொடுத்தாவது அவளை குணப்படுத்தியே தீருவது'—தீர்மானம் உறுதியுடன் அவனுக்குள் உதித்தது.



'உண்ணியை எப்படியாவது தன் எண்ணத்திற்கு சம்மதிக்க :செய்து விடலாம்!''-மனசுக்குள் ஆழமாய் நம்பினான். ரொம்ப நாளைக்கு பிறகு பழைய கல்லூரி கமலாதரன் ஆக மகிழ்ச்சியில் நனைந்து போனான். ஜோதிக்குகூட அவனை கலகலப்பில் பார்க்க வியப்பாய் இருந்தது.

—பார்கவியின் வீடு வந்து விட்டது.

இதயத்துடிப்பின் வேகம் கொஞ்சம் இன்பப் படபடப்பாகியது. தூர இருந்த அவளது கிட்டித் திண்ணையைப் பார்த்தான். அதில் அவள் இல்லை.

வாசற்புறம் சைக்கிள் ஒன்று நின்று கொண்டிருந்தது. சாக்கோ தாட்சாயிணியுடன் தூங்குமூஞ்சி மரத்து நிழலில் கிடக்கும் தொட்டிலில் அமர்ந்து கொண்டு எதையோ பேசிக் கொண்டிருந்தான்.

உயர்ந்த ஜாதி செருப்புகள் இரண்டு வீட்டுக்கு வெளியே கிடந்தன.

கமலாதரன் வீட்டை நெருங்கியபோது தாட்சாயிணி பீதியுடன் அவனை பார்த்தாள். பின் சாக்கோவை பார்த்தாள். சாக்கோ எழுந்து நின்று லுங்கியை மடித்துக் கட்டிக் கொண்டான்.

''ஆராணு நீ?''-கேட்டான். கேட்ட விதம் சரியில்லை ஜோதியும். கமலாதரும் சிரிக்க முயன்றார்கள். அப்போது வீட்டுக் கதவு திறந்து கொண்டது. பருத்த உருவம் கொண்டு பத்து விரலிலும் மோதிரம் கொண்ட ஒருவர் தலையை கோதிவிட்டுக் கொண்டு வெளியே வந்தார்.

சாக்கோவை நெருங்கி இடுப்பு பில்ட்டோடு பொருத்திய பர்ஸை திறந்தார். சாக்கோ கமலாதரனை விட்டுவிட்டு அவரை நோக்கி திரும்பினான். அவர் ரூபாய் நோட்டுக்களை அவன் கைகளில் வைத்தார்.

''அடிக்கடி வருவேன்!''—என்றார்.

''அவசியம் வரணும்!''—என்றான் சாக்கோ.

தாட்சாயிணிக்கு உடம்பு நடுங்கியது. வேளை கெட்ட வேளையில் வந்துவிட்ட இரண்டு பேரையும் வெறிக்க பார்த்த போது கமலாதரன் வேகமாய் வீட்டுக்குள் நுழைந்தான்.

அதை பார்த்த தாட்சாயிணியும், சாககோவும் உள்ளே ஓடியபோது பார்கவி நிர்வாணத்தில், அழையாத சிரிப்பில் கமலாதரனின் கைகளை பிடித்துக் கொண்டிருந்தாள்!

கமலாதரனுக்கு உடம்பின் மேல் அக்கினி நதி பாய்கின்ற மாதிரி இருந்தது. சாக்கோ அவளை அவளிடமிருந்து பிரித்து வலுவோடு பிடித்து வெளியே தள்ள கமலாதரன் தரையில் வேகத்துடன் விழுந்தான். ஜோதி அதைப் பார்த்துவிட்டு கமலாதரனை நெருங்கி அவனை தூக்கிவிட எத்தனித்தபோது சாக்கோவின் வலக்கால் கமலாதரனின் மார்பினை விசையுடன் உதைத்தது.

ஆதைப் பார்த்துவிட்டு ஜோதி சாக்கோவின் மேல் பாய, கமலாதர் சுதாரித்து எழுந்து நிற்க, தாட்சாயிணி நிலைகுலைந்து நிற்க பார்கவி உடம்பில் எந்த ஆடையுமில்லாத நிலையில் வாசல் நிலை கால் படிக்கு வந்து சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்!

தாட்சாயிணி விழுந்தடித்து ஓடி அவளை உள்ளே தள்ளி கதவை தாளிட்டு திரும்பியபோது அக்கம்பக்கத்து சிலர் பார்கவியினை பார்த்த நிலையில் அசையாத மரங்களாய் எதிரே நிற்பது தெரிந்தது!

—சாக்கோ ஜோதியின் பிடியில் திணறிக் கொண்டிருந்தான். இறுதியில் இரண்டு பேர் இடைவெட்டிய பிறகே இருவரும் தனித்தனர்.

கமலாதரன் பெருகி வழியும் மன வலியோடும், உடல் வலியோடும் அப்படியே மயங்கியிருந்தான்!

# 15

உண்ணிக்கு இதயம் அறுந்து போன மாதிரி இருந்தது.

கண்கள் ரத்தச் சிவப்பாயிருந்தன.

ஊர் முழுக்க சிரிக்கின்ற சப்தம் காதோரமாய் பாய்கின்ற பிரமையில் சுயநினைவே பறிபோயிருந்தது.

தாட்சாயிணி பதறப் பதற தரையையே பார்த்துக் கொண்டிருந்தாள் பார்கவி. அந்த மாலையில் பிரக்ஞையின்றி சயனித்திருந்தாள். பார்வை எங்கேயோ நிலைகுத்தி இருந்தது.

அவர்களை நாலு பேர் 'அடுத்து என்ன நடக்கப் போகிறது?' என்ற வினாவோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

கமலாதரன் உண்ணியை அடுத்த நிலையில்ஜோதிக்கு பக்கமாய் நின்று கொண்டிருந்தான். பக்கத்து பலா மரங்களை, சப்போட்டாக்களை நந்தியாவட்டை பூஞ்செடிகளை வருடி வரும் தென்றல் அவர்களுக்கு இதமளிக்க முடியாத நிலையில் 'உஸ்' என்ற சப்தத்தோடு அவர்களை கடந்து போய்க் கொண்டேயிருந்தது.

சற்றைக்கெல்லாம் இருட்டிவிட்டது.

எல்லோரும் உண்ணி எதையாவது செய்வான் என்று ஆவலோடு எதிர்பார்த்து அதற்காய் வேண்டி சலிக்கச் சலிக்க நின்று கொண்டிருந்து விட்டு அவனது வெட்டிப் போட்ட மரம் போன்ற நிலையை பார்த்து ஏமாந்து திரும்பி விட்டனர்.

கமலாதரும்,ஜோதியும்கூட அறைக்கு திரும்ப எண்ணி முனைந்தனர் ஒரு பிரக்ஞையின்றி அசையும் கமலாதரனை ஜோதி வழிப்படுத்தி நடத்திட, அவர்கள் தார்ச்சாலையில் ஊரத் தொடங்கிவிட்டனர்.

'அவனுக்குள் உதித்திருந்த இரண்டாவதுஒளிப்பந்தும் அஸ்தமித்து அவனை சூன்யத்தில் தள்ளிவிட்டிருந்தது.

உண்ணி விழியை திருப்பி, சிரத்தை அசைத்து சுய நினைவுக்கு வந்த போது ஒரு முடிவிற்கும் வந்திருந்தான். அந்த முடிவோடு பார்கவியை நெருங்கினான் அப்படியே அவளை மார்பில் புதைத்துக்கொண்டு ஓங்கி விம்மினான். பின்பு அவளை எழுப்பி நிறுத்தி கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வீட்டின் வெளிப்புறத்துக்கு வந்தான்.

தாட்சாயிணி பயத்துடன் என்னசெய்யப் போகிறான் என்கிற மாதிரி பார்த்தாள். மெல்லிய இருளில் அவன் சயனப்பூங்கர' பக்கம் போவது மட்டும் தெரிந்தது.

விடிந்து விட்டது.

கரையோரமாக உண்ணியும், பார்கவியும் சிலுசிலுப்பான சரீரங்களாக ஒதுங்கியிருந்தார்கள். இடுப்பிலே தாலிக்கயிற்றை முடிந்து கொண்டு மறுவாழ்வு தர ஓடி வந்திருந்த துணிச்சலான கமலாதரன் துவண்டுபோய் சரிந்தான். அவனை மிளகு படர்ந்த பலாமரம் தாங்கிக் கொண்டது'.

சில மணிகளில் போலீசாருக்கு தகவல் சென்று அவர்களையும் இழுத்து வந்துவிட்டது. அவர்கள் தங்கள் கடமையைச் செய்ய ஆயத்தமாகி விட்டனர். ஜோதியும் தகவலறிந்து ஓடி வந்தான். ஒடிந்து விழுந்து விட்ட கமலாதரனை நெருங்கி அவனை தேற்று முகமாகப் பார்த்தான்.



அவனுக்குள்ளேயோ புதிய தாஜ்மகால் ஒன்றுக்கான அஸ்திவார வேலைகள் ஆரம்பமாகியிருந்தன. அதை ஒழுகும் விழிநீர் நிரூபித்தது.

அதை துடைத்துவிட்டு தோளைத் தந்து கமலாதரனை அழைத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான் ஜோதி.

கமலாதரன் நடையில் கம்பீரமே இல்லை. அந்த நடைக்கு ஒரு கம்பீரத்தை தர 'இன்னொரு பார்கவியோ அல்லது சூரியாவோதான் பிறந்து வரவேண்டும்.

வருவாளா?

ஃ ஃ ஃ

# ஆயிரம் ஜன்னல் மாளிகை

## 1

ஜில்லென்ற காற்று!

கம்பம் பள்ளத்தாக்கின் பசுஞ்செடிகளையும், மூங்கில் மரங்களையும் தழுவி வரும் காற்றென்றால் அதன் மகத்துவமே தனி.

குறிப்பாக வண்டிப்பெரியார் சாலையில் தென்னை மற்றும் பாக்குத் தோட்டங்களை ஒட்டிய ஐந்து ஏக்கரா சமவெளியில் கம்பீரமாக தெரியும் ஆயிரம் ஜன்னல் மாளிகையில் முற்றத்தில் அமர்ந்து அந்தக் காற்றின் வீச்சை சுகிக்கத் தெரிய வேண்டும்.

ஒரு ஈஸிச்சேரை போட்டுக்கொண்டு அதில் சாய்ந்த படி திறந்த மார்போடு இந்த காற்றை சுகிப்பதில் ஆனை முடியார் முதலானவர்.

சமயங்களில் பேயின் குரல்போல் விஸ் விஸ் என்று சப்தமிட்டபடி குசலம் போட்டு காற்று வீசும். ஆழ்ந்து சுவாசித்தால் மெல்லிய மூலிகை வாசம் மூக்கை நிரடும்.

முற்றத்து சாளரம் வழியாக பார்வையை விட்டால் பச்சைக் கம்பளமாய் பள்ளத்தாக்கின் விரிவு. பார்த்தால் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.



உயரமான ராணுவ வீரர்கள் தலையில் குஞ்சரம் தரித்துக்கொண்டு சரியான இடைவெளியில் அணிவகுத்து நின்றால் பார்க்க எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது தென்னை மற்றும் பாக்குத் தோப்பின் மரங்களின் வரிசை. தோப்பில் ஆயிரம் மரங்கள் தேறும். அவ்வளவும் ஆனை முடியாரின் சொத்து.

அது மட்டுமா?

பள்ளத்தாக்கின் விரிவே அவருடையதுதான். சொத்து மதிப்பை குத்துமதிப்பாக கணக்கிட்டதில் இருபது கோடியை! அது தாண்டிவிட்டதாக அவரின் கைத்தடி கஜபதி கூறியபோது ஆனைமுடியார் தன் மீசையை நீவி விட்டுக்கொண்டதில் அநியாயத்துக்கு ஒரு பணக்கார கெத்து.

சாதாரண கெத்தல்ல... பரம்பரை கெத்து. ஒண்டிப் புலியார், பஞ்சவர்ணத்தார், காட்டுமுனியார் என்கிற ஒரு நீண்ட பாரம்பரியத்தின் தொடர்ச்சிதான் ஆனை முடியார்.

—அவ்வளவு பேருமே கிரீடம் தரிக்காத ராஜாக்கள். ஊரே வியக்க வாழ்ந்து மறைந்தவர்கள்.

இதில் காட்டு முனியார் மட்டும் சற்று விதிவிலக்கு. பெண்கள் விஷயத்தில் சரியான இந்திரன். 'ஆயிரம் பெண் பார்த்த அபூர்வசிகாமணி' என்கிற பட்டத்திற்குத் தகுதியானவர்.

அவரது பேரன் ஆனைமுடியாரும் அப்படித்தான். அது என்னவோ எந்தப்பெண்ணைக் கண்டாலும் இவருக்குள் ஆசை பாலாய் பொங்கி விடுகிறது.

வயது வரம்பு மீறிய 'ஆசை. ஐம்பது வயதாகிய பிறகும் அவருக்கு உடம்பு ஒத்துழைப்பு அதைவிட பெரிய விஷயமல்லவா?

—ஆயிரம் ஜன்னல் மாளிகையில் இவரின் இந்த சல்லாபத்திற்கென்றே ஒரு தனி அறை இருக்கிறது.

உள்ளே சுவற்றில் கிளுகிளுப்பான படங்களின் தொங்கல்கள்.

நல்ல சந்தனத்தால் கடைந்த நாற்காலியின் கால்கள் கூட, புட்டம் வரை மேலேறிய பெண்ணின் அழகிய கால்களைப் போலவே செதுக்கப்பட்டிருக்கின்றன.

அந்த நாளைய தவமணிதேவியின் படத்திலே இருந்து இந்த நாளைய பூஜாபட் வரை அந்த அறையில் தொங்குவது மகா ஆச்சரியமான ஒரு ரசனைக் காட்சி.

''குட்டிகளா... பிரம்மன் பலே ஆசாமி குட்டிகளா... எப்படித்தான் இங்க அங்கங்களை இப்படி லட்டு லட்டா படைச்சானோ? அம்புட்டும் ஒரு அளவா அமைப்பா அமைஞ்சு துணிக்குள்ளே மறைஞ்சு நினைக்கையிலேயே இந்த தேவன் மனசுல கிளுகிளுப்பை பீச்சுதே...

இந்த விநோதத்தை நான் என்னான்னு சொல்ல?''

—படங்களைப் பார்த்து வாய்விட்டு புலம்புவார். கஜபதி வருவான்.

''கடவுளே புஷ்பம் வந்துருக்கு...'' என்பான். புஷ்பம் என்றால் பெண். கஜபதிக்கு அப்படிச் சொல்லித்தான் பழக்கம். அவர் அவனுக்கு கடவுள். அவனும் அப்படி அழைத்தே பழகிவிட்டான். வேறு எப்படிக் கூப்பிட்டாலும் அது அவரை நிறைவாக கூப்பிட்டமாதிரி இல்லை என்பது அவன் தீர்மானம்.

இதோ இன்றும் கஜபதி புஷ்பம் சகிதம்...''கடவுளே... புஷ்பம் வந்துருக்கு...'' ஆனைமுடியார் காற்றின் சிலாகிப்பில் இருந்து விடுபட்டு திரும்புகிறார். கஜபதியின் பின்னால் பெண் ஒருத்தி. பள்ளத்தாக்கின் மலைஜாதிக் கூட்டத்தவளைப் போல தெரிகிறாள். அள்ளுக்கொசுவம் உடுத்தி ரவிக்கை தரிக்காமல் சேலை முந்தானையை மூடியபடி தலைகுனிந்து நிற்கிறாள்.



உச்சந்தலையில் மலை ரோஜா ஒன்று. ''ஆருவே இது புதுசா...?''

''தொழிலுக்கு மட்டுமில்ல கடவுளே உங்களுக்கும் இவ புதுசுதான். பேர் முத்துமணி.''

''மலைக்குடிச்சியா...?''

''ஆமாம் கடவுளே. இவ புருசனைத்தான் பச்சைக் கூமாச்சி மலைல புலி அடிச்சிப்புடிச்சு. அதுல இருந்து நிர்க்கதி. மூங்கில் வெட்டிப் பொழைக்க வந்தவகிட்ட உங்க ஆசை பத்தி சொன்னேன். சரின்னு...''

—கஜபதியின் இழுப்புக்கு இசைவான போக்கு அந்தப் பெண்ணிடம். அப்பொழுதே கிளம்பி அறைக்குள் நுழையத் தொடங்கினாள்.

''ஆரும் பாக்லைதானே?''

''பாக்கலை கடவுளே...''

''சந்திரசூடாமணி ரொம்ப புலம்பிக்கிட்டிருக்கறதா கேள்விப்பட்டேன். அதான்...''

''அவுக கண்ணுல படாமதான் கூட்டாந்துருக்கேன்.''

''நல்லது நீ போ...''

—கடவுளாகிய அவரின் ஆக்ஞைக்கு கட்டுப்பட்டு சிறிது தொலைவு நடந்த கஜபதி உடனே திரும்பி வந்தான். தலையை சொறிந்தான்.

''என்னாடா?''

''ஒரு முக்கியமான விஷயம். போடிநாயக்கனூருக்கு ஒரு ஜோசியர் வந்துருக்காரு...''

''சரி அதுக்கென்ன இப்போ...?''

''நம்ம நாட்டு பிரதம மந்திரிக்கே ஜோசியம்சொன்னவராம்!''

''எலேய் விஷயத்துக்கு வாடா...அந்த ஜோசியனுக்கென்னடா...?''

''இல்ல... நம்ம நடராசு பத்தி அந்த ஜோசியர்கிட்ட கேட்டுப் பாக்கலாமுள்ள...?''

—குரலில் இழைசலோடு ஒரு முக்கிய விஷயம் பற்றி ஞாபகப்படுத்தும் தினுசில் கஜபதி பேசிய பேச்சினால் அவரின் நடு நெற்றியில் பூச்சி பறக்க ஆரம்பித்துவிட்டது.

காமஜெபம் செய்த மனதில் இப்போது சோக மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது போல் ஒரு மாற்றம்.

முத்துமணி என்னும் அந்த மலைக்குடிச்சி ஓரமாக ஒதுங்கி நிற்கிறாள். அவிழ்த்து போடவேண்டிய உடுப்பை இழுத்து மூடிக்கொண்டு அவள் நிற்பதைப் பார்க்க கஜபதிக்கு சிரிப்பாக வந்தாலும் நடராசு பற்றி ஆனைமுடியாரிடம் பேசிவிட்டதின் நிமித்தம் அதை நினைத்து அந்த சிரிப்பு சுருண்டு போகிறது.

நடராசு...

இருபதைத் தாண்டிவிட்ட ஆனைமுடியாரின் ஒரே ஒரு புதல்வன். யானை வயிற்றில் இன்னொரு யானை யல்லவா வந்து பிறந்திருக்க வேண்டும்? இவன் வேறு மாதிரி ஆகிவிட்டான்.

நான் போன நூற்றாண்டில் நம் கொள்ளுத்தாத்தா பெற்ற சாபத்தின் எச்சம் என்கிற மாதிரி பெண்பிள்ளைத் தனம் செய்கிறான்.

புடவையைக் கண்டால் எடுத்து சுற்றிக் கொள்கிறான். ஆசை ஆசையாக உள்பாவாடையெல்லாம் அணிகிறான். கைகால்களில் மருதாணி. கண்ணுக்கு மை என்று பெண்ணிமை ஆளுகிறான்.

எல்லாம் சில வருஷமாகத்தான். பதினைந்து பதினாறு வயது வரை அவ்வளவாக அவனது பெண்மை நாட்டம் தெரியவரவில்லை. சரீரத்திலும் பெரிதாக மாற்றமில்லை.



நல்ல வாளிப்பான ஐந்தரை அடிக்கு பழுதில்லாத வாலிபனாகத்தான் இருந்தான்.

ஆனைமுடியாரும் வகைக்கு ஒரு மோட்டார் சைக்கிளை வாங்கிக்கொடுத்து ஊரை அடிக்கடி சுற்றி வரச் சொன்னார்.

''எப்படிவே என் மகன்...?'' என்று சமீபிப்பவர்களிடம் கேட்டு மீசையை நீவிக் கொள்வார்.

''புலிக்குப் பிறந்தது பூனையாகுமாவே... என்று ஆனைமுடியாரிடம் பதில் கித்தாப்பு செய்தவர் பலருண்டு.

இன்று எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது. நடராசு அச்சு அசலாக பெண்ணாகி வருகிறான். வருகிறான் என்ன? வருகிறாள்... வந்து விட்டாள்...!

''ஆனைமுடியாரே நீ ராஜநடை போட நான் விட மாட்டேன். உன் முன்னோர்களின் தப்புக்கும், பாவத்துக்கும் நீ பதில் சொல்லித்தான் தீரவேண்டும். உன் பாவத்துக்கு உன் மகன் மகளாகி பதில் சொல்வான். அலித்தனம் உன் பரம்பரை தொடர்பு. வம்சத்துக்கு ஒருவர் அலியாகியே தீர வேண்டும். இது பொன்னூஞ்சல் அம்மன் சாபம்... உன்னை ஆண்டியாக்கி நடுத்தெருவில் நிறுத்தப் போகும் சாபம்...''

ஆனைமுடியாருக்குள் கோடாங்கி ஒருவன் உடுக்கை யடித்து சொன்ன சொல்லெல்லாம் ஊர்வலம் போகிறது.

—நாடி நரம்புகளில் வெள்ளாவித் துணி போல் உலட்டல், காதோர நரைக்குள் கரும்புக் காட்டில் எட்டிப் பார்க்கும் பாம்பென வியர்வைப் பாம்பு.

—மலைக்குடிச்சிக்குள் மகா ஆச்சரியம்.

—கஜபதியோ லேசாக நடுங்குகிறான். ''இந்த சந்தர்ப்பத்தில் இந்த விஷயத்தை பேசியிருக்கத் தேவையில்லையோ?''— லேசாக மருகுகிறான்.

அவர் சிரம் நிமிருகிறது.

''ஆமா இப்ப நடராசு எங்க?''

''நம்ம எஸ்டேட் பங்களாவுல...''

''அவனை ஆம்பளையா ஆக்கி அந்த ஜோசியன் நிறுத்தணும்.''

''செஞ்சிட்டாப் போச்சுங்க கடவுளே...''

''அதுக்கு முந்தி அந்த ஜோசியனை நீ இங்க என் முன்ன நிறுத்தணும்..'

''நொடியில கடவுளே...''

''இந்த மலைக்குடிச்சியை அப்புறம் வரச்சொல்லு...''

''ஆகட்டும் கடவுளே! முத்துமணி நீ போய்க்க...'' வெள்ளித் தண்டை தினுசாக சப்தமிட அந்தப் பெண் அங்கிருந்து அகலத் தொடங்க ஆனைமுடியார் தேக்குச் சாய்வு நாற்காலியில் மல்லாந்தார்.

காதோரம் ஊர் முரசின் உக்கிரமான சப்தம். அவர் மனக்கண்ணில் அதன் தொடர்ச்சியாக பஞ்சாயத்து ஜனங்களின் அணிவகுப்பு.

தலைவர் தங்கமுத்து பட்டு உருமாவை தலையில் கட்டிக்கொண்டு தீர்ப்பளிக்கத் தொடங்கி விட்டதுபோல் கூட பாவனை. தீர்ப்புக்குரல் கூட காதோரம் ஒலிக்க ஆரம்பித்து விட்டது.

''ஆனைமுடியார் பரம்பரையிலும் அலிப்பிள்ளை பிறந்திடிச்சு. அதோட வேற வாரிசு வகை அவருக்கு இல்லாததால் அவரோட சொத்துபத்து வகையறாக்கள்



அவுக முன்னோர் உயில்படி பொன்னூஞ்சல் அம்மன் தேவஸ்தானத்தை சேர்ந்தாகணும் ஆனைமுடியாரும் அவரது அலிப்பிள்ளையும் மேற்படி சொத்து வகையறாக்களை விக்கவோ, பிறருக்கு கொடுக்கவோ தகுதியத்து போறாங்க...

அவங்க காலத்துக்கு இந்த சொத்துக்களை அனுபவிச்சுக்கலாம். அவுக சோறு பொங்கி சாப்பிடவும் இதர செலாவணிக்கும் மாசம் எவ்வளவு ருவா ஒதுக்கறதுங்கறதை தேவஸ்தான கமிட்டிதான் தீர்மானிக்கணும்.

இந்த ஷரத்துக்களை ஊர் அறிய வேண்டியது அவசியம் அவசியம் அவசியம்...''

''இல்லை...'' பதறிப்போய் கத்துகிறார் ஆனைமுடியார். கஜபதி அரண்டு போகிறான்.

''என்ன கடவுளே...எது இல்லை?'' மெல்ல கேட்கிறான்.

''கஜபதி நம்ம நடராசு அலி இல்லடா...அலி இல்ல.''

''அப்படியே இருக்கட்டும். அதுக்கு எதுக்கு கூப்பாடு? ஏதோ நினைப்புல முங்கிட்டீங்க போலருக்கே...?''

''ஆமா கஜா...அவன் அலிங்கற சமாச்சாரம் ஊருக்கு தெரிஞ்சு போனா என்னஆகும்னு யோசிச்சுப்பார்த்தேன். பஞ்சாயத்து தீர்ப்பு காதுல விழுந்த மாதிரி ஒரு பிரமை. அதான் மனசு பதறிடிச்சு...''

''நான் இருக்கறவரை தெரியவிடுவேனா கடவுளே?''

''டேய் கஜபதி நீஇருக்கறதையே நான்மறந்திட்டேன் பார்த்தியா?''

''கடவுள் பக்தனை மறக்கலாம். ஆனால் பக்தன் கடவுளை மறக்கலாமா?''

''கஜா எனக்கென்னமோ பயமா இருக்கு. ஆமா அந்த ஜோசியக்காரன் நல்லா பலன் சொல்லுவானா?''

''அள்ளிருவான் கடவுளே. அள்ளிருவான்...''

## 2

நீல நிற படகுக் கார்.

பக்கத்து தொகுதி எம். எல். ஏ விடம் இருந்து கார். ஆனைமுடியாரின் ஆட்கள் அவரிடம் இருந்து ஓட்டிவந்து விட்டனர். உள்ளே ஜில்லென்ற ஏசி.

''தேர்தல் செலவுக்குக் காசு வாங்கத் தெரியும். திருப்பித் . தரத் தெரியாதாமா? போய் காசையாச்சும் இல்லை எதாவது பொருளையாச்சும் எடுத்தாங்கடா'' என்று ஆனைமுடியார் மீசை நீவி போட்ட கட்டளையை அவரது அடியாட்கள் செயல்படுத்திக் காட்டியதன் வீரச்சின்னம் அந்த கார்

அதைத்தான் ஜோசியரை அழைத்துவர அனுப்பினார் ஆனைமுடியார்.

போடி நாயக்கனூரில் அரை நகரத்தனமான சந்து பொந்துகளில் அந்த கார் அம்பாக சீறி ஜோசியரையும் அள்ளிப் போட்டுக்கொண்டு திரும்பியும் விட்டது.

கூடவே கஜபதி.

ஜோசியரிடம் நிறையவே வழிகிறான்.

''சாமி...எங்க கடவுள்தான் இந்த ஏரியா சக்கரவர்த்தி அசந்தா குபேரனுக்கே கடன் கொடுக்கற செல்வாக்கு.



அவர் மனசுல ஒரு குறை, அதை கரெக்டா போட்டு உடைச்சும், தீர்த்தும் வெச்சுட்டீங்கன்னா உங்களோட எடைக்கு எடை தங்கமே கேட்டாலும் என் தெய்வம் தரும்...''

ஜோசிரியர் இந்த பீத்தலுக்கெல்லாம் மசிகிற மாதிரி தெரியவில்லை. நடுவகிடு எடுத்து வாரியதலை. நெற்றியில் நூறு கிராமுக்கு குறையாத குங்கும சந்தனம். கண்களில் ஒருவகை அசாத்ய ஒளி.

நான் பிச்சைக்கார தேங்காய் மூடி ஜோசியன் கிடையாது என்பதுபோல ஒரு மிதப்பான கர்வம் இழையோடும் முகம்.

கஜபதிக்கு ஜோசியரின் அந்த மௌனம் அலுப்பைத் தருகிறது.

''என்ன சாமி...நான் பேசிகிட்டே வரேன். எதுவும் பேசாம வாரீங்களே...?''

ஜோசியர் அவன் பக்கம் திரும்புகிறார்.

''என்ன பேசணும்?''—கேட்கிறார்.

''சகஜமா எதுவுமே பேசமாட்டேங்கிறீங்களே. எங்க கடவுளை பத்தி சொன்னேன். அவரை பத்தி ஒரு கேள்வி கூட கேக்கலியே நீங்க...''

''உங்க கடவுள் உனக்குத்தான் கடவுள். எனக்கு அந்த அம்பாள்தான் கடவுள்...''

''அந்த அம்பாளைவிட இவர் அதிகம் படியளப்பார் சாமி...''

''பைத்தியக்காரா...ஒரு சாதாரண மனுஷ ஜென்மத்துக்காக அந்த அம்பாளையா தாழ்த்தறே? இருந்தாலும் உன் எஜமான விசுவாசத்தை பாராட்டறேன்.''

''அது சரி சாமி...நீங்க நம்ப பிரதமருக்கே ஜோசியம் சொன்னவர்னு கேள்விபட்டிருக்கேன். ஜோசியம் சொல்ல எங்க கத்துகிட்டீங்க...?''

''இசை, ஓவியம், நாட்டியம், பாடல் இவையெல்லாம் கத்துக்கிட்டா கைவரப் பெற முடிஞ்ச கலைகள். ஆனா ஜோசியம் கத்துக்கிட்டா கைவராது. அருள் இருந்தா தான் வரும்...''

''நீங்க சொல்றது எனக்கு புரியலை...''

''நான் ஜோசியம் சொல்லலை, அந்த அம்பாள் அருள் தான் ஜோசியமா சொல்லப்படுது. நான் கருவி—எனக்குள்ள இருந்து அவதான் சொல்றா...''

''அப்ப உங்க ஜோசியம் பொய்யே ஆகாதா?''

''அவ வாக்கு பொய்யானதேயில்லை...''

''இந்த நாகரிக உலகத்துல எப்படி சாமி இதெல்லாம் சாத்யம்''

''எந்த நாகரிக உலகமா இருந்தாலும் காற்றை சுவாசிக்காம உயிர் வாழ முடியுமா? நீர் குடிக்காம ஜீவிக்க முடியுமா? இந்த பஞ்ச பூத அம்சங்கள் பழசு தானே?''

''ஆ ஊன்னா தத்துவமா பேசறீங்க நீங்க''

—ஜோசியரிடம் சிரிப்பு. அந்த சமயமாக பார்த்து பள்ளத்தாக்கின் படுஜோரான ஆயிரம் ஜன்னல் மாளிகையின் முன் அந்த கார் போய் நிற்க, கதவை திறந்துவிட வேகமாக சிலர் வந்தனர்.

காரைவிட்டு இறங்கிய ஜோசியர் பங்களாவை நிமிர்ந்து பார்க்கிறார் ஒரு சமாதியை பார்ப்பதுபோல் அவருக்குள் உணர்வு.

—இதற்குள் ஆனைமுடியாரின் வருகை.



—அவரிடம் வாய் கொள்ளாத வரவேற்பு...

''வாங்க சாமி வாங்க...வாங்க! வாங்க...''

—ஆனைமுடியாரின் முகத்தை நேருக்கு நேர் பார்த்தபோது ஜோசியரிடம் இலேசான விதிர்ப்பு அவருடைய சாமுத்ரிகா லட்சணம் அவருக்குள் ஏதோ ஒரு சோகக் கணக்கை போட்டு விட்டதுபோல் பதறிப்போகிறது. முகம் அதை துல்லியமாக காட்டுகிறது.

—கஜபதியும் அதை கவனிக்கிறான்.

என்னவாக இருக்கும்? ஊகத்தில் தொட்டில் கட்டி ஆடியபடி நடக்கிறான்.

—இதற்குள் ஆயிரம் ஜன்னல் மாளிகையில் ஜோசியரின் பாதங்கள் பதிந்து நடக்கத் தொடங்கிவிடுகின்றன இழையோடும் பெர்ஃப்யூம் வாசம். ஆங்காங்கே உயிரோடு பிடித்து வந்து நிறுத்தியது மாதிரி சிங்கம், புலி, யானை, கரடிகளின் பாடம் செய்த உடல்கள்.

''இதெல்லாம் நானே வேட்டையாடின உடம்புங்க... —ஆனைமுடியார் அவைகளை சுட்டிக்காட்டி ஸ்லாகிக்கிறார்.

''வேட்டைன்னா ரொம்ப இஷ்டமோ?''-ஜோசியரின் கேள்வி முன் மதர்ப்பாக மார்தூக்கி ஆமோதிப்பாய் முகத்தில் உணர்ச்சி அலைகளை பரப்புகிறார்.

''பெண்களையும் உங்களுக்கு ரொம்ப பிடிச்சாகணுமே?''

—ஜோசியரின் இந்த கேள்வி முன் தடுமாறுகிறது அவர் முகம். கஜபதியிடம் ஆச்சரியம்.

''எப்பவும் கால் கட்டை விரலைவிட அடுத்த இரண்டாவது விரல் நீளமா இருந்தா அந்த சரீரம் ஒரு

பெண்ணால திருப்திகாணா துங்கறது சாமுத்ரிகாலட்சண நிருபணம்...''

''வாஸ்தவம்தான் சாமி...நான் கொஞ்சம் சபலக்காரன்...'' ஆனைமுடியாரிடம் அங்கீகாரம்.

''கொஞ்சமில்ல...நிறைய...நிறைய...''

—ஜோசியர் அப்படிச் சொல்லவும் ஹெக்சகன்வடிவில் மாளிகையின் மையப்பகுதி வரவும் சரியாக இருந்தது.

தேக்கைக் கடைந்தும் குடைந்தும் வடித்த நாற்காலிகள்...சிம்மாசனம் கணக்காய் ஆசனங்கள்...சதா அதை துடைத்தபடி திறந்த மார்புப் பணியாளர்கள்.

'உக்காருங்க சாமி...' ஆனைமுடியார் உபசரணையை துவக்குகிறார். வேலைக்காரர்கள் விலகி மறைகிறார்கள்.

ஜோசியர் அமர்ந்த வினாடியில் வலக்கையை குவித்து நெற்றியை நிமிண்டினார்.

ஏலம் மணக்க பாதாம் பால் வந்து அவரை கலைக்கப் பார்த்தது.

''சாமி பால் சாப்டுங்க. நம்ம தோட்டத்து பாதாம் பருப்பை அரைச்சு பசும்பால் சேர்த்து ஏலமும் தட்டிப் போட்ட பால்...''-கஜபதி ஜோசியரை பேசிக் கலைக்கப் பார்த்தான்.

நிமிர்ந்தவர் பாலை மறுத்துவிட்டு ஆனைமுடியாரை பார்த்தார்.

''ஜாதகம் இருக்கா?'' கேட்டார். தயாராக இருந்த அதை எடுத்து நீட்டினார் ஆனைமுடியார். ஜோசியரின் பார்வை ஒரு நிமிடம்கூட அந்த ஜாதகக் கட்டுகளை நோட்டமிடவில்லை. ப்ச்...என்று சுழித்த உதட்டோடு அவரை நிமிர்ந்து பார்த்தது.



ஆனைமுடியாரிடம் அதன் நிமித்தம் கலவரம்.

''சாமி...உங்ககிட்ட வந்த நிமிஷத்துல இருந்து சரியான முக மலர்ச்சியே இல்லீங்களே...''-கஜபதி ஆனைமுடியார் கேட்க நினைத்ததை கேட்கிறான்.

''நீங்க எந்த பலனையும் தெரிஞ்சுக்காம பேசாம இருக்கறதுதான் உங்களுக்கு 'நல்லது''-என்கிறார் ஜோசியர்.

''இப்படி பீடிகை போடாம நேரா விஷயத்துக்கு வர்ரீங்களா?'' ஆனைமுடியார் நைச்சியமாகவே கேட்கிறார்.

ஜோசியரிடம் அசமந்தமான புன்னகை.

ஆனைமுடியாரை அது சீறுகிறது. கஜபதியை பார்க்கிறார். அவன் நடராசுவை அழைத்து வரவா என கேட்கிறான்.

தலையை அசைக்கிறார். நடராசு அழைத்து வரப்படுகிறான்.

நளினமான பெண் பிள்ளைத்தனமான நடையில்.

ஆனால் உடுப்பில் கம்பீரமான ஆண் வாசனை. பார்வையில் சுதந்திரத்தை இழந்துவிட்ட வேதனை!

ஜோசியர் அவனை பார்த்த மாத்திரத்தில் வியந்து போகிறார்.

''சாமி இவன் என் மகன்...'' ஜோசியரிடம் அறிமுகம்.

''மகனா? மகளா?''

''மகன் சாமி...''

''இவன் ஜாதகம் இருக்கா?''

ஜாதகம் வருகிறது. அதை மட்டும் சற்று கூடுதலான நேரம் எடுத்துப் பார்க்கிறார் ஜோசியர்.

முகத்தில் ஆச்சரியப் பூவாணங்களை அல்வப்போது கொளுத்துகிறார்.

ஆனைமுடியாரும் கஜபதியும் இதைப் பார்த்து இலேசாக மிரண்டே போகின்றனர். ஒரு கட்டத்தில் ஜோசியர் உதடு "பலே..." என்று உச்சரிப்போடு உச்சு கொட்டுகிறது.

"சாமி...இப்படி நீங்களே உங்களுக்குள்ள பேசிக்கிட்டா எப்படி?"...ஆனையார் சற்று உரத்த குரலில் கேட்கிறார்.

ஜோசியர் எதுவும் பேசாமல் ஜாதகத்தை ஆனைமுடியாரிடம் தந்துவிட்டு எழுந்து கொள்கிறார்.

நான் கிளம்புகிறேன் என்பதுபோல முகபாவம்...

"என்ன கிளம்பிட்டீங்க...பலனே சொல்லலியே..."

—நடக்க தொடங்கிவிட்டவரை ஆனைமுடியார் பதட்டத்துடன் கேட்கிறார். நடராசுவை சிலர் உள்ளே கொண்டுசெல்ல கஜபதி ஆனைமுடியாரையும் ஜோசியரையும் பின் தொடர்கிறான்.

"சாமி நான் கேட்கறேன்...நீங்க இப்படி பேசாம போனா எப்படி?"

"பேசாம போறதுதான் எனக்கு நல்லது..."

"என் நல்லதுக்கும் வழி சொல்லுங்க..."

"அதுக்கு வழியே இல்லை..."

"புரியும்படி சொல்லுங்க..."



"உங்க போக்குல போங்க. ஜோசியம் ஜாதகம்னு இனி யார்கிட்டேயும் போக வேண்டாம்..."

"இனி பார்க்கப் போறது இருக்கட்டும். இப்ப பாத்ததுக்கு பலன் என்ன?"

"நல்ல விதமா சொல்லும்படி எதுவும் இல்லை."

"பரவால்ல சொல்லுங்க. இந்த ஆனைமுடியான் வீரன்.—எதையும் இவன் நெஞ்சு தாங்கும்."

"தாங்கிக்கற விஷயமில்ல இது. தாக்கப்போற விஷயம்."

"எது என்னை தாக்க முடியும். நான் குபேரன், என் பணத்தாலயே கிழிச்சி கேப்பையை நட்டுடுவேன்."

"இந்த சித்தாப்பெல்லாம் மனுஷங்ககிட்ட செல்லுபடியாகும், கடவுள்கிட்ட ஆகாது."

"என்னன்னு சொல்லுங்க, பிறகு பாக்கலாம் ஆகறதையும் ஆகாததையும்..."

"உங்க ஆயுள் முடியப் போகுது..."-ஜோசியர் அப்படிச் சொல்லவும் அதுவரை நடந்த நடையில் அப்படியே உடைந்து நின்றார் ஆனைமுடியார்.

"என்ன சொல்றீங்க சாமி..."-சுரத்தில்லாமல் எதிர் கேள்வி கேட்கிறார்.

"எண்ணி ஆறுமாசம்... அதுக்குள்ற உங்க உடம்பை மண்ணோ நெருப்போ தின்னாகணும்..." ஜோசியரின் இந்த பதிலைத் தொடர்ந்து ஆனைமுடியார் மருகிப் போனாலும் அவரது அந்த ரத்த விம்பும், செருக்கும் அவரை மருகவிடாமல் கையைப் பிடித்து தூக்கி நிறுத்துகிறது. உதட்டில் கேள்வி.

''அப்படின்னு என் ஜாதகம் சொல்லுதா சாமி?'' ஜாதகம் மட்டுமா... சர்வ லட்சணங்களும்?''

''ஆறு மாசத்துக்கு மேலையும் தான் உசுரோடு இருந்து காட்டிட்டா...?''- ஆனைமுடியாரிடம் வீரா வேசம் வந்து முட்டும் கேள்வி...

''இந்த மாதிரி எதிர் கேள்விக்கெல்லாம் என்னிடம் பதில் கிடையாது. நான் சக்தி உபாசகன். என் வித்தை யால தெரிஞ்சதை சொல்றவன்.''

''இருக்கலாம் சாமி... ஜாதகம் ஜோசியம் எல்லாமே ஒரு அளவுக்கு தானே...உங்க வாக்குப்படியே எல்லாம் நடந்துட்டா இந்த உலகத்துக்கு கோயில் எதுக்கு...சாமி எதுக்கு?''

''நல்ல கேள்வி...ஆமா நீங்க ஜோசியத்துல நம்பிக்கை வெச்சு என்னை வரவழைச்சீங்களா, இல்லை ஆராய்ச்சி செய்யவா?''

''ரெண்டும்தான்னு வெச்சுக்குங்களேன். ஆமா என் மகனோட ஜாதகம் பத்தி ஒண்ணும் சொல்லலையே.''

''உங்களுக்கு முன்னாலேயே அது போய்ச் சேர்ந்திடும்...''

—ஜோசியரின் அந்த பதிலால் உறைந்தே போனார் ஆனைமுடியார். கஜபதிகூட தகித்து போனான். ஆனைமுடியார் பார்வை கஜபதி பக்கம் திரும்பியது.

இப்படி எல்லாம் எழவுச் சேதி சொல்பவனை எங்கிருந்துடா பிடித்து வந்தாய் என்கிற மாதிரி அக்கினிப் பார்வை பார்த்தது அது.

கஜபதி ஜோசியர் பக்கம் திரும்பினான்.

''என்ன சாமி நீங்க வந்ததுல இருந்து நாராச விஷயங்களையே பேசிகிட்டு. நல்ல விஷயமே கிடையாதா



உங்களை எவ்வளவு தூரத்துக்கு மதிச்சி கூப்பிட்டு வந்துருக்கேன் நான்...''

கோபமாய் சிணுங்கினான்.

''அதுக்காக பொய் பேசவா?''

''அப்படின்னா இதுதான் நிஜமா?''

''இது மட்டுமல்ல... இந்த பரம்பரை தொடர்புகள் அத்தனையும் வரும் சித்திரை பௌர்ணமிக்குள் அழிஞ்சாகணும். இந்த மாளிகைல தர்பப்புல் முளைச்சாகணும். எல்லாம் கர்ம விதி. எந்த மூலைக்கு ஓடினாலும் ஒளிஞ்சாலும் எமனின் பாசக்கயித்துல இருந்து தப்பிக்க முடியாது. அப்படி தப்பிச்சி இதே ராஜபோக வாழ்க்கை வாழ்ந்துட்டா நான் என் நாக்கை அறுத்து தட்டுல வெச்சு உங்க காலடியில் வெச்சுடறேன். இது என் அம்பாள் மேல ஆணை...''

—பேசிய ஜோசியர் காரைகூட எதிர்பார்க்காமல் விறுவிறு என்று நடந்து போயே போய்விட்டார்!

# 3

பூமிக்கு அறுபது டிகிரியில் கார்த்திகைபௌர்ணமி-மார்கழி மாதத்துக்கு தயாராகும் ஊசிப் பனி பௌர்ணமி வெளிச்சத்துடன் காதல் கொண்டு ஆயிரம் ஜன்னல் மாளிகை மேல் மழையெனப் பொழியும் நடுச்சாமம்.

தன் அந்தரங்க அறையில் மலைக்குடிச்சி முத்தும்ணியின் மேல் ஆனைமுடியார்! அவள் வியர்த்து விறுவிறுத்து

விட்டிருந்தாள். ஐம்பது வயதைக் கடந்த மனிதரா காமச் சமுத்திரத்தில் இப்படி நீந்துகிறார். வியந்து போனாள்.

அவரிடம் வழக்கத்துக்கு மாறான வேகம். பூப்போல பெண்களை கையாளுபவர் புலிபோல மாறிப் போயிருந் தார். மனதின் அடித்தட்டில் ஜோசியர் சொன்ன மரணச் சேதி...

''எண்ணி ஆறு மாசமாம்ல... இன்னும் அறுபது வருஷத்துக்கு இந்த ஆனைமுடியான் இருப்பான்.''- நிர்வாண மல்லாப்பில் உதட்டில் உக்ரமான புலம்பல்.

முத்துமணி மேலக்கை சரி செய்து கொண்டு அதைக் கேட்டு இலேசாக விதிர்த்தாள்.

''ஐயா என்ன இது ஏதேதோ புலம்பிகிட்டு...''

அவள் கேள்விக்கு அவரிடம் பதிலில்லை. மோட்டு வளை தேக்குத் தூணையும் அதில் சுற்றப்பட்டிருக்கும் ஊஞ்சல் சங்கிலியையுமே பார்த்தபடி கிடக்கிறார்.

களைப்பு...

அசாத்ய களைப்பு...

மனதில் உக்ரம் இழையும் களைப்பு.

முத்துமணிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

எழுந்து கொண்டாள்.

மெல்ல நழுவப் பார்த்தாள்.

அவர் கரம் தடுத்து இழுத்தது.

பக்கத்தில் விஸ்கி பாட்டிலும், மரவள்ளிக் கிழங்கு சிப்சும்!

எடுத்துக் கொடுக்கும்படி சைகை செய்தார்.



கண்ணாடி தம்ளரில் ஊற்றிக் கொடுத்தாள் முத்து மணி.

ஒரே உறிஞ்சு...அரை பாட்டில் இருபது வினாடியில் காலியானது.

மயக்கம் கண்மேல் ஏறி இமையைப் மூடப் பார்த்தது.

மூடியே விட்டது.

அப்பாடா...முத்துமணி வெளியே வந்தபோது தூக்கி வாரிப் போட்டது. வெளியே ஆனைமுடியாரின் மனைவி சந்திர சூடாமணி.

''அந்த ஆள் தூங்கறானா?''—அவள் குரலில் மரியாதை உதிர்ந்த கோபம்.

''ஆங்...தண்ணி அடிச்சிட்டு போதையா கிடக் காப்புல''—இது முத்துமணி.

''நீ முந்தி விரிக்க வந்தவளோ?''

—முத்துமணியிடம் மௌனம்.

''கேக்கேன்ல...''

''ஆமாம் தாயி, வயித்துப்பாடு.''

''உடம்பை வித்து உடம்பை வளர்த்து என்னத்தை பண்ணப் போறே? வயசாயிட்டா என்ன செய்வே...அப்ப என்ன பண்ணுவே?''

''தெரியலை.''

''முந்தி விரிக்க மட்டும் தெரியுதோ...முண்டமவளே.''

முத்துமணி பொங்கி அழத் தொடங்கினாள்.

''போதும் அழுவாதே நிறுத்து. பொட்டச்சிங்க அழுததாலதான் இந்த மாளிகை புரண்டு போனது.சாபம்

பிடிச்சு நடுங்க ஆரம்பிச்சிடுச்சு...நீ வேசியா இருந்தாலும் பொட்டச்சி. இங்க நின்னு அழுவாதே...''

''அம்மா நான் வேசியில்ல...''—அவளிடம் அழுகை பிரளும் பதில்.

''முந்தி விரிக்கறவளுக்கு வேற என்ன பேர்?'

''நா முந்தி விரிக்கதான் வந்தேன். ஆனா வேசியா இல்ல-அவர் சம்சாரமா''-முத்துமணி அப்படி சொல்லவும் ஆடிப்போனாள் சந்திரசூடாமணி.

''நாள் நட்சத்திரம் பார்த்து தாலி வாங்குன நான் தாண்டி அவர் சம்சாரம். நீ எப்படிடி...''-புலிபோல பாய்ந்தாள்.

''ஆனைமுடியாருக்கு முந்தி விரிச்சு கர்ப்பம் தரிச்சா அவர் என் கழுத்துல தாலி கட்டி பொண்டாட்டியாக்கிடும்னு கஜபதி சொன்னிச்சு...''

''யார் அந்த ஜால்ராப் பயலா...இப்ப எங்க அவன்''

''என்னை கொண்டு விட்டுட்டு வெளிய போயிடுச்சு.''

''சரி...இப்ப சொல்றேன் இனி நா உன்னை இந்த மாளிகைப் பக்கம் பாக்கக் கூடாது பாத்தேன் கொன்னுடுவேன். அந்த கஜபதிகிட்ட சாகவாசம் வெச்சே தெரியும் சேதி. மொத அவனுக்கொரு முடிவு கட்றேன்.''

—சந்திரசூடாமணியின் ஆவேசப் பேச்சைத் தொடர்ந்து அழுதுகொண்டே நடந்தாள் முத்துமணி.

சூடாமணியின் பார்வை உடனேயே உள்ளோடியது.

—ஆனைமுடியார் வேட்டி அவிழ்ந்ததுகூட தெரியாமல் மல்லாந்திருந்தார். பக்கம் சென்றாள். பட்டுப் புடவையின் அள்ளுக்கொசுவத்தின் ஜரிகை முந்தானையால் அவர் முகத்தை துடைத்தாள்.



''உன் குலத்திமிரே உன்னை கொண்டுகிட்டு போயிடப் போவுதுய்யா...கெஞ்ச பாவத்துக்குத்தான் ஒரு இரண்டும் கெட்டானை பெத்துட்டே ாமே-பாத்துமா புத்தி வரலை?''

—முனங்கியபடி நிமிர்ந்து திரும்பினாள். விஸ்கி பாட்டிலையும் சிப்சு தட்டையும் எடுத்து ஜன்னலுக்கு வெளியே எறிந்தாள்.

சிலுசிலு வென்ற பள்ளத்தாக்கு காற்று ஜன்னல் வழியாக பாய்ந்து அவள் முகத்தில் அடித்தது. இதமாக இருந்தது.

இருந்த போதிலும் அழுகையை அடக்க முடியவில்லை.

மகன் நிமித்தம் அது கூடிப்போனது.

'நடராசு...நடராசு...' என்று உதடு முனங்கியது.

எஸ்டேட் பங்களாவின் தனி அறையில் படுக்கை விரிப்பை எடுத்து தாவணி போல் சுற்றிக் கொண்டு அழகு பார்த்துக் கொண்டிருந்தான் நடராசு.

பக்கத்தில் கஜபதி.

''தம்பி உங்கய்யா உன்னை இந்த கோலத்துல பார்த்தா பெல்ட்டாலேயே வீரிடுவாரு.''—என்றான்.

ஏற்கனவே அதுபோல் வாங்கிய அடியின் காய்ப்புகள் உடம்பெங்கும். அதை வருடி விட்டபடி கஜபதியை கொனட்டலாக பார்த்தான்.

கஜபதி அதை பார்த்து சிரித்தான் உதட்டில் சகிப்பு.

''கடவுளோட திட்டமே எனக்கு புரிபடலை, நீ சுத்தமா அலியாயிட்டே! உன்னை எத்தனை நாளைக்கு

இப்படி பதுக்கி வெச்சு சொத்துபத்தை அனுபவிக்க முடியும்?

இப்பவே ஊருக்குள்ற பலவிதமா புரளி கிளம்ப ஆரம்பிச்சிடிச்சு...எனக்கென்னவோ இது நல்லதுக்குன்னு தோணலை. அந்த ஜோசியன் வேற குடும்பமே அழியப் போவுதுங்கறான். இதை அவர் எப்படி தடுக்கப் போறாப்பல?

கேள்வியோடு பங்களா வராண்டா பக்கம் வந்த கஜபதி எதார்த்தமாக எதிரே ஏலத் தோட்டத்தைப் பார்க்க அங்கே யாரோ பதுங்கியிருப்பதுபோல் ஒரு சலசலப்பு.

''ஆருவே அங்கன?''-குரலோடு பங்களா வராண்டாவை கடந்து வாசத்தோட்டம் பக்கம் வரவும் ஏலச் செடிகளின் சரிவான நிலப்பரப்பில் சலசலப்பு கூடவும் சரியாக இருந்தது

யாரோதான்...

ஏலத் தோட்டத்தில் திருட வந்தவனா? இல்லை பங்களாவை நோட்டமிட வந்தவனா?''-கஜபதி பதறிப் போய் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு ஏலச்செடிச் சரிவில் நுழைந்தான்.

காற்றுகூட நுழைய அனுமதி பெற்றாக வேண்டிய ஆனைமுடியாரின் எஸ்டேட்டில் எவன் இவன்?

ஏலச்செடிகள் நசுங்கிச் சிதைய, நடுநடுவே தலைப் பட்ட மருதமரத்து பட்சிகள் பயந்து சிறகு விரிக்க, விரிஞ்சிக் கொடிக்கூட்டம் ஒடும் கஜபதியின் கால்களை வளைத்துப் பிடிக்க தடுமாறி விழுந்த போதிலும் கஜபதி விடவில்லை.

விட்டால் யார் ஆனைமுடியாரிடம் சவுக்கடி படுவது?



சமயத்தில் உயிரே போய்விடுமே...

அங்கே போக வேண்டிய உயிர் இங்கே போகட்டும் என்று ஒரு கட்டத்தில் எகிறிப் பாய்ந்த கஜபதி சரியாக தப்பி ஓடப் பார்த்த அந்த உருவத்தின் மேல்தான்.

அந்த உருவமும் களைத்து அப்படியே அவன் பிடியில் பொட்டலமாய் அடங்கிவிட்டது.

அது யார் என்று உற்று நோக்கியபோது கஜபதிக்கு தூக்கி வாரிப்போட்டது.

பொன்னூஞ்சல் அம்மன் தேவஸ்தானத்து தர்ம கர்த்தா தங்கமுத்துத் தேவரின் ஒரே மகன் பொன்ராசு!

''பொன்ராசு நீயா...இதென்னவே திருடன் மாறி?''

பொன்ராசு மெளனிக்கிறான்.

''கேக்கேன்ல. சொல்லுவே.''

''கஜபதி என்னை மன்னிச்சுக்குவவே உன் கடவுளோட மகன் நடராசு அலியாயிட்டதா என் சினேகிதன் ஒருத்தன் பந்தயம் கட்னான். இருக்காதுன்னேன். சந்தேகமா இருந்தா எஸ்டேட் பங்களா பக்கம் போய் பாருன்னான். ஆயிரம் ரூவா பந்தயம்...அதான் நானே பாக்க வந்தேன். வெளியே கேட்டாண்ட உள்ள உட முடியாதுன்னாங்க. எனக்கு வேற வழி தெரியலை. அதான் திருட்டுத்தனமா...''

''இது கடவுளுக்கு தெரிஞ்சா என்ன நடக்கும் தெரியுமா?''

''தெரியும். எது நடந்தாலும் சரி...நான்தான் நடராசுவை பொட்டப் பயலா பாத்துட்டேனே...அதை ஊர் முழுக்க சொல்லுவேன்னு சொன்னா உன் கடவுள் என்னா செய்வார்?''

''பொன்ராசு கடவுள் பத்தி உனக்கு . தெரியாது. நீ இப்படி எகத்தாளமா பேசாதே. எதுவும் தெரியாத மாதிரி இப்படியே போயிடு. ஊருக்குள்ளறையும் வாயைத் திறக்காதே. பிற்பாடு உனக்குதான் ஆபத்து...''

''இனி உன் கடவுளுக்குத்தான் ஆபத்து. உன் கடவுள் இப்ப பண்ணிகிட்டிருக்கறது சட்டவிரோதம். சாப்டு கிட்டு பந்தா பண்ணிகிட்டிருக்கிறது ஊரோட கோவில் சொத்து. இப்பவும் நாளைக்கு ஒரு பொம்பளை, வேளைக்கு ஒரு வைப்பாட்டின்னு இருக்கற அந்த ஆளோட கொழுப்புக்கு இனி ஆணி அடிப்போம்...''

''பொன்ராசு நீ அதிகம் பேசறே. உன் பேர்ல இருக்கற அக்கரையில சொல்றேன். வாயை மூடிக்கோ.''

''இல்லாட்டி...?''

அடுத்த வினாடியே கஜபதியின் இடுப்பு பிச்சுவா இடம் மாறி பொன்ராசுவின் இடுப்பில் ஏறியது.

சிறுகுடல் பெருங்குடல் என்று சகலத்தையும் துளைத்து ரத்தத்தை குபுகுபுக்கவிட்டது!

மண் குழல் பைப்பில் கஞ்சாத் துளைபோட்டு மார்பில் புகையை நிரப்பி, வானில் ஏறத்தாழ ஐம்பது கிலோ மீட்டர் தூரம் வரை ஏறி அங்கிருந்து பூமியைப் பார்க்கின்ற மாதிரி ஒரு மிதப்பில் இருந்தார் ஆனைமுடியார்.

அறை முழுக்க கஞ்சாவின் வாடை.

அவரது தோட்டப் பயிர் ஏறத்தாழ பலகோடி லாபம் தரும் அவரது ஆசைப் பயிர்.

—இராணுவமே வந்தாலும் அவரது கஞ்சாத் தோட்டத்துக்குள் நுழைந்து அவைகளை தீண்ட முடியாது. அத்தனை ரகசியமான தோட்டம்...தோட்டத்துக்கும் பாதுகாப்பான அடியாட்கள் கூட்டம்.



அவரை கிரீடம் தரிக்காத ராஜா எனலாம்.

—ஆனால் எத்தனை நாளைக்கு?

—நடராசு தினமும் மிரட்டுகிறான். ஜோசியனோ ஆறுமாசம் தான் என்று கெடு விதித்துவிட்டான்.

ஆனைமுடியார் இந்த மாதிரி குழப்பான சமயங்களில் எல்லாம் சமய சஞ்சீவியாக கஞ்சாவை நாடிவிடுவார்.

அந்த புகை உணர்த்துவது என்ன?

இந்த வாழ்வும் புகைந்து போய்விடப் போகும் ஒரு விஷயமே. ஆனால் அந்த புகையைவிட இந்த புகையில் இன்பம் நிச்சயம் என்கிறதோ?

ஆனைமுடியாருக்குள்ளும் ஊசலாட்டம்-சிந்தனையோட்டம்,

அப்பொழுது பார்த்து எதிரே பொன்ராசுவின் சடலத்தை கிடத்திவிட்டு கைகளை கட்டிக்கொண்டு நிமிர்ந்தான் கஜபதி.

''கடவுளே ரொம்ப நாளைக்கு பிறகு பிச்சுவாக்கு பசி வந்துடிச்சு. அதான் பொன்ராசுவை கொன்னுடிச்சு''-என்றபடி சுவரில் ஊன்றினான்.

அவர் கலக்கமேயில்லாமல் கஜபதியை பார்த்தார்.

''பய நடராசுவை பார்க்க எஸ்டேட் பக்கம் வந்தான், பாத்து விட்டான்! நானும் பாத்து பிடிச்சேன். எகத்தாளமா பேசினான். நடராசு அலின்னு ஊர்ப்பிரகடனம் செஞ்சு உங்களை ஆண்டியாக்குவேன்னெல்லாம் பேசினான், எனக்கு வேற வழி தெரியலை.

சரி போடா பரலோகத்துக்குன்னு அனுப்பிட்டேன்.

உடம்பை முதலைக் குளத்துல போட்டுட்றேன். துப்பு ஒரு மண்ணும் கிடைக்காது. நம்ம முதலைகளுக்கும் காட்டுப் பசி.

—ஆனா ஒண்ணு மட்டும் சொல்லிக்கிறேன்.

—நடராசு அலி இல்லேன்னு நிரூபிக்காட்டி காலம் தள்றது கஷ்டம். அதை பொன்ராசு சொல்லாம சொல்லிட்டான். என்ன செய்யலாம்னு யோசிச்சு வையுங்க.

ஒருத்தன் தனியா வந்தான் குத்த முடிஞ்சுச்சு.

ஊரே சேர்ந்து வந்தா?''

கஜபதி பேசிவிட்டு சடலத்தை நோக்கி திரும்பி தோளுக்கு ஏற்றினான். நடக்க ஆரம்பித்தான்.

ஆனைமுடியார் கஞ்சா புகையாலும் ஒருமையடைய முடியாமல் கலைய ஆரம்பித்தார். கனக்க தொடங்கியது மனது. கலவரம் மழையாக கொட்டி வெள்ளமாக ஓடியது. ஆனால் அதற்கு நடுவிலும் ஒரு முடிவுக்கு அவரால் வர முடிந்ததுதான் ஆச்சர்யம்.

# 4

''மாட்டேன்—இந்த அநியாயத்துக்கு நான் ஒருக்காலும் சம்மதிக்கமாட்டேன்...''அலறினாள் முத்துமணி.

''எது அநியாயம்? ஆனைமுடியார் மகனை கட்டிக்கறது அநியாயமா?'' இது கஜபதி.

''அது அநியாயமில்லாம வேற என்ன? தேவருக்கு முந்தி விரிச்சுட்டு அவர் மகனுக்கு வாழ்க்கை பட்றதுங்கறது கேட்டிலையும் பெரிய கேடாச்சே...''



''தோ பாரு...நீ ஒரு சாதாரண மலைக்குடிச்சி. அன்றாடங் காய்ச்சி. வர்ற சீதேவியை இப்படி ஏதாவது பேசி விரட்டாதே. சொன்ன பேச்சை கேளு.''

''முடியாது... இதுக்கு நான் மலையில இருந்து குதிச்சு செத்துப் போயிடுவேன்...''

''அப்ப முதல்ல அதைச் செய். ஆனா ஒண்ணு...நீ இல்லாட்டி வேற யாரும் கிடைக்காம போயிடுவாங்கனு நினைக்காதே. நாங்க நினைக்கறதை சாதிக்காம விட மாட்டோம்.''

''ஐய்யோ இது கடவுளுக்கே அடுக்காது...''

''ஒருத்திக்கு வாழ்க்கை கொடுக்கறது அடுக்காத செயலா?''

''நா ஒரு சாதாரண மலைக்குடிச்சி பிச்சைக்காரி, உங்க கடவுளோ குபேரன். அவர் அந்தஸ்துக்கு மிராசு ஜமீன்னு பாக்காம ஏன் இந்த பிச்சைக்காரிகிட்ட, அதுலையும் கெட்டழிஞ்சு நிக்கறவ கிட்ட வர்றீங்க...?''

''எல்லாம் காரணமாதான்.''

''என்னா காரணம்.''

''கல்யாணம் பண்ணிக்கோ தானா புரியும்.''

''இல்ல எனக்கு முன்னாலயே தெரிஞ்சாகணும்.''

''சரி சொல்றேன். கடவுளோட குடும்ப சாபம் பத்தி கேள்வி பட்டிருக்கியா?''

''அரசப் புரசலா...''

''என்ன அது?''

''அவங்க வம்சத்துல அலிப்பிள்ளைங்க பிறந்து வம்சம் விளங்காம போகும்னு...''

''அப்புறம்...?''

"அப்படி விளங்காம போற கடைசி வம்சம் எதுவோ அதுங்கிட்ட இருந்து சொத்துக்களை எல்லாம் பொன்னூஞ்சல் அம்மன் கோவில் எடுத்துக்கிட்டு..."

"ஓரளவு சரியாவே தெரிஞ்சு வெச்சிருக்கே. ஆமா இந்த அலிப்பிள்ளைங்க ஏன் பிறக்கறாங்கன்னு தெரியுமா?"

"ஏதோ சாபம்னு..."

"அதான் என்ன?"

"எங்க சாதி பெண் ஒருத்தியை ஆனைமுடியார் கொள்ளுத் தாத்தா கெடுத்து தாயாக்கிட்டாராம். அவ கர்ப்ப வயிற்றோட பொன்னூஞ்சல் அம்மன் கோயில்ல தீக்குளிச்சுட்டாளாம்.

அப்படி தீக்குளிக்கையில் அவவிட்ட சாபம்தான் அலிப் பிள்ளைங்க பிறக்க காரணம்னு..."

"சரியாச் சொன்னே... அதான் கடவுள் ஒரு முடிவு பண்ணி மலைக்குடிச்சியான உன்னையே மருமகளா ஏத்துக்க முடிவு பண்ணக் காரணம்! எந்த மலைக்குடி பெண்ணால இந்த சாபம் வந்ததோ அதே இனத்து பெண்ணால இது போகனும்னு அவர் விரும்பறாரு..."

"அப்படின்னா நல்ல பொண்ணே சிக்குமே. ஏன் என் தங்கச்சியை கட்டட்டுமே..."

"உனக்கு ஒரு தங்கச்சியா...நீ சொல்லவேயில்லையே?"

"ஏன் அவளையும் என்னை மாதிரி உங்க கடவுள் கூட்டி போய் சீரழிக்கவா?"

"முத்துமணி புரியாம பேசாதே. இப்ப எங்க உன் தங்கச்சி?"

"கம்பம் காட்டுல மூங்கில் வெட்டிக்கிட்டிருக்கா."



"உனக்கு எஸ்டேட் பங்களா தெரியுமா?"

"தெரியும்."

"அவளை அங்க கூட்டிக்கிட்டு வா..."

"வரேன்...ஆனா ஒரு விஷயம்!"

"என்ன?"

'அது என் உசிரு. அத நல்லா வாழ வெச்சுப்பாக்கறது தான் என் நோக்கம். அதனாலதான் என் புருஷன் செத்து நான் முண்டச்சிஆன பிறகும்கூட உங்க கடவுளுக்கு முந்தி விரிச்சேன். என்னையே வித்தேன். அது கல்யாண செலவுக்குத்தான் காசு சேத்துகிட்டு வரேன். அது நல்லா வாழாட்டி நான் கொலைகாரியாயிடுவேன்."

"பைத்தியக்காரி...அது மட்டுமில்ல நீயும் இனி நல்லா இருப்பே. போய் அவளை அழைச்சுகிட்டு வா..."

"ஆமா...ஆனைமுடியார் மகன் நடராசுவை சமீபமா பார்க்கவே முடியல்லியே...எங்க அது?"

"அது எஸ்டேட்லதான் இருக்கு. அதுக்கு கடவுளோட சொத்தை காபந்து பண்ணவே நேரம் சரியா இருக்கு எங்க வெளிய வர?"

"ஆமா அதுக்கு என் தங்கச்சியை கட்ட இஷ்டமா?"

"அதுக்குன்னு தனி இஷ்டமே கிடையாது. எல்லாம் கடவுள் விருப்பம்தான்."

"உன் பேச்சை நான் நம்பலாமா?"

கஜபதி உடனே அவள் தலையில் அடித்து சத்தியம் செய்தான். அவள் நம்பத் தொடங்கினாள். உடனேயே அங்கிருந்தும் கிளம்பினாள்.

கிளம்பும்போது கஜபதி கேட்டான்.

''ஆமா உன் தங்கச்சி பேர் என்ன?''

''ராஜாத்தி''

''அவ இனிமே நிஜமாலுமே ராஜாத்திதான்...'' கஜபதி குரலில் உற்சாகம். முத்துமணி அங்கிருந்து அகலவும் கஜபதி நேராக ஆனைமுடியாரைத் தேடிப் போய் நின்றான்.

''கடவுளே உங்க எண்ணப்படியே ஆளை தயார் பண்ணிட்டேன். கல்யாணத்துக்கு நாள் குறிக்க வேண்டியதுதான் பாக்கி. அதுக்கு முந்தி நடராசுவை அழைச்சுகிட்டு ஊருக்குள்ள ஒரு ரவுண்டு போய் வந்திடவா?''

ஆனைமுடியார் சிரம் ஆமோதிப்பாய் இழைந்தது. மெல்ல இதழும் பிரிந்தது.

''ஊருக்குள்ள போய் வரையில அவன் அலித்தனம் பண்ணாம பாத்துக்கோ...அப்படி பாத்துக்க முடியுமா?''

''பாத்துக்கறேன் கடவுளே. ஒரு வேட்டைத் துப்பாக்கியை கைல கொடுத்து கூலிங்க்ளாஸ், தொப்பின்னு போட்டு இழுத்துகிட்டு போய்ட்டு வரேன். எதாவது கோனஷ்டை பண்ணாகூட அவ்வளவா தெரியாது. இப்படி போய் போய் வரலேன்னா பயல அடைச்சு வெச்சுருக்கோம்னு ஒரு தினுசா பேசறபேச்சு ஊர்ஜிதமாயிடும்.''

''பார்த்து செய் கெஜா.''

—பெரிதாக தலையாட்டிவிட்டு அங்கிருந்து கிளம்பினான் கஜபதி. கால்கள் எஸ்டேட் பங்களா நோக்கி நடந்தது.

பங்களாவின் வாசலில் கூரை இல்லாத அழகான மாருதி ஜீப்.



உள்ளே ஜீன்ஸ் பேண்ட். ஜெர்க்கின் என்று அமர்க்களமான உடையில் நடராசு.

''மாமு எனக்கு இந்த உடுப்பெல்லாம் பிடிக்கலை...' என்று அபிநயம் பிடித்து எதிரே வந்த கஜபதியை தள்ளிவிட்டான் நடராசு.

''டேய் பொட்டப்பயலே பேசாம இரு. நான் சொல்றமாதிரி கேக்கணும். நாம இப்போ ஊருக்குள்ள போய் வரப்போறோம் ஜீப்பை நீ ஓட்றியா. இல்லை நான் ஓட்டவா?''

''நானே ஓட்றேன்...நானே ஓட்றேன்...''

''ஒழுங்கா ஓட்டுவியா?''

''ஏன் ஓட்டாம...?''-அநியாயத்துக்கு அவன் குரலில் ஒரு இழுவை.

''ஆமா ஆம்பளையாத்தானே பொறந்தே. உனக்கு ஆம்பளையா இருக்க இஷ்டமில்லையா?''

''என்னால முடியலையே...''

''பொம்பளை மாதிரி நடந்துகிட்டா ஊர் உலகம் சிரிக்கும்டா. எத்தனை தடவை சொல்லியிருப்பேன். உங்கப்பாவுக்கும் சொத்து கைவிட்டு போயிடும்.''

''நான் என் இஷ்டத்துக்கு இருக்கறதுனால எங்கப்பா சொத்து போகுமா? ஆச்சரியமா இருக்கே...''

''டேய் நீ உன் இஷ்டத்துக்கு ஆடு பாடு...ஆயிரம் வைப்பாட்டி கூட வெச்சுக்கோ. ஆனா இந்த அரைகுறை ஆண்பிள்ளைத்தனம் வேணாம். உங்கப்பாவைப் பாத்தியா இப்பகூட தினம் ஒரு பெண்ணை அனுபவிக்கிறாரு. தெரியுமா...''

''அது எப்படி?''

''உனக்கு கல்யாணம் நடந்து நீ புரிஞ்சா நல்லது. இப்போ நீ ஆம்பளையா லட்சணமா என்கூட வரே. பொட்டைத்தனம் பண்ணே கொன்னுடுவேன்.''

''சரி...''

—இருவரும் வெளிக் கிளம்ப நளினமாக நடந்த நடராசு ஜீப்பையும் அதே நளினத்தோடு கிளப்ப தலையில் அடித்துக் கொண்டான் கஜபதி.

''எங்கையும் நிக்கக்கூடாது...யாரையும் பார்த்து சிரிக்கக் கூடாது. ஒரு பிடி பிடி பாப்போம்...''

—ஜீப் சீறத் தொடங்கியது. கஜபதியிடம் பெருமூச்சு. ஜீப் ஊருக்குள் நுழைந்தது. கஜபதி கைகாட்டும் திக்கெல்லாம் நுழைந்து திரும்பியது.

பலரும் பார்த்து ஆச்சரியப்பட்டனர்.

''ஆரு...நம்ம ஆனைமுடியார் மகன் நடராசுவா?''-என்று கேட்டு வியந்தனர்.

''இவ்ளோ நாள் எங்க போயிருந்தான். இப்ப இப்படி துரைகணக்கா வளைய வர்றானே...?''

''இவனும் அலிப் பயலாயிட்டான்னு பேச்சுவந்திச்சு. இவன் என்னடான்னா ஜீப்பை இந்த பிடி பிடிக்கறானே...''

—இப்படி பலவிதமான கருத்துக்கள். ஒரு வழியாக ஜீப்பை பள்ளத்தாக்கின் வனாந்திரத்தில் உள்ள பொன்னூஞ்சல் அம்மன் கோவில் அருகே கொண்டு நிறுத்தினான் நடராசு.

கோவிலுக்கு வெளியே தங்கமுத்து தேவர்!

அவர் முகத்தில் அப்பி எடுத்த சோகம். அவரைப் பார்க்கவும் கஜபதிக்கு திரடியது. ஜீப்பில் தென்பட்ட



நடராசுவை பார்த்து செயற்கையாக சிரித்தபடி ஜீப்பை நெருங்கினார்.

''வாங்க தங்கமுத்து எங்க இவ்ளோ தூரம்?''

—கஜபதியிடம் குசலம்.

''என் மகன் பொன்ராசுவை நாலு நாளா காணலை கஜபதி. எங்க போனான் என்ன ஆனான்னே தெரியலை. அதான் ஆத்தாளை பார்த்து சொல்லிபிட்டுபோகலாம்னு வந்தேன்...''

—உடைந்த குரலில் பதில் வந்தது தங்கமுத்து தேவரிடம். கஜபதி அந்த விசனம் முன் நிலைகுலைந்து போனான்.

12 அடி நீள முதலை ஒன்று பொன்ராசுவை கவ்வி இழுத்து தன் பசியாற்றிக் கொண்ட காட்சி உடனேயே மனக் கண்ணில் ஓடியது.

தங்கமுத்து தேவர் நடராசுவை அந்த நிலையிலும் ஊன்றி பார்த்தார்.

''ஆரு ஆனைமுடியார் மவனா?''-என்று கேட்டார்.

''ஆமாமா...சின்ன எஜமானேதான்''

''ஆனைமுடியார் கொடுத்து வெச்சவர். அதான் அவர் வம்சத்துல இந்த புள்ளை வந்து பொறந்து சொத்தையும் விளங்க வெச்சுட்டான். 'போன நூற்றாண்டுச் சாபம் இவன் தாத்தா தலைமுறையோட போயிருச்சோ என்னவோ?''

''இந்த சாபம் கீபம்லாம் நம்பறமாதிரி சமாச்சாரமா என்ன? சாட்லைட் யுகம் தேவரே இது...''—கஜபதி

பேசின வேகத்தில் நடராசு பக்கம் திரும்ப அவனும் புரிந்து கொண்டு ஜீப்பை கிளப்பினான்.

கஜபதியிடம் பெருமூச்சு...

''அப்பாடாரா...'' ஜீப் சீறி வளைய கஜபதியின் மார்பு ஜீன்ஸ் மாதிரி ஏறி இறங்குகிறது.

திடீரென்று நடராசு ஜீப்பை திரும்பவும் கோவில் பக்கமே திருப்பினான்.

''என்ன நடராசு...ஏன் ஜீப்பை திருப்புறே?''

''எனக்கென்னவோ ஆத்தாளை கும்புடணும்னு தோணுது.''

''எலே...ஆத்தாளை வீட்ல கும்பிட்டுக்கடா...''

''வீடும் கோயிலும் ஒண்ணாயிடுமான்ன...?''— கேள்வி கேட்ட வேகத்தில் ஜீப் வளைந்து கோவில் வாசலில் வந்து திரும்பி நிற்க தங்கமுத்து தேவர் அப்பொழுது தான் சில தப்படிகள் போட்டிருந்தார். அவரும் ஜீப் திரும்பி வந்தது பார்த்து என்னவோ ஏதொவென்று தானும் திரும்பி வரத் தொடங்கினார்.

—கஜபதி உடம்பில் பூரான்கள் ஓடத் தொடங்கின.

''நடராசு நீ ஜீப்பை விட்டு இறங்கக் கூடாது. அப்படியே உக்காந்து கோபுரத்தை பார்த்து கும்பிட்டுக்க. இறங்குனே தெரியும் சேதி...''

''அட போ மாமு...'' என்று அலட்சியமாக பேசி விட்டு இறங்கினான் நடராசு. பெண்பிள்ளை நடை நடந்தான். கோவில்படி ஏறினான்.

வந்திருக்கும் பக்தர் கூட்டத்தில் சிலர் புருவங்களில் கொக்கி விழுந்தது. தங்கமுத்துவுக்கு நடுமுதுகில் பனித் துண்டு கரைவது போல் ஒரு உணர்ச்சி.



கோவிலுக்குள் நுழைந்தவன் கம்பீரமான அன்னையை பார்த்தான். 'சிம்ம வாகினியாய் திரிசூல தேவதையாய் பதினாறு கரத்தவளாய் விஸ்வரூபம் காட்டும் தேவி' சிறிய தங்கத்தால் ஆன பொன்னூஞ்சலில் அமர்ந்தபடி அருள் பாலித்துக் கொண்டிருந்தாள்.

அந்த பொன்னூஞ்சல் மெலிதாக ஆடிக்கொண்டிருந்தது.

நடராசுவின் மனது ஓடிப்போய் அவள் பாதங்களில் விழுந்தது. தன் அருகாமை பீடத்து மேல் சிதறிக் கிடக்கும் குங்குமத்தை எடுத்து லாவகமாக நெற்றியில் வட்டமாக இட்டுக் கொண்டான். திடீரென்று சாஷ்டாங்கமாக ஆண் பிள்ளைகள் விழுந்து வணங்குவதுபோல் வணங்காமல் மண்டியிட்டு பெண்பிள்ளைகளைப்போல் வணங்கினான்.

இதற்குள் கோயில் பூசாரி ஓடி வந்தார்.

குரலில் பதறினார்.

''ஆரு சின்ன எஜமானா...? என்ன இது...ஒரு அறிவிப்பு கூட இல்லாம இப்படி திடுதிப்புன்னு...'' என்று நடராசுவின் எதிரே வந்து கை கூப்பினார்

''அப்பு எங்க வெளியே விடுது...ஏதோ அதிசயமா இன்னிக்கு கஜபதி இழுத்துகிட்டு வந்துச்சு...'' என்று நடராசு நெளிந்தான். குரலில் பெண்மைப் பூச்சு.

தங்கமுத்து தேவர் இப்பொழுது சன்னதிக்குள் இவர்களை சமீபத்து விட்டிருந்தார்.

நடராசு அருகில் வந்து நின்று கொண்டார்.

கஜபதி திணறத் தொடங்கினான்.

''எலே பூசாரி போய் பரிவட்டம் எடுத்து வா. கோயில் மரியாதை எல்லாம் நடக்கட்டும். இது அவங்க கோயிலு தெரியும்ல...'' என்றார் அதட்டலான குரலில்.

''பூசாரி... பூசாரி... அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். நாங்க கிளம்பறோம்.'' —கஜபதி துளியும் தாமதிக்காமல் நடராசுவை பிடித்து இழுத்துச் செல்ல தொடங்கினான்.

ஜீப்பில் அவனை அள்ளி எறிந்து தானே ஜீப்பையும் கிளப்பினான்.

புழுதிக் கவளங்களை சுருட்டிப் புரட்டியபடி ஜீப் சீறத் தொடங்கியது.

கோவிலில் தங்கமுத்து தேவர் வாய் பிளந்திருந்தார். பூசாரியை பார்த்து கேட்டார்.

''எலேய் உனக்கு நடராசுவை பார்த்தா என்னா தோணுது?''

''என்னன்னு சொல்ல...இதுக்கும் பாவம் அந்தஇரண்டும் கெட்டதனம் வர ஆரம்பிச்சிடிச்சுன்னு தோணுது...''

''என் நினைப்பும் அதான். ஆணைமுடியார் பரம்பரை அவர் மட்டு தப்பிடிச்சுன்னு நினைச்சேன். தப்பாது போல தெரியுதே. நமக்கு வேலை வெச்சிடுவார் போல தோணுது.''

''எல்லாம் ஆத்தா சித்தம் தேவரய்யா. அவ நினைப்பை யார் கண்டுபிடிக்க முடியும்?''

—வாஸ்தவம்தான் என்கிற மாதிரி பூடகச் சிரிப்பில்

—பொன்னூஞ்சல் அம்மன்.

# 5

ஆலயத்தின் அலுவலக அறையை எட்டுகின்றன தங்கமுத்து தேவரின் கால்கள்.

உள்ளே ஆலயச் சொத்தாக பல தேக்கு பீரோக்கள்.

ஒரு பீரோவைத் திறந்து ஃபைல் ஒன்றை வெளியே எடுக்கிறார். அதில் ஜெராக்ஸ் எடுக்கப்பட்ட பழைய உயில் ஒன்றின் காப்பி.

பக்கங்களை புரட்டுகிறார்...

நடுவே தாமிரபட்டயம் ஒன்றும் புதைபுகைப்படமாய் எழுத்து அந்த புகைப்படத்தை ஜெராக்ஸ் எடுத்த பிரதியுமாய் ஒரு தாள் பளிச்சிடுகிறது.

அந்த பட்டயச் செய்தியில் கண்கள் நுழைகின்றன.

ஏறத்தாழ இரு நூறு வருஷத்துக்கு முந்தைய அல்லது அதை ஒட்டிய காலத்து செய்தி.

தமிழிலும் கூட வழக்கில் இல்லாத சொற்கள்.

ஒண்டிப்புலியானின் சாசன அறிக்கை என்று ஆரம்பிக்கிறது அது...

'அடியேன் மகாபெரிய பாபியானதால் என் வம்சம் மலைக்குடியாள் சாபத்தால் பட்டுப் போகுமோ என அஞ்சுகிறேன். மலைக் குடியாள் சாபப்படி என் வாரிசுகளும் தழைக்கவில்லை. ஒன்று மட்டும் தழைத்துவிட்டது. கலியுகத்தில் ஏதாகிலும் அது கண்ணுக்கெதிரே என்பதாக சாஸ்த்ரோத்தமர்கள் சொல்லக் கேட்டும் அதை எனது

மூச்சுப்பாட்டில் ருசுப்படுத்தியும் கொண்டுவிட்டபடியால் பரிகாரம் குறித்து மனது நிந்திக்கின்றது.

—பொன்னூஞ்சல் அன்னை லோக சக்தியாவாள். அந்த அகிலாண்ட நாயகியே சகலமும் என்பதாக என் அந்தராத்மா உணர்ச்சி கொண்டு விட்டது.

அதன் நிமித்தம் எனது சொத்துபத்து, காடு, வயல், கழனி, வகையறாக்கள் தோட்டம் துரவு, கேணி, மனை, சொச்சங்கள், எனது வம்சம் முடங்கும்போது தேவியை சேரவேண்டும் என்றும் சேர்ந்தே தீரவேண்டும் என்றும் விக்ஞாபிக்கிறேன்.

அவள் கருணையால் என் வம்சம் தழைக்குமாயின் அவள் என்னை மன்னித்ததாக கொள்க. வம்சத்தை முடக்கி சகலத்தையும் கைக்கொள்ளும் நாளை அவளே அறிவாள்.

அநுகாரும் மேற்படியாளின் திருவிழாக் கைங்கரியங்கள் எனது பரம்பரையாரால் நடப்பதாகட்டும்.

—ஒண்டிப்புலியான்

—தாமிரப்பட்டயத்தைத் தொடர்ந்து உயில்தாளை எடுத்து வாசிக்கத் தொடங்கினார் தங்கமுத்து தேவர்.

ஒவ்வொரு தலைமுறையின்போதும் திருத்தித் திருத்தி ஊர் மக்கள் முன்னிலையிலும் பெரியவர்கள் முன்னாலும் சட்டச் சிக்கல் வராதபடி எழுதப்பட்ட உயில் ஷரத்து...

ஆனைமுடியாருக்கு நடராசன் பிறந்து அவனுக்கு பெயர்ச்சூட்டு விழா நடந்தபோது வக்கீல் உட்பட சகலரையும் வைத்துக் கொண்டு எழுதப்பட்ட உயில். ஏறத்தாழ பதினெட்டு வருஷத்துக்கு முந்திய காகிதம்...

தங்கமுத்துவும் அப்பொழுது ஊர் மக்களில் ஒருவராக அமர்ந்து இருந்தபடியால் அதை வாசிக்கவே தேவை

27851



இல்லாதபடிக்கு மனது அந்த பழைய விஷயங்களை நினைத்துப் பார்க்கிறது.

'ஆனைமுடியார் வாரிசு விருத்தி செய்து வம்சம் விளங்கச் செய்தபடியால் சகல சொத்துக்களும் அவரது ஆளுகைக்கும் உரிமைக்கும் உரியதாகிறது.

அவரது மகனாகிய நடராசனும் அப்பனைப் போலவே தனது கல்யாணத்துக்கு பின் வாரிசு விருத்தி செய்து வம்சம் நிலைக்கச் செய்ய வேண்டும். வாரிசுதாரர் இதை தன் முப்பது வயதுக்குள் செய்தாக வேண்டும்.

அல்லாதபட்சத்தில் அவருடன் வம்சம் முடங்குவதாக ஊர்ஜிதம் செய்து சொத்துக்களை முன்னோர் ஆக்ஞையின்படி உயில் ஷரத்துக்கள்படி பொன்னூஞ்சல் அம்மன் தேவஸ்தானம் கைக்கொள்ளும்.

அதன்பின் தேவஸ்தானம் விரும்பி அளிக்கும் மான்யத்தில் வாரிசுதாரர்கள் ஜீவிக்க இந்த உயில் ஷரத்து ஆவன செய்கிறது.

—தங்கமுத்துத் தேவர் உயில் ஷரத்தை நினைத்துப் பார்க்கிறார்.

நடராசுக்கு இன்னும் இருபது வயது கூட ஆகவில்லை. அவனுக்கு இன்னும் பத்து வருஷ சந்தர்ப்பம் உள்ளது. அதற்கு முன்பே அவன் ஆண்மகன் இல்லை என்பது ஊர்ஜிதமானால் உடனடியாக ஊர் கூடி உயிலை மாற்றி எழுதியாக வேண்டியது முக்கியம். அப்படி ஆகிவிடுமா? நடராசுதான் ஒரு அலிப்பிள்ளை என்பதை ஊரறியக் காட்ட ஆனைமுடியார் விடுவாரா?

தங்கமுத்துத் தேவர் நெடுநேரம் யோசிக்கிறார். ஆனைமுடியாரின் அழுகுணி உள்ளம் பற்றி நன்றாகத் தெரியும் தேவருக்கு.

ஏன் ஊருக்கே அது நன்றாகத் தெரியும்.

ஆயிரம் சொத்து பத்து இருந்தும் மனிதர் களவுத் தொழிலிலும் கை தேர்த்தவராக இருக்கிறார். கஞ்சா, பயிர், யானை வேட்டை, சந்தனமரக் கடத்தல் என்று சகலத்திலும் முடிந்த போதெல்லாம் ஒரு கை பார்த்து வருபவர்.

சட்டமும் போலீசும் இதுவரை அவருக்கு சலாமிட்டதாகத்தான் சரித்திரம்

சினிமாவில் வேண்டுமானால் நேர்மையான போலீசை கற்பனையில் சந்திக்கலாம். நிஜத்தில் அவர்களை பாக்கெட் பண்ணுவதில் ஆனைமுடியார் அபார தந்திரக்காரரர்.

ஆள் பலம், பண பலம் என்று அரசராதிக்கம் செய்து வருபவர். இவர் நடராசுவை அலி என்று ஒப்புக்கொண்டு கோயிலுக்கு சொத்தை விட்டுத் தருவாரா என்ன?

அதற்குள்ளாகவே இருக்கிற சொத்தை எல்லாம் விற்று காசு பணமாக்கி எங்காவது பதுக்கி விட்டு ஐந்து பத்து ஏக்கர் மட்டுமே தனது சொத்து என்று காட்டி கோயிலையும் ஊரையும் ஏமாற்ற மாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது...

தங்கமுத்து தேவரிடம் எண்ணம் குதிரைப்பாய்ச்சல் எடுத்துக் கொண்டிருந்தது. பூசாரி வந்து நிமிண்டினார்.

''தேவரய்யா...ஏதோ யோசனையில் மூழ்கிட்டாப்பல...''

''எல்லாம் ஆனைமுடியார் பத்தித்தான்...''

''நடராசுவை பாத்ததுல இருந்தே நானும் அவர் நினைப்பாதான் இருக்கேன். அவுக பரம்பரைக்கே நடராசுதான் முற்றுப்புள்ளி. இவனும் அலியாகி பரம்பரை முடங்கிருச்சுன்னா சொத்துபத்தெல்லாம் கோவிலுக்கு வந்தாகணுமில்ல...''



''சட்டப்படி வந்தாகணும். அவுக பெரியவங்க ஆசைப்படி உயில்படி அப்படித்தான் நடந்தாகணும். ஆனா பல கோடி ரூபா சொத்தை ஆனைமுடியார் அத்தனை சுலபத்துல விட்டுத் தருவாருன்னு தோணலை—''

''எதைவெச்சு சொல்றீங்க தேவரய்யா...''

''ஆனைமுடியான் அடிப்படையில ஒரு சண்டியன். காசுக்காக கொலையும் செய்யறவன். நடராசு விஷயத்துல எப்படி நடந்துக்குவான்னு போகப் போகத்தான் தெரியும்.''

''அது சரி...நடராசு அலின்னு முடிவே பண்ணிட்டீங்களா?''

''ஏறத்தாழ அப்படித்தான்... இன்னிக்கு வேணுமின்னா ஆனைமுடியான் மூடி மறைச்சு ஊரையும் ஏமாத்தலாம். ஆனா எத்தனை வருஷம் செய்ய முடியும். அதிகபட்சம் இன்னும் பத்து வருஷம். அதுக்குள்ள அந்த நடராசு பிள்ளை பெத்து காட்டியாகணும். இல்லேன்னா தொலைஞ்சது சொத்து...''

''அது என்ன பத்து வருஷம் கணக்கு...''

''உயில்ல அவங்க பெரியவங்க முப்பது வயசுக்குள்ற பிள்ளை பெத்து வம்சத்தை வளத்து காட்டணும்கற மரியாதை எழுதியிருக்காங்க. அதை வெச்சு சொன்னேன். இப்ப இருந்தா அந்த நடராசு பயலுக்கு இருபது வயசிருக்கும்.''

''முப்பது வயசுக்கு மேல பிள்ளை பெத்துகிட்டா... ஐம்பது வயசுல பிள்ளை பெத்துகிட்ட ஆசாமியெல்லாம் உண்டே தேவரய்யா...''

''பூசாரி... அவங்க பெரியவங்க ஏதோ காரணத்தோட தான் அப்படி எழுதி வெச்சிருக்காங்க. அதோட

குடும்பமே கோயிலை நம்பி பிழைக்கிற மாதிரிதான் உயிலோட சாராம்சம் போகுது.''

''ஒருக்கால் தன் சந்ததி தப்புத் தண்டாவை மேலும் பண்ணி, குலப்பேரை இன்னும் ரிப்பேர் ஆக்கிட்டா என்ன பண்றதுன்னு முன்கூட்டியே ஊகிச்சுதான் இப்படி உயில்ல கட்டிப்போட்டிருக்காங்களோ என்னவோ?''

''அட உயிலுக்காக போலியா பக்தி செலுத்தினா என்ன பண்ணறது. ஆனைமுடியாரை ஒண்ணும் ஆத்தாளோட ஆத்ம பக்தர்னு சொல்ல முடியாதே...''

''வாஸ்தவம்தான். இருந்தாலும் அவரை இந்த உயில் தானே கட்டிப் போட்டிருக்கு. இப்ப இந்த உயில் மட்டும் இல்லேன்னா மனுஷன் இன்னமும்ல பயமில்லாம அட்ட காசம் பண்ணுவார்?

ஊர்னு ஒண்ணைக் கண்டு பயப்படுவாரா?

ஊருல்ல அவரைக் கண்டு பயப்பட்டாகணும்.

ஆனைக்கேத்த அங்குசம் மாதிரி ஆளுக்கேத்த உயிலைத்தான் இவுக கொள்ளுத்தாத்தா உருவாக்கி இருக்காரு.''

''பாப்போம்... ஆனைமுடியார் என்ன பண்ணப் போறாருன்னு...''

''அது சரி... இந்த அலிப்பிள்ளைங்க உருவாகற அந்த சாபம் பத்தி உங்களுக்கு தெரியுமா? நம்ம ஆத்தாளோட சக்திதான் சாபமா நின்னு பலிச்சுக்கிட்டு வர்ரதா என் தாத்தா சொல்லுவாரு. அது எந்த அளவு உண்மை...ஆத் தாளுக்கு அருள் பண்ணித்தானே பழக்கம். சாபம் கொடுத்துமா பழக்கம்?''



''நல்ல கேள்வி பூசாரி நீ கேட்டது...நம்ம ஆத் தாளை கண்டு ஊரே பயப்பட அந்த சாபமும் ஒரு காரணம். இவ நல்லவங்களுக்கு நல்லவ...அசுரர்களுக்கு அசுரி.

ஆனைமுடியார் கொள்ளுத்தாத்தாவான ஒண்டிப் புலியார் சரியான பொம்பளைப் பொறுக்கி. ஒரு மலை சாதி பெண்ணை ஆசைகாட்டி கெடுத்துட்டாரு. அவளும் பிள்ளை உண்டாயிட்டா. கர்ப்ப வயித்தோட போய் தன்னை பொண்டாட்டியா ஏத்துக்கச் சொன்னா. அவரு முடியாதுன்னுட்டாரு. அத்தோட இல்லாம உன் கர்ப்பத்துக்கு காரணம் நானில்ல வேற யாரோன்னு சொல்லி விட்டார்.

அந்த பொண்ணு நம்ப ஆத்தாளோட பக்தை. இங்க வந்து பழிபாவத்தை சொல்லி ஒ'ன்னு அழுதிருக்கா. அப்படியே தீ வளத்து அதுல இறங்கிட்டா!

இறங்குமுன்ன வயிறெரிய சாபம் விட்டா...'எப்ப உன் வம்சத்தை நீ உன் வம்சமில்லைன்னு சொன்னியோ இனி உனக்கு வம்சமே இல்லாம போகட்டும், அறவே இல்லாம போயிட்டா உனக்கு வேதனை தெரியாது. உனக்கு வாரிசுங்க பிறக்கணும். ஆனா அவங்களுக்கு வாரிசு பிறக்கக் கூடாது. அவங்க அலிப்பிள்ளைகளா பிறந்து உன் பாவத்தை சுமக்கணும்.

ஆண்டு அனுபவிக்க வழி இல்லாம உன் சொத்து கோவில் சொத்தாகணும்னு சொல்லி நெருப்புல இறங்கி உசுரை விட்டுட்டா.

—இதை ஆனைமுடியார் கொள்ளுத்தாத்தா ஒண்டிப் புலியார் ஆரம்பத்துல பெரிசா எடுத்துக்கலை. ஆனா அவருக்குப் பிறந்ததெல்லாம் அலிகளாகவும் பதறிப் போனாரு.

ஆத்தாளை வந்து பார்த்து மன்னிப்புக் கேட்டு கதறி அழுதாரு.

எந்த இனத்து பெண்ணை நீ கெடுத்தியோ அந்த இனத்து பெண்ணை கல்யாணம் பண்ணு. உனக்கு நல்லபடி வாரிசு தழைக்கும்னு ஆத்தாளும் கனவுல வந்து சொன்னதா கேள்வி.

அவரு உடனே ஒரு மலைசாதி பெண்ணை கட்ட ஆசைப்பட்டாரு. ஆனா அவங்க பெண் கொடுக்க மறுத்திட்டாங்க. கடைசியில ஒரு நிபந்தனையோட இந்த கல்யாணத்துக்கு சம்மதிச்சாங்க.

அதாவது கல்யாணம் பண்ணி நல்லபடி வாரிசு வகையறா வரலைன்னா சொத்தை எல்லாம் ஆத்தா கோயிலுக்கே எழுதி வெச்சுடணும்னு சொல்லி நிபந்தனை போட்டாங்க...ஒண்டிப்புலியாரும் சம்மதிச்சு கல்யாணம் கட்டினார். நல்லவேளையா அவருக்கு நல்ல பிள்ளை பிறந்திச்சு. ஆனா அந்தப் பிள்ளை பண்ணுன அட்டகாசம் இருக்கே...'' தங்கமுத்து தேவரின் பேச்சில் ஒரு அதிசயான திருப்பம். ''அடப்பாவி'' என்று பூசாரியும் அந்தத் திருப்பத்தை எதிர்கொள்ள தங்கமுத்துத் தேவர் தொடர்ந்தார்.

''அந்தப் பயலும் அதாவது ஆனைமுடியாரின் தாத்தாவான காட்டுமுனியும் அப்பனைப் போலவே அட்டகாசம் பண்ணினார். அதோட எதிரொலி அவருக்கும் அலிப்பிள்ளைங்க பிறந்திச்சு. அதாவது சாபம் தொடர்ந்துச்சு.''

''அப்ப எப்படி ஆனைமுடியார் அப்பா பஞ்சவர்ணம் பிறந்தாரு...''

''எல்லாம் ஆத்தா கருணைதான். ஆனைமுடியார் கொள்ளுத்தாத்தா ஒண்டிப்புலியாரே தன் மகனுக்காக அதாவது காட்டுமுனிக்காக இந்த கோவிலுக்கு வந்து திரும்ப அழுதாரு. கோடாங்கிகிட்ட ஜோசியம் கேட்டாரு.



கோடாங்கியும் மகனுக்கும் மலைசாதி பெண்ணைக் கட்டி வெச்சா நல்லபடி குலம் தழைக்கும்னுசொன்னான்.

அதே மாதிரி செஞ்சாரு. அப்புறம்தான் ஆனைமுடியார் அப்பா பஞ்சவர்ணம் பிறந்தாரு. இதுக்குள்ளறையே மனசு வெறுத்து ஆனைமுடியார் கொள்ளுத் தாத்தாவான ஒண்டிப்புலியான் ஒரு தாமிரப் பட்டயத்துல தன் விருப்பத்தை உயிலாவே எழுதி நம்ப கோயிலுக்குக் கொடுத்துட்டாரு.

அதையே கொஞ்சமும் கெடுக்காம உயிலாவே காட்டுமுனியாரும் எழுதி வெச்சுட்டாரு.

இவங்க தலைமுறையில பஞ்சவர்ணம்தான் நல்ல மனுஷன். அவர் நல்ல மனசுக்கு ஆனைமுடியார் பிறந்தாரு. ஆனா இவர் அப்பனைக் கொள்ளாம தாத்தாக்களை கொண்டதுல பஞ்சவர்ணத்துக்கே அதிர்ச்சி. இதனால மாரடைப்புல செத்துப் போனார்.

அப்புறம் ஆனைமுடியான் ராஜ்ஜியம்தான்.

ஆனை முடியாருக்கும் நல்லபடி நடராசு பிறந்தான். சரிதான் குடும்ப சாபத்துக்கு ஒரு முடிவு வந்துடிச்சின்னு நான்கூட நினைச்சேன்.

ஆனா நடராசு அது எப்படின்னு கேக்கற மாதிரி அலித்தனம் பண்ண ஆரம்பிச்சுட்டான்.

பாப்போம்...ஆனைமுடியாருக்கும் வயசு அம்பதை தாண்டிடப் போகுது. இனி அவருக்கு இன்னொரு பிள்ளை பிறந்து வந்து குலம் விளங்கப் போறதில்லை.

நடந்தா நடராசுவால நடக்கணும்.

இல்லேன்னா இவனோட கதை முடிஞ்சாகணும். ஆயிரம் ஜன்னல் மாளிகைல இனி தொட்டில் ஆட சந்தர்ப்பமேயில்லைங்கறதுதான் என் கருத்து...''

அந்த நீண்ட பேச்சின் முடிவான கருத்தில் பூசாரிக்கும் உடன்பாடு போலும்.

''நம்ப கைல எதுவுமில்லை தேவரய்யா. எல்லாம் ஆத்தா கைல...'' என்று நின்ற இடத்தில் இருந்தபடியே கையை கூப்பினார் பூசாரி. அப்படியே திரும்பி ''ஆமா பொன்ராசை பத்தி ஏதாவது தகவல் கிடைச்சிச்சா...'' என்றும் கேட்டார்.

அதுவரை மகனது நினைப்பே இல்லாமல் ஆனைமுடியார் குடும்பக்கதை பேசினவர் நினைப்பு இப்பொழுது மகனை நினைத்து கலங்கியது.

''எங்க போனான்னே தெரியலை. ஆனைமுடியார் மகன் நடராசு ஒரு அலின்னு அவனும் அடிக்கடி பிரஸ்தாபிச்சான். காணாம போன அன்னிக்குக் கூட அவனும் அவன் சிநேகிதங்களும் அதுபத்தி பெரிசா பேசியிருக்காங்க. ஒருக்கால் அந்த விஷயத்துல மூக்கை நுழைச்சு ஆனைமுடியார்கிட்ட மாட்டிக்கிட்டானா என்னன்னு தெரியலை. மனசு கிடந்து தவிக்குது...'' என்றார். ஆமோதிப்பதாய் இழைந்தது பொன்னூஞ்சல் அம்மன் ஆலய சப்தம். தேவருக்கு சுருக்கென்றது.

# 6

நல்ல முதலைத் தோல் சவுக்கு அது.

அதை ஆனைமுடியார் சொடுக்கிய வேகத்தில் நடராசு அரண்டு போனான்.

''நாசமாப் போனவனே... என் வயித்துல வந்து பொறந்து ஏண்டா உசுரை எடுக்கறே. உன்னை யாருடா



கோவில்பக்கம் போகச்சொன்னது?'' என்ற கேள்வியோடு அவனை நோக்கி சவுக்கை சொடுக்கிவிட்டு அதை அப்படியே திருப்பி ஒரு அடி அடித்தார்.

முதுகுத் தோல் அந்த ஒரு அடியிலேயே வழன்று போய் அவனை அலற விட்டது.

''ஊருக்குள்ற ஜாக்ரதையா கூட்டிக்கிட்டு போய்ட்டு வாடான்னா இஷ்டத்துக்கும் சுத்திட்டு வந்து கதையாடா சொல்றே?

ஒளியத் தெரியாதவன் தலையாரி வீட்லையே போய் ஒளிஞ்ச கதையா அந்த தங்கமுத்து தேவன் எதிரேயே போய் நின்னுட்டு வந்திருக்கீங்களேடா...''

கேள்வியோடு சவுக்கை வீறு வீறு என்று வீறினார் ஆனைமுடியார்.

தடுக்க ஓடி வந்தாள் சந்திர சூடாமணி.

''என்ன இது காட்டுத்தனமா?'' கத்தினாள்.

''நீ விலகு. இனி காட்டானா இருந்தாத்தான் வாழ முடியும். இல்லாட்டி நமக்கு கோயில்ல கொடுக்கப்போற சுண்டக்கடலைதாண்டி...என் கிழட்டு தாத்தாமாருங்க அந்த லட்சணத்துக்கு உயிலை எழுதி வெச்சிருக்காங்கடி... ஆவேசம் ஆனைமுடியாரிடம்.

''அவுக ஒழுங்காத்தான் எழுதி வெச்சிருக்காங்க. நீங்கதான் முறை தப்பி வாழ்ந்து அதன் பலனை அனுபவிக்கிறீங்க.''-சூடாமணியும் பதில் ஆவேசம் காட்டினாள்.

''கதை சொல்லாத சூடாமணி, விலகு. இது என் வாழ்க்கை பிரச்னை. விட்டா இரண்டு பயலுகளும் இந்த மாளிகை உச்சியில நின்று என் சொத்து கோயிலுக்குதான்னு டமாரம் அடிப்பாங்க போல தெரியுதே...''

''சொத்து பெரிய சொத்து... சொந்தபந்தம் பேரன் பேத்திங்கிற வம்சாவளிங்கதாங்க நம்ம நிரந்தர சொத்து. அதுக்கு வக்கத்து போயி காசு பணத்தை மூட்டை கட்டற துல பிரயோசனம் இல்லீங்க. செத்தா காசு பணமா கூட வரப் போகுது.?''

''வேதாந்தம் பேசாத சூடாமணி. காசில்லாதவனை நாய்கூட மதிக்காதடி. செத்த பிறகு என்ன நடக்கப் போவுதுங்கறதை பத்தி எனக்கு கவலையில்லை. நான் வாழும்போது பணமிருந்தாத்தான் நாலு பேர் என்னை மதிப்பாங்க...''

''இப்ப யார் உங்களை மதிக்கறா? பண்ண பாவம் போதாதா?''

''வார்த்தைக்கு வார்த்தைன்னு வாதம் பண்ணாம இடத்தை காலி பண்ணு. எனக்குத் தெரியும் எப்படி நடக்கணும்னு.''

''அப்ப சரி... வாடா நடராசு நாம இந்த வீட்டை விட்டு போயிருவாம். இவரு இவர் சொத்தை கட்டிக்கிட்டு அழுவட்டும்...''

''நடராசு வரமாட்டான். அவனை வெச்சுத்தானேடி எனக்கு சொத்தே? நடராசுவுக்கு கல்யாணம் பண்ணப் போறேன்.''

''என்னது கல்யாணமா?''

''ஆமா...அடுத்தமுகூர்த்தத் துலஅவன் ஒருபொண்ணு கழுத்துல தாலி கட்டப் போறான்...''

''அவன் இப்ப எப்படி இருக்கான்னு தெரியும்ல? இந்த நிலையில அவனுக்குக் கல்யாணத்தைப் பண்ணி ஒரு பொண்ணு வாழ்க்கையை கெடுக்கவா?''



''ஒரு பொண்ணுக்கு வாழ்க்கை கொடுக்கப் போறேண்டி. நீ என்ன கெடுக்கப் போறேங்கற...இந்த மாளிகைல என்னடி இல்ல...?''

''ஒரு பொண்ணு காசு பணத்தால அடையற சந் தோஷம் பெரிசில்லீங்க. அவ தாயாகணும். அதுதான் அவளுக்கு முக்கியமான சந்தோஷம். அதுக்கு வழி யிருக்கா?''

''வரப்போறவ கட்டாயம் தாயாவா...நீ ஒண்ணும் கவலைப்படாதே. நடராசுவால முடியாட்டி கஜபதி இருக் கான். நான் இருக்கேன்...நாட்டுல ஆம்பளைங்களா இல்ல...?''

ஆனைமுடியாரின் அந்தப் பேச்சின் முன்னால் சந்திர சூடாமணி மயங்கி விழாத குறை.

''அடப்பாவி. மனுஷா...சீ என்னய்யா உறவு முறை யையே இந்தப் பாடு படுத்தறே. இதுக்கு வர்றவ சம்மதிப்பாளா?''

''சோத்துக்கே வக்கில்லாதவளுக்கு இதெல்லாம் ஒரு விஷயமா என்ன? இந்த பங்களா சுகத்துக்காக எதைச் சொன்னாலும் கேப்பா...கேட்டாகணும். என்னடா கஜபதி அப்படித்தானே?''

—ஆனைமுடியார் பேச்சு அப்படியே 'கஜபதி பக்கம் திரும்பவும் கோவில்மாடு போல தலையை ஆட்டினான் கஜபதி

''அடப்பாவி மனுஷா...காசு பணத்துக்காக இப்படி எல்லாமா கேவலமா நடப்பே...நீ செத்தா அழுகப் போவு துய்யா உன் உடம்பு.அள்ளி எரியக் கூட நாதி இல்லாம பாம்பும் தேளும்தான் பிடுங்கப் போவுது உன்னை...''

''சூடாமணி...தாலி கட்டின பாவத்துக்காக இது வரை பொறுத்தேன். இப்படியே பேசிகிட்டு போனா நான் கொலைகாரனாயிடுவேன்...

ஒரு காசு இரண்டு காசு இல்லடி...பலகோடிடி என் சொத்து. அதை கோவிலுக்குத் தூக்கி கொடுத்துட்டு அவங்க போடப்போற பிச்சையில் வாழ என் மனசு ஒப்பாதுடி...''

''அதுக்காக நீ பண்ணப் போற அக்கிரமத்தை சகிச்சு கிட்டு இந்த பாவச் சோத்தை சாப்பிடச் சொல்றியா. அதுக்கு என் மனசு ஒப்பாதுய்யா...''

''முடிவா என்ன சொல்றே?''

''வேண்டாம்யா இந்த கெட்ட புத்தி. நடராசுவை டாக்டர்கிட்ட காட்டி நல்லபடி ஆக்கப்பாருய்யா.''

''டாக்டர் கைவிட்ட கேஸ் அவன்.''

''டாக்டர் கைவிட்டா என்ன...பொன்னூஞ்சல் அம்மன் இருக்கா. அவகிட்ட போய் வேண்டுவோம்.''

''இந்த சாமி பூதம்கற கதையெல்லாம் எனக்குப் பிடிக்காதுன்னு உனக்குத் தெரியும்தானே?''

''பிடிச்சாகணும். அப்பதான் வாழ்க்கை.''

''பணம்தாண்டி வாழ்க்கை...''

''ஐயோ...இத்தனை மோசமான ஆளுக்கு நான் பொஞ்சாதியா ஆகி இத்தினி நாளும் விளங்காத வாழ்க்கை வாழ்ந்துட்டேனே...இனி உன்கிட்டப் பேசறதுல அர்த்தமே இல்லை. நான் ஊர்கிட்டப்போய் பேசறேன். உன் திட்டத்தை சொல்றேன். என் மகனோட நிலையை சொல்றேன்.''



—சந்திர சூடாமணி பேசிய ஆவேசம் கலையாமல் விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தாள். பதைத்துப் போனார் ஆனைமுடியார்.

கஜபதி பக்கம் கண்கள் ரத்தச்சிவப்பாக திரும்பினார். அவன் புரிந்துகொண்டான். நடராசு ஆடிப்போயிருந்தான். அம்மா வாசப்பக்கம் போவதைப் பார்த்து தானும் போக காலெடுத்தான்.

ஆனைமுடியார் பிடித்துத் தடுத்தார். ஒரு அறைக்குள் பிடித்துத் தள்ளினார். இதற்குள் சந்திர சூடாமணி மாளிகைக்கு வெளியே பாதையில் இறங்கி விட்டாள்.

கஜபதி பாய்ந்து வாசல்பக்கம் ஓடினான். காத்திருந்த மாருதியை கிளப்பினான்.

காற்றாக செலுத்தத் தொடங்கினான்.

சாலை ஓரமாக ஆவேச கதியில் நடப்பவளை படுவேகமாக சமீபித்து அப்படியே துளியும் தயக்கமில்லாமல் மேலேற்றினான்.

—ரத்தம் கொப்பளித்து ஜீப்பின் முன் கண்ணாடியை நனைக்க சூடாமணி அலறிய அலறலில் அங்கும் இங்குமாக இருந்தவர்கள் திரும்பிப் பார்த்தனர்.

கண்கள் காதுமட்டும் விரிய திகைத்தனர். சிலர் ஓடி வந்தனர். இதற்குள் ஜீப் ஆயிரம் ஜன்னல் மாளிகையை நோக்கித் திரும்பியது.

சந்திர சூடாமணி ரத்த சகதியாகி பின்னர் சவமாகி ஓடிவந்தவர்கள் மாருதி ஜீப்பையும், கஜபதியையும் பார்த்து வாயடைத்து நின்றனர். சிலர் அப்படியே தொடர்ந்து மாளிகை நோக்கி ஓடத் தொடங்கினர்.

இதற்குள் ஜீப் ஆயிரம் ஜன்னல் மாளிகையில் தனது இருப்பிடத்தில் ஆசுவாசம் கண்டு அமைதியடைந்தது.

பட்டுவேட்டி சரசரக்க வாசல்பக்கம் ஓடிவந்தார் ஆனைமுடியார்.

ஜீப்பின் ரத்தக்களறி பார்த்து முகம் மலர்ந்தார். ஆனால் பின்னாலேயே ஓடிவந்தவர்களைப் பார்க்கவும் நடிக்க வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டது.

''என்னாச்சு... என்னாச்சு...'' பதறினார் போலி யாக...

''ஐயா .. உங்க சம்சாரத்து மேல இந்த பாவி ஜீப்பை ஏத்தி கொன்னுட்டான்''-ஒரு வயதானவர் பதறினார்.

''நெஜமாவா... ஏலேய் கஜபதி என்னடா இதெல் லாம்?''

அவன் பக்கம் கோபாவேசத்தோடு திரும்பினார்.

கஜபதியிடம் நிஜமாலுமே தடுமாற்றம் ஒரு வேகத் தில் தனது கடவுளின் ஆணையை செயல் படுத்தி விட்டான். ஆனால் அது இப்படி சிக்கலில் வந்து சேரும் என்று நினைக்கத் தவறி துளி விவேகம் இல்லாமல் நடந்து விட்டது மெல்ல உறைக்கத் தொடங்கியது.

இதற்குள் நடிப்பின்தொடர்ச்சியாக சந்திரசூடாமணி யின் சடலத்தை நோக்கி ஓடினார் ஆனைமுடியார்.

''ஐயோ சூடாமணி... உனக்கு இப்படி ஆயிப் போச்சே. பாவி வேலைக்காரன் இப்படிப் பண்ணிட் டானே...மகன் மாதிரி வெச்சிருந்தேனே, என் மனசுல குத்திட்டானே...''

—நல்ல வேளையாக நடராசுவை ஒரு அறையில் வைத்து விட்டு வெளியே வந்திருத்தார். அது நல்ல தாகப் போயிற்று.

இல்லாவிட்டால் இந்தக்கூட்டத்தில் அவன் தன்னை அடையாளம் காட்டிக்கொண்டு சூடாமணி ஊருக்குச்



சொல்ல நினைத்ததை சொல்லாமல் சொல்லியிருப்பான். அந்த வேளையிலும் அவருக்குத் தன் செயல்பாடு குறித்து துளி மகிழ்ச்சி.

மாளிகை வாசலிலோ கூட்டம் கஜபதியை பிடித்து வைத்துக்கொண்டு உதைக்க தயாராகிவிட்டிருந்தது.

—கஜபதி மிரண்டு போய் விட்டிருந்தான். நல்ல வேளை கண்ணீரும், கம்பலையுமாக ஆனைமுடியார் திரும்ப வந்தார்.

''ஐயோ என் தாயே போயிட்டியா...'' பதறினார்.

''டேய் ஏண்டா அவமேல ஜீப்பை ஏத்துனே?''—என்று பாய்ந்து கஜபதி சட்டையைப் பிடித்தார். கஜபதி விதிர்த்துப் போனான். ஊருக்காக ஓங்கி நாலு அறை விட்டார். கீழே தள்ளி மிதிக்கப் போனார்.

''ஐயா போலீசுக்கு ஆள் போயிருக்கு. நீங்க அவசரப் பட்டு கொலைகாரனாயிடாதீங்க'' என்றார் கூட்டத்தில் ஒருவர்

—சுருக்கென்றது ஆனைமுடியாருக்கு.

—கஜபதியோ பிள்ளையார் பிடிக்க குரங்காகிவிட்ட கவலையில் குமுறத் தொடங்கினான்.

சில நிமிடங்களில் எல்லாம் போலீஸ் வந்துவிட்டது. கஜபதியை கைது செய்தது. ஜீப்பில் ஏற்றிக் கொண்டு பறந்தது. ஆனைமுடியாருக்கும் ஸ்டேஷனுக்குப் போக வேண்டி வந்தது. சம்பிரதாயங்கள் முடிந்து மாளிகைக்கு திரும்பினால் மலர் மாலைகளுடன் பிரேத பரிசோதனை முடிந்த நிலையில் சவமாய் மாளிகையின் நடு ஹாலில் சந்திரசூடாமணி. சுற்றிலும்ஆனைமுடியாரின் பரஸ்பரம் நாடும் மனிதக் கூட்டம்.

ஆனைமுடியார் அந்தச் சூழலைப் பார்த்து நிஜ மாலுமே வெறுத்துப் போனார்.

கூட்டத்தில் அந்த ஜோசியரும் இருந்தார்.

'விதி வலியது மிஸ்டர் ஆனைமுடியாரே...' என்பது போல பார்த்து மெல்லச் சிரித்தார்.

—ஆனைமுடியாருக்குள் விதிர்ப்பு. அப்போதுதான் அவர் சொன்ன அந்த ஜோசியப் பலனே நினைவுக்கு வந்தது.

ஜோசியம் கேட்டு ஒரு வாரம் கூட ஆகவில்லை. அதற்குள் ஒரு உயிர் போய்விட்டது.

இனி அடுத்து?

தனது அவசரமும் துவேசமும் அபத்தமாக முடிந்து விட்டது குறித்து நிஜமாலுமே கவலைக்கரிசனம் ஆனைமுடியாருக்குள். இது போன்ற சமயங்களில் உற்ற துணையாக விளங்கும் கஜபதி கூட சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கைதியாக போலீஸ் ஸ்டேஷனில்...

அந்த ஜோசியர் சிரித்துக் கொண்டே இருந்தார்.

## 7

சந்திர சூடாமணியின் சடலத்துக்கு பக்கத்தில் பெரிய தேக்கு நாற்காலியை தூக்கி வந்து போட்டு அதில் ஆனைமுடியாரை உட்கார வைத்து துக்கம் விசாரிக்கத் தொடங்கியது.

''ராஜாவுக்கேத்த ராணியா இருந்தாங்க. உங்க பரம்பரையிலேயே அவங்ககம்பீரம் யாருக்கும் வராது. இப்படி அநியாயமா போய் சேர்ந்துட்டாங்க.



''ஆமா அந்த கஜபதி ஏன் இப்படி பண்ணினான்...?''

—ஒரு பெரியவர் ஆனைமுடியார் எதிரே துக்கத்துடன் கேள்வி கேட்க ஆனைமுடியாரிடம் திணறல்.

—என்ன பதில் சொல்ல?

—அதை எப்படிச் சொல்ல?

—நெடுநேரம் திணறினார்.

—மூளைச் செல்களிடம் முட்டுதல்-மோதல்.

தனது விசுவாசமான வேலைக்காரன் இப்பொழுது குற்றவாளியாக...

உணர்ச்சிவசப்பட்டதில் 'திகுடுதம்பாக' எல்லாமே முடிந்து விட்டது. ஆனைமுடியார் கலங்கிப் போய் அந்த பெரியவரை பார்த்தார்.

—அப்படியே பார்வையை கூட்டத்தில் மேலும் விட்டார். திரும்பவும் தென்பட்டார் அந்த ஜோசியர்! சிரிப்பது தெரியாமல் சிரிக்கும் அந்த முகம் ஆனைமுடியாருக்குள் ஆவேசப் பந்தை உருட்டி விட்டது.

'எங்க வந்தே?' என்று கேட்க நாக்கு கூட மடங்கி விட்டது. ஆனால் ஒரு அநிச்சையான எச்சரிக்கையில் சப்தம் நாவுக்குள்ளேயே தேய்ந்து போக மனதில் புதிய புயல்.

'என் பெண்டாட்டி போயிட்டா நான் போயிடுவேனா என்ன? வாழ்ந்து காட்டுவேன்...என் மகனையும் வாழ வெச்சு காட்டுவேன்.'—மனதுக்குள் உறுதியான முடிவுகள். அதன் நிமித்தம் உடனே மூளை வேலை செய்தது. காரணம் சரியாக கண்டுபிடிக்கப்பட்டது. பெரியவர் ஆனைமுடியார் கரத்தை இன்னமும் பிடித்துக் கொண்டிருந்தார்.

பதில் வந்தால் அல்லவா விட?

''அந்த பய கஜபதிக்கு கொஞ்ச நாளாவே மனசு சரியில்ல. ஏறத்தாழ மெண்டலாயிட்டான். அதான் ஜீப்பை ஒட்டத் தெரியாம ஓட்டி இப்படி பண்ணிவிட்டான்.

போலீஸ் ஸ்டேஷன்ல என் காலை பிடிச்சுகிட்டு கதறிட்டான். ''கடவுளே...நானா அம்மாவை கொல்லுவேன்...அவங்க எனக்கும் தாயாச்சேன்னு புலம்பறான்.

வக்கில்கூட அவன் மெண்டல்னு நிருபிச்சு தண்டனையில இருந்து காப்பாத்திடலாம்னு சொன்னார்.

பாவம் அவன் என்ன பண்ணுவான்.

சூடாமணி விதி முடிஞ்சு போச்சு...''

—ஆனைமுடியாரின் சமாதானம் ஒரு சிலரை மிகவும் நெகிழ்த்தியது.

''ஆனைமுடியாரே... உங்களுக்கு ரொம்ப பெரிய மனசு. வேற யாரா இருந்தாலும் ஒரு வேலைக்கார நாய் இப்படி செஞ்சதுக்கு தாளிச்சு எடுத்திருப்பாங்க. நீங்களோ அவ்வளவும் விதின்னு பக்குவமா எடுத்துக்கறீங்க.

நீங்க நிஜமாலுமே பெரிய மனுஷன்'' —என்றார் ஒருவர்.

ஆனைமுடியாருக்கு அந்தப் பாராட்டு அந்த நேரத்தில் அருமருந்தாக இருந்தது தளர்வாக மீசையை நீவிக் கொண்டார்.

—நடுவில் தொலைபேசியின் அழைப்பு.

—வேலைக்காரன் அதை சுமந்து வந்து காதோரம் கேள்விக் குறியென தொங்கவிட்டு பிடிக்க ஆனைமுடியார் காதில் இன்ஸ்பெக்டர் பாய்ந்தார். எல்லோரும் ஒதுங்கிக் கொண்டனர்.



''ஐயா...கஜபதியை உடனேயே வெளிய எடுக்க வக்கில் வந்துருக்காரு. அனுப்பித் தரவா?''

''மொத அனுப்புய்யா. அதுக்குதானே வக்கிலை ஏற்பாடு பண்ணியிருக்கேன். கேஸை ஊத்தி மூடப் பாரு...''

''முயற்சி பண்றேங்க.''

''முயற்சி பண்றேங்கவா...பண்ணி முடிச்சாகணும் ஆமா உன் பேர் பரமன்தானே?''

''ஆமாங்க...''

''வீட்டுக்கு ஐம்பது போயிருக்கு, பாத்து பக்குவமா நடந்துக்க''

''ஐயா சந்தோசங்க. வெச்சுடட்டுங்களா?''

''உம்...உம்...''

—வேலைக்காரன் திரும்ப டெலிபோனை எடுத்துக் கொள்ள முக்கியமான அந்த கேள்வி அப்பொழுதுதான் வெளிக் கிளம்பியது.

''ஆத்தா செத்துக் கிடக்கு—அருமை மகன் நடராசுவை காணோமே...?''

—கேள்வி ஆனைமுடியாரை எட்டிய மறுகணமே அவர் தொண்டைக் குழியை விசுக்கென்று 'கார்க்' ஒன்று அடைத்த மாதிரி ஆகிப்போனது. பட்டவர்த்தனமாக அவனை வெளிப்படுத்த வேண்டிய முக்கிய கட்டமாயிற்றே இந்த சாவு...உணர்ச்சி வசப்பட்ட செயலால்தான் எத்தனை சிக்கல்? ஆனைமுடியார் நெளிந்தபோது ''அவனுக்கு பெரியம்மை...'' என்று உடனேயே பதில் வந்தது எங்கிருந்தோ...!

நிமிர்ந்து பார்த்த ஆனைமுடியார் எதிரே அப்படி ஒரு சமயோஜிதமான பதிலைச் சொன்னவர் ஜோசியர் தான்.

''அடடா...இந்த அம்மைக்கு நேரம் காலம் இல்லியா இப்படியா ஆத்தா பாடையில கிடைக்கயில வந்து நிக்கும்?'' ஒருவர் ஆதங்கப்பட்டார். அவர் ஆனைமுடியாரின் ஐம்பது நூறுக்காக எப்படியும் வளைய தயாராக இருப்பவர்...

''எது வந்தாலும் பிணத்துக்கிட்ட வரலாம், ஆனா இந்த பெரியம்மை இருக்கே. இது ரொம்ப ஆபத்தானது. ஆத்தா மாரி அப்படியே உடம்புல இறங்கிட்டதா தான் அர்த்தம்.''-ஜோசியர் அந்த பொய்யை அடித்து நீட்ட ஆரம்பித்தார். ஆனைமுடியார் அந்த சமயோசிதத்தை உத்தேசித்து அப்படியே வாய் பிளந்தார்.

பாதி கோபமும், பாதி சந்தோஷமுமாக ஜோசியரைப் பார்த்தார். ஆனால் வெகுசிலரே அதை நம்பியதுபோல தெரிந்தது. 'சந்திரசூடாமணியின் சாவு, நடராஜன் ஒளிவு, கஜபதிக்கு ஆனைமுடியார் வாங்கும் வக்காலத்து எல்லாவற்றிலுமே பூடகபாடகமாய் ஒரு மர்மம் இழையோடுவதாகவே எல்லோர்க்கும் தோன்றியது.

—வெளியே பூக்களால் பெரிய ரதம் போல பாடை தயாராக ஆரம்பித்திருந்தது.சரம் சரமாக வெடி வெடிக்க ஆரம்பித்தனர். அதை வேடிக்கை பார்த்தபடி 'நமக்கெதுக்கு வம்பு' என்று வாய் மூடிக் கிடந்தனர் சிலர். சிலரிடம் குசுகுசுப்பு...சம்பிரத நிமித்தம் வெளியே வப்பாளித்தான் காலில் சலங்கையுடன் வந்து வெளியே ஆட்டம் போட ஆரம்பித்தான்.

சாவு வீட்டின் சகல அம்சங்களும் அங்கே ஆக்ரமிக்கத் தொடங்கிவிட்டன.

சிறிது நேரத்தில் எல்லாம் கஜபதி வந்தான்! கூடவே வக்கீல் ஒருவர். வந்தவன் நேராக ஆனைமுடியார் காலில் போய் விழுந்தான்.

கூட்டம் வேடிக்கை பார்த்தது.



அவன் அப்படியே சந்திரசூடாமணியின் கால் மாட்டிலும் விழுந்து புரண்டு அழுதான்.

''அம்மா நான் பாவி...நான் பாவி...''-என்று அரற்றினான். அப்படியே பக்கத்து தேக்கு நாற்காலியில் வேகமாக மோதினான் மண்டையை உடைத்துக் கொண்டான். நிஜமாலுமே ரத்தம் கொட்டியது.

—கூட்டம் இலேசாக பதைத்தது.

அவன் ஒரு பைத்தியம் என்று அவர் சொன்னதை நிரூபிக்கத் துடிப்பவன் போல் ரத்தம் வடிய சந்திர சூடாமணி பிரேதத்தையே கொஞ்ச நேரம் வெறித்தான்.

யாரும் அவன் அருகில் சென்று ஆறுதலோ தேறுதலோ சொல்லவில்லை. அவனுக்காக பரிதாபமும் படவில்லை பட முடியவில்லை. அவன் திடீரென்று மயங்கி விழுந்தான். இப்போது கூட்டம் மெல்ல பரிதாபப்பட ஆரம்பித்தது.

அவன் ஒரு கொலைக்காரன் என்னும் நினைப்பை இன்னும் சற்று முயன்றால் அடித்து விரட்டலாம் என்பதற்கு தோதாக சூழ்நிலை

ஜோசியர் மட்டும் அவன் அருகே சென்று தண்ணீர் தெளித்து அவன் மயக்கம் தெளிவித்தார்.

அவன் அவரை ஆச்சரியமாக பார்த்தான்.

''எங்காவது கண்காணாத இடத்துக்கு ஓடிப்போயிடு இங்க இருந்தா நீயும் பிணம்தான்! நான் சொல்லலை அம்பாள் சொல்றா!''-என்றார் மிக மெல்ல காதோரமாக.

கஜபதிக்கு காது வழியாக நெருப்பு நுழைந்த மாதிரி ஆகிப்போனது.

—மலங்க மலங்க ஜோசியரைப் பார்த்து விழித்தான். இதற்குள் "உம் உம்—மேற்படி காரியமெல்லாம் நடக் கட்டும்."

—அந்த மாளிகையின் பிரதான மனிதர் ஒருவர் முடுக்கிவிட ஆரம்பித்தார். கஜபதி தயங்கியபடியே எழுந் தான். ஜோசியரையே வெறித்தான். அவர் அங்கிருந்து நடக்கத் தொடங்கினார். இனி எனக்கு இங்கே வேலை இல்லை என்பது போல நடக்கத் தொடங்கினார்'

எஸ்டேட் பங்களா வாசலில் முத்துமணி. உடன் அவள் தங்கை ராஜாத்தி. வாசல் காவலாளி உள்ளே விடாமல் சண்டித்தனம் செய்து கொண்டிருந்தான்.

"முதலாளியம்மா செத்துட்டாங்க. ஆகையால் யாரும் இங்க இல்லை. எல்லாரும் ஆயிரம் ஜன்னல் மாளிகைலதான் இருக்காங்க. நீ அங்க போ..."என்றான்.

முத்துமணி திகைத்து போனாள்.

"எப்படிச் செத்தாங்க. நல்லாத்தானே இருந்தாங்க?"

"இதுக்கெல்லாம் எனக்கு பதில் சொல்லத் தெரியாது. ஆனா ஒண்ணு மட்டும் தெரியும். ஆயிரம் ஜன்னல் மாளி கைல எதுவும் எப்பவும் நடக்கும்."

"நீ இப்படி பேசுனா எப்படி? அந்த கஜபதிதானே என்னை என் தங்கச்சியோட இங்க வரச் சொன்னிச்சு?"

"இருக்கலாம். ஆனா உள்றவிட எனக்கு அதிகார மில்ல."

"ஐயோ இப்படி ஆயிடிச்சே. தா...என் தங்கை ராசாத்திதான் சின்ன எசமானை கட்டப் போவுது. கொஞ்சம் உள்ற விடு."

—முத்துமணியின் அந்த பேச்சு அந்த காவலாளியைக் கிறியது.



"என்னது...இது சின்ன எசமானைக் கட்டப் போவுதா?"-என்று வியப்பாக கேட்க விட்டது.

"நீங்க நம்ப மாட்டீங்க. ஆனா நடக்கப் போவுது பார்..."-முத்துமணி மிகவும் ஏமாளி போல் பேசுவதாக அவனுக்கு தோன்றியது.

"நீ மலைக் குடிச்சியா?"-அவளைப் பார்த்து கேட் டான்.

அவள் பெரிதாக தலையாட்டினாள்.

"அதான் இத்தனை இளிச்சவாய்த்தனமா பேசறே."-என்றவன் பார்வை முத்துமணி தங்கை ராஜாத்தி மேல் ஓடியது.

பாவாடை தாவணியில் பன்னீர் புஷ்பமாட்டம் இருந் தாள்.

வயதுக்கு மீறிய செழுமை... லேசான கறுப்பு. ஆனாலும் திவ்யலட்சணம்.

"யாராவது ஒரு பணக்காரன் பெண்டாட்டியாக்கிக் கிறேன். வெப்பாட்டியாக்கிக்றேன்னு சொன்னா உடனே நம்பி வந்திட்றீங்களே. உங்களுக்கு சின்ன எஜமான் பத்தி எதாவது தெரியுமா?"

—அவன் அவளை பார்த்து நைச்சியமாக கேட்டான். கேட்ட ஜோரில் ஒரு பீடியை எடுத்து பற்ற வைத்தான்.

"சின்ன எஜமானுக்கென்ன சிங்கக்குட்டி..."-முத்து மணியிடம் சிடுக்கென்ற பதில்.

"சிங்கக்குட்டியா அசிங்கக்குட்டியான்னு..." -ஏதோ சொல்ல வாயெடுத்தவன் நமக்கெதற்கு வம்பு என்று உடனடியாக பயந்து "சரிசரி நீங்க போய்ட்டு நாளைக்கு வாங்க. நான் எஜமான் கிட்ட கேட்டு சொல்றேன்."-என்று புகையை ஊதினான்.

மலைக்காற்றில் அது நெடுநேரம் கரையாமல் மிதந்தது. முத்துமணி ராஜாத்தியுடன் திரும்பி நடக்க ஆரம்பித்தாள்.

''நீ கவலைப்படாதே ராஜாத்தி...நான் உனக்கு கல்யாணம் கட்டி வைக்காம விட மாட்டேன். அக்காலை சாதாரணமா எடை போட்றாதே, ஜோசியக்காரன் சொன்னது உனக்கு ஞாபகம் இருக்கா. நீ மகாராணியாட்டம் வாழப்போறே பிள்ளே.

எந்த மூங்கில் காட்டுல மூங்கில் வெட்டினியோ அந்த மூங்கில் காட்டுக்கே சொந்தமாகப் போறே...''

—முத்துமணியின் பேச்சுக்கு ராஜாத்தியிடம் எந்த பதிலும் இல்லை. முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டிருந்தாள்.

''ஏன் ராஜாத்தி எதுவும் பேசமாட்டேங்கறே...'' என்று கெஞ்சலாகக் கேட்டாள்.

''ஒண்ணுமில்லக்கா...''- என்றாள் ராஜாத்தி மொட்டையாக.

''இல்ல ஏதோ விஷயம் இருக்கு. நா கல்யாணப் பேச்சு எடுத்ததுல இருந்தே நீ உம்முன்னுதான் இருக்கே...''

''பின்ன என்னக்கா...ஆனை முடியார் குடும்பம் எங்க நாம எங்க...நீ ஆனாலும் ஆகாசத்துல மெதக்கறேக்கா...''

''அடிப்பாவி மகளே இதானா சேதி...? ஆனா இது நெஜம்புள்ள...நம்ம ஆத்தா பொன்னூஞ்சல் அம்மன் மேல சத்யம்.''

''அப்படின்னா இதுல ஏதோ கோளாறு இருக்கு. அவங்க கோடீஸ்வரங்க, நாமளோ கோமணாண்டி.''



''வாஸ்தவம்தான் ராஜாத்தி. ஆனா அவங்க குடும்பத்துக்கு ஒரு சாபம் உண்டு. நம்ம சமூகத்துல பெண்ணெடுத்தாதான் அவங்களுக்கு விளங்கும்.''

''இருக்கட்டும். நம்ம சமூகத்திலேயே அப்பா அம்மான்னு நல்ல குடும்பத்திட்டமா காடு கழனியோட உள்ளவங்களே நிறைய உண்டே. அவங்களை கட்டலா முல்ல?''

''நீ ஏன் இப்படி கெடந்து குழம்பிக்கறே? ஆத்தா நம்மளை கைவிட மாட்டா. கவலைப்படாதே...''

''இல்லக்கா. எனக்கு இந்த கல்யாணம் வேண்டாம். இஷ்டமில்லக்கா...''

''ஏபுள்ள இப்படி சொல்றே...சின்ன எஜமான் உன்னை வெச்சு தாங்காட்டியும் அதோட பெண்டாட்டிங்கற அந்தஸ்து ஒண்ணு போதும். அந்த பங்களாவுல ஒரு வேலைக்காரியா கூட இருந்துட்டு போ, கௌரவமா இருக்கும்.''

''என்னால முடியாதுக்கா...நா ஒருத்தரை மனசுல நினைச்சுட்டேன்.''-ராஜாத்தி அப்படி பேசவும் தூக்கி வாரிப் போட்டது முத்துமணிக்கு.

''என்னாது...நீ ஒருத்தனை நினைச்சுட்டியா, யாருடி அது? ஊமச்சி மாதிரி இருந்துகிட்டு காதல் பண்ற அளவு போயிட்டியா... யாருடி அவன்?''

—முத்து மணியிடம் உஷ்ணம் ஏற ஆரம்பித்தது.

ராஜாத்தி மௌனமாக நின்றாள்.

''யாருடி அவன்... நம்ம சாதிப் பயலா?''

இல்லை என்று தலையாட்டினாள் ராஜாத்தி. ''அப்ப யாரு?''

அடர்ந்த மௌனம் ராஜாத்தியிடம்...

''கேக்கேன்ல... சொல்லு புள்ள'' ஓங்கி கத்தினாள்.

''அவர்கிட்ட கேட்டு சொல்றேன்...'' என்றாள் மெலிசாக.

''எவர்கிட்டடி...''- கோபாவேசத்தோடு எகிறி தலை முடியை பிடித்தாள் முத்துமணி.

''நீ இப்படி எல்லாம் கேட்டா நான் சொல்லமாட்டேன். எனக்கு அவர் பேர்ல நம்பிக்கை இருக்கு. என்னை நிச்சயம் அவர் கல்யாணம் கட்டிக்குவாரு.''

''அட ஆள் யாருன்னு சொல்லுடி...''

''மாட்டேன். அவர் சொல்லக் கூடாதுன்னு சொல்லியிருக்காரு.''

''அடிப்பாவி மகளே... உனக்காக இங்க நான் பண்ணாத தப்பெல்லாம் பண்ணி காசு பாத்துகிட்டிருக்கேன். நீ என்னாடான்னா எவன்கிட்டையோ மயங்கிட்டு வந்து ஆள் யாருன்னு கூட சொல்ல மாட்டேங்கிறியே...''

—'பளார் பளார்' என்று அறையத் தொடங்கினாள் முத்துமணி. அவள் காதில் விமானம் பறக்கத் தொடங்கியது. நெற்றிப் பொட்டில் திடும்மென்று இருட்டின் சேர்க்கை. கண்கள் ஃபியூஸ் போனது போல் ஒளியிழக்க அப்படியே மயங்கி விழுந்தாள்.

''உன் தங்கச்சி மூணு மாசம் முழுவாம இருக்கா!''

மருத்துவச்சி அப்படி சொன்ன போது முத்துமணிக்கு நடு மண்டையில் ஆணி ஏறின மாதிரி ஆகிவிட்டது.

—மயங்கி விழுந்தவள் நெடுநேரம் வரை என்ன செய்தும் தெளியவில்லை. பயமாகிவிட்டது. மருத்துவச்சியிடம் ஓடினாள் முத்துமணி. வந்தவள் மூக்கு வழியாக ஒரு மூலிகைச் சாற்றை உள்ளே பாய்ச்சி விட்டு நாடியைப் பிடித்தபோதுதான் தெரிய வந்தது புதிதாக கர்ப்பநாடி துடிப்பது!



''எவண்டி இப்படி செஞ்சவன்?''- மருத்துவச்சியே இப்படி ஒரு கேள்வியை முத்துமணியை பார்த்து கேட்கவும் முத்துமணியிடம் ஸ்தம்பித்த மௌனம்.

''மூங்கி வெட்டப் போனா, போன சோலிய பாத்துகிட்டு திரும்பணும். அப்படியே படத்துக்கு போறேன் சர்க்கசுக்கு போறேன்னு டவுனு பக்கம் போய் எவன் சிரிப்புலையாவது மயங்கி இப்படி ஆகி வந்து நிக்க வேண்டியது.

இவளுகளையெல்லாம் துடப்பக்கட்டையால வெளுக்கணும். சரி, சரி...கொஞ்ச நேரத்துல இவ கண்ணு முழிச்சிடுவா! எந்த மன்மதன் இப்படி பண்ணான்னு கேளு. முடிஞ்சா அவனுக்கே கட்டி வைக்கப்பாரு, இல்லாட்டி எங்கிட்ட வா. மருந்து தரேன், கர்ப்பம் கலைஞ்சு போகும்.

அப்புறமாவாச்சும் ஒழுங்கா இருக்கச் சொல்லு.''

—மருத்துவச்சி பேசிவிட்டு கிளம்பினாள். அந்த மலை நாட்டுக்கே இவள்தான் மருத்துவச்சி.

தெனாவெட்டான பெண்மணி வேறு.

'இவளிடம் ஒரு ரகசியம் தங்காதே...'

பதறிப்போனாள் முத்துமணி. அழுவதைத்தவிர வேறு வழி தெரியாத போது அங்கே ஆனைமுடியார் வீட்டு வேலைக்காரன் ஒருவன் வந்து நின்றான்.

''முத்து உன்னை மட்டும் கஜபதியய்யா கூட்டியாரச் சொன்னாரு. மாளிகை பங்களாவுக்கு உடனே வருவியாம்!''

# 8

ஆயிரம் ஜன்னல் மாளிகையில் அநியாயத்திற்கு ஒரு நிசப்தம். திருவிழா முடிந்து கலைக்கப்பட்ட சந்தை போல ஒரு வகை வெறிச்சோடி போன தன்மை ஆங்காங்கே...

வேலைக்காரர்களின் முகங்களில் சிமெண்டுப்பூச்சின் கிறுகல்.

தண்டை சப்திக்க நடக்கிறாள் முத்துமணி.

''இனி உன்னை இந்த மாளிகை பக்கம் பாத்தா தொலைச்சிடுவேன்.'' -என்று மிரட்டியவள் இன்று உயிரோடு இல்லை.

அதற்காக தைரியமாக எகத்தாளமாக நடக்கலாமா என்ன? முத்துமணிக்கும் அப்படியெல்லாம் நடக்கும் எண்ணமில்லை. அதான் ராஜாத்தி மண் அள்ளிப்போட்டு விட்டாளே?

தயங்கித் தயங்கி பம்மிப் பம்மி நடக்கிறாள் முத்துமணி.

மிரட்டுவது போல பார்க்கிறது ஒரு பாடம் செய்த காட்டெருமையின் தலை.

எதிரே ஒரு வேலைக்காரன்.

''கஜபதி வரச் சொன்னிச்சாம்...'' — அவனிடம் முத்துமணி.

''உள்ற போ...ஹால்லதான் இருக்கு.''



—அவள் தயங்கித் தயங்கி நடக்கிறாள். எதிர்படுகிறது சந்திர சூடாமணியின் ஆளுயர படம். அதற்கு மகா பெரிதாய் ஒரு ஜவ்வந்தி மாலை.

மாலையை தேனுக்காக வண்டுக் கூட்டம் வேட்டையாடிக் கொண்டிருக்கிறது. தரை வழுக்கி விழும் அளவு மொசைக்கின் வழவழப்பு. வெறும் காலில் பனியாய் கவ்வும் சிலுசிலுப்பு.

பார்வையிலோ படபடப்பு... நடையின் முடிவில் தட்டுப்பட்ட ஹாலில் கஜபதி நின்று கொண்டிருந்தான்.

வித்யாசமாக தெரிந்தான்... நிறைய்ய வாடிப் போயிருந்தான். வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு மீட்கப்பட்டவன் மாதிரி தெரிந்தான். அந்த நிலையிலும் முத்துமணியை பார்த்து இணக்கமாக சிரித்தான். முத்துமணி தலையை குனிந்து கொண்டாள்.

கஜபதிக்கு எதிரே முத்துமணிக்கு முதுகைக்காட்டியவராக தேக்கு அரைச்சக்கர நாற்காலிமேல் ஆனைமுடியார்.

தண்டை சப்தம் அவருக்கும் கேட்டதால் துல்லியமாக கேட்கிறார்.

''ஆரு...மலைக்குடிச்சியாடா...?''

''ஆமாம் கடவுளே.''

''ஏதோ அவ தங்கச்சி பத்தி சொல்லியிருந்தாளே... அவ வரலையா?''

''வரலையா புள்ள?''

''என்னை மட்டும் வரச் சொன்னதால்ல வேலைக்காரன் சொன்னிச்சு.''

''போகட்டும்... தங்கச்சியை எஸ்டேட் பங்களாவுல கொண்டுவிட்டு போய்விடச் சொல்லு...''

''விட்டுட்றேங்க...என்னா முத்து முன்ன பேசுனதுல்லாம் ஞாபகம் இருக்குல்ல...''

—முத்துமணி கஜபதியின் இந்த கேள்வி முன் சோகமாய் தலையை உயர்த்தினாள்.

''ஐயா... இந்த கல்யாணம் நடக்காதுங்க.''—என்றாள் சுரத்தேயில்லாமல்.

''ஏன் புள்ள?''—வார்த்தையை படுவேகமாக தட்டினான் கஜபதி.

''அதுக்கு கல்யாணம் கட்ட இஷ்டமில்லியாம்.''

''அட அதுக்கு என்ன தெரியும்? சின்னஞ்சிறிசுங்களுக்கு நாமதான் பக்குவமா எடுத்துச் சொல்லணும்.''

''எல்லாம் சொல்ற நிலைல இல்ல. அவ என்னையே போய்ட்டு வாங்கறவ. நீங்க வேற பொண்ணைப் பாருங்க.''

''அது எங்களுக்குத் தெரியும். நீ பூடகமா பேசாம நேரா விஷயத்துக்கு வா. சின்ன எஜமானைப் பத்தி யாராவது ஏதாவது தப்பா பேசி அதை நம்பி நீ எங்கிட்டடபாய்க்கிறியா?''

''சத்யமா இல்லீங்க...''

''அப்ப ஏன் கல்யாணம் வேணாங்குவது உன் தங்கச்சி?''

''ஐயா... விட்றுங்க இந்த பேச்சை இதோட விட்ருங்க...''

''இப்ப நீ சொல்லப் போறியா இல்லை சொல்ல வைக்கவா...?'' படு ஆவேசமாக இப்படி கேட்டபடி இடையில் எழுந்தது வேறு யாருமில்லை. ஆனைமுடியார்தான்.



அவர் மீசையில் ஒரு அநியாயத் துடிப்பு முகத்தில் கோப அலைகளின் குதிதாளம். சட்டையணியாத திறந்த மார்பில் புலிப்பல் செயின் முறுக்கிக் கொண்டு பின் திரும்ப நேர்ப்படும் விர்ரென்ற சுழற்சி வேறு.

முத்துமணி ஆடிப் போனாள். அடி வயிற்றின் மேல் ராஜநாகம் படம் எடுத்து ஆடுகின்ற மாதிரி பயத்தின் கவ்வல் வேறு. தொண்டை அடைத்துக் கொள்ள திணறலாய் அதற்குப் பதில் சொன்னாள்.

''அது எவன் கிட்டையோ மனசை பறி கொடுத்துட்டு மூணு மாசம் முழுகாம வந்து நிக்குதுங்க...''

இந்தச் சேதி கேட்டு ஆனைமுடியார் துவண்டு போவார் என்றுதான் கருதினாள். கஜபதி எகிறி குதிப்பான் என்றுதான் நம்பினாள். ஆனால் இருவரிடமும் மகா தீர்க்கமான மௌனம். அர்த்த புஷ்டியுள்ள மௌனம். புரிந்துகொள்ள நமக்கு வயது போதாது எனும் படியான சன்யாச மௌனம். நெடுநேரம் மௌனமாகவே இருந்தார்கள்.

பின் கஜபதியும், ஆனைமுடியாரும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டு ரகசியமாக குசலமிட தொடங்கினார்கள்.

''என்னடா இது... பழம் நழுவிப் பால்ல விழுந்திரிச்சா?''

''ஆமாங்க கடவுளே! எப்படியும் முத்துமணியைக் கொண்டு இவ தங்கச்சியை அமுக்கிடணும்.''

''அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். ஆனா எப்படி அமுக்குவே. அவ அழும்பு பண்ணுனா.''

''கொஞ்சம் பொறுங்க ஏதாவது வழிகிடைக்காமலா போயிடும்.''

—கஜபதி நிமிர்ந்து முத்துமணியை முறைத்தான்.

''ஆமா அவ கர்ப்பத்துக்குக் காரணம் யாரு?'' கைகளை பிசைந்தபடி கேட்டான்.

''சொல்ல மாட்டேங்கறா...''

''அவ சொல்லலைன்னா நீ விட்ருவியா?''

''நான் என்ன பண்ணட்டும். அடிச்சும் பார்த்துட்டேன்.''

''அடிச்சா சொல்லுவாளா? கல்யாணம் பண்ணி வெக்கறேன்னு சொல்லு. சொல்லுவா.''

'அப்ப அவ விருப்பத்துக்கே கல்யாணம் பண்ணி வெச்சிடவா?''

''அதுதானே நமக்கு அழகு. அவ எங்க இருந்தாலும் நல்லா இருக்கணும்கறார் கடவுள். நாங்களே கல்யாணம் பண்ணி வைக்கறோம்.'':

''ஐயா உங்களுக்குக் கோடி புண்ணியம். நா இப்பவே போய் அவளை கூட்டி கிட்டு வரேன். இதுக்கு அவ நிச்சயம் சம்மதிப்பா.''

—முத்துமணி உற்சாகமாக வெளியே ஓடினாள். ஆனைமுடியார் கஜபதியை புரியாமல் பார்த்தார்.

''என்னடா நீ...ஆள் யாருன்னு தெரிஞ்சுக்குவேன்னு பார்த்தா கல்யாணம் வரைக்கும் போயிட்டியே...'' கர்ஜித்தார்.

''கடவுளே... இந்த மாதிரி விஷயத்துல ரொம்பவும் பக்குவமா நடந்துக்கணும் இப்படிப் போனாத்தான் அந்தப் புள்ளை மனசை அசைக்க முடியும். அது இப்ப ஆள் யாருன்னு சொல்லும். அவன் நிச்சயம் எங்கை



யாவது மலைக்காட்டுல மூங்கில் வெட்றவனாத்தான் இருப்பான்.

அவன் யாருன்னு தெரியட்டும். அவனை சாமர்த்தியமா போட்டுத் தள்ளிருவோம். லைன் க்ளியர். இந்தப் பொண்ணும் தற்கொலை பண்ணிக்கப் பார்க்கும்.

''கேக்க நல்லாத்தான் இருக்கு. அவ வயித்துக் குழந்தையை ஊர் நடராசன் குழந்தைன்னு ஒத்துக்குமாடா?'

—ஆனைமுடியாரின் இந்த கேள்விமுன் சில வினாடிதான் கஜபதி தடுமாறினான்.

உடனேயே பார்வையில் மின்னல் வெளிச்சம் பாய அவரைப் பார்த்து கையை சொடுக்கினான்.

''ஐயா...அந்தப் பொண்ணு ஆள் யாருன்னு இது வரை யார்கிட்டையும் சொல்லலை. இதுதான் நமக்கு பெரிய பலமே. இப்ப நம்மகிட்ட மட்டும் அவன்யாருன்னு சொல்லப் போறா... நாம அவனை தீர்க்கப் போறோம். அதே சமயம் ஊருக்குள்ற நடராசுவே எஸ்டேட் பங்களாவுல ராஜாத்தி வேலை செய்யறச்சே அவளை மயக்கி கெடுத்துப்புடிச்சுன்னு சொல்வி விஷயத்தை கிளப்பி விடுவோம். ஊரைப் பொறுத்தவரை நடராசுதான் அவளை கெடுத்தவன்.

இதைக் கேள்விப்பட்டு நீங்க ராஜாத்திக்கே நடராசுவை கட்டிக் கொடுக்க முன் வந்துட்டதா பின்னாடி முடிவை தெரிவிப்போம்.

உங்களுக்கும் நல்ல பேரு. நடராசு சிக்கலுக்கும்விடை கிடைச்சிடும்.''

—கஜபதி அப்படிச் சொல்லவும் கையைச் சொடுக்கி கணக்கைப் போட்ட ஆனைமுடியாருக்குள் உற்சாகம் கரை புரண்டது. நெடுநேரம் கரைபுரள விட்டார். பிறகு ''டேய் கஜா... அருமையான யோசனடா. உன் கணக்குப்

படி பார்த்தா இப்ப ராஜாத்தி கர்ப்பமா இருக்கக் காரணமே நடராசுன்னு ஆவுது. அப்படித்தானே?''

''ஆமாம் கடவுளே...''

''ஒரு வகையில பாத்தா கொக்கு தலையில வெண்ணெயை வெச்சு பிடிக்கிற மாதிரி ஆகுது. ஆனா நமக்கு இதைவிட்டா வேற வழியும் தெரியலை. ஆமா அந்தப் பொண்ணு ராஜாத்தி இந்த இழுப்புக்கெல்லாம் ஒத்து வருமா? அந்த நடுவுல சொதப்பிட்டா...''

''நல்ல கேள்வி கடவுளே...அது சொதப்பிட்டா எல்லாம் முடிஞ்சிச்சு. ஆனா அதை சமாளிச்சிட்டா எல்லாம் சிக்கலும் தீர்ந்திடுச்சி.

மலைக்குடிச்சிதானே ஈசியா சமாளிச்சிடலாம். நம்ப நடராசுவும் மக்கர் பண்ணாம பார்த்துக்கணும்.''

—கஜபதி பேசி முடிக்கவும் திரும்பவும் அந்த மாளிகையில் தண்டை சப்தம் கேட்கவும் சரியாக இருந்தது.

''தங்கச்சியோட வந்துட்டா போல தெரியுது. எவ்வளவு வேகம்பாருங்க...''-கஜபதி உற்சாகமானகுரலோடு திரும்பினான்.

—அவன்நினைப்பை போலவே எதிரே முத்துமணியும் ராஜாத்தியும். அதுவரை தளர்வின்றி நடந்துவந்த ராஜாத்தி ஆனைமுடியாரையும், கஜபதியையும் பார்த்தவுடன் சுணங்கிப் போனாள். தேங்கி நின்றாள்.

''வாங்க வாங்க...ஆமா பய யாருன்னு சொன்னிச்சா உன் தங்கச்சி?'' ஆவலாகக் கேட்டான் கஜபதி.

''சொன்னிச்சுங்க. ஆனா பய கொஞ்சம் பெரிய இடம். நீங்க மனசு வெச்சாதான் இந்தக் கல்யாணம் நடக்கும். உங்களை நம்பித்தான் அது பய யாருன்னே வெளிய சொல்லியிருக்கு.''



''எல்லாம் சரி முத்துமணி. ஆள் யாருன்னு சொல்லு. நம்ம கடவுளுக்கு கட்டுப்படாதவன்தான் இந்த ஏரியாவுலையே இருக்க முடியாதே...''

''பேரு பொன்ராசாம். நம்ம ஆத்தா கோவில் தர்மகர்த்தா தங்கமுத்துத்தேவர் மகன்''

—அந்தப் பேரைக் கேட்டதும் ஆனைமுடியாரும், கஜபதியும் ஒரு வினாடி விக்கித்துப் போய்விட்டனர். அதே சமயம் ராஜாத்தி சொல்லப் போகும் நபரை சாமர்த்தியமாக கொன்றாக வேண்டிய அந்த முக்கியமான வேலைகூட மிச்சமாகிவிட்ட சந்தோஷம் வேறு அவர்களுக்குள்.

''யாரு பொன்ராசா...நம்ம தர்மகர்த்தா மகன் பொன்ராசா? அடடே ரொம்ப நல்ல பயலாச்சே. அவன்தானா?''

—நல்ல பயலாத்தான் பிடிச்சிருக்கா உன் தங்கச்சி. கவலைப்படாதே ஜமாய்ச்சிபிடுவோம். சொச்சத்தை நான் பாத்துக்கறேன். ஆமா விஷயம் வேற யாருக்கெல்லாம் தெரியும்?''

—ஆனைமுடியாரே சுதாரிப்போடு நேரடியாகக் கேட்டார்.

''யாருக்கும் தெரியாதுய்யா. எனக்கும் இப்ப உங்களுக்கும் மட்டும்தான் தெரியும்...''

''ரொம்ப நல்லது இனி நீங்க இரண்டு பேரும் வெளிய தங்க வேண்டாம். இந்த மாளிகையிலையே தங்கிடுங்க. சொச்சத்தை நான் பாத்துக்கறேன். எக்காரணம் கொண்டும் யார் கிட்டையும் பொன்ராசுன்னு மூச்சு விட்றாதீங்க.''

—ஆனைமுடியாரின் எச்சரிக்கையை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டாள் முத்துமணி.

—கைதட்டினார் ஆனைமுடியார். இரண்டு வேலைக் காரர்கள் வந்தனர்.

''இவுகளை நம்ம சூடாமணி அறையில தங்க வைங்க. அக்கவுண்டன்ட் வந்தா ஐயாயிரம் பணம் வாங்கி புது உடுப்பெல்லாம் ஆசைபோல வாங்கிக் கொடுங்க...''

—ஆனைமுடியாரின் அந்த உத்தரவு கேட்டு பரவசப் பட்டு போனாள் முத்துமணி.

—ராஜாத்தியிடம் எந்த சலனமுமில்லை. இருவரும் அங்கிருந்து வேலைக்காரனுடன் நகர்ந்தார்கள்.

கஜபதி ஆனைமுடியாரை நெருங்கினான்.

''அடுத்த ஸ்டெப் என்ன?'' ஆனைமுடியார் கேட்க கஜபதி ரகசியமாய் வாய் திறந்தான்.

''கம்பம் காட்டுல பொன்ராசுவை யானை மிதிச் சிடிச்சு. ஆள் அவுட் அப்படின்னு சொல்லி அந்த புள்ளையை நாலு நாள் அதும்போக்குல அழ விடுவோம். அப்பால மெள்ள பக்குவமா நடராசுவை கட்டிக்கச் சொல்வோம்...''

''முடியாதுன்னு மறுத்தா...''

''மறுக்கறதாவது...இந்த மாளிகைக்குள்ற கால் வெச்சுட்டால்ல...இனி அவ தலையெழுத்தை நாம நம்ம விருப்பத்துக்கு எழுதுவோம். யார் கேட்க முடியும் கடவுளே?''

''பாத்து பக்குவமா நடந்துக்கோ. சந்திரசூடாமணி விஷயம் மாதிரி போலீஸ் கோர்ட்டுன்னு போயிடப் போகுது...''

''நல்ல மாட்டுக்கு ஒரு சூடுதான் கடவுளே...பாத்துப் பாத்துதான் அடியெடுத்து வைக்கிறேன்.''



''நாமன்னு சொல்லு...''

''வாஸ்தவம்தான். கடவுளே எனக்கொரு ஆதங்கம். என்னை மகன் மாதிரி மகன்மாதிரின்னு சொல்லிங்களே... மகனாகவே தத்து எடுத்துக்கக் கூடாதா?''—கஜபதி தயங்கித் தயங்கித்தான் இப்படிக் கேட்டான்.

—கஜபதி அப்படிக் கேட்கவும் ஆனைமுடியார் அவனை அதிர்ச்சியோடு பார்த்தார்.

''பாவிப் பயலே உனக்குள்ற இப்படி கூட ஒரு ஆசை இருக்கா?'' என்று அதிர்ந்துபோய் கேட்டார்.

''ஏன் கடவுளே...அந்த ஆசை பேராசையா? தப்பான ஆசையா? உங்க அலிப்பிள்ளைக்கு நான் எதுல குறைச்சல். நீங்க என்னுன்னா நான் என்னெய்யா நிக்கிறேனே...?''

—கஜபதியின் அந்த பதிலில் அவன் நடராசுவை அலிப்பிள்ளை என்று சொன்ன சொல் அவர் மனதில் ஆழ மாகத் தைத்தது. அவரது ரோஷத்தின் மேல் அவன் தீ மூட்டிவிட்ட மாதிரி ஆகிப்போனது. ஆனாலும் அடக்கிக் கொண்டார். இப்போதைக்கு கஜபதியை விட்டால் அந்தரங்க சுத்தியோடு தனக்கு சேவை செய்ய ஆள் இல்லை என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். அப்படி இப்படி என்று தன் விசுவாசத்துக்கு கஜபதி, சொத் திலேயே நேர் பங்கு கேட்க ஆசைப்பட்டு தான் தத்துப் பிள்ளை அது இது என்று அவன் பேசுவதாக அவரால் உடனேயே புரிந்து கொள்ளவும் முடிந்தது.

மீசையை நீவியபடி அவனை செயற்கையான சிரிப் போடு பார்த்தார்.

''கஜா...இந்த நடராசு விஷயம் நல்லபடி முடியட்டும் உன்னை ஊரறிய தத்து எடுத்துக்கறேன் கவலையே படாதே'' என்றார்.

கஜபதி நன்றியோடு பார்த்தான். புதுத்தெம்பு வந்த மாதிரி அங்கிருந்து அகன்றான்.

நடு ஹாலில் அப்படியே நாற்காலியில் சாய்ந்தார்.

அண்ணாந்தார். ராலிஸ்பேன் நான்கு சிறகுடன் ஓடிக்கொண்டிருந்தது.

காற்றின் வீச்சம் போதாது போல் தோன்றியது. தனது ஏ.சி. அறை நோக்கி நடையிட ஆரம்பித்தார்.

சந்திரசூடாமணியின் அறையில் மிகப்பெரிய பொன்னூஞ்சல் அம்மனின் புகைப்படம். அதன் முன் குத்துவிளக்கு.

சூடாமணி இருந்தவரை நான் நிதமும் எரிந்து கொண்டிருந்தேன் என்று அது சொல்லாமல் அதன் எண்ணெய் கசண்டுகள் ராஜாத்தியை பார்த்தன.

முதல் காரியமாக அந்த விளக்கை ஏற்றினாள். அறையை முத்துமணி வியந்து போய் பார்த்துக் கொண்டிருந்தாள். எத்தனை அழகு.

எத்தனை கம்பீரம்.

ஒரு பீரோ நிறைய பட்டுப்புடவை. அற்புதமான டிரெஸ்ஸிங் டேபிள். அதில் சர்வ சாதாரணமாகக் கிடக்கும் தங்க மூக்குத்தி, புல்லாக்கு, சந்திர, சூரிய பிரபைகள்.

''மகராசிக்கு இதையெல்லாம் அனுபவிக்க கொடுப்பினை இல்லாம போயிருச்சே''-என்று முத்துமணி அலுத்துக் கொள்வது ராஜாத்தியின் காதில் விழுந்தது திரும்பினாள். அசூயையுடன் பேசினாள்.

''அக்கா உங்கிட்ட ஒண்ணு கேக்கறேன். ஆனைமுடியாருக்கு ஏன் உன்மேல இப்படி ஒரு திடீர் கரிசனம்?'' ராஜாத்தி இப்படிக் கேட்கவும் முத்துமணி ஒரு வினாடி திகைத்துத்தான் போனாள்.



''தான் முந்தி விரித்ததற்குக் கிடைத்த பலன் என்று பச்சையாக சொல்லவா? இல்லை ஆனைமுடியார் எப்போதுமே நல்லவர் என்று சொல்லலாமா? - அவள் யோசித்து முடிப்பதற்குள் ராஜாத்தியே திரும்ப பேசினாள்.

''அக்கா ஆனைமுடியாரையும், அந்த ஜால்ரா கஜபதியையும் பார்த்தா எனக்கு நல்லவிதமாவே தோணமாட்டேங்குது. இவங்க ஏதோ சதி பண்றாங்கன்னு தோணுது...''—அவள் கருத்தைக் கேட்டு சிரிக்கத்தான் முடிந்தது முத்துமணியால். அப்படியே பயமும் கொஞ்சம் புகைபோல கிளம்பிப் பார்த்தது.

இதற்குள் முத்துமணிக்கு ஆனைமுடியாரிடம் இருந்து அழைப்பு வந்தது. புரிந்துகொண்டு கிளம்பினாள்.

ஆனைமுடியார் அவரது அந்தரங்க அறையில் விஸ்கி பாட்டிலை திறந்திருந்தார். வந்து நின்றவளைப் பார்த்து ''வா முத்து வா...'' என்று தெம்பாக வரவேற்றார். முத்துமணியிடம் இப்போது பயம் கலந்த மௌனம்.

''அட வா புள்ள பக்கத்துல...என்னமோ படுக்கைக்கு புதுசு மாதிரி வெக்கப்பட்டுக்கிட்டு...''

''அதுக்கில்லீங்க மனசுக்கு சங்கடமா இருக்கு அதான்.''

''என்ன சங்கடம்?'' வயசுப் பொண்ணு அங்க கல்யாண நினைப்போட இருக்கச்சே நான் இங்க உங்க பக்கத்துல படுக்கறது நல்லதுங்களா?''

''நல்லது கெட்டதை பத்தி இந்த மாளிகைல எனக்கு யார் ஆராய்ச்சி செஞ்சாலும் பிடிக்காது. இப்ப படுக்கப் போறியா இல்லியா?''

''படுக்கறேன்... படுக்கறேன். என் தங்கச்சிக்கு நல்ல விதமான கல்யாணம் முடிச்சிடுவீங்க தானே?''

''உனக்காக நான் எதையும் செய்வேன்.''

''நிஜமாவா?''—முத்துமணியின் வியப்புக்கு தேவரின் உதடு குவிப்பாய் பதில் சொல்ல ஆரம்பித்தது.

# 9

**போ**லீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் நீட்டிய இடத்தில் எல்லாம் கையெழுத்துப் போட்டுவிட்டு தனது வக்கிலுடன் வெளியே வந்து கொண்டிருந்தான் கஜபதி.

''இந்த கேஸ் ஒரு பெரிய இழுபறி. சட்டம் சம்பிரதாயம்னு போட்டு மனுஷன் உசிரை வாங்கறாங்க. நான் பைத்தியம்னு பைத்தியக்கார டாக்டர் சர்டிபிகேட் வேற தரணுமாக்கும். அவருக்கு எவ்வளவு லஞ்சம்?''—கஜபதி அலுத்துக் கொள்ள வக்கிலிடம் சிரிப்பு.

''ஆனைமுடியார் பண்ற குத்தங்களுக்கு ஏதோ இந்த மட்டுல நீங்க நடமாட முடிஞ்சதுக்கு சந்தோஷப்பட்டுக்குங்க. எப்படியோ... உங்களை மாதிரி பணக்கார கொழுப்புனால்தான் என்னை மாதிரி ஏழை வக்கீலுங்க வாடாம வாழ முடியுது. இப்பல்லாம் போலீசுக்கும் உங்களால வருமானம்.''—வக்கில் குத்தலாக குதர்க்கமாக பேச கஜபதி வக்கிலை முறைத்தான்.

—அவர்கள் கார் வாதநாராயணமரம் ஒன்றின் கீழ் அவர்களுக்காக காத்திருந்தது.

—காரை நெருங்கியபோது கார் அருகே ஜோசியர்!



—அவரைப் பார்த்த கஜபதிக்கு திக்கென்றது.

''என்ன ஜோசியரே... நீங்க இன்னும் ஊருக்கு போகலையா? போற போக்கை பார்த்தா இந்த ஊர்லையே டேரா போட்டுறுவீங்க போல தெரியுது. நாலு ஊர் போனா தானே பொழைப்பு நல்லபடி நடக்கும்?''

—கஜபதியின் கேள்வியை புறந்தள்ளியபடி ஜோசியர் அவனிடம் ஊன்றினார். மெல்ல வாய் திறந்தார்.

''போகத்தான் ஆசைபட்டேன். போகாதே... ஒரு அட்டகாசத்துக்கு ஏற்படப்போற அழிவை நின்னு பாத்துட்டு போன்னு அம்பாள் சொன்னா. அதுதான் நின்னுட்டேன்'' என்றார்.

''அழிவா? எங்களுக்கா? கும்புடப்போன தெய்வம் குறுக்க வந்த மாதிரி எல்லாம் எங்களுக்கு ரொம்ப சாதகமா வந்துகிட்டு இருக்கு ஜோசியரே.

''என் மேல இருக்கற கேசும் என் கடவுளுக்கு ஒரு தூசு. போகப் போக பார்க்கத்தானே போறீங்க...''

''திரும்பவும் சொல்றேன் கஜபதி... தப்புக்கு துணை போகாதே! மனுஷ புத்தி ஒரு எல்லைவரைதான். விதி ரொம்ப கொடுமையானது.''

''அதைதான் மதியால வெல்லலாம்னு சொல்றாங்களே...''

''அதுக்கும் கடவுள் அருள் வேணும்.''

''ஜோசியரே இந்த கடவுள் அருள் சமாச்சாரம் இருக்கே இது மகா குளறுபடியான விஷயம். இது சம்பந்தமா வளைச்சு வளைச்சு பேசி ஊரையே குழப்பலாம். எங்ககிட்ட அது வேகாது...''

''வாஸ்தவம்தான்...உன்னை விதிகிட்ட இருந்து காப்பாத்த நான் எவ்வளவு முயற்சி செய்தாலும் நீ அப்படி

பேசறதால என் நல்ல எண்ணம் உங்ககிட்ட வேகாது தான். ஹிரண்யன், ராவணன்னு யுகத்துக்கு யுகம் அசுரர் கள் பிறக்கறது வாடிக்கைதான் போல இருக்கு...''

''நீங்க முதல்ல புரியும்படி பேசுங்க. கடவுள்லாம் பொய். மனுஷனோட கற்பனைதான் கடவுள். ஏதோ அத்தால நாலு பேர் பொழைக்கவும் செய்யறாங்க. போய்ட்டு போவுது.

கடவுள் நிஜம்னா நேத்து மஹாராஷ்டிராவுல பூகம் பத்துல இப்படியா ஆயிரக் கணக்குல ஜனங்க சாவாங்க?

ஒரே நேரத்துல ஒரு ஊருக்கேவா விதி முடியும்?

மூணு மாச பிஞ்செல்லாம் செத்துருக்கு... அது என்ன பாவம் பண்ணியிருக்க முடியும் இப்படி சாக?

எல்லாம் இயற்கை சாமி... இயற்கை. அம்பாள் ஆட்டுக்குட்டின்னு நீங்க சொல்ற ஜோசியம் பொய்யாகி எங்க ஆயிரம் ஜன்னல் மாளிகைல எங்க கடவுள் காலை பிடிச்சு சம்பளம் வாங்கற நாள் உங்களுக்கு வராம பாத்துக்குங்க.

நான் வரட்டா?''

—கஜபதி ஒரு குட்டி பிரசங்கமே நடத்திவிட்டு காரில் ஏறினான். வக்கீல் பக்கத்திலேயே இருந்து அதை ரசித்துக் கொண்டிருந்தார்.

காரைக் கிளப்புமுன் கஜபதியிடம் சிடுக்கெடுத்த மாதிரி ஒரு சிந்தனை. டிரைவிங் சீட்டில் இருந்தபடியே ஜோசியர் பக்கம் திரும்பினான்.

''ஆமா... சூடாமணியம்மா எழவுக்கு மாளிகைக்கு வந்திருந்தீங்களே நம்ம நடராசுவுக்குகூட பெரியம் மைன்னு சொல்லி கடவுளை ஒரு பெரிய சிக்கல்ல இருந்து மீட்டதா கடவுள் சொன்னார்.



ஒருபக்கம் அழிஞ்சு போயிடுவோம்னு சொல்லிகிட்டே மறுபக்கம் இப்படி காப்பாத்த முயற்சி செய்யறீங்களே ஏன்?''

அந்த கேள்வி முன்னால் அர்த்தபுஷ்டியுள்ள ஒரு சிரிப்பை தான் பதிலாக வைத்தார் ஜோசியர்.

**லா**ட்ஜில் கூட்டம் ஏறிக்கொண்டிருந்தது. எல்லாம் ஜோசியருக்காக. சொன்னது சொன்னபடி நடந்தால் யாருக்குத்தான் வந்து பார்க்கத் தோன்றாது?

ஆனால் இப்படி கூட்டம் சேருவதும் வருபவர்களுக் காக பலன் சொல்வதும் ஜோசியருக்கு சலிப்பூட்டும் விஷயமாகி விட்டது.

எங்காவது ரிஷிகேசம் பக்கமா போய் மௌன சாமி யாகி தவம் செய்ய விரும்புகிறது அவர் மனது. ஆனால் முடிகிறதா என்ன? அப்படி கிளம்பிவிடலாம் என்று முடி வெடுத்த சமயத்தில்தான் ஆயிரம் ஜன்னல் மாளிகை விஜயம் அவருக்கு நேரிட்டது. அந்த மாளிகையே சமாதிக்காடாக ஆகப்போகும் பின்புலத்தை உணர்ந்த போதே அதிர்ச்சி. எல்லோர்க்கும் நல்ல பலனையே சொல்லி வந்த இடத்தில் இப்படியா ஒரு மோசமான செய்தியை சொல்ல வேண்டி வரும்? அதைவிட கொடுமை தங்கமுத்து தேவர் ஜோசியரை வந்து பார்த்ததுதான்!

காணாமல் போய்விட்டதாக அவர் கருதும் அவர் மகன் பொன்ராசின் ஜாதகத்தோடு அவர் ஜோசியரைப் பார்த்தபோது ஜோசியர் அந்த ஜாதகத்தைப் பார்த்து அதிர்ச்சிதான் முதலில் அடைந்தார். ஒரு மரண ஜாதகத் தைக் காட்டி வாழ்க்கை உண்டா என்று கேட்கும் தங்க முத்து தேவருக்கு என்ன சமாதானம் சொல்ல?

தேவரோ மிகவும் மனம் உடைந்து போயிருந்தார்.

ஜோசியர் எதாவது நல்ல பலன் சொல்லி தேற்ற மாட்டாரா என்கிற பரிதவிப்பு வேறு அவரிடம். இவரிடம் இப்போதைக்கு பொய்தான் சொல்ல வேண்டும் என்று தீர்மானித்தவர் 'உங்கள் மகன் கட்டாயம் திரும்பி வருவான்...உங்கள் குலம் நிச்சயம் விளங்கும்' என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

ஆனால் செத்தவன் திரும்பவும் வருவதாவது...? ஜாதகத்தை நோண்டினால் வம்சம் விளங்கித் தீர்வதற்குண்டான சாத்தியங்கள் பளிச்சிடுகின்றன.

—ஜோசியரே குழம்பித்தான் போனார். தியானத்தில் மூழ்கி குழப்பத்துக்கு விடை தேடியபோது அம்பாளே அவரை அந்த ஊரைவிட்டுப் போகாமல் சகலத்தையும் இருந்து கவனிக்கச் சொல்வதுபோல் ஒரு உள்ளுணர்வு.

அன்று அம்பாளாய் அவர் மனதில் உருக்கொண்டவளை, அவர் பொன்னூஞ்சல் அம்மன் ஆலயத்தில் பார்த்தபோது விக்கித்துப் போய்விட்டார்...

கோயில் பூசாரியிடம் அந்த அம்மனின் கோவில் வரலாற்றைக் கேட்டபோதோ அதிலும் ஆயிரம் ஜன்னல் மாளிகையின் தொடர்புகள்.

குறிப்பாக ஆனைமுடியார் வம்சம் முடிந்து போனால் சொத்துக்கள் பொன்னூஞ்சல் அம்மனுக்கு என்னும் அந்த ஷரத்து ஜோசியரை இடித்தது.

வம்சம்தான் முடிந்துவிட்டதே...

மண்ணோடு மண் ஆகப் போகிறதே... நடராசுவையும், ஆனைமுடியாரையும் நேரிலேயே பார்த்து தெரிந்து கொண்ட சங்கதிகள் அல்லவா அவை?

இவை எப்படி நிகழப் போகின்றன...? இருந்து வேடிக்கை பார்க்க உள்ளுணர்வு துடித்தது. ஏனோ எஜமான் விசுவாசியான அந்த கஜபதி மேல் துளி கரிசனம் வேறு வந்து ஒட்டியது. நடுவில் பொன்ராசு விவகாரம் வேறு...இதோ இன்றும் தேவர் ஜோசியரைப் பார்க்க வந்திருக்கிறார். கூட்டத்தோடு கூட்டமாக! அவரைப் பார்க்க ஜோசியருக்கே பரிதாபமாக இருக்கிறது. கூடவே அவரது சகதர்மிணி தேவச்சி என்னும் தங்க பாக்கியம் வேறு.



எல்லோரையும் அனுப்பிவிட்டு இருவரையும் தனியாக அழைத்து பேச ஆரம்பித்தார். தங்கபாக்கியம் கண்களில் சமுத்திரத்தளும்பலாய் கண்ணீர்.

"எனக்குன்னு இருக்கறது ஒரே மகன் சாமி. இப்படி பண்ணிப்போட்டு போயிட்டான். எங்க போனானோ என்ன ஆனானோ தெரியலை..."- தங்கபாக்கியத்தின் புலம்பலில் தாய்மையின் பரிசுத்தமான வேதனை.

—ஜோசியருக்கு வலித்தது.

"ஜோசியரய்யா... நான் உங்களை வந்து பார்த்த மாதிரி இவ வேற ஒரு நபரை போய் பார்த்திருக்கா. அந்த ஆள் ஒரு மாந்திரீகனாம். அவன் வெத்தலைல மை போட்டுப் பார்த்துட்டு உங்க மகன் செத்து பத்து நாளாவுதுன்னு சொல்லிட்டான். அதை கேட்டதுல இருந்து ஒரே புலம்பல்.

அந்த மாந்திரீகனுக்குத் துளியும் அறிவில்லை. இப்படியா ஒரு பொட்டச்சிகிட்ட ஜோசியம் சொல்லுவான்."

—தங்கமுத்து தேவரின் பேச்சு ஜோசியரை ஒரு நெம்பு நெம்பிவிட்டது.

எதைச் சொல்லி இவர்களை சமாதானப் படுத்த? மனதில் கலவரக் காற்று...தங்கமுத்து தேவரை மட்டும் தனியாக அழைத்தார். இனியும் உண்மையை மறைத்து அவர்களுக்குள் எதிர்பார்ப்பை வளர்த்து மிக மோசமாக அப்பொழுது அவர்கள் மனதை உடைப்

பதைவிட இப்பொழுதே அதைச் சொல்லி விடுவது நல்லது என்று பட்டது.

''தேவர் மனதை தேத்திக்குங்க...ஜாதகப்படி உங்க மகனுக்கு விதி முடிஞ்சாச்சு. அவனுக்கு துர்மரணம் சம்பவிச்சிருக்கணும். ஆனா உங்க பரம்பரைக்கு வாரிசு உண்டு...''

—ஜோசியரின் பதிலால் தேவரின் காலுக்குக் கீழே பூமியே நழுவுகிறது.

''நிஜம் பொய்ங்கறதுக்கு என்கிட்ட இடம் இல்லை. நான் ஜாதகக் கட்டங்களை கணக்குப் போட்டு சொல்ற ஒரு கணக்கன். அம்பாள் எனக்குள்ற சொல்றதை எடுத்து சொல்றவன்—அவ்வளவுதான்''

''அட எப்படிய்யா...என் பையன் விதி முடிஞ்சு போச்சங்கறீங்க. அப்புறம் எப்படிங்க வாரிசு வரும்?''

''வரும்...கட்டாயம் வரும்...அதைப் பார்க்கற ஆசை எனக்கும் உண்டு. அதுக்குதான் நானும் காத்திருக்கேன்.''

''இவ்வளவு சொல்றீங்களே அவன் எப்படி செத்திருப்பான் அதைச் சொல்ல முடியுமா?''

''துர்மரணம். நிச்சயமா ரத்தம் சிந்தித்தான் செத்திருப்பான். இன்னொன்னு சொல்றேன். அவன் உடம்பை மண்ணோ நெருப்போ சாப்பிட்டிருக்க வழியில்லை...''

''சாமி உங்க வாக்கு என்னை துவட்டுவது சாமி துவட்டுவது. அங்க பாத்திங்களா என் சம்சாரத்தை. அவ உங்களை நம்பி வந்துருக்கா. அவ இதை கேள்விப்பட்டா தாங்குவாளா? நான் அந்த ஆத்தாளோட பரம பக்தன் சாமி. என்னை அவ இப்படி சோதிக்கலாமா?''

''இதெல்லாம் பூர்வ ஜென்ம வினை...''



''இருக்கட்டும் சாமி... அப்ப என் பக்திக்கு அர்த்தம் என்ன இருக்கு? நடக்கறது நடந்தே தீரும்னா நல்லபடி வாழற எண்ணம் மனுஷன்கிட்ட போயிடுமே. நல்லபடி வாழ்ந்தா புண்ணியம். அது மனுஷனை ஆபத்துல காப்பாத்துங்கறதெல்லாம் பொய்யா?''

''பொய்யில்லை தேவர். அந்த புண்ணியமெல்லாம் நிச்சயம் உங்களுக்கு துணை செய்யும். கவலையே படாதீங்க...''

''உங்க கணிப்புப்படி என் மகனே போயிட்டான். இனி எந்தப் புண்ணியத்தால சாமி என் மகனை காப்பாத்த முடியும்?''

''ஒரு உயிரைக் காப்பாத்தறத விட ஒரு தலைமுறையை காப்பாத்தறது பெரிசில்லையா? பொறுத்திருங்க என்ன நடக்குதுன்னு பார்ப்போம்.'' ஜோசியர் அதற்கு மேல் பேசாமல் எழுந்திருந்து அம்பாள் படத்தின் எதிரே போய் அமர்ந்து கொண்டார்.

வாழ்வின் விதி இதுபோல் நடத்தும் கண்ணாமூச்சி விளையாட்டால்தான் எத்தனை நொறுங்கல்கள் அவர் மனதிலும் சகதி. அந்தச் சகதியில் அவரது நம்பிக்கை சிக்கிக் கொண்டு மீள முடியாமல் தவிப்பது போல் ஒரு பிரமை வேறு.

''தாயே...தாயே...'' அவரின் ஆழ்மனது பிரபஞ்ச தேவியின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு துதிக்க ஆரம்பித்து விட்டது.

# 10

எஸ்டேட் பங்களாவில் நடராசு மிக சோர்வாக இருந்தான். தாய்க்காரி இறந்த விஷயம் கூட அவனுக்குத் தெரியாது என்கிற ஒரு நிலை.

ஜெயில் கைதிகளுக்கு சோறிடுவது போல் சகலமும் அந்த அறைக்குள்ளேயே வைத்து முடிந்து விடுகிறது.

அவனுக்குள் துக்கம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. தாங்க முடியாத அளவு மனதில் சோர்வு வேறு.

கதவைப் போட்டு உடைக்க ஆரம்பித்தான். ''டேய் வெளியே விடுங்கடா...வெளியே விடுங்கடா...எங்கம்மாவுக்கு என்னடா ஆச்சு? எங்கம்மா எங்கடா?'' -கதறிப் பார்த்தான் பலனில்லாமல் கதவோரமாகவே சரிந்து விழுந்தான்.

—இது போல் பல நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது. வெளியே உள்ள சில வேலைக்காரர்களுக்கே மிகச் சங்கடமாக இருக்கிறது.

பெரிய தவறு ஒன்றுக்குத் துணை போவதாக அவர்களுக்குள் குற்ற உணர்வு வேறு.

விசுவாசம் என்கிற போர்வையில் அனைத்தையும் போட்டு மூட வேண்டியிருப்பதை எண்ணி சிலருக்கு கொந்தளிப்பாகக் கூட இருந்தது.

உள்ளே நடராசு கதவோரம் மயக்கம் நீங்கி சோர்வாக கதவை பிராண்டும் அந்த வேளையில் அவர்களது கொந்தளிப்புகள் வார்த்தைகளாக வடிவமெடுக்கத் தொடங்கின. நடராசுவின் காதிலும் அவை விழவே செய்தன!



''எலே என்னடா இது...அந்தமான் சிறைல ஆயுள் தண்டனை கைதிய பூட்டி வெச்சிருக்கிற மாதிரி...''

''என்ன பண்ணச் சொல்றே? சொல்றதை கேக்கத் தானே நமக்கு சம்பளம்.''

''அதுக்காக சின்ன எஜமானை இப்படியா போட்டு பூட்டி வைக்கறது? ஆத்தாகாரிக்கு கொள்ளி கூட போட விடாம பண்ணிட்டாங்களே...பாவம் அந்த பொம்பளை அநியாயமா செத்து வெச்சா! கொன்ன அந்த கஜபதி என்னடான்னா மாளிகைல ராஜா மாதிரி திரியறான்.

—ஒரே தர்பார்தான். தடபுடல்தான்...''

''எல்லாம் சொத்து படுத்தறபாடு தோஸ்து...சத்தம் போட்டு பேசாதே. அப்புறம் நம்ம கதியும் அந்த பொன்ராசு கதி மாதிரி ஆயிடும்!

வாயை மூடிகிட்டு வருவோம். போவோம். இந்த மாளிகை வேலைங்கறது ஒரு வழிப்பாதை. இதுல வர மட்டும்தான் முடியும். வேலையை விட்டு போகவும் முடியாது.

ஒருத்தன் வேலையை விட்டுடறேன்னு சொன்னப்போ உலகத்தை விட்டுடறேன்னு சொல்லுன்னு மிரட்டுனவன் அந்த கஜபதி.''

''சும்மா மிரட்டற ஆளும் கிடையாது. சொன்னா சொல்ற மாதிரி செய்யறவன் அவன். இல்லேன்னா அவனை ஆனைமுடியார் அவ்வளவு பக்கத்துல வெச்சுக்குவாரா?

பொண்டாட்டியையே கொன்னவனை இன்னும் தலையில தூக்கி வெச்சிகிட்டிருக்கார்னா விஷயம் இல்லாமலா?''

''இந்த சின்ன எஜமான் ஒரு சரியான பொண்டுகப் பய. எல்லா சிக்கலும் இந்த ஆளாலதான். ஆம்

பளையா லட்சணமா இருந்திருந்தா இப்படியெல்லாம் நடந்திருக்குமா?''

''நான் எல்லாம் இப்படி ஒரு பிழைப்பு பிழைக்கற துக்கு நாக்கை புடிங்கிட்டு செத்திருப்பேன் தெரியுமா?''

—நெடுநேரம் இதுபோல் அவர்கள் கருத்து பரிமாற்றம் செய்து கொண்டிருந்து விட்டு களைத்த நேரம் எஸ்டேட்டின் மலைப் பாதையில் கஜபதி ஏறிவரும் ஜீப்பின் சீற்றமான நுழைவு. அறைக்குள்ளேயோ நடராசு மனது வெதும்பி ஒரு புதிய முடிவுக்கு வந்திருந்தான்.

ஊருக்குள் நடராசு ராஜாத்தியை கெடுத்து கர்ப்ப மாக்கிவிட்ட வதந்தியை மிகச் சாமர்த்தியமாக பரப்பின சந்தோஷத்தோடு அந்த மலைப்பாதையில் ஜீப்பை ஓட்டிக் கொண்டிருந்தான் கஜபதி.

அந்த வதந்தி அசுர வேகத்தோடு அந்த மலைப் பள்ளத்தாக்கு முழுக்க பரவிக் கொண்டிருந்தது.

ராஜாத்தியே வந்து ஆனைமுடியாரைப் பார்த்து நியாயம் கேட்டுப் புலம்பியதாகவும் வதந்தி விரிவடைந்து கொண்டே போனது.

''இது எப்படி நடந்துச்சு?''

''எஸ்டேட் பங்களாவுல ராஜாத்தி வேலை பார்க்கை யில இப்படி ஆயிப்போச்சாம்.''

''ஆனைமுடியார் என்ன பண்ணப் போறார்...''

''ராஜாத்திக்கே நடராசுவை கட்டி வெச்சுடப் போறாரு.''

''இப்பதான் தான் ஒரு நிஜமான பெரியமனுஷன்னு நிரூபிச்சிருக்காரு...''

''அந்த பொண்ணு ராஜாத்தி இப்ப ஆயிரம் ஜன்னல் மாளிகைலதான் இருக்குதாம்...''

27851



—விஷயம் மெல்ல தேவரின் காதுக்கும் போயிருந்தது. அவர் பொன்ராசு விஷயத்தில் கதி கலங்கிக் கிடந்த படியால் அந்த விஷயம் அவ்வளவு முக்கியத்துவம் தரவில்லை.

பூசாரிகூட வந்து ஆதங்கப்பட்டுக் கொண்டான்.

''தேவரய்யா... கேட்டீங்களா விஷயத்தை? ஆனை முடியார் மகன் நடராசு ஒரு மலைக்குடிச்சியை கெடுத் துட்டானாம் — அவ இப்ப முழுகாம இருக்காளாம். ஆனைமுடியார் செப்படி வித்தையா?—இல்லை நிஜமா?''

''சொத்துக்காக அந்த ஆள் எதையும் செய்வான். எனக்கு இந்த விவகாரமா பெரிசு... என் பொன்ராசு நினைப்பே என்னை கொன்னுகிட்டு இருக்கும்போது..''

இப்படியாக வதந்தி நிஜமாக, சத்யமான ஒன்றாக, ஆனைமுடியாரின் வம்சவிளக்கு அணையலே அணையாது என்கிற ஜுரில் ஊரில் திரிய, அதை உத்தேசித்து சந்தோஷத்துடன் துளியும் நிரடல் இன்றி கஜபதி ஜீப்பில் வந்து இறங்கியதைப் பார்க்க வேலைக்கார பட்டாளத்துக்கெல்லாம் சற்று பொறாமையாகத்தான் இருந்தது.

பங்களாவினுள் ராஜநடை போட்டு நடக்கத் தொடங்குகிறான் கஜபதி. நேராக கால்களை நடராசு வைப் பூட்டிய அறை பக்கம்தான் சென்றன.

ஒருவன் ஓடிவந்து பூட்டைத் திறக்கத் தொடங்கி னான்.

''விடிய விடிய கத்தி கிட்டே யிருந்தாருங்க...''-என்ற தகவலோடு.

—கதவு திறக்கப்பட்டது. கஜபதி உள்ளே காலை வைத்து தலையை நிமிர்த்திய மாத்திரத்தில் இடி இறங் கினது போல் ஸ்தம்பித்தான்.

எதிரே படுக்கை விரிப்பை தூக்குக் கயிறாக்கி அதை சீலிங் ஃபேனில் வளைத்துக் கட்டி தன்னைத் தொங்க விட்டபடி முடிந்து போயிருந்தான் நடராசு!

**சொ**ல்ல முடியாத சோகத்தில் இருந்தாள் ராஜாத்தி. பொன்ராசுவை யானை மிதித்து கொன்றுவிட்டது என்று அவளிடம் சேர்ப்பிக்கப்பட்ட தகவலின் எதிரொலி அது!

ஆனைமுடியார் அவள் எதிரே மகாசோகமாக உட்கார்ந்திருந்தார்.

''நாம ஒண்ணு நினைச்சா... தெய்வம் ஒண்ணு நினைக்கும்னுவாங்க, அது இதான் போல...''-அவரிடம் வருத்தம் மணக்கும் ஸ்லாகிப்பு வேறு.

''நல்ல வேளை தாயி... கல்யாணத்துக்கு பிறகு இப்படி ஆகியிருந்தா என்ன பண்ண முடியும்? ஏதோ முன்னால ஆகவும் தாலி தப்பிச்சுச்சுன்னு வெச்சுக்க வேண்டியதுதான்.''

அவர் பேசப்பேச அவளுக்கு நாராசமாக இருந்தது. இது ஏதோ சதி என்பதாக மனதில் கணக்கு ஓடியது. இயலாமை நிமித்தம் குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தாள்.

''அவர் செத்தது நிஜமா... இருக்காது பொய் சொல் றீங்க'' என்று அரற்றினாள். ஆனைமுடியார் அவளின் அந்த அரற்றல் முன் சற்று சுண்டிப் போனார்.

''அவர் செத்தது நிஜம்னா அவர் உடம்பு இப்ப எங்கே?''

—அடுத்த கேள்வியில் ஆனைமுடியாரிடம் மேலும் விறைப்பு, பக்கத்தில்நிற்கும் முத்துமணியைப் பார்த்தார்.

அவளுக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆனைமுடியாரே ராஜாத்தியை நிமிர்த்தப் பார்த்தார்.



''தா பாரு தாயி...நான் உன் அப்பா மாதிரி...உனக்கு கெடுதல் நினைக்கறதால எனக்கு என்ன வந்திட முடியும்? நீ என்ன கோடீஸ்வரியா? இல்லை எனக்கு சரியான போட்டி உள்ளவளா? எந்த விதத்துல நீ எனக்கு சரி... உன்கிட்ட பொய் சொல்லி எனக்கு ஆகப்போறதென்ன?

தா முத்துமணி... நல்லதுக்கு காலமில்லங்கறது இதானா? மலைல கஞ்சி குடிக்கக்கூட வக்கத்துகிடந்திங்க. இப்ப இந்த மாளிகைல ராணி மாதிரி இருக்கீங்க

ஏதோ ஏழைக்கு என்னாலான சகாயம்னு நான் பெரிய மனசு பண்ணிக்கிட்டிருக்கேன். உன் தங்கச்சி அதை கெடுத்துக்கப் போவுது—பார்த்து!''

—ஆனைமுடியார் அவளுக்கு ஆறுதல் சொல்கின்ற சாக்கில் தன்பொய் கோபத்தையும் கலந்து·மெழுகிப் பேசி விட்டு எழுந்து அந்த அறையை விட்டு வெளியே வந்தார்.

பள்ளத்தாக்கின் மணமான காற்று பக்கத்து ஐநூற்றி பத்தாவது ஜன்னல் வழியாக சிலீரென்று வந்து அவர்மேல் மோதி அகன்றது.

அந்த தேக்கு ஜன்னல் வழியாக கம்பிகளை ஊடுருவி வெளியே நோட்டமிட்டார்.

மாளிகைத் தோட்டம் தெரிந்தது. மல்லிகைச்செடிகள் தெரிந்தன. ஒரு சாரியில் கனகாம்பரம்! ஆங்காங்கே நந்தியாவட்டைகூட வெள்ளைப்பூக்களை விரித்திருந்தது

தோட்டக்காரன் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந் தான். வண்டுக்கூட்டம் ஊர்வலம் நடத்திக் கொண்டி ருந்தது.

பார்க்க ரம்யமாக இருந்தது.

''இதெல்லாம் என் சொத்து!'' -எனும் நினைப்பால் ரத்தத்தில் குளுகோஸின் பெருக்கம்.

'எல்லாம்கைவிட்டுப் போய்விடுமோ?'- திடும்மென்று அச்சமும் ஏற்பட்டது. அதன் நிமித்தம் முதுகுத்தண்டு முறித்தமாதிரி ஒரு வேதனை.

தாளமுடியாதபடி நடக்க ஆரம்பித்தார். நாயக்கர் மகால் தூணைப்போல சிலதூண்கள் -அதன்மேல் அவரது நிழல் நீண்டு விகாரமாய் விழுந்து அவரையே பயமுறுத்துகிறது.

—நடுவில் ஜோசியர் முகம் வேறு மின்னுகிறது.

'அந்த நபர் சொன்னது போல குலமே மொத்தமும் அழிந்து விடுமோ?'

—கேள்வியோடு தாடையை வருடுகிறார். ஒருக்கால் அப்படி நிகழ்ந்து விட்டால்...? சந்தேக ஊஞ்சல் கட்டி ,சர் சர்...' என்று ஆடுகிறார்.

இறுதியாக ஒருமுடிவுக்கு வந்தமாதிரி தனது கஜானா அறை நோக்கி நடந்தார்.

—ஆயிரம் ஜன்னல் மாளிகையின் இதயப்பகுதி.

—சுவரோடு பதிக்கப்பட்ட இரும்புக் குழிகளும் எவராலும் கன்னம் வைக்கப்பட முடியாத ரகசிய அறைக் கூடுகளும் கொண்ட பிரதான அறை. உள்ளே நுழைந்து கதவை சாத்திக் கொண்டவர் முதல் காரியமாக தங்கப் பிறையைத் திறந்தார். பாளத் தங்கத்துடன் ஆபரணங்களும் சேர்ந்து பளீரிட்ட பளபளப்பில் அவருக்கேகண்கள் கூசியது.

மொத்தமாய் முப்பது கிலோ பக்கம் இருந்தது இப்படியே வைரம். நவரத்தினம் என்று ஒரு பார்வை பார்த்தவர் பணப்பெட்டகத்தை திறந்தபோது ரூபாய் நோட்டாகவே மூன்று கோடி சொச்சம் இருப்பதைப் பார்த்து நெடுநேரம் யோசித்தார்.



'இவ்வளவையும் உடனடியாக இடம் மாற்ற வேண்டும். பச்சைக் கூமாச்சி மலை கஞ்சாத் தோட்டம்தான் இதற்கு சரியான இடம்'-என்பதாக தீர்மானித்து வழியும் வியர்வையை துடைத்துப் போட்டபடி அனைத்தையும் மூடிவிட்டு அறைக்கதவையும் சாத்திக்கொண்டு பெரிய பூட்டால் அதை பூட்டித் திரும்பிய சமயம் புயல் காற்று இப்படித்தான் வேகமெடுக்கும் எனும்படியான வேகத்துடன் எதிரே கஜபதி!

வந்த வேகத்தில் ஆணைமுடியார் மேல் மோதி நாக்கு வெளித்தள்ள நிமிர்ந்தான்.

''என்ன கஜா... எதுக்கு இத்தனை வேகம்?''-ஆனைமுடியார் எதிர்பார்ப்போடு கேட்ட கேள்வி முன் கஜபதியிடம் வார்த்தை வரவில்லை.

''சரி சரி தண்ணியை குடிச்சிபிட்டு சொல்லு.'' என்றவர் மேல் மறுப்போடு விழுந்தவன் திணறித் திணறி வார்த்தையை பொறுக்கி பேச ஆரம்பித்தான்.

''கடவுளே—நடராசு நம்மளை ஏமாத்திடிச்சு'' என்றான்.

''என்னடா சொல்றே?''

''நடராசு தூக்குல தொங்கிட்டான் கடவுளே தூக்குல தொங்கிட்டான்...''

''எலே என்னடா சொல்றே''

''அட ஆமாம் கடவுளே. கிறுக்குப் பய இப்படி பண்ணிக்குவான்னு தெரியாம போயிடிச்சு. எஸ்டேட் பங்களாவுல படுக்கை விரிப்பாலேயே தூக்கு போட்டுக்கிட்டான் கடவுளே.'':

நிஜமாலுமே மயக்கம் வந்தது ஆனைமுடியாருக்கு!

# 11

அத்தனை வேகமாக அந்த ஜீப் அந்த மலைப் பிராந்தியத்தில் ஓடி யாருமே பார்த்ததில்லை.

ஜீப்பில் கஜபதி டிரைவிங் சீட்டில்!

பின்னால் ஆனைமுடியாரும் முத்துமணியும் ஒரு வரிசையில் அமர்ந்திருக்க மழையில் நனைந்த குருவிபோல் ஒரு ஓரமாக சோகமாய் ராஜாத்தி.

''ஆமா எங்க இவ்வளவு வேகமாப் போறீங்க?''

—முத்துமணி ஆனைமுடியாரைப் பார்த்து தயங்கித் தயங்கிக் கேட்கிறாள்.

''மலை பங்களாக்கு...''

''எதுக்கு?''

''இனிமே நீ கேள்வி கேக்கக் கூடாது. நா சொல்றதைத்தான் கேக்கணும்''-ஆனைமுடியார் கர்ஜிக்காத குறை.

ராஜாத்தி அதைக்கேட்டு வெடுக்கென்று நிமிர்ந்தாள்.

''உங்க பேச்சை நாங்க ஏன் கேக்கணும்...நீங்க என்ன எங்களுக்கு உறவா? இல்ல நாங்கதான் உங்க அடிமையா?''

—ராஜாத்தியின் அந்த வெடுக்கென்ற பேச்சில் ஆனைமுடியாரின் மீசையில் தீப்பிடித்த மாதிரி ஒரு பதபதப்பு.

''அடிமையான்னா கேக்கறே...அப்படித்தான்னு வெச்சுக்கோயன்.''



—ஆனைமுடியார் பதிலைத் தொடர்ந்து அந்த ஜீப் பங்களாவை எட்டி விட்டிருந்தது.ஜீப்பிலிருந்து இறங்கியவர் இருவரையும் முறைத்துப் பார்க்க இருவரும் தயங்கித் தயங்கி இறங்கினார்கள்.

கஜபதி ஜீப் எஞ்ஜினை அமைதிப்படுத்தி விட்டு இறங்கி ஓடி வந்து ஒருவன் காதைக் கடித்தான்.

அவன் கோயில் மாட்டைவிட கொடுமையாக தலையை ஆட்டிவிட்டு அங்கிருந்து ஓடினான்.

''உள்ற வாங்க. இனி உங்க உலகம் இதுதான்...'' என்றார் ஆனைமுடியார்.

மலங்க மலங்க விழித்தபடி நடந்தாள் முத்துமணி.

''அக்கா வாக்கா...இந்த இடம் நமக்கு சரிப்பட்டு வராது. மலைக்காடும் குடிசையும் போதும்கா...''

நடப்பவளை தடுத்து இழுத்தாள். முத்துமணியிடம் இனம் புரியாத மௌனம்.

''அவ கிடக்கிறா முத்து நீ நட...என் பேச்சைக் கேளு நீ இனிமே என் ராணி...''-இது ஆனைமுடியாரின் கித்தாப்பான குரல்.

''அக்கா...நீ வேணா ராணியா இருந்துக்கோ. நா வரேன்''-ராஜாத்தி திரும்பி நடக்க ஆரம்பித்தாள். அதற்குள் ஒருவன் பங்களாவின் வாசல் கதவை இழுத்து பூட்டி விட்டு போனான்.

''இப்ப என்னை வெளியே விடப்போறியா இல்லியா?''

''வெளிய போய் என்ன பண்ணுவே?''

''நான் என்னமோ பண்ணிக்கறேன் உனக்கென்ன?''

''சொல்ற பேச்சைக் கேளு. பிள்ளைதாச்சிக்காரி வேற நீ. உனக்கு நல்லபடி பிரசவம் ஆகனும்னு நான் ஆசைப் படறேன். குங்குமப்பூல இருந்து குல்கந்து வரை நீ எதைக் கேட்டாலும் வாங்கித் தரேன். பேசாம இங்க இரு.''

''நீ யார் எனக்கு வாங்கித் தர?''

''உம்...உன் மாமனார்...''

''தூ...நீ என் மாமனாரா? என் பொன்ராசுவோட அப்பனுக்கு மட்டும்தான் அப்படிச் சொல்ற உரிமை...''

''செத்தவனைப் பத்தி ஏண்டி பேசி நேரத்தை வீணாக்கறே?''

''அவரு சாகலை. உசுரோடதான் இருக்காரு. நீ தான் பொய் சொல்றே...''

''கொன்னதே நாங்கடி...''-ஆனைமுடியார் வாய் தவறி உணர்ச்சி வேகத்தில் சொல்லிவிட்டு பின்னர் பரவா யில்லை என்பது போல் தேற்றியும் கொண்டார்.

''அடப்பாவிகளா...அவரு உங்களுக்கு என்ன துரோ கம் பண்ணாரு.''

''அதை உனக்கு சொல்ல வேண்டியது அநாவசியம். நீ ஒழுங்கா லட்சணமா என் மகனை கட்டிக்கிட்டு இங்க இருக்கணும்!''

—அந்த பதில் முத்துமணிக்கே இடித்தது.

''ஐயா என்ன இது...பொன்ராசுவை நீங்கதான் கொன்னீங்களா?'' பதறினாள்.

''அட ஆமா புள்ள—அவன் செத்து பத்து நாள் மேல ஆகப் போவுது.என் எஸ்டேட்ல ஏலக்காய் திருட வந் தான். பயலுக சுட்டுப்பிட்டாங்க. ஆள் ஸ்பாட் அவுட். வெளிய தெரிஞ்சா வில்லங்கம்னு உடம்பை எனக்கு



சொந்தமான முதலைக் குளத்துல போட்டுட்டேன். பதி னாறு வருஷமா ஒரு முதலை வளர்க்கறேன். அது சாப் பிட்ட முதல் மனுஷக்கறியே பொன்ராசுதான்...''

''கொலை பாதகத்தை இவ்வளவு சாதாரணமா சொல்றீங்களே...''

''ஆயிரம் பேரைக் கொன்னாத்தான் ஒருத்தன் அரை வைத்தியனாவே ஆகறான். நான் எப்பவாச்சும் ஒருத்தன் இரண்டு பேரைத்தான் கொல்றேன். என் வழிக்கு குறுக்க வந்தா அதுதான் தீர்ப்பு. நான் முதலாளி சாதிக்காரன். எங்களுக்கு இதெல்லாம் பஜ்ஜி போண்டா சமாச்சாரம்.''

முத்துமணி அந்த பதிலால் திருப்திப்பட்ட மாதிரி தெரியவில்லை. இலேசாக நடுங்க ஆரம்பித்தது உடம்பு.

எசகு பிசகாக மாட்டிக்கொண்ட மாதிரியும் தோன்றி யது. கஜபதி பக்கம் திரும்பினாள். அவன் அலட்சியமாக அவர்களைப் பார்த்தான். அப்பொழுது பார்த்து பூமாலைகள், பட்டுவேட்டி, புடவை என்று ஒரு கூட்டமே உள்ளே நுழைந்தது.

''இந்தா இந்த பட்டுப்புடவையை கட்டிக்க. கூரைப் புடவை இது. பார்த்து பதமா கட்டிக்கணும்...'' என்றார் ஆனைமுடியார்.

''எதுக்கு இப்ப இது?''

''உம்... உனக்கும் என் மகன் நடராசுக்கும் இப்ப கல்யாணம்.''

''நடக்காது...நான் சம்மதிக்க மாட்டேன்.''

''சம்மதிக்க வைப்பேன்''- ஆனைமுடியார் சட் டென்று முத்துமணியை தன் கைகளால் வளைத்துப் பிடித்தார்.

''நீ என் பேச்சை கேக்காட்டி உங்கக்கா என் கைப் பிடில சித்ரவதையை அனுபவிப்பா... நான் சும்மா சொல்றவன் இல்ல. சொல்ற மாதிரியே செய்யறவன்.''

—முத்துமணி ஆனைமுடியார் பிடியில் அவஸ்தையோடு நெளிந்தாள்.

''வேண்டாங்க... என்னை எதுவேணா செய்யுங்க. அத உட்ருங்க...'' கெஞ்சினாள்.

ராஜாத்திக்கு உடம்பெல்லாம் பதறியது.

''இது பேடித்தனம். இப்படிச் செய்யற ராட்சஸத் தனத்தால் நீ நல்லா அனுபவிப்பே...''

''பெரிய பத்தினி... சாபம் கொடுக்கறியோ? கல்யாணத்துக்கு முந்தியே கர்ப்பமான கழுதை நீ. ஒரு நல்ல வாழ்க்கை தரேன்னு சொன்னா புரிஞ்சுக்காம சண்டித்தனமா பண்றே?''

''நீ என்ன செஞ்சாலும் என்னை ஒண்ணும் செய்ய முடியாது. நான் சம்மதிக்க மாட்டேன்''-கேவியபடியே பேசினவள் எதிரே பளபளவென்று நீண்ட கத்தி ஒன்றை உருவினான் கஜபதி

''எலே யாருடா அங்க...?'' -குரல் கொடுக்கவும் ஒருவன் ஓடி வந்தான். ''கிட்ட வாடா...'' என்றான்.

வந்தான் கத்தி அவன் இடுப்பில் வினாடியில் ஏறியது. அவன் மண்டியிட்டு விழுந்து துடிக்க ஆரம்பித்தான்.

''நா குத்துனா எப்படி இருக்குன்னு நீ தெரிஞ்சுக்க வேண்டாம்? இது சாம்பிள்! இந்த கத்தி உங்கக்கா வயித்துல பாய ரொம்ப நேரம் ஆகாது... அப்புறம் உன் வயித்துலயும் பாஞ்சுடும்.

ஆகையால ரொம்ப என்னை சோதிக்காம கடவுள் பேச்சைக் கேளுங்க...''-என்றான்.



இதற்குள் ஆனைமுடியார் கித்தாப்பாக பார்க்கவும், கீழே விழுந்து துடித்தவன் சாகவும் சரியாக இருந்தது.

''நம்ப அஸ்ஸாம் காட்டு முதலைக்கு டிபனா இவனை தூக்கிப் போடுங்க...''- என்றவர் முத்துமணியை அலட்சியப் புன்னகையோடு பார்க்க அவள் வெளிறி வியர்த்து விதிர்த்துச் சிலையாகி விட்டிருந்தாள்.

—ராஜாத்திக்கு நாவண்ணம் உலர்ந்து விட்டிருந்தது.

# 12

நீண்ட ஐஸ் கட்டியின் மேல் மரத்துாளை உரசியபடி சடலமாக படுத்திருந்தான் நடராசு. நெருங்கிய ஆனைமுடியார் சடலத்தையே வெறித்துப் பார்த்தார்.

மார்பிலும், தோளிலும் வளர்ந்த பிள்ளை...

குலம் விளங்க பிறந்தவன் என்று எத்தனை செல்லமாக வளர்த்திருப்போம்? இவனது முதல் பிறந்த நாளில் தங்க இழையில் செய்த சட்டைகூட இன்னமும் இருக்கிறது. கசங்கவில்லை. வைரத்திலேயே பட்டன்கள்...

வெள்ளித் தொட்டிலில்தான் உறக்கம்.

காராம் பசுவின் பாலை தங்கவட்டிலில் ஆற்றி ஆற்றி குடித்த பிள்ளையா இன்று இப்படி செத்துச் சவமாக கிடப்பது...

ஆனைமுடியார் கன்னக் கதுப்பில் அநியாயத்துடிப்பு.

பார்வை மணிகளில் உப்பு நீரின் வளைப்பு.

அழுகை என்றால் என்னவென்றே தெரியாதவர் அழ ஆரம்பித்தார்...ஓ! என்று அழுதார். ஆச்சரியப்பட்டான் கஜபதி.

''கடவுளே என்ன இது? நீங்களா இப்படி அழுவறது. நடராசு போனா என்ன-நான் இல்ல...?''

தேறுதலாக முன்னால் வந்தான். இதற்குள் ஒருவன் நடராசுவின் சடலத்தை தண்ணீரில் குளிப்பாட்டி உட்கார வைத்து பட்டுச் சட்டை மாட்டி இடுப்பில் வேட்டியெல்லாம் கட்டிவிட்டான். தலையை வாரி சவரம் செய்து படாதபாடுபட்டு இமைகளை திறக்கச் செய்து உட்காரவும் வைத்தான்! கழுத்தில் மாலையை போட்டு தூர நின்று பார்த்தபோது கல்யாண மாப்பிள்ளையாக தெரிந்தது நடராசுவின் சடலம்!

ஆனைமுடியார் அவ்வளவையும் வெறித்துக் கொண்டிருந்தார். தனியறையில் முத்துமணி ராஜாத்தியை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். ராஜாத்தியால் அழுகையை நிறுத்த முடியவில்லை. ''அழுவாத...நாம சாமர்த்தியமா நடந்தாதான் தப்பலாம். அந்த ஆள் இவ்வளவு மோசமானவன்னு எனக்கு சத்தியமா தெரியாது. அழுவாத ராஜாத்திஎன்னை மன்னிச்சுடு...'' - முத்துமணி ராஜாத்தியை தேற்ற முடியாமல் தேற்றி அழைத்து வந்தாள்... சில வேலைக்காரர்கள் அவர்களை பரிதாபமாக பார்த்னர். அதில் முனியன் என்பவன் மிக கோபமாக தெரிந்தான். அவன் உயிர் நண்பனைத்தான் சற்று முன் கஜபதி கொன்று காட்டியிருந்தான்.

'எலே கஜபதி... மனுஷ உயிர் உனக்கும் உன் கடவுளுக்கும் இவ்வளவு அல்பமா போச்சா? சண்டாளர்களா... உங்களை' அவன் பற்களில் நரநரப்பு. பக்கத்தில் இருந்த வேறொருவன் இதை பார்த்து அவனை சமாதானப் படுத்தப் பார்த்தான்.



''எலேய் முனியா...ஏன்டா கோபப்பட்டுக்கிட்டு.நாம அடிமைங்கள விட கேவலம். உணர்ச்சிவசப்படாம சும்மா இரு. அப்புறம் ஏடா கூடமா எதாவது நடந்துடப் போகுது...''

''இனியும் என்னா நடக்கணும். என் சினேகிதன் என்ன தப்பு பண்ணான் இப்படி கொன்று விட்டாங்களே இவங்க தப்புக்கெல்லாம் வளைஞ்சுகொடுத்து விசுவாசமா இருக்கோமே... அதுக்கு பரிசா இது?''

அவன் புலம்பல் ஒருபக்கம். மறுபக்கம் ராஜாத்தியை கூப்பிட்டு நடராசுவின் அருகில் உட்கார வைத்தான் கஜபதி. ஆடாத அசையாத நடராசுவின் சடலத்தை முத்துமணி கூட பார்த்து வியந்தாள். ஆனால் ராஜாத்திக்கு தலையை நிமிர்த்தி அவனை பார்க்கக் கூட பிடிக்கவில்லை.

இதற்குள் கஜபதி கழுத்தில் கேமிராவுடன் அந்த கோலத்தை புகைப்படம் எடுக்க தயாரானான்.

''நிமிர்ந்து பாரு புள்ள...'' என்ற கட்டளை ஆனைமுடியாரிடம் இருந்துபோனது. தயங்கித் தயங்கி கண்ணில் நீர் தளும்ப நிமிர்ந்தாள் ராஜாத்தி.

''முத்துமணி போய் கண்ணீரை துடைச்சி விடு'' என்றார் முத்துமணி பக்கமாக திரும்பி. முத்துமணி பயத்தோடு ஓடிப்போய் கண்ணீரை துடைத்துவிட்டு நிற்கவும் காமிரா கிளிக்கியது. பல கோணங்களில் பல புகைப்படங்கள். ஒரு படத்தில் நடராசு அருகில் ஆனைமுடியாரும் நின்று போஸ் கொடுத்தார்.

பின் ''உம் கிளம்புங்க...'' ஆனைமுடியார் இருவரையும் கிளப்பினார்.

''ஆமாம் ஏன் நடராசு பிரமை பிடிச்ச மாதிரி உக்காந்திருக்கு?'' முத்துமணி கேட்டாள்...

"உம் உடம்பு சரியில்லை."-என்றார் ஆனைமுடியார்

"தாலி கட்டவேயில்லையே?" இது அடுத்த கேள்வி.

"அவசியம் இல்லை. கல்யாணம் முடிஞ்சாச்சு. ராஜாத்தி இனி என் மருமவ. ஒழுங்கா பிள்ளையை பெத்து கொடுத்துட்டு ராணி மாதிரி இருக்கச் சொல்லு. முரண்டு பிடிச்சா எப்படி ஆட்டிவைக்கணும்ன்னு எனக்கு தெரியும்..."

"உங்க பேச்சு போக்கு எதுவுமே எனக்கு புரியவில்லை."

"புரியாம இருக்கறது தான் நல்லது..."

—அவர்கள் இருவரையும் ஒரே அறைக்குள் விட்டு திரும்பத் தொடங்கினார் அவர். அறைக்கு காவலாய் இரண்டு பேர்.

"தப்பித்தவறி அவ தற்கொலை பண்ணிக்க பார்த்தா உங்களை கொன்றுவிடுவேன்"—என்று எச்சரிக்கை வேறு அவர்களுக்கு.அவர்கள் தங்கள்உயிர்கள் நிமித்தம் இரண்டு பேரையும் கழுகாக கண்காணிக்க தொடங்கினர்

ஆனைமுடியாரை இப்போது கஜபதி நெருங்கியிருந்தான்.

"கடவுளே உடனே ப்ரிண்ட் போட்டு பத்திரிகைங்களுக்கு கொடுத்திடறேன். கல்யாணத்தை நான்வாழ்த்தற மாதிரி விளம்பரம். ஊரு உலகத்துக்கும் சட்டத்துக்கும் நாளைக்கு இதுதான் கல்யாணம் நடந்ததுங்கறதுக்கு சாட்சி. ஆமா நடராசுவை எத்தனை நாளைக்கு இப்படி ஐஸ் மேலவெச்சிருக்க? காரியத்தை முடிச்சிடவா?" கஜபதியின் கேள்வி முன் ஆனைமுடியார் இறுக்கமாக முகம் தூக்கினார்.

முகபாவங்களாலேயே அதற்கு சம்மதமளித்தார்.



"கூடிய சீக்கிரம் என்னை தத்து எடுத்துக்குங்க. உங்க மகன் ஸ்தானத்துல நின்று எல்லாத்தையும் நானே பாத்துக்கறேன். இப்ப விட அப்ப உரிமை ஜாஸ்தியாச்சே?"

—கஜபதியின் பேச்சு முன் ஆனைமுடியாரிடம் தீவிர சிந்தனை.

"நீ போய் பத்திரிகைங்களுக்கு விளம்பரத்தை கொடுத்துட்டு வா"என்றார்.அவன் அந்த பக்கம் நகரவும் இந்த பக்கமாக மகனின் சடலம் அருகில் போய் உட்கார்ந்து கொண்டார். திரும்பவும் கண்கலங்க ஆரம்பித்தார்.

—பட்டு சட்டை வேட்டியோடு சடலமாக நடராசு

—அப்பொழுது பார்த்து அருகே போய் நின்றான் சற்று முன் வரை நெருப்பாக இருந்த முனியன் என்பவன்!

"கடவுளே..."என்றான் கஜபதியை போலவே. திரும்பினார் ஆனைமுடியார்.

"நடராசு தற்கொலை செய்துக்கலைங்க"...என்று லகுவாகப் பேச்சைத் தொடங்கினான் அவன்.

—ஆனைமுடியார் விதிர்ப்போடு அவனிடம் ஊன்றினார்.

"அந்த கஜபதிதான் கழுத்தை நெறிச்சு கொன்னான். இதை நான் கண்ணால பாத்தேன். ஏன் இப்படி கஜபதி செஞ்சுச்சுன்னு எனக்கு தெரியாது." என்று பேச்சை முடித்தான்.

—அமர்ந்த நிலையிலிருந்து வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்திருந்தார் ஆனைமுடியார்.

"எலே என்னடா சொல்றே?" கத்தினார்.

''நா சொல்றது நிஜங்க...உங்க உப்புக்கு கஜபதி துரோகம் செய்யறாப்படி. ஆனா நா அப்படி இல்லை. என்னால வாயை வெச்சுகிட்டு சும்மா இருக்க முடியலை...'' அவன் பேசப் பேச ஆனைமுடியாருக்கு உடம்பெல்லாம் நடுங்கியது.

''நடராசு இருக்கறவரை அதை நீங்க மகனா ஏத்துக்க மாட்டீங்கன்னு அது முடிவெடுத்து இப்படிச் செய்திருக்கலாம்...''

சரியான காரணத்தை சரியான நேரத்தில் சரியான இடத்தில் முனியன் செருகினான்.

ஆனைமுடியார் நெஞ்சைக் கையில் பிடித்துக் கொண்டார். க''ஜபதி நீயா இப்படி செஞ்சுட்டே...?'' கேள்வியோடு மகன் சடலம் மேல் விழுந்து அரற்ற ஆரம்பித்தார்.

''நடராசு உன்னிய அந்த பாவியா கொன்னான்? என் வாரிசை என்னை விட்டுட்டு அந்த நாயா பிரிச்சான்? என்னை நிர்க்கதியாக்கிட்டு போட்டோ அது இதுன்னு ஐடியால்லாம் வேற கொடுக்கறானா...?

ஒரு பக்கம் சொத்தை 'காப்பாத்திக் கொடுத்து மறு பக்கம் என்கிட்ட மகனாக ஆயிடலாம்னு பிளான் பண்றானா?

ஒரு வேலைக்கார நாயை நம்பி நான் ஆனாலும் மோசம் போயிட்டேனே...''

அவர் கத்திய கத்தலில் அந்த !எஸ்டேட் பங்களாவே நடுங்கும் சமயம் வெளிக்கிளம்பிய கஜபதி போன வேகத்தில் திரும்ப !வந்திருந்தான்.

முனியனின் சாமர்த்தியமான போட்டுவிடுதல் பற்றி எதுவுமே தெரியாமல் !ஆனைமுடியாரை நெருங்கி ''கடவுளே ஒரு விஷயத்தை மறந்துட்டேன். அதான் எடுத்துப் போக வந்தேன்'' என்றான். பதிலுக்கு ஆனைமுடியார் அவனை பார்த்த பார்வையில் அனலின் வீச்சு.



''ஏன் கடவுளே அப்படிப் பாக்கறீங்க?'' என்றான் நைச்சியமாக...

''உன்னை வேற எப்படிடா பாக்க துரோகி'' என்றபடி இடுப்பு பிச்சுவாவை உருவினார் ஆனைமுடியார்.

'கடவுளே என்ன இது?''-கஜபதியின் கேள்விக்கு பதில் பிச்சுவாவே சொன்னது. அது ஆனைமுடியாரின் மொத்த பலத்தையும் வாங்கியபடி அவன் அடி வயிற்றில் ஏறியது.

-கஜபதி எகிறி விழுந்தான்.

''கடவுளே என்னா இது இப்படி செஞ்சிட்டீங்க.''-தேய்ந்த குரலில் கேள்வியை தொடுத்தபடி கீழே விழுந்தான்.

''என் மகனை நீயே கொன்னுபிட்டு அவன் தற்கொலை செய்துகிட்டான்னு கதையா விட்டேறே... உனக்கு என் மகனாகணும்னு வேற ஆசை... ஏண்டா துரோகி நான் என்ன லேசுபட்டவனா? வாழப்பிறந்தவண்டா இந்த ஆனைமுடியான். இவனை யாரும் ஏமாத்த முடியாது.

டேய் முனியா வாடா இங்க. இனி நீதான் என் விசுவாசமான வேலைக்காரன். இவன் இருந்த இடம் இனி உனக்கு.

''நீ துரோகியானா உனக்கும் இதுதான் கதி'' ஆனைமுடியார் முழங்கினார். முனியன் வெறி அடங்கியவனாக அவர் அருகில் வந்து நின்றுகொண்டு கஜபதியை பார்த்தான்.

கஜபதிக்கு உடனேயே எல்லாம் தெரிய ஆரம்பித்தது. உயிர் உடனே பிரியாமல் உடம்பு கூட்டில் ஓடிப்பிடித்து விளையாட அவன் மனதில் அநியாய குமுறல்.

"கடவுளே... அவசரப்பட்டுட்டீங்க கடவுளே-உங்க உப்புக்கு நான் துரோகம் செய்யலை. இந்த துரோகி பேச்சை கேட்டு அவசரப்பட்டுட்டீங்க. ஆனாலும் கத்தி எடுத்தவன் கத்தியால சாவான்கற மாதிரி உங்க துரோகங்களுக்கு துணை போன எனக்கு வேற ஒரு துரோகத்தாலேயே முடிவும் வந்திடிச்சு. அந்த ஜோசியர் சொன்னது நூத்துக்கு நூறு சரி..."

மரணப்படுக்கையில் புலம்பினவனை பார்த்து எகத்தாளமாக சிரித்தார் ஆனைமுடியார்.

"நான் இன்னும் உசுரோட இருக்கேன். இனியும் இருப்பேன். அதை அந்த ஜோசியன் பாக்கத்தான் போறான். சாகப்போகறச்சே கூட பொய்யா சொல்றே..."

கீழே ரத்தமயமாக கிடந்தவனை நெருங்கி தன் காலால் ஒரு உதை விட்டார் ஆனைமுடியார். கஜபதிக்குள் அந்த உதை ஆவேசத்தை மூட்ட போகத்துடிக்கும் உயிரை இறுகப் பிடித்தபடி ஒரே மூச்சில் எழுந்தவன் அடிவயிற்றுப் பிச்சுவாவை உருவி மின்னல் வேகத்தில் பாய்ந்து அதை ஆனைமுடியார் வயிற்றில் மிக ஆழமாக செருகி விட்டு அப்படியே சவமாக மறுபக்கம் விழுந்தான்.

சற்றும் எதிர்பாராத இந்த தாக்குதலில் ஆனைமுடியார் அப்படியே சரிய அவர் உடம்பு விட்டு விட்டுத் தெரித்தது.

நெடுநேரம் துடித்து விட்டு பின்னர் மெல்ல அடங்கியது.

முனியனுக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சியாக இருந்தாலும் சில வினாடிகளில் அது விலகி விட்டது.



அங்கே நிகழ்ந்து முடிந்த அசுரவதத்தால் தானும் மற்றவர்களும் விடுதலை பெற்றுவிட்ட சந்தோஷம் முகத்தில் வந்து மெல்ல தேங்கியது.

தனது நண்பன் அநியாயமாக இறந்து முதலைக்கு உணவாகிவிட்டாலும் அதன் நிமித்தம் தனக்குள் ஏற்பட்ட ஆவேசம் இப்படி ஒரு பெரிய விடுதலைக்கு தன்னை இட்டுச் செல்லும் என்று சற்றும் அவன் எதிர்பார்த்திருக்கவில்லை.

அந்த பங்களாவின் வேலைக்கார பட்டாளம் அங்கே கிடக்கும் சடலங்களைப் பார்த்து மெல்ல பெருமூச்சு விடுகிறது.

சக வேலையாட்களில் ஒருவன் வந்து முனியன் காதை கடிக்கிறான்.

"முனியா நீ துருப்புச் சீட்டா பயன்படுத்துன விஷயத்தால இப்படி ஒரு நல்ல முடிவு நமக்கு ஏற்படும்னு நான் எதிர்பார்க்கவே இல்லை.

அந்த கஜபதியை ஆனைமுடியார் கிட்ட இருந்து வெட்டப் பார்த்தே...ஆனா இரண்டு பேருமே ஒருத்தரை ஒருத்தர் வெட்டிக்கிட்டதை நினைச்சா எனக்கே புல்லரிக்குது..."

—முனியன் அந்த நபரை தட்டிக்கொடுத்தபடி முதல் காரியமாக ராஜாத்தியையும் முத்துமணியையும்தான் போய் பார்த்தான். விஷயத்தை சொல்லி ராஜாத்தியை இலேசாக்கினான். அவர்களோடு வந்து இருவரின் பிணத்தையும் காட்டிவிட்டு ஐஸ்கட்டி மேல் கிடக்கும் நடராசுவையும் காண்பித்தான்!

வெளியே ஜீப்பில் இருந்தது காமிரா. அதை எடுத்து வந்து பத்திரமாய் வைத்துக் கொண்டான்.

இருவரும் விபரீதமாய் நடந்த சகலத்தையும் நினைத்து மூச்செறிய நின்றார்கள்.

மனித மூளையின் குயுக்தியான போக்கு எப்படியெல்லாம் போயிருக்கிறது?-நினைத்து மாய்ந்தார்கள்.

இதற்குள் போலீசும் வந்து விட்டது.

எல்லாம் முனியனின் செயல்தான்!

முனியன் நடந்ததை அப்படியே சொல்ல இன்ஸ்பெக்டர் உறைந்து போய் சகலத்தையும் கேட்டு வாய் பிளக்கிறார்.

ஊருக்குள்ளும் விஷயம் பரவி அந்த எஸ்டேட் பங்களாவை சுற்றி திமுதிமு என்று கூட்டம். தங்கமுத்துத் தேவர் அவர்களுக்கு நடுவே பளிச்சென்று தெரிந்தார். நெருங்கி வந்தார்.

"ஐயா உங்க மகனை இந்தப் பாவிங்கதான் கொன்னாங்க. அதுமட்டுமில்ல... உங்க மகனால ராஜாத்தி வயித்துல வளர்ந்துட்டிருக்கிற கருவையும் நடராசுவால ஆனதா கற்பிக்க பார்த்து வதந்தியை பரப்புனாங்க. பாவம் அந்த அலிப்புள்ள! இவங்க போக்கு பிடிக்காம தற்கொலை செஞ்சுகிச்சு.

கடைசியிலே இவங்களே ஒருத்தரை ஒருத்தர் வெட்டிக்கும்படியா விதி அமைஞ்சு போச்சு.

'நல்லவேளை அந்த ராஜாத்தி தப்பிச்சுச்சு'

—முனியன் விளக்கியபடியே காமிராவை இன்ஸ்பெக்டர் எதிரே நீட்டினான்.

"இதுல இருக்கிற ஃபிலிமை பிரிண்ட் போட்டுப் பாருங்க. நடராசுவோட பிணத்துக்கு அலங்காரம்



பண்ணி ராஜாத்தி பக்கத்துல உக்காத்தி வச்சு கல்யாணம் ஆகிட்டதா ஊருக்குக் காட்ட அவங்க எடுத்த முயற்சி உங்களுக்கு தெரிய வரும்.

எனக்கு தெரிஞ்சு பிணத்தை வெச்சுகூட பிழைக்க நினைச்ச ஆளு இந்த ஆனைமுடியாராத்தான் இருப்பான்.

சொத்தாசை யாரை விட்டது?

"ஒரு காசா...இரண்டு காசா...? பல கோடியாச்சே..." முனியன் பேசுவது தங்கமுத்து தேவர் காதில் விழவேயில்லை.

"பொன்ராசு பொன்ராசு" என்று அவர் கேவியழத் தொடங்கினார். ஓடிப்போய் அவருக்கு ஆறுதலாக நின்ற ராஜாத்தியும் அவருடன் சேர்ந்து அழுதாள்.

"அழாதீங்க தேவர். உங்க தலைமுறை தப்பிட்டது நினைச்சு சந்தோஷப்படுங்க. கர்மவினைக்கு யாரா இருந்தாலும் பதில் சொல்லித்தான் தீரணும். செத்துட்ட பொன்ராசை உங்க பேரன் வடிவத்துல பார்க்கத்தான் போறீங்க. அழாதீங்க!"

—இப்படியொரு தேறுதலைச் சொன்னவர் வேறு யாருமில்லை. அங்கே வந்த ஜோசியர்தான்!

அவர் கணிப்புப்படியே எல்லாம் நடந்து முடிந்து விட்டது. எது எப்படி நிகழும் என்று தீர்மானிக்க முடியாத பல விஷயங்களை காலம் எப்படியோ நிகழ்த்தி காண்பித்துவிட்டது.

உலகில் எவ்வளவோ அற்புதங்கள். அதன் முன் மனித சக்தி என்பது ஒரு எல்லை வரைதான் என்பது துல்லியமாக தெரிந்து விட்டது.

ஜோசியர் அங்கே நின்றபடியே பொன்னூஞ்சல். அம்மனை நினைத்து கைகூப்பினார்.

போலீஸ் அனைத்து சடலங்களையும் அள்ளிப் போட்டுக் கொண்டு போனது. போலீஸ் வேனின் சப்தம் அடங்கவும் தொலைவில் உள்ள அம்மன் கோவில் மணி சப்தம் கைகூப்பி நிற்கும் அவர் காதுகளில் மோதவும் சரியாக இருந்தது.

கூப்பிய கரங்களை விலக்கியவர் ஸ்தம்பித்து நிற்கும் தேவரைப் பார்த்து "நடக்க வேண்டியதை பாருங்க தேவர். ஆனைமுடியார் சொத்து அம்மனைச் சேரணும். உங்க மருமக வயித்துப் பிள்ளை நல்லபடி ஜனிக்கணும் எல்வளவு காரியங்கள் உங்களை நம்பி இருக்கு"-என்று அவரை ஊக்கிவிட்டார்.

தேவர் சுதாரித்தபடியே அங்கிருந்து நடக்க பின் தொடர்கிறாள் ராஜாத்தி.

சற்று தூரம்தான் நடந்திருப்பார் தேவர். நின்று திரும்பி ஜோசியரைப் பார்த்து "ஜோசியரய்யா நீங்க எனக்கு துணையா இருந்து உதவணும்" -என்று வேண்டுகோள் விடுக்க ஜோசியர் அதை மறுக்காமல் ஏற்றுக் கொள்கிறார்.

"தெய்வ காரியத்தை நான் மறுப்பேனா?" என்று திருப்பிக் கேட்கிறார்.

—ஆமோதிப்பாய் திரும்பவும் மணிச்சப்தம். இந்த முறை கண்களில் நீர் கசிய கைகூப்பி மெய்சிலிர்த்துப் போகிறார் அவர்.



ஆயிரம் ஜன்னல் மாளிகையில் கூட அவர் கூற்றுப்படி தர்பைப் புற்கள் முளை விட்டிருந்தன. மலைக்காற்றில் அதோ அவைகள் தங்கள் புல்லிதழ்களை பிலுபிலுவென ஆட்டி வெறித்து ஆகாயம் பார்க்கின்றன.

அந்த பிரபஞ்சக் கூரையின் கீழ் தான் எத்தனை புதிர்கள்?

**முற்றும்**

27857
434666